# சூடாமணி உள்ளமுடையான்



தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
சரசுவதி மகால் நூலகம்
தஞ்சாவூர்.

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 498

# சூடாமணி உள்ளமுடையான்

*உரையுடன்*

[ சோதிட நூல் ]

*சிறப்புக் கேண்மைப் பதிப்பாசிரியர் :*

முனைவர். திருமதி. **சத்தியபாமா காமேஸ்வரன்,**

எம். ஏ., எம். ஃபில்., எம். எட்., பிஎச். டி.,

சோதிடவியல் பட்டயம், சுவடியியல் பட்டயம்,

**தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்**

**சரசுவதி மகால் நூலகம்,**

***தஞ்சாவூர்.***

*2007* விலை : ரூ. **100-00**

## நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு



| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | ***சூடாமணி உள்ளமுடையான்*** சோதிட நூல் |
| பதிப்பாசிரியர் | : | முனைவர். திருமதி. கா. சத்தியபாமா |
| வெளியிடுபவர் | : | இயக்குநர், சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர். |
| வெளியீட்டு எண். | : | 498 |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | முதற்பதிப்பு |
| வெளியீட்டு நாள் | : | மே, 2007 |
| தாள் | : | டி. என். பி. எல். 18.6 கி. கி. |
| நூல் அளவு | : | 24 x 14 செ. மீ. |
| பக்கங்கள் | : | 240 |
| படிகள் | : | 1000 |
| எழுத்து | : | 12 புள்ளி |
| அச்சிட்டோர் | : | ஒளி அச்சுக்கோப்பு மற்றும் ஒளி அச்சு, சரசுவதி மகால் நூலகம். |
| புத்தகக்கட்டு | : | மெலிந்த அட்டை |
| பொருள் | : | சோதிடம் |
| விலை | : | ரூ. **100-00** |

# வெளியீட்டாளர் முகவுரை

தஞ்சையில் அமைந்து தரணி முழுமைக்கும் அறிவுச் செல்வத்தை அள்ளித் தந்துகொண்டிருக்கும் அரும்பெரும் நிறுவனம் சரசுவதி மகால் நூலகமாகும். சுவடிகளின் கருவூலகமாகவும், பன்மொழி நூற்களையும் பன்மொழி ஆய்வு மையமாகவும் திகழும் சரசுவதி மகால் நூலகம் ஆற்றிவரும் தொண்டு அளப்பரியது.

இந்நூலகத்தின் முக்கிய நோக்கம் இலக்கியம், இலக்கணம், மருத்துவம், சோதிடம், சிற்பம் போன்ற அரிய சுவடிகளைப் பதிப்பித்து அச்சு நூலாக்கி மக்கட்குப் பயன்படச் செய்தலேயாகும்.

நூலகங்களில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள சோதிடச் சுவடிகள் தொள்ளாயிரத்தில் **சூடாமணி உள்ளமுடையான்** சுவடிகள் ஐம்பத்து ஆறாகும். இந்த எண்ணிக்கை விவரம் சோதிட நூல்களில் சூடாமணி உள்ளமுடையான் பெற்றிருந்த செல்வாக்கைக் காட்டுவதாக அமைந்துள்ளது.

இச்சூடாமணி உள்ளமுடையான் சுவடிகளில் தஞ்சை சரசுவதி மகால் நுலகத்தில் 19 சுவடிகள் உள்ளன. தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில் காணப்படும் சுமார் 400 சோதிடச் சுவடிகளில் அதிக எண்ணிக்கையில் உள்ளனவாக இச்சூடாமணி உள்ளமுடையான் சுவடிகள் அமைந்துள்ளன என்றால் மிகையாகாது.

உள்ளமுடையான் என்பது தமிழில் வழங்கும் ஒரு சோதிட நூல். இந்நூலை இயற்றியவர் பாண்டமங்கை என்னும் ஊரைச் சார்ந்த மாதவன் அரியவன் என்பாரின் மகன் திருக்கோட்டி நம்பி. ''உலகுய்யவந்தான், அருளுள்ளமுடையான், மங்கைக் கொற்றவன்'' என்று இவ்வாசிரியர் பாராட்டப்பட்டுள்ளார். எனவே உள்ளமுடையான் என்னும் பெயர் இவ்வாசிரியரின் சிறப்புப் பெயர் என்று கருதவேண்டியுள்ளது. ஆசிரியர் தம் நூலுக்கு இட்டு வழங்கிய பெயர் "உள்ளமுடையான் சூளாமணி" என்பது ஒரு செய்யுளால் அரியக் கிடக்கிறது. முனிவர்கள் பண்டைக் காலத்தில் செய்த வடமொழிக் கணித நூலைத் தாம்

தீதற்ற தமிழில் ஆக்கியதாக ஆசிரியரே கூறுவதனால் இந்நூல் ஒரு மொழிபெயர்ப்பு நூலென்பது போதருகிறது. உள்ளமுடையான் என்னும் பெயர் இந்நூலைச் செய்வித்தோன் பெயர் என்னும் கருத்தும் உண்டு.

இந்நூல் இயற்றப்பட்ட காலம் கி. பி. 1178 என்றும், கி. பி. 1278 என்றும் இருவேறு கருத்துக்கள் உள்ளன.

இந்நூலின் சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர் முனைவர். திருமதி. சத்தியபாமா காமேசுவரன் மிக முயன்று அரிய பல செய்திகளை நிரல்படத் தெரிவித்துள்ளார்கள். பல இலக்கிய ஒப்புமைகளைத் தந்துள்ளார்கள். சான்றாக "சூளாமணி" எனும் சொல்லிற்கு ஐந்சிறுங்காப்பியங்களில் ஒன்றான சூளாமணி, கம்ப இராமாயணக் காவியம் காட்டும் சூளாமணி, சீவக சிந்தாமணி குறிப்பிடும் சூளாமணி என பல்வேறு இலக்கிய மேற்கோளுடன் ஒப்பிட்டிருப்பது ஓர் உயர்வு. நூலில் பாயிரப் பாடலில் பகரும் செய்திகள், பிற பாடல்களில் வரும் செய்திகள் என எண்ணற்ற செய்திகளும் பொருண்மைக் கூறுகளும் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. பதிப்பாசிரியரின் மெச்சும் முயல்விற்கும் உழைப்பிற்கும் என் இனிய பாராட்டுக்கள்.

இந்நூல் வெளிவர நிதியுதவி வழங்கிய நடுவண் அரசுக்கும், நூலக நிருவாக அலுவலர் மற்றும் வெளியீட்டு மேலாளர் (பொறுப்பு) திரு. சாமி. சிவஞானம் அவர்களுக்கும், இந்நூல் கணினியில் வெளிவர, கணினிப் பிரிவில் பணிபுரியும் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

**சா. விஜயராஜ் குமார்,** இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்
இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

*தஞ்சாவூர்*
*18-5-2007*

# பதிப்புரை

சோதிடம் ஓர் அரிய கலையாகும். அக்கலையில் ஆர்வம் கொண்ட நம் முன்னோர், தம் பின்னையோருக்குகென அவற்றை சுவடிகளில் பதித்துச் சென்றனர். அங்ஙனம் தோன்றிய எண்ணிறந்த நூல்களில் தலையணியாக விளங்கும் நூல்களாக, குமாரசுவாமியம், சினேந்திரமாலை, சந்திர காவியம் போன்ற நூல்களோடு எண்ணத்தக்கதாக, காலத்தால் பழமையான தமிழ் மொழிபெயர்ப்பு நூலாகக் கிடைப்பது உள்ளமுடைச் சூளாமணி என்றழைக்கப்படும் சூடாமணி உள்ளமுடையான். சுமார் எட்டு நூற்றாண்டுகளுக்கு முற்பட்டது.

சூடாமணி, சிந்தாமணி என நூல்களில் பெயர்கள் அமைத்து வழங்குதல் சோதிட நூல்களின் வரலாற்றில் ஒரு மரபாக இருந்து வந்துள்ளது. இன்று அவ்வரிசையில் சாதக சூடாமணி, நட்சத்திர சூடாமணி, முகூர்த்த சூடாமணி, நவக்கிரக சூடாமணி, நிமித்த சூடாமணி, நித்திய சூடாமணி போன்ற பல்வேறு சூடாமணிகள் விளங்கிய போதிலும், சோதிடர்களால் பெரிதும் போற்றப்பட்டதாக விளங்கிய நூல் சூடாமணி உள்ளமுடையானேயாகும்.

பல்வேறு நூலகங்களிலும் மிகுந்த எண்ணிக்கையில் விளங்ககக்கூடிய இந்நூலின் செம்மைப் பதிப்பு இப்பொழுது கிடைப்பது அருமையானதாக உள்ளது. தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில் சூடாமணி உள்ளமுடையான் சுவடிகள் உள்ளன. ஆதலின் இந்நூலைப் பதிப்பிக்க வேண்டும் என்ற எண்ணம் உதயமாயிற்று. அதன் விளைவாக சூடாமணி உள்ளமுடையான் நூல் குறித்த செய்திகளைச் சேகரிக்கும்பொழுது, *1861*ஆம் ஆண்டு சூடாமணி உள்ளமுடையான் மூலம் மட்டும் பதிப்பிக்கப்பட்டு இருந்ததையும்; *1927, 1953* ஆம் ஆண்டுகளில் மூலமும் உரையுமாகப் பதிப்பிக்கப்பட்டதையும் தெரிந்துகொள்ள முடிந்தது.

தஞ்சைசரசுவதி மகால் நூலகத்தில் உள்ள பத்தொன்பது சூடாமணி உள்ளமுடையான் சுவடிகளை ஒப்புநோக்கிப் பாடவேறுபாடுகளுடன் கூடிய செம்பதிப்பாக வெளிக் கொணரவேண்டும் என்று எண்ணியபொழுது, அங்கிருந்த பத்தொன்பது சுவடிகளில் 850 a என்ற ஒரு சுவடி மட்டுமே முழுமையானதாக அமைந்திருந்தது. அச்சுவடியிலும் சுவடியின் இறுதியின் சூடாமணி உள்ளமுடையானின் தொடர்ச்சியாக பரஹித கணிதம் என்னும் நூலும் சயந்த மாலை என்ற நூலும் அமைந்திருந்தன. பழைய அச்சு நூல்களிலும் இந்த நிலையே காணப்பட்டது. ஆதலின் சூடாமணி உள்ளமுடையானை மொழிபெயர்த்த திருக்கோட்டியூர் நம்பி, பரஹித கணிதம், சயந்தமாலை ஆகிய வடமொழி நூல்களையும் மொழிபெயர்த்து இணைத்து அமைத்துள்ளார் என்று கருதலாம். இந்நூல் மொழி பெயர்க்கப்பட்டு இன்றைக்கு 828 ஆண்டுகள் ஆகின்ற நிலையில், இந்நூல் அதற்குமுன் வடமொழியில் எழுதப் பட்டுள்ளது என்பதைக் காணும்பொழுது, இந்நூல் சுமார் 1000 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில் எழுதப்பட்டது என்பதை அறியலாம். இத்தகைய பழமையான சோதிட நூலைச் செம்பதிப்பாகக் கொண்டுவரும் முயற்சியாக இப்பதிப்புப்பணி மேற்கொள்ளப்பட்டது.

### சூடாமணி உள்ளமுடையான் சுவடிகள்

உலகெங்கிலும் காணப்படும் பல்வேறு நூலகங்களில் ஓலைச்சுவடிகள் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. இவற்றில் சோதிடச் சுவடிகள் எண்ணிக்கை சுமார் 900 ஆகும். தனியாரிடம் சோதிடச்சுவடிகள் பல இருக்கக்கூடும். அவை குறித்து முழுமையானச் செய்திகள் கிடைக்கவில்லை. நூலகங்களில் பாதுகாத்துவைக்கப்பட்டுள்ள சோதிடச் சுவடிகள் தொள்ளாயிரத்தில் சூடாமணி உள்ளமுடையான் சுவடிகள் ஐம்பத்து ஆறாகும். இந்த எண்ணிக்கை விபரம் சோதிட நூல்களில் சூடாமணி உள்ளமுடையான் பெற்றிருந்த செல்வாக்கைக் காட்டுவதாக அமைந்துள்ளது.

இச்சூடாமணி உள்ளமுடையான் சுவடிகளில் தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில் 19 சுவடிகள்[1] உள்ளன. தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில் காணப்படும் சுமார் 400 சோதிடச் சுவடிகளில் அதிக எண்ணிக்கையில் உள்ளனவாக இச்சூடாமணி உள்ளமுடையான் சுவடிகள் அமைந்துள்ளன என்றால் மிகையாகாது.

### பெயர்க் காரணம்

சோதிட நூல்களுள் சிறந்ததாக விளங்கும் உள்ளமுடைச் சூளாமணி என்ற சூடாமணி உள்ளமுடையான் நூலின் ஆசிரியர் உள்ளமுடையான் ஆதலின் உள்ளமுடை என்ற பெயரோடு, **சூளாமணி** என்பது இணைந்துள்ளது. சூளாமணி என்பது தலையில் சூடும் ஓர் அணியாகும். ஐஞ்சிறுங் காப்பியங்களுள் ஒன்றான சூளாமணி இந்த அணிகலனின் பெயரால் அழைக்கப்படுகிறது.

கம்ப இராமாயணத்தின் சுந்தர காண்டத்தில், சீதை அனுமனிடம் சூளாமணியை அடையாளமாகக் கொடுத்து அனுப்பியது சூளாமணிப் படலமாக அமைந்துள்ளது. சீவகசிந்தாமணி, "தோளா மணிகுவித்தாற் போன்றிலங்கு தொல்குலத்துச் சூளா மணியாய்ச் சுடர விருந்தானை"[2] என்று சீவகனைக் குறிப்பிடுகிறது. இச்சூளாமணி என்ற சொல்லுக்கு நாயகமணி, முடியின் மணி என்று நச்சர் பொருள் கூறுவர். தன் குலத்துள்ளோர்க்கு நாயக மணியாக விளங்கிய சீவகனைக் குறிப்பதற்காகத் திருத்தக்கதேவர் சூளாமணியைக் குறித்தது போன்று, சோதிட நூல்களுக்கெல்லாம் நாயக மணியாக விளங்கும் இந்நூலுக்கு "**சூளாமணி**" என்ற சொல்லை அமைத்துத் தன் பெயரோடு இணைத்து "உள்ளமுடைச் சூளாமணி" என்று ஆசிரியர் பெயரிட்டுள்ளார் என்பதை அறியலாம்.

1. இவற்றின் விபரம் பின்னிணைப்பு - 1இல் குறிக்கப்பட்டுள்ளன.

2. சீவக சிந்தாமணி, முக்தி இலம்பகம், பாடல் எண். 439.

*நூலாசிரியர்*

சூடாமணி உள்ளமுடையான் என்ற இந்த சோதிட நூலை இயற்றிய ஆசிரியரின் பெயர் உள்ளமுடையான் என்பதாகும். இந்நூலின் காப்புச் செய்யுளாக அமைந்துள்ள,

***"கள்ள முடைச்சிலை மாமன் தன்னைக் கறுத்தசிரம்***
***ஒள்ளிய பத்தும் உடையவன் தன்னையும் ஓரடியால்***
***தள்ளிய டக்கிய தாளோன் சிறுவனைத் தாழ்ந்துரைக்க***
***உள்ளமு டைக்கவி நானூறுங் கையில் உற்றம்மே.[1]"***

என்ற பாடல், இந்நூலாசிரியரின் பெயரை உள்ளமுடைக்கவி என்று சுட்டுகிறது.

***"உள்ளம னாலயத்தில் உள்ளமே கண்டதனைத்***
***தெள்ளும் வடநூல் தெரிதலுக்கு - உள்ளமுடைச்***
***சூளாமணி என்று சோதிடநூல் சொல்வதற்குக்***
***காளா முகில்மருகன் காப்பு"***

என்ற பழைய பாடலொன்றும் இந்நூலின் பெயரோடு இணைந்துள்ள நூலாசிரியரின் பெயரை உள்ளமுடைச் சூளாமணி என்றுரைக்கும். இதனையன்றி,

***"உற்றுல குய்ய வந்தான் அருளுள்ள முடையான் மங்கை***
***கொற்றவன் புகழ்போல் இந்தக் குவலயம் முழுதும் கேட்கச்***
***சொற்றவ நூற்பேர் உள்ள முடைச்சூளா மணியென் றிட்டுப்***
***பொற்றொடி வளைக்கை நல்லாய் புலவர்முன் புகல லுற்றேன்"***

*(பாயிரம் : பா. எண். 4)*

என்னும் பாயிரப் பாடலின் உரையில், நூற்பெயர் பெறுமிடத்துச் செய்தோன் பெயராலும், செய்வித்தோன் பெயராலும் அளவினாலும் மிகுதியாலும் குறியினாலும் இடுகுறியினாலும் சிறப்பினாலும் பெயர்பெறும். ஆதலின், இந்நூல் செய்தோன் பெயரால், "உள்ளமுடைச் சூளாமணி என்னும் பெயரால் உரைப்பன்" என்று கூறப்பட்டிருப்பதால், "உள்ளமுடைச் சூளாமணி" என்பது ஆசிரியர் உள்ளமுடையான் என்பதையும் அறியலாம். பிற்காலத்தில் "உள்ளமுடைச் சூளாமணி" என்பது "சூடாமணி உள்ளமுடையான்" என்று பெயர் மாற்றம் அடைந்துள்ளது என்பதையும் அறியலாம்

---

*1. உள்ளமுடையான், சுவடி எண். 850 (a). காப்புச் செய்யுள் : 1*

நன்னூலில், முதனூல் என்னும் சூத்திரவுரையில் தன்மையால் பெயர் பெற்றன சிந்தாமணி, சூளாமணி, நன்னூல் என்று மயிலைநாதர் எழுதியிருத்தல் இங்கு எண்ணத்தக்கது. சூளாமணி, தலையில் சூடும் ஒரு அணியாகும்.

இதுவரை வெளிந்துள்ள பதிப்புகளில், நூலின் முதல் பக்கத்தில், "மண்டல புருடன் அருளிச்செய்த சூடாமணி உள்ளமுடையான்" என்றும், நூலின் இறுதியில், "மண்டலப் புருடன் அருளிச்செய்த சூடாமணி உள்ளமுடையான் முற்றிற்று" என்றும் காணப்படுகிறது.

இந்நூலை வடமொழியில் இருந்து தமிழ் மொழிக்கு மொழிபெயர்த்தோனின் காலத்தின் அடிப்படையில் இந்நூலின் ஆசிரியர் "உள்ளமுடையான்" என்பதைத் தெளியலாம்.

### தமிழில் மொழிபெயர்த்தோன்

சூடாமணி உள்ளமுடையான் என்ற இந்நூல், வடமொழியில் எழுதப்பட்டது. இதனைத் தமிழில் மொழிபெயர்த்தவர் திருக்கோட்டியூர் நம்பி என்பவராவர். இந்நூலின் பாயிரப் பாடலால், இந்நூல் வடமொழியில் இருந்து, தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது என்பதை அறியலாம்.

***"மாதவர் முன்பு சொன்ன வடமொழிக் கணித நூலைத்***
***தீதறு தமிழி னாலே செப்பநான் இசைந்த தென்னில்***
***வேதமும் அங்கம் ஆறும் கலைகளும் விரும்பி ஊமண்***
***ஓதிஇவ் உலகுக் கேற்ற உரைப்பனென் றிசைந்த தொப்பாம்"***

*(பாயிரம் : பா. எண். 2)*

என்ற இப்பாடல் மொழிபெயர்க்கப்பட்டது அறியப்படுவதைப் போல, இந்நூலை மொழிபெயர்தோனைப் பற்றிய செய்தி இந்நூலின் இறுதிப் பாடலின் வழி புலனாகிறது. இப்பாடலில் இவருடைய காலம், நாடு, ஊர், பெயர், தந்தையின் பெயர் முதலான செய்திகள் கூறப்பட்டுள்ளன.

*"விளம்பிய சகர ஆண்டாம்ஆ யிரத்தொரு நூற்றின் மிக்க
வளம்புகழ் பாண்ட மங்கை மாமுனி அரிய வன்சேய்
இளங்கொடி மடவார் காமன் இசைத்திருக் கோட்டி நம்பி
உளம்புகக் கணித நூலை உரைத்தனன் உலகுக் கெல்லாம்."*

என்ற அப்பாடலின் உரையில் "சகாப்தம் 1100-க்குச் சென்ற விளம்பி ஆண்டு முன்னையோர் வடமொழியால் செய்த சோதிடத்தைத் தென்தமிழினால் விரித்து யாவர்க்கும் உளங்கொள உரைத்தான் வென்பதைக்குடி நாட்டுப் பிரமதேசம் எனும் பாண்டமங்கலமாகிய பஞ்சவன மாதேவி சதுர்வேதமங்கலத்து அரியவன் புத்திரன் திருக்கோட்டியூர் நம்பி" என்று கூறப்பட்டுள்ளது. சகர ஆண்டு ஆயிரத்து ஒரு நூறு என்பது கி. பி. 1178 ஆம் ஆண்டாகும். ஆதலின், திருக்கோட்டியூர் நம்பின் காலம் 12ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதி என்பதை அறியலாம். மேலும் இப்பாடலின் மூலம் மொழிபெயர்த்தோனான திருக்கோட்டியூர் நம்பியின் தந்தையார் பெயர் அரியவன் என்பது புலனாகிறது. மேலும் இவர் வென்பதைக் குடிநாட்டுப் பிரமதேசம் என்று வழங்கப்படுகின்ற பாண்ட மங்கலத்தில் பிறந்தவர் என்பதும், பாண்டமங்கலம் பஞ்சவன மாதேவி சதுர்வேதிமங்கலம் என்று அழைக்கப்பட்டது என்பதும் தெரிகிறது.

இந்நூல், மொழிபெயர்க்கப்பட்ட ஆண்டு, கி. பி. 1178 என்பதால், சூடாமணி உள்ளமுடையான் நூல் வடமொழியில் எழுதப்பட்ட காலம் கி. பி. 1178-க்கு முற்பட்டது என்று உறுதியாகக் கூறலாம்.

தமிழில் கி. பி. 9-ஆம் நூற்றாண்டில் திவாகர நிகண்டு தோன்றியது. அதன் பின்னர் கி. பி. 16-ஆம் நூற்றாண்டில் சூடாமணி நிகண்டு தோன்றியது. இந்நிகண்டின் ஆசிரியர் மண்டல புருடர். இவ்வாறு சூடாமணி நிகண்டு 16-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டிருக்க, சூடாமணி உள்ளமுடையான் கி. பி. 1178-இல் மொழிபெயர்க்கப்பட்டு உள்ளது. ஆதலின் சூடாமணி உள்ளமுடையானும் சூடாமணி நிகண்டும் வெவ்வேறு காலத்தைச் சார்ரந்தவை என்பது

உறுதியாகிறது. உள்ளமுடைச் சூளாமணி சோதிட நூல், நாளடைவில் சூடாமணி உள்ளமுடையான் எனப் பெயர் பெற்றவுடன் சூடாமணி நிகண்டின் பெயரில் உள்ள சூடாமணியோடு ஒப்பிட்டு எண்ணிப் பார்க்கப்பட்டிருக்க வேண்டும். உள்ளமுடைச் சூளாமணி எனப்படும் சூடாமணி உள்ளமுடையானிலும் நட்சத்திர நிகண்டு, இராசி நிகண்டு, கிரக நிகண்டு போன்ற பகுதிகள் காணப்படுகின்றன. இவற்றை எண்ணியும் பெயரை ஒப்புநோக்கியும் இரண்டு நூல்களின் ஆசிரியர்களும் ஒருவரே என்று கருதப்பட்டிருக்க வேண்டும்.

அகச்சான்றுகளைக் கொண்டு நோக்குமிடத்துச் சூடாமணி நிகண்டு, சூடாமணி உள்ளமுடையான் ஆகிய இரு நூல்களும் இருவேறு ஆசிரியர்களால் எழுதப்பட்டவை; வெவ்வேறு காலத்தைச் சார்ந்தவை என்ற உண்மையை அறியலாம். மேலும் உள்ளமுடைச் சூளாமணியின் ஆசிரியர் உள்ளமுடையான் என்பதை உறுதியாக அறிந்து கொள்ளலாம். மேலும், உள்ளமுடைச் சூளாமணியின் பழைய பதிப்புகளில், இந்நூலின் ஆசிரியர் மண்டலபுருடர் என்று சொல்லப்பட்டுள்ளது தவறான செய்தி என்பதையும் அறியலாம்.

## நூல் அமைப்பு

சோதிட நூலாக அமைந்துள்ள இந்நூல், முற்றிலும் விருத்தப் பாக்களால் ஆனது. எண்சீர் விருத்தங்களும், அறுசீர் விருத்தங்களும் விரவி அமைந்துள்ளன. காப்புச் செய்யுள் ஒன்றில் "உள்ள முடைக்கவி நானூறுங் கையில் உற்றம்மே[1]" என்பதால் இந்நூலில் 400 பாடல்கள் அமைந்துள்ளன என்பதை அறியலாம். ஓலைச்சுவடிகளிலும் அச்சு நூல் களிலும் நானூறுக்கும் மேற்பட்ட பாடல்களே காணப்படுகின்றன. 1861ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பட்டுள்ள

1. உள்ளமுடையான், சுவடி எண். 850 a
காப்புச் செய்யுள் : 1, பாடலடி 4.

சூடாமணி உள்ளமுடையான் நூலில் பாயிரப் பாடல்கள் ஐந்தினையன்றி நானூற்று நாற்பத்து எட்டுப் பாடல்கள் உள்ளன. 1927, 1953ஆம் ஆண்டுகளில் பதிப்பிக்கப்பட்டுள்ள சூடாமணியான் நூல்களில், பாயிரப் பாடல்கள் நான்கினை யன்றி நானூற்று நாற்பத்து ஆறு விருத்தங்கள் அமைந்துள்ளன. சுவடிகளில் பெரும்பாலானவை முழுமை அற்றனவாகக் கிடைத்துள்ளன. எனவே, ஒன்றில் விடுபட்டிருந்த பாடலை மற்றொரு சுவடியிலிருந்து சேர்த்துப் பதிப்புப்பணி மேற்கொள்ளப்பட்டது. இப்பதிப்பு நூலில் பாயிரப் பாடல்கள் எட்டும் நூலினுள் 453 பாடல்களும் அமைந்துள்ளன.

## நூல் கூறும் செய்திகள்

சூடாமணி உள்ளமுடையான், சோதிடக் களஞ்சியம் போன்று அனைத்துச் செய்திகளையும் தன்னுள் அடக்கியதாக விளங்குகிறது.

*"ஐவினை யியல்மு கூர்த்தம் அருளுள்ள முடையான் கூற*
*மெய்யனை முக்க ணானை விக்கினேஸ் வரனை வேழக்*
*கையனை யாகுவா கனனைக் கார்க்கும் தாளனைக் கற்றோர்*
*துய்யனை பதினா றாமச் சொரூபனை வணக்கம் செய்வாம்[1]"*

என்ற காப்புச் செய்யுளில், ஐவினையியல், முகூர்த்தம் ஆகியவற்றை இந்த உள்ளமுடையான் நூல் எடுத்துரைக்கிறது என்பதை உணர்த்துகிறது. ஐவினை இயல் என்ற சொல்லால், இந்நூல் ஐந்து இயல்களைக் கொண்டதாக இருந்திருக்கவேண்டும் என்பதை அறியலாம். பழைய பதிப்பாகக் கிடைக்கும் 1861-இல் பதிப்பிக்கப்பட்ட பதிப்பில் இத்தகைய பாகுபாடு சுட்டப்பட வில்லை. ஆனால் ஓரிரு ஓலைச்சுவடிகளில் பொதுவியல் என்ற இயல் சுட்டப்பட்டுள்ளது.

பாயிரப் பாடலில், நாட்கள், காலவோரை, வாரம், திதி, யோகம், கரணம் இவற்றின் பெயர்களும், நன்மை-தீமை களும், நட்பாட்சி, உச்சம், பகை, நீசம், அம்சம், திரேக்காண

1. சூடாமணி உள்ளமுடையான், சுவடி எண். 1; பாயிரம் பாடல் எண். 1.

குணம் போன்றவைகளும் சுடர்செலவு முகூர்த்த விதானம் கிரகணம் தொடர்பான செய்திகளும் விரிவான முறையில் கூறப்பட்டுள்ளன. இதனை,

***"ஒப்பில்நா ளோரை வாரம் திதியோகம் கரணம் சேரும்***
***தப்பிலா விதானம் சார்ந்த தற்கால நன்மை தீமை***
***செப்பிலன் பிடித்த உண்ணல் கோசரம் தெசாப லன்கள்***
***துப்புடை நவகோள் எண்கோள் சுடரிவைச் சொல்ல லுற்றேன்[1]"***

*(பாயிரம் : பா. எண். 3)*

என்ற பாயிரப் பாடலால் அறியலாம்.

இந்நூலின் எழுபத்து இரண்டாம் பாடல்,

*"கதியுடை புணர்சீ மந்தம் கருதுபேர் காது நல்வாய்*
*புதுமயிர் கல்வி பூணூல் முடிமணம் பொருந்து பூமி*
*விதைமுதல் போக்குச் சாந்தி பிரதீட்டைவீ டெடுத்தல் மேலும்*
*பொதுவியல் விதானம் எல்லாம் புகல்செய்வன் பூவை அன்னாய்."*

என அமைந்துள்ளது. இதன் உரையில், "புணர்ச்சி, சீமந்தம், நாமகரணம், அன்னவேதனம், அன்னப்பிரசானம், சவனம், வித்யாரம்பம், உபநயனம், அபிசேடம், விவாகம் செய்ய, கிருஷி ஆரம்பம், விதை விதைக்க மற்றும் யாத்திரை, சாந்தி செய்ய, வீடெடுக்க **பொதுவியலானவை**யெல்லாம் சொல்லுவன்" எனப் பாடலில் அமைந்துள்ள செய்தி தெளிவாக எடுத்துரைக்கப்பட்டு உள்ளது. ஆதலின் நூலின் 72-ஆம் பாடல் முதல் 183-ஆம் பாடல் வரை உள்ள பகுதி பொதுவியல் என உறுதியாகச் சொல்லாம்.

அவ்வாறாயின் 72-ஆம் பாடலுக்கு முன்னால் அமைந்துள்ள ஒன்று முதல் 71-ஆம் பாடல் வரையிலானப் பகுதி முதல் இயலாக இருந்திருக்கவேண்டும் என்றும் கருதலாம்.

இரண்டாம் இயலான பொதுவியலை அடுத்து (பாடல் எண். 186-214) மணப்பொருத்தம் குறித்து விரிவாகப் பேசப்பட்டுள்ளது.

*"மாதவர் மணப்பொ ருத்தம் வழுத்துநாள் கணப்பொ ருத்தம்*
*மாதுமா கேந்திர மோடு ஸ்திரீதீர்க்கம் யோனி ராசி*
*மேதகு ஆதிப திக்கோள் வசியமி ரச்சு வேதம்*
*தீதறு மரங்கள் புள்ளு தெரிந்திட வுரைப்பன் தேனே."*

*(பாடல் எண். 183)*

என்ற பாடலில் தினப்பொருத்தம், கணப்பொருத்தம், மாகேந்திரப் பொருத்தம், ஸ்திரீ தீர்க்கம், யோனிப் பொருத்தம், இராசிப் பொருத்தம், இராசியாதிபதிப் பொருத்தம், வசியப் பொருத்தம், இரச்சுப் பொருத்தம், வேதைப் பொருத்தம் ஆகிய பத்துப் பொருத்தங்களும் விருட்சப் பொருத்தம், பட்சிப் பொருத்தம் முதலான பொருத்தங்களும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இதனை அடுத்து, நட்சத்திர, திதி, கரண தேவதைகள், தெருட்சிப் பலன் போன்றவை அமைந்துள்ளன.

"சாதகம்" என்னும் பகுதியில் *(பாடல் எண்கள் 215-237)* "பூமியில் தோன்றிய புத்திரர்களின் நன்மை தீமை விசாரிக்கும்படி" என்ற விளக்கத்தோடு, மரணகாலம், தந்தையைக் குறித்த விபரம், அரிட்டம், இராசயோகம் முதலான செய்திகள் கூறப்பட்டுள்ளன.

அதற்கு அடுத்து அமைந்துள்ள பகுதியில் *(பாடல் எண்கள் (238-287)* விஷம், அயனம், விஷ்ணுபதம், சடாதாரி முகம் போன்றவை குறித்த செய்திகளும் மழைப்பொழிதல், கோள்களின் இயக்கம், வானியல் மாற்றங்களான உத்திராடக்குறி, பஞ்சமக்குறி, சோதிக்குறி, கர்ப்ப ஓட்டம், கிரக வெற்றி தோல்வி, பரிவேடம், நட்சத்திரம் விழும் குறி பிறைக்குறி, மகவோட்டம், கிரக சரிதைகள், புதனோட்டம் முதலானவை அமைந்துள்ளன.

இதனை அடுத்து, *(பாடல் எண்கள் 284-370)* அமைந்துள்ள பகுதியில் கோள்களின் நிலை, மனைப் பொருத்தம், பஞ்சபட்சி, புதுப்புடவை கீறினால் நன்மை தீமை அறியும்படி, நட்டமுட்டி சிந்தனை, பூமி சல்லியம், பல்வேறு அங்கிசங்களை உடையோரின் குணங்கள் ஆகியவையும், கோசர பலன்களும், காலச்சக்கர பலன்களும் திசாபுத்திகளின் பலன்களும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

370 பாடல்களுக்குப் பிறகு பரகித கணிதம் என்ற நூலும் சயந்தமாலை என்ற நூலும் காணப்படுகின்றன. இவ்விரு நூல்களும் நவக்கோள்களைப் பற்றிக் கூறுவனவாக அமைந்துள்ளன. அந்தாதித் தொடையில் அமைந்துவரும் சூடாமணி உள்ளமுடையானிலிருந்து மாறுபடாமல், அந்நூலின் தொடர்ச்சியாக இவ்விரு நூல்களும் அமைந்துள்ளன.

"பரகித பனுவல்" என்பது "பரகித கணிதம்" என்று சொல்லக்கூடிய நூலாகும். இந்நூல், 371-ஆவது பாடல் முதல் 421-ஆவது பாடல்வரை அமைந்துள்ளது. இந்நூலில் யுகம் பிறக்கும்வகை, வாக்கியம் பிறக்கும் வகை, தற்காலம் பிறக்க, கலியுகம் பிறக்கும் வகை, சுத்தி நட்சத்திரம், நட்சத்திரம் எடுக்க, திதி நாழிகை, யோக கரணம், கதி போன்றவற்றைக் காணுதல், நவகோள் எண்ணுதல், கோள்களின் கணிதங்களைக் கணக்கிடம், பஞ்சக்கிரக உதயம், வெள்ளிப்பாடு பிறப்பு முதலாக செய்திகள் கூறப்பட்டுள்ளன.

சயந்தமாலை என்பது கிரகணம் பற்றிக் கூறக்கூடிய கணித நூலாகும். இந்நூலுள் சயந்தமாலை 422-ஆவது பாடல் முதல் 453-ஆவது பாடல்வரை அமைந்துள்ளது. இந்நூலில் சூரியன், சந்திரன் ஆகிய கோள்களின் கிரகணங்களைக் கணக்கிடுதல் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறக, நூலின் தொடக்கத்தில் சோதிடத்திற்குத் தேவையான நாள், வாரம், திதி, யோகம், கரணம் போன்ற வற்றைப்பற்றியும், பொதுவியல் பகுதியில் மனித வாழ்வில் செய்யப்படும் முக்கியமான சடங்குகளுக்குத் தேர்ந்தெடுக்கப் படவேண்டிய காலங்கள் பற்றியும் கூறப்பட்டுள்ளன. ஆண்-பெண் திருமணம் கூறும் அடுத்த பகுதியில் பல்வேறு பொருத்தங்கள் எவ்வாறு அமையவேண்டும் என்று எடுத்து உரைக்கப்பட்டுள்ளன. சாதகரின் வாழ்வில் ஏற்படும் நன்மை-தீமைகளை எடுத்துரைக்கும் பகுதியும், அதன் பின்னர் வானியல் செய்திகளும் அமைந்துள்ளன. அதன்பிறகு பொதுச் செய்திகள் சிலவும், காலச்சக்கர, கோசர, திசாபுத்தி

பலன்களும் கூறப்பட்டுள்ளன. நூலின் இறுதியில் நவகோள் குறித்துக் கணக்கிடும் பரகித கணிதம் என்ற நூலும் கிரகணங்களை எடுத்துக்கூறும் சயந்த மாலை என்ற நூலும் அமைந்துள்ளன.

இந்நூல், சோதிடத்திற்குத் தேவையான அனைத்துச் செய்திகளையும் தன்னுள் அடக்கியதாகச் சோதிடம் கற்போருக்கும், சோதிட ஆர்வலர்களுக்கும், சோதிட வல்லுநர்களுக்கும் பயனுள்ள வகையில் அமைந்துள்ள சோதிடக் களஞ்சியமாக விளங்கும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

## நன்றியுரை

தமிழுக்குப் பெருமை சேர்க்கும் பழந்தமிழ் சுவடிகளில் உள்ள அரிய நூல்களைப் பெரிதும் முயன்று தொடர்ந்து வெளியிட்டுத் தமிழுக்கு அருந்தொண்டாற்றிவரும் தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தாரின் தமிழ்ப் பணிகளுக்குப் பெரிதும் நன்றியுடையேன். சிறப்புக் கேண்மைப் பதிப்பாசிரியர் பணியை எனக்கு வழங்கி, **சூடாமணி உள்ளமுடையான்** என்ற இந்நூலைப் பதிப்பிக்க அனுமதித்து உத்திரவிட்ட தஞ்சை மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் நூலக இயக்குநர் உயர்திரு. சா. விஜயராஜ் குமார், இ. ஆ. ப., அவர்களுக்கும், நூலக நிருவாக அலுவலர் மற்றும் வெளியீட்டு மேலாளர் (பொறுப்பு) திரு. சாமி. சிவஞானம், எம். ஏ., அவர்களுக்கும் என் நன்றியை உரித்தாக்குகிறேன்.

அச்சுப் பணியைக் குறுகிய காலத்தில் சிறந்தமுறையில் செய்தளித்த நூலக அச்சகப் பிரிவினருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர்

## பொருளடக்கம்

### I. சோதிட உறுப்பியல்

நாள் உரிச்சொல் 1
இராசி உரிச்சொல் 6
கிழமை உரிச்சொல் 7
தெத்த யோகம் 9
அமிர்யோகம் - மரணயோகம் 9
திதி - அமிர்தயோகம் 11
சித்தயோகம் 11
சுபயோகம் 12
நாசயோகம் 12
பிரிசயோகம் 13
அக்கினியோகம் 13
சகட யோகம் 14
பிரதியோகங்களின் பெயர்கள் 14
திரிதிவசாதியோகம் 16
வார சூனியம் 16
கிழமை பிறந்தநாள் 17
கண்ணுள்ள - இல்லாத நாட்கள் 18
சந்திர திருட்டி 18
பக்க திருட்டி 18
இராச திருட்டி 19
பக்கமுண்ணும் திசாதிசை 20
நட்சத்திர விடகடிகை 20
பஞ்சக்கிரகம் 21
கரணம் 22
கிரகதோடம் 22
கோள் உதைப்பு 23
குளிகன் 24
யோகினி 25
பூமி சுக்கிரன் 25
நந்தை, பத்திரை, சயை, இருத்தை, பூரணை 26
பஞ்சாங்கத்தின் பலன் 27

நோக்குப் பலன் 27
கிரக உறவும் பகையும் 28
கிரக ஆட்சி, உச்சம், நீசம் 28
அவச்சாயை, பதச்சாயை 30
பகல் நாழிகை 31
இரவு நாழிகை 31
முகூர்த்தாங்கிசம் 33
திரேகாணம், காலவோரை 34
கோள்கூறும் சுடர்ச்செலவும் 34

## 2. பொதுவியல்

முகூர்த்த விதானங்கள் 36
நிசேகம் 36
புங்கசவனம் 37
சீமந்தம் 38
விஷ்ணுபலி 38
பிள்ளைப்பெறு மனை 39
பிள்ளைப் பிறப்பு 39
நாமகரணம் 39
உபநிஷ்கரணம் 40
காது குத்துவது 40
அன்னப்பிரசானம் 42
வாயூட்டு 42
அரைஞாண்கட்ட, கோடி உடுக்க 42
சவனம் 43
சவனத்துக்கு ஆகாத நாள் 43
பல்விளக்க நாள் 44
சரசுவதி யோகம் 44
வித்தியாரம்பம் 45
உபநயனம் 46
உபகர்மம், மயிர் வினைக்கு ஆகும் நாட்கள் 46
சமாவர்த்தனம் 47
முடிசூட்டடல் 47
முடிசூடும் நாள் 48

விவாகம் 49
அக்கினி பரிக்கிரகம் 49
பூமி தரிசனம் 50
கிருஷி ஆரம்பம் 50
எரு வைக்க 51
விதைக்க 51
கதிர் அறுக்க 52
புதிதூண் 53
தானியம் இட்டுவைக்க 53
தானியம் வாங்க 54
தனுசு இறுக்க 54
யாத்திரைக்கு ஏற்ற நாள் 54
யாத்திரைக்கு ஆகாத நாள் 55
சமுத்திர யாத்திரை 56
கன்று காலி கொள்ள 57
நட்சத்திர பட்சணம் 57
திதி பட்சணம் 58
வார பட்சணம் 58
வார அடியால் செய்யும்வகை 59
எண்ணெய் வார்க்க 60
சதாபிஷேகம் 60
சிரார்த்தம் 60
பிதுர்கர்மம் 61
அட்டகை 61
சாந்திகம், பௌடிகம் 62
கச சாந்தி 62
அசுவ சாந்தி 62
சர்வ சாந்தி 63
வாகனம் ஏற, ஆயுதம் பயிற்ற 63
படைக்காண, யுத்தம் செய்ய 64
ஆபரணங்கள் செய்ய 64
கோடி உடுக்க 64
தெய்வப் பிரதிஷ்டை 65

பிரதிட்டைக்கு ஆகாத நாட்கள் 65
பிரதிட்டைத்து ஏற்ற நாட்கள் 66
வாஸ்து 67
மனை எடுக்க 67
கிரகாரம்பம் 68
குடிபுக திருவாண்டெழுத 69
குரு உரை கேட்க 69
குளம், கிணறு தோண்ட 70
நோய் கொண்டால் மரணம் 70
நோய் கொண்டால் மருந்துகொள்ள நாள் 71
அறுக்க, வெதுப்ப நல்ல நாள் 71
ஆரோக்கிய தானம் செய்ய ஏற்ற நாள் 71
மரணதோசம் 72
சேத்திர லிபிதம் 72
விலங்கு, கள்ளர் விலக்க 73
மிருகம் விலக்க 73
சத்துரு செயம் 74
குமர் நீங்க 74
புருஷனை ஸ்திரீயுடன் சேர்ப்பிக்க 74
வார விசேடம் 75
மேல்நோக்கிய, முகட்டு, கீழ்நோக்கிய நாட்கள் 75
காரிய சித்தி 76
விலக்கப்பட்டவை 77
சென்மத்திரைய நாள் - தோசமும் அனுகூலமும் 77
*3. பொருத்தவியல்*
மணப்பொருத்தம் 77
நாள் பொருத்தம் 77
கணப்பொருத்தம் 78
மாகேந்திரமும் ஸ்திரீதீர்க்கமும் 79
யோனிப் பொருத்தம் 79
இராசிப் பொருத்தம் 80
இராசி அதிபதிப்பொருத்தம் 81
வசியப் பொருத்தம் 82

இரச்சுப் பொருத்தம் 82
வேதைப் பொருத்தம் 84
விருட்சப் பொருத்தம் 85
பட்சிப் பொருத்தம் 86
பட்சிப் பகை 86
ஸ்திரீ - புருட மரணம் 86
அங்குரார்ப்பணம் 87
நட்சத்திர தேவதை 87
திதி தேவதை, கரண தேவதை,
உவாச் சூழ்ந்த கரண தேவதை 88
ஆண்-பெண்-அலி நட்சத்திரங்களின் லிங்கங்கள் 90
தெருட்சி - நட்சத்திர பலன் 90
தெருட்சி - திதி பலன் 91
இராசி, வார, தெருட்சி, பலன் 92
**4. சாதகவியல்**
கிரக நோக்கு 93
சாதகம் 93
பாலாரிட்டம் 94
இராசயோகம் 98
**5. வானியல் செய்திகள்**
விஷம், அயனம், விஷ்ணுபதம், சடாதாரிமுகம் 103
அ௱கம் 104
உத்திராடக்குறி 107
பஞ்சமிக்குறி 108
சோதிக்குறி 108
ஆடிக்குறி 109
கர்ப்ப ஓட்டம் 109
கிரகண பலன் 110
சென்ம நட்சத்திர தோடமும் பரிகாரமும் 111
கிரகங்கள் வெற்றி - தோல்வி 112
துர்விடய இலட்சணம் 114
பரிவேடம் 115
நட்சத்திரம் விழும் குறி 115

| | |
|---|---|
| பிறைக்குறி | 116 |
| மகவோட்டம் | 116 |
| வியாழ சரிதை | 117 |
| சுக்கிர சரிதை | 118 |
| சனி சரிதை | 119 |
| புதனோட்டம் | 120 |
| கோள்நிலை | 120 |
| ***6. மனை, ஆரூடச் செய்திகளும் பிறவும்*** | |
| மனைப் பொருத்தம் | 121 |
| யோனி அறிதல் | 122 |
| அங்கிசம் அறியும்படி | 122 |
| கிணறு வெட்டு | 123 |
| வாஸ்து நிலை | 123 |
| சுவர் பிளப்பு | 124 |
| புற்று | 124 |
| செஞ்செல்லு | 125 |
| கோடி கிழியில் நன்மை - தீமை | 125 |
| ஆயுதப் பொருத்தம் | 127 |
| பஞ்சபட்சி | 127 |
| பஞ்சபட்சி புணர்ச்சி | 128 |
| பெயர்ப் பொருத்தம் | 129 |
| நட்டாமுட்டி சிந்தனை | 129 |
| தறிக்கால் | 130 |
| இராசி நிலை | 131 |
| இராசி நோக்கு, கவிப்பு | 131 |
| உச்சக்கோள், இடைக்கோள், பூமிக்கோள் | 132 |
| இராசிகளின் சாதி | 132 |
| இராசிகளின் நிறம் | 133 |
| கிரகங்களின் அளவு, மருக்கள் | 133 |
| இராசி, கிரகங்களின் கால்கள் | 134 |
| தாது, மூல, சீவ இராசிகள் | 134 |
| கிரக நவலோகம் | 135 |
| கிரக மூலம் | 135 |

| | |
|---|---|
| கிரக மூலதாது | 136 |
| கிரக மிருகம் | 136 |
| சீவதாது | 136 |
| கிரக வடிவு | 137 |
| கிரகங்களின் சேருமிடம் | 137 |
| சிரோதய, பிருட்டோதய இராசிகள் | 138 |
| களவு அறிய | 138 |
| சிந்தனை | 139 |
| பிறந்தநாள் அறிய | 140 |
| அட்சரமும் தெய்வமும் யோனியும் பதாகையும் | 140 |
| அட்சரமும் இராகு ஓட்டமும் | 141 |
| கீழ்நீர் இராசி | 141 |
| பூமி சல்லியம் | 142 |
| சந்திரகதி | 144 |
| இரவிகுணம் | 145 |
| சந்திரன் அங்கிசகுணம் | 145 |
| செவ்வாயின் அங்கிசகுணம் | 145 |
| புதன் அங்கிச குணம் | 146 |
| வியாழன் அங்கிச குணம் | 146 |
| வெள்ளி அங்கிச குணம் | 147 |
| சனி அங்கிச குணம் | 147 |
| **7. கோசர பலமும், தீசாபுத்தி பலனும்** | |
| கிரக பலன் | 148 |
| அங்க சனி | 150 |
| அங்க சூரியன் | 150 |
| அங்க செவ்வாய் | 151 |
| அங்க புதன், வியாழன், வெள்ளி | 151 |
| காலச்சக்கரம் | 151 |
| சவ்வியச் சக்கரம் | 152 |
| அபசவ்வியச் சக்கரம் | 153 |
| மகாதிசை ஆண்டுகள் | 156 |
| மகாதிசைகளின் பலன்கள் | 156 |
| ஆதித்தன் திசைக்குப் புத்திகளும் பலன்களும் | 158 |

| | |
|---|---|
| சந்திரன் திசைக்குப் புத்திகளும் பலன்களும் | 159 |
| செவ்வாய் திசைக்குப் புத்திகளும் பலன்களும் | 160 |
| இராகு திசைக்குப் புத்திகளும் பலன்களும் | 161 |
| வியாழ திசைக்குப் புத்திகளும் பலன்களும் | 162 |
| சனி திசைக்குப் புத்திகளும் பலன்களும் | 163 |
| புதன் திசைக்குப் புத்திகளும் பலன்களும் | 165 |
| கேது திசைக்குப் புத்திகளும் பலன்களும் | 166 |
| சுக்கிர திசைக்குப் புத்திகளும் பலன்களும் | 167 |
| **8. பரகித கணிதம்** | 168 |
| யுகம் பிறக்கும் வகை | 169 |
| வாக்கியம் பிறக்கும் வகை | 170 |
| தற்காலம் பிறக்க வகை | 170 |
| கலியுகம் பிறக்க வகை | 171 |
| சுத்தி நட்சத்திரம் | 172 |
| நட்சத்திரம் எடுக்க | 172 |
| திதி, நாழிகை காண | 174 |
| யோக, கரணம் காண | 174 |
| கதிர்கள் காண | 174 |
| நவக்கோள் எண்ணும்படி | 176 |
| சந்திர கணிதம் | 176 |
| புதன் கணிதம் | 182 |
| வியாழ கணிதம் | 185 |
| சுக்கிர கணிதம் | 187 |
| சனி கணிதம் | 190 |
| குசாதி பஞ்சக்கிரகம் உதயம், அஸ்தமனம் | 192 |
| வெள்ளி பாடு பிறப்பு | 193 |
| **9. சயந்தமாலை** | 194 |
| சூரிய, சந்திர கிரகணம் - பொது | 194 |
| சந்திர கிரகணம் | 206 |
| பாடல் முதல் குறிப்பு அகராதி | 208 |
| தஞ்சை சரசுவதி மகால் நூலக சூடாமணி உள்ளமுடையான் சுவடிகள் | 215 |
| துணைநூல் பட்டியல் | 216 |

# சூடாமணி உள்ளமுடையான்

## நூல்

### காப்பு

*விநாயகர் வணக்கம்*

ஐந்துகரத் தம்பவளத் தன்னிறப்பொற் செந்நிறத்த
தொந்திவயி றந்தச் சொரிமதத்து - முந்து
தவளத் தனிமருப்புத் தண்ட குறுந்தாள்
கவளக் கரிமுகத்தான் காப்பு.[1] 1

எண்ணுங் கருமங்கள் எல்லாம் முடித்தெனக்கு
நண்ணும் கலையனைத்தும் நல்குவான் - கண்ணுதலான்
முண்டத்தான் அண்டத்தான் மூலத்தான் நலம்சேர்
கண்டத்தான் பெற்ற களிறு.[2] 2

ஐவினை யியல்மு கூர்த்தம் அருளுள்ள முடையான் கூற
மெய்யனை முக்க ணானை விக்கினேஸ் வரனை வேழக்
கையனை யாகுவா கனனைக் காக்கும் தாளனைக் கற்றோர்
துய்யனைப் பதினா றாமச் சொரூபனை வணக்கம் செய்வாம்.[3] 3

*திருமால் வணக்கம்*

கள்ள முடைச்சிலை மாமன் தன்னைக் கறுத்தசிரம்
ஒள்ளிய பத்தும் உடையவன் தன்னையும் ஓரடியால்
தள்ளிய டக்கிய தாளோன் சிறுவனைத் தாழ்ந்துரைக்க
உள்ளமு டைக்கவி நானூறும் கையில் உற்றம்மே.[4] 4

---

*1. சூடாமணி உள்ளமுடையான், சுவடி எண். 659. பாயிரம் பாடல் எண்.1*
*2. சூடாமணி உள்ளமுடையான், சுவடி எண். 662. பாயிரம் பாடல் எண்.1*
*3. சூடாமணி உள்ளமுடையான், சுவடி எண். 1572. பாயிரம் பாடல் எண்.1*
*4. உள்ளமுடையான் (சூடாமணி), சுவடி எண். 850a. பாயிரம் பாடல் எண்.1*

## *பிரமன் வணக்கம்*

உலகொரு மூன்றும் ஏத்த உயர்மறை நான்கும் எண்ணெண்
கலைகளும் தெரியும் மங்கை மறையவர் கசிந்து போற்ற
பொலன்மலி உயிர்கள் யாவும் பூமியில் படைத்த பிரமன்
மலரடி பணிய வென்றன் மனத்தினின் முடியு மாதோ ![1] 5

## *அவையடக்கம்*

மாதவர் முன்பு சொன்ன வடமொழிக் கணித நூலைத்
தீதறு தமிழி னாலே செப்பநான் இசைந்த தென்னில்
வேதமும் அங்கம் ஆறும் கலைகளும் விரும்பி ஊமண்
ஓதிஇவ் உலகுக் கேற்க உரைப்பனென் றிசைந்த தொப்பாம்.[2] 6

## *நூல் நுதலிய பொருள்*

ஒப்பில்நா ளோரை வாரம் திதியோகம் கரண மாதி
பெப்பிய விதானம் காலம் சாதக நன்மை தீமை[3]
தப்பினல் பிடித்த உண்ணல் கோசரம் தெசா பலன்கள்
துப்புறு நவகோள் எண்கோள் யாவையும் சொல்ல லுற்றேன்.[4] 7

---

*1. இ-ள் : விண்ணும் மண்ணுலகம் பாதாள உலகம் என்று சொல்லப்பட்ட மூவுலகங்களும் போற்றும் வண்ணம் இருக், யசூர், சாம, அதர்வணம் என்று சொல்லப்பட்ட நான்கு வேதங்களிலும், அறுபத்து நான்கு கலைகளிலும் வல்லமை பெற்று விளங்கும் பாண்டமங்கலமாகிய பாண்டமங்கையில் வாழும் அந்தணர்கள் மனம் உருகிப் போற்றக் கூடிய, இவ்வுலகில் உயிர்களைப் படைத்த பிரமனின் திருமலரடிகளைப் பணிந்து, நான், மனதினால் எண்ணிய செயலை முடிக்க வேண்டுகிறேன்.*

*2. இ-ள் : பெரிய தவத்தினை உடையோர் முந்நாளில் வடமொழியில் இயற்றிய சோதிட நூலை குற்றமற்ற தமிழால் கூறுவதற்கு விரும்பியது, நான்கு வேதங்களும் அதற்கு உறுப்புகளாக உள்ள சிக்ஷை, வியாகரணம், சந்தஸ், நிருக்தம், ஜ்யோதிஷம் மற்றும் கல்பம் ஆகிய ஆறையும் ஊமை ஒருவன் விருப்பத்தோடு இவ்வுலகுக்கு உரைப்பதற்கு விரும்பியதுபோலாம்.*

*3. தப்பிலா விதானம் சார்ந்த தற்கால நன்மை தீமை.*

*4. துப்புடை நவகோளெண்கோள் அடரிவை சொல்ல லுற்றேன்.*

இ-ள் : நாட்களின் பேரும், இராசிகளின் பேரும் வாரங்கள் பேரும், திதிகள் பேரும், கரணங்களின் பேரும், சுபயோகங்களும், சுபகரணங்களும், சோடச கன்மங்களும், காலஹோரை, நட்டாமுட்டி சிந்தனை முதலான பலன்களும் சாதகப் பலன்களும், கோசார பலன்களும் காலக்கிரகங்களும், ......ங்களெண்ணமும் கிரகணாந்தமாகத் தொகுத்துச் சொல்லுவேன் என்றவாறு.[5]

## *நூலாசிரியர்*

உற்றுல குய்ய வந்தான் அருளுள்ள முடையான் மங்கைக்
கொற்றவன் புகழ்போல் இந்தக் குவலயம் முழுதும் கேட்கச்
சொற்றவ நூல்பேர் உள்ள முடைச்சூரை மணியென் றிட்டுப்
பொற்றொடி வளைக்கை நல்லாய்! புலவர்முன் புகலல் உற்றேன். 8

இ-ள் : நூற்பெயர் பெறுமிடத்து செய்தோன் பெயராலும் செய்வித்தோன் பெயராலும் அளவினாலும் மிகுதியினாலும் குறியினாலும் சிறப்பினாலும் பெயர்பெறும். ஆதலின் இந்நூல் செய்வித்தோன் பெயராலே உள்ளமுடைச் சூளாமணி என்று பெயர் பெற்றது என்றவாறு.

பாயிரம் முற்றும்

---

5. நாட்கள், கால ஓரை, வாரம், திதி, யோகம், கரணங்களின் பேரும், அவைகளின் சுபாசுபங்களும், நட்பு, ஆட்சி, உச்சம், பகை, நீசங்களும், அம்சங்களும், திரேகாண குணமும், கோட்கூறு, சுடர்ச்செலவு, முகூர்த்த விதானங்களும், கிரஹணானந்தமாகத் தொகுத்து ஒரு கோர்வைப் படுத்திச் சொல்லுவேன் என்றவாறு. (அச்சுநூல், 1927)

# 1.சோதிட உறுப்பியல்

## நாள் உரிச்சொல்

புகலுறு பரிமா வாசி புரவியே துரகம் சென்னி
இகலுறு குதிரை முன்னாள் இரலையச் சோதி பேராம்
அகலிய தாழி பூகம் அடுப்பொடு தராசு கங்குல்
பகல்வரு கிழவன் சோறு பரணியின் பெயர தாமே. 1

*இ-ள் : பரி, மா, வாசி, துரகம், சென்னி, குதிரை, முன்னாள், இரலை, அற்பிசி, அசுபதியின் பெயர்கள். தாழி, பூதம், அடுப்பு, தராசு, கங்குல், கிழவன், சோறு இவை பரணியின் பெயர்கள்.*

ஆரலே அழலே அங்கி அழகிறால் அறுமீன் ஆவி
சீர்கொள கார்த்தி கைப்பேர் பண்டிதேர்உருளை ஐம்மீன் வையம்
பார்சக டுரோக ணிப்பேர் பரவுமான் தலைஐந் தானம்
மார்கழி மதிபே ராளன் நரிப்புற மிருகசீ ரப்பேர் 2

*இ-ள் : ஆரல், அழல், அங்கி, அழகு, இறால், அறுமீன், ஆவி இவை கார்த்திகையின் பெயர்கள். பண்டி, தேருருளை, ஐமீன், வையம், பார், சகடு இவை ரோகிணியின் பெயர்கள். மான்தலை, ஐந்தானம், மார்கழி, மதிப்பேராளன், நரிப்புறம், மகசிரம், மிருகசீரிடத்தின் பெயர்கள் என்பது.*

பேரிறை செங்கை யாழ்வில் ஆதிரை பேராம் பிண்டி
கார்திரள் மூங்கில் மாலை[1] கரும்பொடா வணமே விண்டல்
கூரிய புனர்த்த மாகும் குடந்தரா கொடிறு தையம்
பார்மதி பூசம் பேராம் பணிகவை யாகில் பாவாய். 3

*இ-ள் : இறை, செங்கை, யாழ், வில் இவை திருவாதிரையின் பெயர்கள். பிண்டி, கார், திரள், மூங்கில், மாலை[2], கரும்பு, ஆவணம், விண்டல் இவை புனர்த்தத்தின் பெயர்கள். குடம், தரா, கொடிறு, பார், குளம், அசுரர், குரு, புணர், தை, மதி இவை பூசத்தின் பெயர்கள். அரவு நாள், கவ்வை, பாம்பு இவை ஆயிலியத்தின் பெயர்கள்.*

*1. 'சோதிட உறுப்பியல்' என்ற இந்தப் பொதுப்பெயர் பதிப்பாசிரியரால் தரப்பட்டுள்ளது. 2. - 3. பாலை.*

பாவுமுற் சனியே வாய்க்கால் வேட்டுவன் எழிலி பாரில்
கூவிய ஞமலி மாசி கொடுநுக மகப்பேர் துர்க்கை
நாவிதன் எலியே மற்றை இடைச்சனி பூர நாள்பேர்
மோவில்பாற் குளம்பங் கூனி கடைச்சனி உத்தி ரப்பேர் 4

இ-ள் : முற்சனி, வாய்க்கால், வேட்டுவன், எழிலி, ஞமலி, மாசி, கொடுநுகம் இவை மகத்தின் பெயர்கள். துர்க்கை, நாவிதன், எலி, இடைச்சனி இவை பூரத்தின் பெயர்கள். பாற்குளம், பங்குனி, கடைச்சனி இவை உத்திரத்தின் பெயர்கள்.

உத்தமன் களிறு நவ்விஉயர்தரு வளர்கங் கைமீன்
அத்தமே கன்னி ஆடை அம்பரம் பயறு நெய்மீன்
சித்திரைப் பெயர்ம ரக்கால் பதுமமே தீபம் சோதி
மொத்தவை காசி முற்றில் அளகுடன் முறம்வி சாகம். 5

இ-ள் : உத்தமன், களிறு, நவ்வி, தரு வளர்கங்கை மீன் இவை அத்தத்தின் பெயர்கள். கன்னி, ஆடை, அம்பரம், பயறு, நெய்மீன் இவை சித்திரையின் பெயர்கள். மரக்கால், பதுமம், தீபம் இவை சோதியின் பெயர்கள். வைகாசி, முற்றில், சுளகு, முறம் இவை விசாகத்தின் பெயர்கள்.

விசைகொள்புற் றாளி புன்தேள் மெய்ப்பனை அனுடப் பேராம்
அசைவில்வல் லாரை வாளி தூளங்கொளி கேட்டை யாகும்
திசையுறு குருகு கொக்கு தேள்கடை யானி மூலம்
வசையுடைக் குளமே பொய்கை வாவிபூ ராடம் மானே. 6

இ-ள் : புள், தாளி, தேள், பனை இவை அனுடத்தின் பெயர்கள். வல்லாரை ஆளி, துளங்கொளி இவை கேட்டையின் பெயர்கள். குருடு, கொக்கு, தேட்கடை, ஆனி இவை மூலத்தின் பெயர்கள். குளம், பொய்கை, வாவி இவை பூராடத்தின் பெயர்கள்.

மானநீர்க் குளமே கூவல் மணிமுடி ஆடி ஊர்தி
தான உத் திராடம் சோணை சிரவணம் உலக்கை வோணம்
மானபுட் பறவை காக்கை ஆவணி அவிட்டம் பேராம்
தேனனாய் ! சுண்டன் மகுன்று செக்கிவை சதயம் சொல்லே. 7

*இ-ள் : நீர்க்குளம், கூவல், மணிமுடி, ஆடி, ஊர்தி இவை உத்திராடத்தின் பெயர்கள். சோணை, சிரவணம், உலக்கை இவை திருவோணத்தின் பெயர்கள். புள், பறவை, காக்கை, ஆவணி இவை அவிட்டத்தின் பெயர்கள். சுண்டன், குன்று[1] செக்கு இவை சதயத்தின் பெயர்கள்.*

**செவ்விய கொழுங்கோல் நாழி புரட்டைசீர் பூரட் டாதி**
**திவ்விய முரசு வேந்தன் அறிவனுத் திரட்டா திப்பேர்**
**வவ்விய கடைமீன் தோணி மரக்கலம் தாலம் நாவாய்**
**வவ்விய ரேவ திப்பேர் வைகல்தின மிவைநாட் பொதுப்பேர். 8**

*இ-ள் : கொழுங்கோல், நாழி, புரட்டை இவை பூரட்டாதியின் பெயர்கள். முரசு, வேந்தன், அறிவன் இவை உத்திராடத்தின் பெயர்கள். கடைமீன், தோணி, மரக்கலம், தாலம், நாவாய் இவை ரேவதியின் பெயர்கள். வைகல், தினம் இவை நாட்களின் பொதுப்பெயர்கள்.*

நாள் உரிச்சொல் முற்றும்.

## 2. இராசி உரிச்சொல்

**பேர்மறி தகர்வற் காலி பெரியமே ழம்பின் கொச்சை**
**கூறிய மெல்லை மொத்தை பசுமுரி குண்டை பாண்டில்**
**சீறிய விடையே புல்லம் சேவெரு திடபப் பேராம்**
**தாரமே கவிஞன் வீணை தண்டுயாழ் மிதுனம் தானே. 9**

*இ-ள் : மறி, தகர், வற்காலி, மேழகம், கொச்சை, மெல்லை, மொத்தை இவை மேடத்தின் பெயர்கள். குண்டை, பாண்டில், விடை, புல்லம், சே, எருது இவை இடபத்தின் பெயர்கள். தாரம், கவிஞன், வீணை, தண்டு, யாழ் இவை மிதுன இராசியின் பெயர்கள்.*

**தீனநண் டலவன் நள்ளி தருகுளிர் சேக்கை கொண்டல்**
**ஆனகற் கடகம் பேராம் வாளரி மலைமாச் சீயம்**
**கானமாப் புலியே கோணம் கருவனும் சிங்கப் பேராம்**
**தேன்மொழி மாது தையல் சேடிபெண் தெரிவை கன்னி. 10**

---

*1. சுண்டில்.*

இ-ள் : நண்டு, அலவன், நள்ளி, சேக்கை, கொண்டல் இவை கற்கடகப் பெயர்கள். அரிமா, மலைமா, சீயம், புலி, கோண் மா, கடுவன் இவை சிங்கத்தின் பெயர்கள். மாது, தையல், சேடி, பெண், தெரிவை இவை கன்னியின் பெயர்கள்.

**கன்னிகோல் நிறைகோல் தூங்கல் கட்டளை வணிகன் செட்டி**
**துன்னிய துலாத்தின் பேராம், துடர்மணி விட்டன் துட்டன்**
**மின்னிய தெறுக்கால் புன்தேள் விருச்சிகம் பேராம் வில்லும்**
**மன்னிய சிலைகாண் டீபங் கார்முகத் தனுவென் மானே.** 11

இ-ள் : நிறைகோல், தூங்கல், கட்டளை, வணிகன், செட்டி இவை துலாத்தின் பெயர்கள். துடர்மணி, விட்டன், துட்டன், தெறுக்கால், புன்தேள் இவை விருச்சிகத்தின் பெயர்கள். வில், சிலை, காண்டீபம், கார்முகம் இவை தனுசின் பெயர்கள்.

**மான்கலை புல்வாய் கேது வளர்சுறா மகர மாகும்**
**கூன்குடம் கலசம் சாடி குட்டுவம் கும்பம் பேராம்**
**மீன்கயல் சேலே கெண்டை மீனப்பேர் இராசிக் கெல்லாம்**
**தேன்கமழ் குழலாய் ! ஓரை பொதுவின்பேர் திதியின் பக்கம்.** 12

இ-ள் : மான், கலை, புல்வாய், கேது, சுறா இவை மகரத்தின் பெயர்கள். குடம், கலசம், சாடி, குட்டுவம் இவை கும்பத்தின் பெயர்கள். மீன், கயல், சேல் கெண்டை இவை மீனத்தின் பெயர்கள். ஓரை என்பது இராசிக்கெல்லாம் பொதுப்பெயர். திதி என்பது பட்சத்துக்கெல்லாம் பொதுப் பெயர்.

இராசி உரிச்சொல் முற்றும்

## கிழமைகளின் உரிச்சொல்

**பக்கரை பரியே மூர்தி பகலவன் பரிதி என்றூழ்**
**திக்கெலாம் புண்ட ரீகன் திவாகரன் அருக்கன் பானு**
**மிக்க மார்த் தாண்டன் வெய்யோன் தினகரன் இரவி விண்ணில்**
**செக்கரா தித்தன் ஞாயிறு அலரிசூ ரியன்பேர் சொல்லே.** 13

இ-ள் : பக்கரை, பரி, ஏழூர்தி, பகலவன், பரிதி, என்றூழ், புண்டரீசன், திவாகரன், அருக்கன், பானு, மார்த்தாண்டன், தினகரன், இரவி, ஆதித்தன், ஞாயிறு, அலரி இவை சூரியனின் பெயர்கள்.

சொல்லரும் பிறையே இந்து சந்திரன் சசியே சோமன்
அல்லெழுந் திதிநாள் கேள்வன் அம்புலி நிலாத்திங் கட்பேர்
சொல்லுமங் கார கன்சேய் நிலமகன் குசன்தீ யாரல்
வல்லிசே ரிடையாய் ! பூமன் வக்கிரன் குருதி செவ்வாய். 14

இ-ள் : பிறை, இந்து, சந்திரன், சசி, சோமன், மதிநாட் கேள்வன், அம்புலி, நிலா இவை திங்களின் பெயர்கள். அங்காரகன், சேய், நிலமகன், குசன், தீ, ஆரல் இவை செவ்வாயின் பெயர்கள்.

செவ்விது கணக்கன் புந்தி மதிமகன் அருணன் சீர்மால்
தவ்வலி புலவன் தூதன் மேதைசா மன்பு தன்பேர்
எவ்வமில் குருபொன் சீவன் பீதகன் இறைவன் பார்ப்பான்
மவ்வலங் குழலாய் ! வானோர் மந்திரி வியாழ மாண்பேர். 15

இ-ள் : கணக்கன், புந்தி, மதிமகன், அருணன், மால், புலவன், தூதன், மேதை, சாமன் இவை புதனின் பெயர்கள். சீவன், இறைவன், குரு, பொன், பீதகன், பார்ப்பான், வானோர், மந்திரி இவை வியாழத்தின் பெயர்கள்.

மாண்புகர் பிருகு சுங்கன் சுக்கிரன் சிதன்[1]ம ழைக்கோள்
மூண்டபார்க் கவனே வெள்ளி முதுமகன் முடவன் நீலன்
காண்டகு பங்கு காரி கரியவன் கதிர்சேய் மந்தன்
கூண்டசுன் சனிப்பேர் நாகம் இராகுப்பேர் கொடியோன் கேது. 16

இ-ள் : புகர், பிருகு, சுங்கன், சுக்கிரன், சிதன்1 மழைக்கோள், பார்க்கவன், இவை வெள்ளியின் பெயர்கள். முதுமகன், முடவன், நீலன், பங்கு, காரி, கரியவன், கதிர்சேய் மைந்தன், சுன் இவை சனியின் பெயர்கள். நாகம் இராகுவின் பெயர். கொடியன் கேதுவின் பெயர்

கிழமை உரிச்சொல் முற்றும்

---

1. சுதன்

## தெத்த யோகம்

கொடுங்கதிர் கீறா ராண்ட குளிர்மதி தனக்குப் பன்னொன்
தடுஞ்செவ்வாய்க் கஞ்சு மேதைக் கிரண்டுபொன் னவருக் காறு
நெடும்புகர்க் கெட்டு நீலர்க் கொன்பது நிகழ்ந்த பக்கம்
படர்ந்தவை தெத்த யோகம் தீதென்பர் பலரு மன்னோ 17

இ-ள் : ஞாயிறு - துவாதசியும், திங்கள் - ஏகாதசியும், செவ்வாய் - பஞ்சமியும், புதன் - திவிதையும், வியாழன் - சட்டியும், வெள்ளி - அட்டமியும், சனி- நவமியும் ***தெத்த யோகம்.*** இவை சுபகர்மங்களுக்கு விலக்கப்பட்டன என்பது.

## அமிர்தயோகம், மரணயோகம்

பலமுடை மூல கோணம் இரேவதி அத்தம் பாரில்
நலமுடை உத்தி ரங்கள் மூன்றுநின் றருக்கன் நண்ணில்
குலவிய வனுடன் கேட்டை கொடுநுகம் விசாகம் அவிட்டம்
சலமுடை அருக்கன் வாரம் சார்ந்திடில் மரணம் தானே. 18

இ-ள் : ஞாயிற்றுக்கிழமையில் மூலம், திருவோணம், இரேவதி, அத்தம், ரோகணி, உத்திரங்கள் (உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி) இவை வரில் ***அமிர்தயோகம்*** என்பது. அனுடம், கேட்டை, மகம், விசாகம், அவிட்டம் இவை வரில் ***மரணயோகம்*** என்பது.

தானமான் தலையே சோதி சாரிருள் புனர்த்தம் வோணம்
மானரேல் திங்கள் சேரில் அமிர்தமா யோக மாகும்
கானமா மகம்வி சாகம் கார்த்திகை பூரட்டாதி
மானநாள் உத்தி ராடம் அதில்வரில் மரணம் என்றே. 19

இ-ள் : திங்கட்கிழமையில் மிருகசீரிடம், சோதி, ரோகணி, புனர்பூசம், திருவோணம் இவை சேரில் ***அமிர்த யோகம்.*** அசுபதி, மகம், விசாகம், கார்த்திகை, பூரட்டாதி, உத்திராடம் இவை வரில் ***மரணயோகம்*** என்பது.

சூடாமணி

அன்றிய உரோகணி மூலம்[1] அறிவனுத் திரத்தில் செவ்வாய்
நின்றிடில் அமிர்த யோகம் நிறைந்தவான் சதயம் செங்கை
வென்றிய கோள்வி சாகம் பூரட்டாதி விரும்பி நாளும்
கன்றிய செவ்வாய் நின்றால் கருமங்கள் நாசம் காணே. 20

இ-ள் : செவ்வாய்க்கிழமையில் ரோகணி[2], மூலம், உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி இவைவரில் ***அமிர்தயோகம்.*** சதயம், திருவாதிரை, விசாகம், பூரட்டாதி இவை வரில் ***மரணயோகம்*** என்பது.

காணுமுப் பூரம் ஆடி கார்த்திகை உத்தி ரத்தில்
பூண்முலை மடவாய் ! புந்தி வந்திடில் புகழ்வர் சால
வாணியாம் அவிட்டம் மூலம் இரேவதி குதிரை அத்தம்
சேணுறு புந்தி வந்தால் செய்யுமக் கருமம் தீதே 21

இ-ள் : புதன்கிழமைகளில் பூரம், பூராடம், பூரட்டாதி, உத்திராடம், கார்த்திகை, உத்திரம் இவைவரில் ***அமிர்தயோகம்.*** அவிட்டம் , மூலம், இரேவதி, அசுவதி, அத்தம் இவைவரில் ***மரணயோகம்*** என்பது.

கரும்பொடு சோதி பூசம் ஐப்பசி மகத்தில் கற்றோர்
விரும்பிய வியாழம் நின்றால் விரும்புவர் அமிர்தம் என்றே
திருந்துமான் தலையார் செக்குச் செங்கைஉத் திரத்தோ டாய்தல்
சுரும்பமர் குழலாய் ! பொன்னன் வந்திடில் தூயரம் சொல்லே. 22

இ-ள் : வியாழக்கிழமையில் புனர்பூசம், சோதி, பூசம், அசுபதி, மகம் இவை சேரில் ***அமிர்தயோகம்.*** மிருகசீரிடம், ரோகணி, சதயம், திருவாதிரை, உத்திரம், ஆயிலியம் இவை ***மரணயோகம்*** என்பது.

சொல்லரு மூலம் அத்தம் இரேவதி துரகன் சுங்கன்
புல்லிடில் அமிர்த யோகம் பூசமொடு ரோகணி கேட்டை
மல்குபே ரோண மாயில் மகத்தினில் வெள்ளி வந்தால்
அல்லிருங் குழலாய் ! தீதென் றறிந்தனர் தமிழை ஆய்ந்தோர். 23

---

*1. மூலம் ஓணம்.* 2. திருவோணம்

இ-ள் : வெள்ளிக்கிழமையில் மூலம், அத்தம், இரேவதி, அசுபதி இவைவரில் ***அமிர்தயோகம்.*** பூசம், ரோகணி, கேட்டை, திருவோணம், ஆயிலியம், மகம் இவை சேரில் ***மரணயோகம்*** என்பது.

**ஆய்ந்தசீர் மகமே சோதி ஆரல்பார் சதயம் காரி**
**சேர்ந்திடில் அமிர்தம் அத்தம் சித்திரை புரட்டை நாவாய்**
**வாய்ந்தஅந் திரத்தோ டாயில் சனிவரு மரணம் என்க**
**சேர்ந்ததில் செல்லா நாட்கள் சித்தயோ கப்பேர் செப்பே.** 24

இ-ள் : சனிக்கிழமையில் மகம், சோதி, கார்த்திகை, ரோகணி, சதயம் இவை வரில் ***அமிர்தயோகம்.*** அத்தம், சித்திரை, பூரட்டாதி, ரேவதி, உத்திரம், ஆயிலியம் இவை வரில் ***மரணயோகம்*** என்பது. இந்தக் கிழமைகளில் சொல்லாத நாட்கள் சேர்ந்துவரில் ***சித்தயோகம்*** என்பது.

## திதி - அமிர்தயோகம்

**செப்பிய குருவுக் கொன்பான் நான்குபன் னான்கு சேய்க்கு**
**எப்புறு கதிர்க்கும் ஒன்றோ டாறுபன் னொன்று வெள்ளிக்**
**கொப்புடை மதிக்கும் ஈரா ரேழிரண் டுயர்சுதன் புந்திக்**
**கப்பதின் மூன்று மூன்றும் எட்டுநல் லமிர்த யோகம்.** 25

இ-ள் : வியாழக்கிழமை நவமி, சதுர்த்தி, சதுர்தசி, செவ்வாய்க்கிழமையும், ஞாயிற்றுக்கிழமையும் கூடின பிரதமை, சட்டி, ஏகாதசி, வெள்ளிக்கிழமையும் திங்கட்கிழமையும் கூடின துவாதசி, சத்தமி, துதியை; சனிக்கிழமையும், புதன்கிழமையும் கூடின திரயோதசி, திரிதியை, அட்டமி இவை ***அமிர்தயோகம்*** என்பது.

## சித்தயோகம்

**யோகம்நன் றிரவி அத்தம் உயர்மதி வான்பே ராளன்**
**மேகவங் காரன் சென்னி மேதைசேர் அனுஷம் விண்ணோர்**
**ஏகமந் திரிசேர் பூசம் இரும்புகர் வாரம் தோணி**
**மாதவன் சனியு ரோணி சித்தியென் மயிலே அன்னாய்.** 26

இ-ள் : ஞாயிற்றுக்கிழமை அத்தம், திங்கட்கிழமை மிருகசீரிடம், செவ்வாய்க்கிழமை அசுபதி, புதன்கிழமை அனுடம், வியாழக்கிழமை பூசம், வெள்ளிக்கிழமை ரேவதி, சனிக்கிழமை ரோகணி இவை ***சித்தயோகம்*** என்பது.

**சுபயோகம்**

**அன்னமே பருதிக் கோரெட் டம்புலிக் கொன்பான் சேய்க்கு**
**மன்னிய இருமூன் றாகும் மாலவர்க் கொருமூன் றாகும்**
**பொன்னவன் தனக்குப் பக்கம் பதினொன்று புகர்க்குப் பன்மூன்**
**றின்னல்சேய் சனிக்குப் பன்னான் கிவைசுப யோகம் என்னே.** 27

இ-ள் : ஞாயிற்றுக்கிழமை - அட்டமி, திங்கட்கிழமை - நவமி, செவ்வாய்க்கிழமை - சட்டி, புதன்கிழமை - திரிதிகை, வியாழக்கிழமை - ஏகாதசி, வெள்ளிக்கிழமை - திரயோதசி, சனிக்கிழமை - சதுர்தசி இவை ***சுபயோகம்*** என்பது.

**நாசயோகம்**

**என்றுநீ டிருளைச் சீறும் இந்துவுக் காறு வெள்ளி**
**ஒன்றிய நவமி மேதைக் கிரண்டொளி யவர்க்கு நாலு**
**பொன்னக் கெட்டு நீலன் பூமனுக் கேழு பொல்லாக்**
**கன்றிடு நாச யோகம் என்றறி கதிர்வேற் கண்ணாய் !** 28

இ-ள் : திங்கட்கிழமை - சட்டி; வெள்ளிக்கிழமை - நவமி; புதன்கிழமை - துதிகை; ஞாயிற்றுக்கிழமை - சதுர்த்தி; வியாழக்கிழமை-அட்டமி; சனிக்கிழமை, செவ்வாய்கிழமை சத்தமி. இவை ***நாசயோகம்*** என்பது.

**கதிரவர்க் கைந்தோ டாரல் கணக்கர்க்கேழ் பரணி காரி**
**எதிருமெட் டோடு தோணி சேய்க்குமுன் னுவர்வு ரோணி**
**புதியபொன் தனக்குப் பன்மூன் றனுடமாம் புகர்க்கா றோணம்**
**மதியவர்க் கிரண்டாம் பக்கம் சித்திரை மருவில் நாசம்.** 29

இ-ள் : ஞாயிற்றுக்கிழமை - பஞ்சமியும் கார்த்திகையும்; புதன்கிழமை - சத்தமி பரணியும்; சனிக்கிழமை - அட்டமியும் இரேவதியும்; செவ்வாய்க்கிழமை - பவறணையும் (பௌர்ணமி) ரோகணியும்; வியாழக்கிழமை - திரயோதசி அனுடம்;

வெள்ளிக்கிழமை - சட்டி, திருவோணமும்; திங்கட்கிழமை துவிதியை சித்திரையும் இவை ***நாசயோகம்*** என்பது.

மருவிய கதிர்வி சாகம் மதிவரும் சதயம் செவ்வாய்
பொருவிய அவிட்டம் புந்தி இரேவதி பொன்னு ரோணி
மருகுவில் பூசம் காரி உத்திரம் பேணி வந்தால்
அருளிலா நாசம் என்றார் ஆரிய நூல றிந்தோர். 30

இ-ள் : ஞாயிற்றுக்கிழமை - விசாகம்; திங்கட்கிழமை - சதயம்; செவ்வாய்க்கிழமை - அவிட்டம்; புதன்கிழமை - இரேவதி; வியாழக்கிழமை - ரோகணி; வெள்ளிக்கிழமை - பூசம்; சனிக்கிழமை - உத்திரம் இவை ***நாசயோகம்*** என்பது.

### பிரிச யோகம்

அருக்கன்முன் சனி ஈறாக முறம்பொய்கை அவிட்டம் தோணி
உருக்குடம் உத்திரம் தொட்டு உதித்தவா ரத்தில் நின்று
தெரிந்தநாள் அளவும் எண்ணி ஏழுக்கீந் தீயா சேடம்
இருத்தைநா சம்சா வின்பம் சுகம்சித்தி பிரிசம் என்னே 31

இ-ள் : ஞாயிற்றுக்கிழமை - விசாகம்; திங்கட்கிழமை - பூராடம்; செவ்வாய்க்கிழமை - அவிட்டம்; புதன்கிழமை - இரேவதி; வியாழக்கிழமை - உரோகணி; வெள்ளிக்கிழமை - பூசம்; சனிக்கிழமை - உத்திரம். இந்த நாட்கள் முதலாக அவற்றை வாரத்திலுள்ள நாளளவும் எண்ணின அந்தத் தொகையை ஏழுக்கு ஈய்ந்து, மீதி சேடம் ஒன்றாகில் **இருத்தை யோகம்.** இரண்டாகில் ***நாசயோகம்.*** மூன்றாகில் ***மரண யோகம்.*** நான்காகில் ***அமிர்தயோகம்.*** ஐந்தாகில் ***சுபயோகம்,*** ஆறாகில் ***சித்தயோகம்.*** ஏழாகில் ***பிரிசயோகம்***[1]. இப்படி பார்த்துக்கொள்வது.

### அக்கினி யோகம்

பிரிசம்வெண் திங்கட் காறு பெரியசேய்க் கேழும் ஆறும்
குறைசெய்தா றெட்டுப் பொன்னுக் கொன்பது புகர்க்குப் பத்து
பரிவிய சனிக்குப் பன்னொன் றருக்கர்க்கீ ராறு பக்கம்
விரைசேர்பூங் குழலாய்! அங்கி யோகமென் றிசைந்தார் மேலோர் 32

---

*31. அதிகயோகம்*

இ-ள் : திங்கட்கிழமை - சட்டி; செவ்வாய்க்கிழமை - நவமி, புதன்கிழமை - அட்டமி, வியாழக்கிழமை - நவமி; வெள்ளிக்கிழமை - தசமி; சனிக்கிழமை - ஏகாதசி; ஞாயிற்றுக் கிழமை - துவாதசி இவை **அக்கினியோகம்** என்பது. சுபகர்மங்களுக்கு விலக்கப்பட்டன என்றவாறு.

### சகட யோகம்

**மேலெழும் வியாழம் நின்ற இராசிக்கா றீரா றெட்டில்**
**மாலைவெண் மதியம் சேர வந்தநாள் சகட யோகம்**
**பாலன்தான் பிறக்கில் சாவாம் பழிபடும் மணத்தைச் செய்யில**
**ஞாலமேல் வழியே போகில் நலமில்லை நறுமின் கொம்பே. 33**

இ-ள் : வியாழம் நின்ற இராசிக்கு ஆறாம் இராசியிலும் பன்னிரெண்டாம் இடத்திலும் எட்டாம் இடத்திலும் இவற்றில் சந்திரன் நிற்க வந்தநாள் ***சகடயோகம்.*** இந்நாளில் பிறந்த பிள்ளை மரணம், மணம் செய்யில் பழிபடும். யாத்திரை போக காரியம் பலியாது. இவை சுபகன்மங்களுக்கு விலக்கப்பட்டன என்றது. இது ***சகடயோகம்*** என்பது.

### பிரதி யோகங்களின் பெயர்கள்

**நறுங்கம்பம் பிரிசம் வாணாள் புண்ணியம் நலமா கண்டம்**
**அறந்துணைச் சூலம் கண்டம் மாக்கமூண் அரவோ டேற்றம்**
**கறங்கயில் சித்தி கோறல் பெறுகாயம் பரிசம் காட்சி**
**திறம்புகழ் காவல் வாய்ப்புத் திசைமுகன் இந்தி ரன்பேய். 34**

இ-ள் : கம்பம், பிரிசம், வாழ்நாள், புண்ணியம், நலம் மாகண்டம், அறம், துணை, சூலம், கண்டம், ஆக்கம், ஊண், அரவு, ஏற்றம், அயில், சித்தி, கோறல், பெறுகாயம், பரிகம், காட்சி, திறம், புகழ், காவல், வாய்ப்பு, திசைமுகன், இந்திரன், பேய் இவை பிரதியோகங்களின் பெயர்கள். விஷ்கம்பம், பிரீதி, ஆயுஷ்மான், சௌபாக்கியம், சோபனம், அதிகண்டம், சுகர்மம், திருதி, சூலம், கண்டம், விருத்தி, துருவம், வியாகாதம், ஹர்ஷணம், வஜ்ரம், ஸித்தி, வியதீபாதம்,

வரியான், பரிகம், சிவம், ஸித்தம், ஸாத்யம், சுபம், சுக்கிலம், பிராம்ஹம், ஐந்திரியம், வைதிருதி இவை வடமொழி வழக்கப்பெயர் என்பது. இப்படி இருபத்தேழு பிரதியோகம் கண்டுகொள்க.

பேயுடன் பரிகம் கோறல் பெரும்பாம்பு சூலம் கம்பம்
மாயுமா கண்டம் கண்ட அயிலொழித் திவைகள் நன்றாம்
மோயுமா கம்ப மூன்றும் சூலமஞ் சரவுக் கொன்பான்
காயுமா கண்டம் கண்டம் ஆறுமுன் கடிகை நீக்கே. 35

இ-ள் : பேய், பரிகம், கோறல், பாம்பு, சூலம், கம்பம், மாகண்டம், கண்டம், அயில் ஆக ஒன்பது யோகம் ஒழிய அல்லாதவை நன்றென்பது. இவையிலும் கம்பத்துக்கு மூன்று நாழிகை, சூல யோகத்துக்கு ஐந்து நாழிகை, அரவாகிய வியாகாத யோகத்துக்கு முன்னே ஒன்பது நாழிகை, கண்டத்துக்கும் அதிகெண்டத்துக்கும் முன்னே ஆறு நாழிகை கழித்தால் நல்லது என்பது. வைதிருதி பரிகம், விதிபாதம், வச்சிரம் இவை சுபகர்மங்களுக்கு விலக்கப்பட்டன என்றவாறு.

நீக்கியிக் கன்னல் முன்னே இவையுமாம் நித்த யோகம்
பூக்குழல் மடவாய் ! அத்தை வாக்கியத் துருவம் கூட்டி
சேர்த்ததில் சென்ற திங்கள் தியதியைத் தினத்தைச் செவ்வே
பார்த்ததில் ஒருநாள் நீக்கி நின்றநாள் பரிந்து சொல்லே. 36

இ-ள் : இந்த யோகம் பார்க்கும்படி - அத்தை வாக்கியத்தையும் துருவம் கூட்டி, அதிலே சென்ற மாதமும் தேதியும் கூட்டி, நாளைப் பார்த்துக் கண்ட நாளிலே ஒரு நாளைக் கழித்து, நின்றநாள் எத்தனையாம் நாள் என்று அறிந்து இத்தனையாம் யோகம் என்று அறிந்து முன்சொன்ன இருபத்தேழில் பலாபன்கள் சொல்லுவது.

நித்தயோகம் முற்றும்.

## திரிதிவசாதியோகம்

**பரித்தவன் உறுபக் கத்தில் ஒன்றேற்றி ஏழக் கீய்ந்தால்**
**திருக்கலி நந்தை கானம் செய்தினம் புகழென் றேழும்**
**உரைத்தனர் இதனின் காளம் கலியிவை ஒழிய மற்றும்**
**தெரித்தன நல்ல வென்று திறிதிவை ஆதி செப்பே.** 37

*இ-ள் : அற்றைப் பக்கம் இத்தனையாம் பக்கம் என்று அறிந்து அதிலே ஒன்று கூட்டி, இதனை ஏழுக்கு ஈய்ந்து, ஈயா நின்ற சேடம் ஒன்றாகில்* ***திருத்திவசம்,*** *இரண்டாகில்* ***கலிதிவசம்,*** *மூன்றாகில்* ***நந்தை திவசம்,*** *நான்காகில்* ***காளகண்ட திவசம்,*** *ஐந்தாகில்* ***செயதிவசம்,*** *ஆறாகில்* ***தினதிவசம்,*** *ஏழாகில்* ***புகழ்திவசம்*** *என்று பெறும். இவற்றிலே கலிதிவசமும் காளகண்ட திவசம் பொல்லாது. மற்றுள்ளவை நல்லதென்று சொல்வது.*

திரிதிவச யோகம் முற்றும்

## வார சூனியம் அ ல்லது கிழமை சூனியம்

**ஆதவனுக் கனுடம் கேட்டை மகமுறம் அடுப்பைந் தானம்**
**தீதெனும் திங்கள் பொய்கை தேள்மகம் புரட்டை ஆரல்**
**கோதளு விசாகம் பொல்லாக் குருதிக்கு அவிட்டம் வோணம்**
**மேதகு சதயம் கேட்டை ஆதிரை விளம்ப லாகா.** 38

*இ-ள் : ஞாயிற்றுக்கிழமை அனுடம், கேட்டை, மகம், விசாகம், பரணி, மிருகசீரிடம்; திங்கட்கிழமை பூராடம், அனுடம், மகம், பூரட்டாதி, கார்த்திகை; செவ்வாய்க்கிழமை அவிட்டம், திருவோணம், சதயம், கேட்டை, திருவாதிரை இவை ஆகாது என்பது.*

**விளங்கிய புதர்க்கு மூலம் ஓணமோ டாரல் அவிட்டம்**
**விளம்பரி பரணி தீதென் றியம்பினர் இரணி யர்க்கு**
**வளங்கொள் மான் தலைபூ ராடம் மரக்கலம் புனர்தம் பூசம்**
**துலங்கிய முலையாய் ! தீதென் றுரைத்தனர் தூய நூலோர்.** 39

இ-ள் : புதன்கிழமை மூலம், திருவோணம், கார்த்திகை, அவிட்டம், அசுபதி, பரணி; வியாழக்கிழமை மிருகசீரிடம், பூராடம், இரேவதி, புனர்பூசம், பூரம் இவை வரில் ஆகாது.

நூலறி புகர்க்குப் பூசம் விசாகமொண் சகடு விட்டம்
கோலமான் தலையோ டத்தம் அனுடமுங் கொடுமை செய்யும்
நீலனுக் கத்தம் பூசம் புனர்த்தமுத் தீரநீர்த் தோணி
மாலைஒண் குழலாய் ! தீது வாரசூ னியம்வந் தாலே. 40

இ-ள் : வெள்ளிக்கிழமை பூசம், விசாகம், உரோகணி, அவிட்டம், மிருகசீரிடம், அத்தம், அனுடம்; சனிக்கிழமை அத்தம், புனர்பூசம், உத்திரம், இரேவதி இவை ஏழு வாரத்துக்கும் இந்நாட்களில் வரில் கிழமை சூனியம் என்பது. இவை சுபகர்மங்களுக்கு விலக்கப்பட்டன என்றவாறு.

## கிழமை பிறந்தநாள்

வந்திக்கும் கதிர்க்கும் கங்குல் மதிக்குச்சித் திரைசேய்க் காடி
புந்திக்கும் அவிட்டம் பொன்னுக் குத்திரம் புகர்பூ ராடம்
கெந்திக்கும் சனிக்குத் தோணி கிழமைகள் பிறந்த நாளாம்
சிந்திக்கும் கருமம் எல்லாம் தீமையாய் விளையும் மாதே. 41

இ-ள் : ஞாயிற்றுக்கிழமை பரணி, திங்கட்கிழமை சித்திரை, செவ்வாய்க்கிழமை உத்திராடம், புதன் அவிட்டம், வியாழக்கிழமை உத்திரம், வெள்ளிக்கிழமை பூராடம், சனி இரேவதி இவை கிழமை பிறந்த நாட்கள். இவை ஒரு காரியத்துக்கும் ஆகாது என்பது.

மாதாந்தம் மூன்று நாளும் வருடாந்தம் ஒருபத் தஞ்சு
தீதாந்த கிராணம் தீண்டும் தினமுன்பின் சேர்ந்த ஏழும்
காதார்ந்த கண்ணாய் ! நாளின் கடையிரு கடிகை தானும்
வேதாந்தம் உணர்ந்தோர் தீதென் றுரைத்தனர் மிகவும் மென்மேல் 42

இ-ள் : மாதாந்தம் மூன்று நாளும், பங்குனி மாதம் பிறந்த தினம் ஐந்து நாளும், கிராணம் தீண்டும் நாளும், அதற்கு முன் மூன்று நாளும், பின் மூன்று நாளும் ஆக ஏழு நாளும் நாள் அந்தம் இரண்டு நாழிகையும் சுபகர்மங்களுக்கு விலக்கப் பட்டன என்றவாறு.

## கண்ணுள்ள நாட்கள் - கண் இல்லாத நாட்கள்

மேதகு கதிரோன் நின்ற நாளுமந் நாள்மேல் மூன்றும்
கோதறு பின்னில் மூன்றும் குருட்டுநாள் என்று கொள்க
எய்திய அதற்கு நன்நான் கெதிர்முகம் ஒருகண் காணும்
ஏதமில் நின்ற நாட்கள் இருகண்ணும் அருக்கர்க் கென்னே 43

*இ-ள் : ஆதித்தன் நின்ற நாளும், அதற்கு முன் மூன்று நாட்களும் பின் மூன்று நாட்களும் ஒரு திருட்டியில்லை. (குருட்டு நாட்கள்). அதற்கு அப்பால் முன் நான்கு நாட்களும் பின் நான்குநாட்களும் **ஒரு திருட்டி** (ஒரு கண்). அதற்கப்பால் பதினான்கு நாட்களும் **இரண்டு திருட்டி** (இரண்டு கண்கள்) உண்டு என்பது.*

## சந்திர திருட்டி

அருக்கனார்க் கிழமை யாதி சென்றஅக் கிழமை ஆய்ந்து
பெருக்கிமூன் றதனால் பெற்ற மாமுதல் கழித்துப் பின்னை
இருக்குநாள் ஒன்பான் ஓர்கண் பன்னிரண் டிருகண் காணும்
தருக்கிலாப் பின்னில் ஆறும் குருட்டுநாள் சந்தி ரர்க்கே. 44

*இ-ள் : சந்திர திருட்டிக்கு ஞாயிற்றுக்கிழமை முதலாகச் சென்ற கிழமையை மூன்றினால் பெருக்கிக் கூடின தொகையை அசுபதி முதலாகக் கழித்து நின்ற நாள் ஒன்பதும் சந்திரனுக்கு **ஒரு திருட்டி,** அதற்கப்பால் பன்னிரண்டு நாட்களும் **இரண்டு திருட்டி.** அதற்கு அப்பால் ஆறு நாட்களும் திருட்டி இல்லை.*

## பக்க திருட்டி

சந்திரன் அமர பக்கத் தசமிவிட் டதற்பின் ஐந்து
முந்துற்ற ஆதி நான்கும் குருடுபின் ஒருமூன் றோர்கண்
பிந்துற்ற வாறும் காணும் பின்னும்மூன் றொருகண் காணும்
சிந்தித்த வாறுங் காணும் திரியமூன் றொருகண் காணே. 45

*இ-ள் : அமரபட்சத்து ஏகாதசி முதலாக ஐந்து திதியும் பூர்வபக்கத்துப் பிரதமை முதலாக நாலும் சதுர்த்தி மட்டுக்கும் ஒரு திருட்டி இல்லை. பஞ்சமி முதல் மூன்று நாட்களும் ஒரு*

திருட்டி. அட்டமி முதல் ஒரு நாளும் இரண்டு திருட்டி உண்டு. அதன்பின் சதுர்தசி முதல் மூன்றும் ஒரு திருட்டி. அதன்பின் துவிதிகை முதல் ஆறு நாட்களும் இரண்டு திருட்டி. அதற்கப்பால் அட்டமி, நவமி, தசமி மூன்றும் ஒரு திருட்டி என்பது.

**ஒருகண்ணுண் டெனுந்திங் கட்கு உத்தமம் கதிரோர்க் காகா**
**இருகண்ணுண் டாம்நாள் பக்கமி யாவர்க்கும் இன்பம் எய்தி**
**இருகண்ணும் இலாநா ளாகி இயற்றிய கருமம் தீதாய்**
**விரவிய சுற்றத் தோடும் கெடுமென விளம்பி னாரே.** 46

இ-ள் : சந்திர திருட்டி ஒன்றாகிலும் நன்று. சூரிய திருட்டி ஒன்றாகில் தீது என்பது. இரண்டு திருட்டியும் உள்ள நாள், பக்கங்கள் நன்று என்பது. அல்லாதவை சுபகர்மங்களுக்கு விலக்கப்பட்டன. பக்கத்திருட்டி ஒன்றாகிலும் ஆம் என்றவாறு.

பக்க திருட்டி முற்றும்

## இராச திருட்டி

**விளங்கிய மேடம் குண்டை வீணைகற் கடகம் வில்லு**
**இளம்பிறை இனமாய் ஆறும் இரவுகண் காணும் என்க**
**தெளிந்திடும் அறிகோல் கன்னி குடங்கயல் தேளாம் எல்லாம்**
**விளங்கதிர் அருக்கன் கூறாம் பகல்விழி உடைய மன்னோ** 47

இ-ள் : மேடம், இடபம், மிதுனம், கடகம், தனுசு, மகரம் ஆக ஆறு இராசிகளிலும் சந்திரன் இனம் என்றும், இரவு விழிக்கும் இராசிகள் என்றும் சொல்லுவது. சிங்கம், கன்னி, துலாம், விருட்சிகம், கும்பம், மீனம் ஆக ஆறு இராசிகளும் சூரியன் இனம் என்றும், பகல் விழிக்கும் என்றும் சொல்லுவது. நட்டங்களுக்குப் பகல் கெட்டது என்றும், மாரகங்களுக்கு இரவு கெட்டது என்று சொல்லுவது. மற்றும் இவ்வகை பார்த்து இரவு பகல் இராசி திருட்டி அறிந்து சொல்வது.

இராச திருட்டி முற்றும்.

## பக்கமுண்ணும் திசாதிசை

மன்னுமுதல் சதுர்த்தியினில் அஞ்சாம் சாமம்
மருவியஅவ் வட்டிரண்டு பன்னொன் றேழாம்
முன்னிலுவா நாற்சாமம் பிற்பக் கத்தில்
மூன்றிலிரு மூன்றேழில் மூன்றாம் சாமம்
பன்னியபிற் பக்கத்தின்மேல் எட்டாம் சாமம்
பதினான்கில் முதற்சாமம் பகர்ந்த வீட்டில்
இன்னதனை யாஞ்சாமம் என்று மாற்ற
இரவிமுதல் திசைதீதென் றியம்ப லாமே. 48

*இ-ள் : பூர்வபக்கத்து சதுர்த்தியில் ஐந்தாம் சாமம் மேற்கே உண்ணும். அட்டமி இரண்டாம் சாமம் கிழக்கே உண்ணும். ஏகாதசியில் ஏழாம் சாமம் வடக்கே உண்ணும். உவா நாலாம் சாமம் தென்மேற்கே உண்ணும். அமரபக்கத்துத் திரிதிகையில் ஆறாம் சாமம் வடமேற்கே உண்ணும். நவமி மூன்றாம் சாமம் தெற்கே உண்ணும். அமரபட்சத்து தசமியில் எட்டாம் சாமம் வடகிழக்கே உண்ணும். சதுர்தசியில் முதல் சாமம் கிழக்கே உண்ணும் முறைமை என்க. இச்சாமங்கள் சுபகர்மங்களுக்கு விலக்கப்பட்டன என்றவாறு. ஒரு சாமம் ஏழரை நாழிகை என்று அறிவது. இந்தத் திக்கில் யாத்திரை போக ஒண்ணாது என்றவாறு.*

## நட்சத்திர விடகடிகை

ஆதிரைபன் னோர்கடிகை[1] புரட்டை ஈரெட்
டத்தமிரு பத்திரண்டும் செக்கீ ரொன்பான்
சோதிமுறம் கேட்டைமான் தலைஈ ரேழம்
சொற்றிவன்பூ ராடம்நா லாறா கும்பாய்
பாய்துரகம் ஐம்பதுருள் நாற்பான் விட்டம்
பனையோனம் பத்தெண்ணான் காயிலியம் மீதே
சித்திரையாடி குடம்நாலைந் துமிகு மூலம்
இருபதன்பத் தாறின்மேல் நாற்கடிகை விடமே 49

*49. 1. ஆதிரை மூவேழ் கடிகை*

இ-ள் : திருவாதிரை பதினொரு நாழிகைக்குமேல் நாலு நாழிகையும் விடம். பூரட்டாதி பதினாறு நாழிகைக்குப் பின்பு; அத்தம் இருபத்து இரண்டுக்குப் பின்பு; உத்தரம், சதயம் பதினெட்டுப் பின்பு; சுவாதி, விசாகம், கேட்டை, மிருகசீரிடம் பதினான்குப் பின்பு; பரணி, உத்திரட்டாதி, பூராடம் இருபத்து நாலுக்குப் பின்பு; அசுபதிக்கு ஐம்பதுக்குப் பின்பு; அவிட்டம் நாற்பதுக்குப் பின்பு[1]; அனுடம், உத்திராடம், திருவோணம் பத்துக்குப் பின்பு; ஆயிலியத்துக்கு முப்பத்திரண்டுக்குப் பின்பு; சித்திரை, மூலம், பூசம் இருபதுக்குப் பின்பு; கார்த்திகை, புனர்பூசம், மகம், இரேவதி இவை முப்பதிற்குப் பின்பு நான்கு நான்கு நாழிகை விடம். இவை சுபகாரியங்களுக்கு விலக்கப்பட்டன என்றவாறு.

விஷகடிகை முற்றும்

## பஞ்சக்கிரகம்

கடுங்கதிரோன் சென்றதிங்கள் தியதி மேலே
கருதியநா விராசிபதி மூன்று பாகை
உடன்பெயத்திற் கண்டநாட் டூம மத்தை
ஓங்கியமண் டலத்திலொழித் துதவி பாதம்
மடந்தையதி லாரோரை கூட்ட வட்டம்
வட்டத்தை மண்டலத்தில் களைய வில்லாம்
படர்ந்தசிலை யில்பதினேழ் பாகையிடக் கேது
பண்டையதாம் இராசியொன்றைப் பயில்வித் தாலே 50

இ-ள் : மேட மாதம் முதல் சென்ற மாதமும் தேதியும் கூட்டிவைத்து, இதன்மேலே நாலு இராசியும் பதிமூன்று பாகையும் கூட்டி நாளைப் பார்த்துக் கண்டநாள் **தூமம்** என்ற பெயராம். இந்தத் தூமத்தை மண்டலத்தில் களைந்து கண்ட நாள் ***விதிபாதம்***. இதில் ஆறு இராசி கூட்ட ***பரிவேடம்.*** இதை மண்டலத்தில் களைய கண்டநாள் ***இந்திரதனுசு.*** இதிலே பதினேழு பாகை கூட்ட கண்டநாள் ***கேது.*** இதில் ஒரு இராசி கூட்ட முன்போலவேயாம். இவை சுபகர்மங்களுக்கு விலக்கப்பட்டன என்றவாறு.

பஞ்சக்கிரகம் முற்றும்

---

*49. 2. ரோகணி 41 நாழிகைக்குமேல்*

## கரணம்

வித்தகத்தால் சென்றபக்கம் இரட்டித் தொன்றை
விலக்கிநின்ற தொகையேழில் கழித்த சேடம்
அத்தகைய மடங்கடலற் புலியேனம் கழுதை
யானைஎரு துடன்கோழி இவையடவே அறிந்தால்
உத்தடவே கரணம்பதி னான்கு முன்பின்
உவாமுன்பின் முதற்றிதிமுன் கூகைநாய் பாம்போ
ஏய்த்தபுழு உவாச்சூழ்ந்த கரணம் பொல்லா
வெண்குக்கு டங்கழுதை இவையும் தீதே. 51

*இ-ள் : சென்ற பட்சத்தை இரட்டித்து அதிலே ஒன்றைக்* கழித்து நின்ற தொகையை ஏழில் கழித்து ஈயாத சேடம் ஒன்றாகில் சிங்கம், இரண்டாகில் புலி, மூன்றாகில் பன்றி, நாலாகில் கழுதை, அஞ்சாகில் யானை, ஆறாகில் எருது, ஏழாகில் கோழி என்றறிக. இவற்றில் பன்றி, கோழி, கழுதை இவை சுபகர்மங்களுக்கு விலக்கப்பட்டன. அமரபட்ச சதுர்தசி பிற்கூறு கூகை. உவாவில் முற்கூறு நாய், பிற்கூறுபாம்பு. பூர்வபட்சத்துப் பிரதமையில் முற்கூறு புழு. இவை ***உவாச் சூழ்ந்த கரணம்*** என்று பெயராம். இவையும் விலக்கப்பட்டன என்றவாறு.

கரணம் முற்றும்.

## கிரக தோடம்

தீதில்கதிர் நின்றநாள் கேழற் பாதம்
சிறந்தபத் தாற்கம்பம் பதினைந் தாகில்
கோதிலயன் கண்டமிரு பத்தொருநாட் காலன்
கொடியாகும் இவைசாலக் கொடுமை செய்யும்
ஓதியசேய் நிற்றநாட் கேழாநாள் சூலம்
ஓங்கியபத் தேர்திகிரி பதினஞ் சாகில்
வாதியேழு கண்டமேழு மூன்றாம் நாளேற்
காலனிவை நல்வினைக்குக் கழித்தார் நூலோர் 52

இ-ள் : ஆதித்தன் நின்ற நாளுக்கு ஏழாம் நாள் ***உற்பாதம்.*** பத்தாம் நாள் ***கம்பம்,*** பதினைந்தாம் நாள் பிரமகண்டம். இருபத்தோறாம் நாள் ***காலன்.*** கொடிய இவை சுபகர்மங் களுக்கு விலக்கப்பட்டன. செவ்வாய் நின்ற நாளுக்கு ஏழாம் நாள் ***சூலம்.*** பத்தாம் நாள் ***திகிரி.*** பதினைந்தாம் நாள் ***கண்டம்.*** இருபத்தோறாம் நாள் ***காலன்.*** இவையும் சுபகர்மங்களுக்கு விலக்கப்பட்டன என்றவாறு.

நூலறியும் புதன்நின்ற நாளுக் கெட்டும்
　　நோக்கறிய வருநான்கும் பதினெட்டும் கண்டம்
கோலநெடும் புகர்க்கொன்பான் ஏழுங் கூற்றம்
　　குருவுக்கும் ஒன்பானேழ் கொடிய தாகும்
நீலனுக்குப் பதினொன்று அஞ்சும் பத்தும்
　　நிகழ்ந்தஇரு பதும்ஆறும் பெந்த மாகும்
பாலனைய மொழிமடவாய் ! பாம்புக் கேழ்நாள்
　　பரிகமென இவையனைத்தும் பழித்தார் மேலோர். 53

இ-ள் : புதன் நின்ற நாளுக்கு 8, 24, 18 ***கண்டம்*** என்று பேராம். இவையும் ஆகாது என்பது. வெள்ளி நின்ற நாளுக்கு 9, 7 ***கூற்றம்.*** இவையும் ஆகாது என்பது. வியாழன் நின்ற நாளுக்கு 9, 7 **கொடியன்** என்பது. இவையும் ஆகாது என்பது. சனி நின்ற நாளுக்கு 11, 5, 10, 20, 6 ***பந்தம்*** என்பது. இவையும் ஆகாது என்பது. பாம்பு நின்ற நாளுக்கு ஏழாம் நாள் ***பரிகம்*** என்று பேராம். இவையும் விலக்கப்பட்டன என்றவாறு.

கிரகதோடகம் முற்றும்

## கோள் உதைப்பு

மேலிரவி நின்றநாட்கீ ராறை உதைக்கும்
　　வியாழமிரு மூன்றுசேய் மூன்றுசனி எட்டாம்
மாலவன்பின் இருமூன்று மதிஇருபத் திரண்டு
　　வாளரவம் எட்டஞ்சும் புகர்பின்னாள் உதைப்பர்
சாலவின்னாள் இக்கொடியர் மேடம் குண்டை
　　தனுக்கன்னி தலையாவ மரியாழ் கும்பம்
கோலிடையே கழுகுண்ணும் குளிர்மீன் தேள்மான்
　　கொடும்புன்றி கடையுண்ணும் இவையுமறக் கொடிதே. 54

இ-ள் : ஆதித்தன் நின்ற நாளைக்குப் பனிரெண்டு நாளை உதைப்பன். சனி எட்டு நாளை உதைக்கும். புதன் நின்ற நாளக்குப் பின் ஆறு நாளை உதைக்கும். சந்திரன் நின்ற நாளுக்குப் பின் இருபத்திரெண்டு நாளை உதைக்கும். இராகு-கேது நின்ற நாளுக்கு எட்டு நாளை உதைக்கும். வெள்ளி பின் அஞ்சு நாளை உதைக்கும். இந்நாள் எட்டுக்கும் கொடியது என்று பேராம். இவை சுபகர்மங்களுக்கு விலக்கப்பட்டன என்றது.

கோள் உதைப்பு முற்றும்.

மேட இராசி, இடப இராசி, தனுசு இராசி, கன்னி இராசி முற்கூறு 1¼ நாழிகை பாம்பு உண்ணும். மிதுன இராசி, சிங்க இராசி, கும்ப இராசி, துலா இராசி இவை நடுவிற் கூறு 1¼ நாழிகை கழுகு உண்ணும். கற்கடக இராசி, மீன இராசி, விருச்சிக இராசி, மகர இராசி இவை கடைக்கூறு 1¼ நாழிகை பன்றி உண்ணும் இவை ஒருகாரியத்துக்கும் ஆகாது என்றவாறு.

**குளிகன்**

கொடுங்குழையாய் ! தங்கிழமை தாங்கள் முத லாக
குறித்தொருவன் கிழமையினைக் கோள்கள் ஏழு
மடங்கவுண் ணுமைமுக்கால் கடிகை தன்னில்
ஆதித்தன் தன்னூண்கா லனுதய மாகும்
நெடுங்குருஆ னியமகண்டம் புந்தி அர்த்தன்
நீலநூண் குளியனிவை நினைக்க லாகா
கடுங்குளியன் ஊரேற்றல் ஆனை ஏறல்
கால்நாட்டல் நெல்லிடுதல் கரும மாமே. 55

இ-ள் : தனதான கிழமை தாங்கள் முதலாக ஒரு கிழமையினை ஏழு கோளும் அடைவே உண்ணும். அவை மூன்றே முக்கால் நாழிகை ஒரு ஊணாக உண்பார்கள். ஆதித்தன் ஊண் ***காலன்*** உதயம் என்று பேர். வியாழன் ஊண் ***எமகண்டம்*** என்று பேர். புதன் ஊண் ***அர்த்தப்பிரகணன்*** என்று பேர். சனி ஊண் ***குளிகன்*** என்று பேர். இவை

சுபகர்மங்களுக்கு விலக்கப்பட்டன. சனி ஊண், குளிகனில் ஊரேற்றல், ஆனை ஏறல், கால் நட்டல், அகம் எடுக்கல், கல் நெல் இட்டு வைக்க, தானியங்கள் செலவிட நல்லதென்பது.

குளிகன் முற்றும்.

## யோகினி

கருதுமுதல் பட்சமுடன் நவமிகிழக் காகும்
　　களிப்புடைய பதினொன்று மூன்றும்தென் கிழக்காம்
தெரியிலொரு பதிமூன்றும் அஞ்சும் தெற்காம்
　　செப்பரிய பனிரெண்டும் நான்கும் தென்மேல்
மருவுபதி நான்காறு மேற்கு வாவேழ்
　　வடமேற்காம் தசமியுடன் இரண்டும்வடக் காகும்
உரியவிரு நான்குவட கிழக்கே உண்ணும்
　　யோகினிமுன் இடம்தீய ஒழிந்ததிசை நன்றே.　　56

இ-ள் : பிரதமையும் நவமியும் கிழக்கே நிற்கும். ஏகாதசியும், திரிதிகையும் தென்கிழக்கே நிற்கும். திரயோதசியும் பஞ்சமியும் தெற்கே நிற்கும். துவாதசியும் சதுர்தசியும் தென்மேற்கே நிற்கும், சதுர்தசியும் சட்டியும் மேற்கே நிற்கும். உவாவும் சப்தமியும் வடமேற்கே நிற்கும். தசமியும் திரிதிகையும் வடக்கே நிற்கும். அட்டமி வடகிழக்கே நிற்கும். இவை யோகினி என்பது. இவள் முன்னும் இடமும் தீயள். பின்னும் வலமும் நல்லது என்பது.

யோகினி முற்றும்

## பூமி சுக்கிரன்

நன்றான திசையெட்டு முதற்பட்சம் கிழக்காம்
　　நாலிரண்டு திசைநவமி விண்ணில் உண்ணும்
சென்றாரும் பூதலத்தில் தசமி உண்ணும்
　　திரியவுமிவ் வகைமுப்பான் திதியும் சேரு
என்றாருந் தென்கிழக்கு நிலம்விண்ணும் தீதாம்
　　எதிரும்வல மும்வழியில் யாரும் போகார்
மின்தாழும் மருங்குழலாய் இடமும் பின்னும்
　　மிகநல்லன் பூமிசுக்கிரன் வினைகட் கெல்லாம்.　　57

சூடாமணி -

இ-ள் : கிழக்கு முதலான எட்டுத் திக்குகளிலும் பிரதமை நிற்கும். நவமி ஆகாயத்தில் நிற்கும். தசமி பூமியில் நிற்கும். ஏகாதசி முதலாக அமரபட்சத்தில் திரிதிகை யறுதியாக எட்டு மறுபடி எட்டுத் திக்கிலும் நிற்கும். சதுர்தசி ஆகாயத்திலே நிற்கும். அமாவாசை பூமியிலே நிற்கும். இப்படி முப்பது பட்சத்தையும் அடவிலே நிறுத்துவது. தென்கிழக்கு நிற்கும் பட்சங்களும் ஆகாயமும் பூமியிலே நிற்கும் பட்சங்களுக்கு எதிரும் வலமும் யாத்திரை முதலான இவற்றுக்கு விலக்கப் பட்டன. அல்லாத பட்சங்களுக்கு இடமும் பின்னும் மிக நல்லது என்றவாறு.

பூமி சுக்கிரன் முற்றும்.

**நந்தை, பத்திரை, சயை, இருத்தை, பூரணை**

வினவின்முதல் திதியாறு பதினொன்றும் நத்தை
மேலிரண்டேழ் பன்னிரண்டும் விளங்கியபத் திரையாம்
மினியவொரு மூன்றெட்டுப் பதிமூன்று சயையாம்
இருத்தையென்பர் நான்கினுடன் நவமிபதி னான்கை
புனைகுழலாய் ! பஞ்சமியும் பத்துமூவர் தானும்
பூரணமென மறியலவன் கோல்மகரம் சரமாம்
தனிவிடைதேள் குடம்சிங்கம் நிலைஇராசி தானும்
தனுமிதுனங் கன்னிமீனம் உபயமெனத் தகுமே. 58

இ-ள் : பிரதமையும், சட்டியும், ஏகாதசியும் ***நந்தை*** என்பது. துவிதிகை, சப்தமி, துவாதசி, ***பத்திரை*** என்பது. திரிதிகையும், அட்டமியும், திரயோதசியும் ***சயை*** என்பது. சதுர்த்தியும் நவமியும் சதுர்தசியும் ***இருத்தை*** என்பது. பஞ்சமியும், தசமியும் உவாவும் ***பூரணை*** என்று அறிவது.

நந்தை முதலானவை முற்றும்.

மேடம், கடகம், தூலாம், மகரம் இவை ***சர இராசிகள்.*** இடபம், விருட்சிகம், கும்பம், சிங்கம் இவை ***திர இராசிகள்.*** தனுசு, மிதுனம், கன்னி, மீனம் இவை ***உபய இராசிகள்*** என்பது.

## பஞ்சாங்கத்தின் பலன்

தகுமிரவி சனிசெவ்வாய் பாம்பு தீக்கோள்
சந்திரனும் வன்தீயன் முன்பு நல்லன்
மிகுமறையோன் புதன்வெள்ளி நற்கோள் எல்லாம்
மிகநல்லர் உச்சமிரா வாரபலன் இல்லை
தொகுதிதியும் குணமொன்றும் கரணமிரண் டாகும்
துய்யநாள் நான்காகும் கிழமை எட்டாம்
முகின்முலையாய் ! யோகபலன் பதினா றென்பர்
முகூர்த்தபலன் மிகுந்தபலன் மொழியும் மாதே. 59

*இ-ள் : ஆதித்தனும், சனியும், செவ்வாயும், இராகுவும், கேதுவும்* ***தீக்கோள்கள்*** *என்பன. சந்திரன், அமரபட்சத்தில் தீக்கோள். பூர்வபட்சத்தில் நல்லவன். வியாழமும், வெள்ளியும் புதனும்* ***நற்கோள்கள்*** *என்பன. ஆகையால் எல்லோரும் தம்தம்முடைய உச்சதானங்களில் நல்லது என்பது. இரவுக்கு வாரபலன் இல்லை என்பது. பட்சத்தின் பலன் ஒன்று. கரணத்தின் பலன் இரண்டு. நாளின் பலன் நான்கு, கிழமையின் பலன் எட்டு. யோகத்தின் பலன் பதினாறு. முகூர்த்தத்தின் பலன் அளவில்லை என்று அறிவது.*

பலாபலன் முற்றும்.

## நோக்குப் பலன்

மாலவன்தன் உதயமாயி ரம்குற்றம் கெடுக்கும்
வன்புகரோ னவன்பதினா யிரம்குற்றம் மாய்க்கும்
சீலமறை யவன்நூறா யிரம்குற்றம் தீர்க்கும்
சித்தசுப யோகம்நூ றாம்குற்றம் செயிக்கும்
சோலைஇளங் குயில்மொழியாய் ! அமிர்த யோகம்
தோன்றியிடில் துயரமெல்லாம் துரப்புண் டோடும்
கோலஇளங் கதிர்க்கண்ட இருள்போல் தேயும்
குருவெள்ளி புதன்நோக்கில் குற்ற மெல்லாம். 60

*இ-ள் : புதன் ஆயிரம் குற்றம் தீர்க்கும். வெள்ளி பதினாயிரம் குற்றம் மாய்க்கும், வியாழ உதயம் நூறாயிரம்*

குற்றம் தீர்க்கும். சித்தயோகமும் சுபயோகமும் நூறு குற்றம் தீர்க்கும். வியாழன், வெள்ளி, புதன் இவர்கள் நோக்கு உண்டாகில் திசைகள் எல்லாம் ஆதித்தனைக் கண்ட அந்தகாரம் போல நீங்கும் என்பது.

நோக்குப்பலன் முற்றும்.

**கிரக உறவும் பகையும்**

எல்லிரவி தனக்குறவு வியாழம் திங்கள்
இரணியனும் புதனும்சேய்க் கினியபுதன் வெள்ளி
புல்லியெழும் புதர்க்கருக்கன் ஒழிய நல்லர்
பொன்னவர்க்குச் சேயொழியப் பொருந்தார் இல்லை
நல்லபுகர்க் குறவுசனி செவ்வாய் புந்தி
நான்மறையோன் சனிக்குறவு புதன்பொன் வெள்ளி
அல்லவர்கள் எல்லோரும் பகைவர் என்றால்
ஆரணங்கே! அருந்தமிழின் நூலடைய வாய்ந்தோர். 61

இ-ள் : ஆதித்தனுக்கு உறவு வியாழம். சந்திரனுக்கு உறவு வியாழனும் புதனும். செவ்வாய்க்கு உறவு புதனும் வெள்ளியும். புதனுக்கு ஆதித்தன் ஒழிய எல்லோரும் உறவு. வியாழத்துக்கு செவ்வாய் ஒழிய எல்லோரும் உறவு. வெள்ளிக்கு உறவு சனியும், செவ்வாயும், புதனும் வியாழமும். சனிக்கு உறவு புதன், வியாழன், வெள்ளி என்பது. சொல்லாதவை எல்லோரும் பகை என்று அறிக.

உறவு பகை முற்றும்.

**கிரக ஆட்சி - உச்சம் - நீசம்**

ஆய்ந்தகதிர்க் காட்சிசிங்கம் மதிக்கலவன் செவ்வாய்க்
காடுதேள் புதர்க்கரிவை மிதுனம்பொன் னவர்க்கு
வாய்ந்தசிலை மீன்புகர்க்கு துலையிடபம் சனிக்கு
மகரகும்பம் இவையாட்சி வானிரவிக் காடு
வேய்ந்தமதிக் கேளருதாம் கலைபுகர்க்குக் கன்னி
இரணியர்க்குக் கற்கடகம் எழில்புகர்க்கு மீனம்
காய்ந்தசனி தனக்குக்கோ லுச்சமுச்சம் தனக்குக்
கனங்குழையாய் ஏழிடங்கள் நீசமெனக் கருதே. 62

இ-ள் : ஆதித்தனுக்கு ஆட்சி சிங்கம், சந்திரனுக்கு ஆட்சி கற்கடகம், செவ்வாய்க்கு மேடமும் - விருட்சிகமும்; புதனுக்குக் கன்னியும் - மிதுனமும்; வியாழனுக்குத் தனுசும் மீனமும்; சுக்கிரனுக்குத் துலாமும் - இடபமும்; சனிக்கு மகரமும் - கும்பமும் ஆட்சி என்று அறிவது. ஆதித்தனுக்கு உச்சம் மேடம், சந்திரனுக்கு உச்சம் இடபம், செவ்வாய்க்கு உச்சம் மகரம், புதனுக்கு உச்சம் கன்னி, வியாழத்துக்கு உச்சம் கற்கடகம், சுக்கிரனுக்கு உச்சம் மீனம், சனிக்கு உச்சம் துலாம் என்பது. உச்சமான இராசிக்கு ஏழாம் இராசி நீசம் என்று அறிவது.

நட்பு, ஆட்சி, உச்சம், பகை, நீசம் முற்றும்.

கருத்துடைய ஒன்றுநான் கேழு பத்து
கண்டங்களும் உதயநீர்க்கீழ் பாடுச்ச மென்பர்
பொருத்துடைய புதன்வியாழன் உதயத்து வலியர்
புகர்மதிநீர்ச் சனிபாம்பு பாட்டிற் பூமன்
தெரித்தகதிர் உச்சியினில் வலியர்புதன் தனக்கு
சேய்வலிது சேய்க்குமந்தன் அதற்குச் செம்பொன்
குருதனக்குப் புகர்புகர்க்கு மதிமதிக்குக் கதிரோன்
கொடுங்கதிரோன் தனக்கரவு கோல்வளையாய் வலிதே 63

இ-ள் : ஒன்று, நான்கு, ஏழு, பத்து இவை கண்டங்கள். உதயம் நீர்க்கீழ் என்றும், பாடு என்றும், உச்சம் என்றும், கண்டம் நான்கிற்கும் பெயராம். இவற்றில் புதனும், வியாழமும் உதயத்து வலியர். சனியும் பாம்பும் பாடில் வலியர், செவ்வாயும் ஆதித்தனும் உச்சத்தில் வலியர். புதனுக்குச் செவ்வாய் வலியன்; செவ்வாய்க்குச் சனி வலியன்; சனிக்கு வியாழம் வலியன்; வியாழத்துக்கு வெள்ளி வலியன்; வெள்ளிக்கு சந்திரன் வலியன்; சந்திரனுக்கு சூரியன் வலியன்; சூரியனுக்கு இராகுவும் கேதுவும் வலியர் என்பது.

**அவச்சாயை, பாதச்சாயை**

வலியதகர் ஆவணிஒன் றிருகால்சுன் மங்கை
முற்சுன்னிரு காலொன்று யாழ்கோல் ஒன்று
முலைவிலிரு முக்காலோர் இரண்டலவன் மீனம்
ஓரிரண்டும் ஒன்றரையும் ஒன்றுந்தே ளிரண்டு
பொரியுமிரண் டரைமூன்று வில்லு மூன்று
பொருந்தியமூன் றரைநான்கு புல்வாய் நான்கு
பலதிகழ்மூன் றரைமூன்று மூன்றிரண் டரையும்
பகரிரண்டும் கழிஅவச்சா யைபாதச்சா யையரையே 64

இ-ள் : சித்திரைக்கும் ஆவணிக்கும் முற்பத்துக்கு ஓரடி கழியும்; நடுவிற் பத்துக்கு அரையடி கழியும்; பிற்பத்துக்குச் சுன். வைகாசியும் புரட்டாசியும் முற்பத்துக்குச் சுன். நடுப்பத்துக்கு அரை, பிற்பத்துக்கு ஒன்று, கார்த்திகை முற்பத்துக்கு இரண்டு; நடுப்பத்துக்கு ஒன்றரை; பிற்பத்துக்கு இரண்டு. ஆடி, பங்குனி முற்பத்து இரண்டு; நடுப்பத்து ஒன்றரை; பிற்பத்து ஒன்று. ஐப்பசி, ஆனி முற்பத்து இரண்டு; நடுப்பத்து இரண்டரை; பிற்பத்து மூன்று. மார்கழி முற்பத்து மூன்று; நடுப்பத்து மூன்றரை; கடைப்பத்து நான்கு. தை முற்பத்து நான்கு; நடுப்பத்து மூன்றரை; பிற்பத்து மூன்று. மாசி முற்பத்து மூன்று; நடுப்பத்து இரண்டரை; பிற்பத்து இரண்டு. இப்படி அவச்சாயை கழியும். பாதச்சாகை எப்பொழுதும் அரையடி கழியும்.

அரிமகரம் தேள்மிதுனம் அஞ்சே காலாம்
மாடுகயல் நாலேகால் அரிவைதுலை யைந்தாம்
எருதுகுடம் நாலின்மேல் முக்கால்வில் லலவன்
இருங்கடிகை அஞ்சரையூண் இராசிபன் னிரண்டு
விரவியசித் திரைமுதல்பங் குனியீ றாகும்
மேடமுதல் மீனந்தம் வெய்யோன் நாளும்
பருதிநிலை ஒரைஅறிந் தாறோ ரைக்குப்
பண்டுரைத்த நாழிகையால் பகற்கடிகை பகரே. 65

இ-ள் : சிங்கம், மிதுனம், மகரம், விருச்சிகம் $5\frac{1}{4}$ நாழிகை; மேடம், மீனம் $4\frac{1}{4}$ நாழிகை; கன்னி, துலா 5

நாழிகை; இடபம், கும்பம் $4\frac{3}{4}$ நாழிகை; தனுசு, கற்கடகம் $5\frac{1}{2}$. இவை பன்னிரெண்டும் அடவிலே சித்திரை மாதம் முதல் பங்குனி மாதம் ஈறாக மேடம் முதல் மீன் அந்தமாக அடவிலே இவற்றில் ஆதித்தன் உதயாதி இராசியே அந்தந்த மாதமாம். அதுமுதலாக ஆறு இராசி இரவிலே நாழிகையாம். ஆறு இராசி பகலிலே நாழிகையாம் நின்றவாறு.

**பகல் நாழிகை**

பகர்ந்தபகல் நாழிகையே பாதி செய்து
பாதிதனை ஏழினால் பெருக்கிப் பாரில்
நிகழ்ந்தவடி அளந்துஅவச் சாய்கை பாதச்
சாய்கைநீக்கி நின்றவடி மேல்ஏழுங் கூட்டி
திகழ்ந்தமுதல் தொகையதனை இதனுக் கீய்ந்து
சிறந்தபலன் சென்றநா ழிகையின் பின்னே
புகழ்ந்திரவி படுங்கடிகை இவைதான் என்று
பொலக்குழலாய் ! பகற்கடிகை பொருந்தச் சொல்லே. 66

இ-ள் : முன்சொன்ன பகல் நாழிகையை இரு கூறாக்கி இதில் ஒரு கூற்றினை ஏழால் பெருக்கி, தொகையும் அடியை அளந்து அவச்சாயை, பாதச்சாயை நீக்கி நின்ற அடியதன்மேல் ஏழும் கூட்டி, அதனை முற்பட்ட தொகைக்கு ஈய்ந்த பலன் சென்ற நாழிகையாம். உச்சிக்குப் பின்பு ஈந்த பலன் அஸ்தமனமாக இத்தனை நாழிகையாம் என்று சொல்வது.

பகல் நாழிகை முற்றும்

**இரவு நாழிகை**

சொல்லுமுதல் நாட்பின்சேர் இரண்டே முக்கால்
தோளுமரா இருமுக்கால் முக்கால் ரோணி
மல்லல்(புரி) மான்(தலையும்) இரண்டரை யாம்வருசெங் கையொன்று
செங்கைஒன்று புனர்மூன்றே முக்கால்பூ சமிரண் டேகால்
வல்லரவு ஒன்றேமுக் கால்மகமிரண் டேகால்
மாபூரம் உத்திரமோ ரிரண்டாம் கைம்மீன்
சொல்லுமொரு மூன்றரைய சித்திரையொன் றரையாம்
தீபமொன்றை முக்காலதின் முறமிரண்டே காலே. 67

இ-ள் : அசுபதி உச்சமானால் பரணி உச்சமாகஇரண்டே முக்கால் நாழிகை செல்லும்; பரணிக்குக் கார்த்திகை இரண்டே முக்கால் நாழிகை செல்லும்; கார்த்திகைக்கு உரோகணி இரண்டேகால் நாழிகை செல்லும்; உரோகணிக்கு மிருகசீரிடம் இரண்டரை நாழிகை செல்லும்; மிருகசீரிடத்துக்குத் திருவாதிரை ஒரு நாழிகை செல்லும்; திருவாதிரைக்குப் புனர்பூசம் மூன்றேமுக்கால் நாழிகை செல்லும்; புனர்பூசத்துக்கு பூசம் இரண்டு நாழிகை செல்லும்; பூசத்துக்கு ஆயிலியம் ஒன்றேமுக்கால் நாழிகைச் செல்லும்; ஆயிலியத்துக்கு மகம் இரண்டு நாழிகைச் செல்லும்; மகத்துக்குப் பூரம் இரண்டு நாழிகைச் செல்லும்; பூரத்துக்கு உத்திரம் இரண்டு நாழிகைச் செல்லும்; உத்திரத்துக்கு அத்தம் மூன்றரை நாழிகைச் செல்லும்; அத்தத்துக்குச் சித்திரை ஒன்றரை நாழிகைச் செல்லும்; சித்திரைக்குச் சோதி ஒன்றே முக்கால் நாழிகைச் செல்லும்; சோதிக்கு விசாகம் இரண்டே கால் நாழிகைச் செல்லும் என்று அறிவது.

**காற்பனை ஒன்றேமுக்கால் ஒன்றேகால் கேட்டை**
**கருதிய மூலம்பொய்கை இரண்டேகால் ஆடி**
**ஏற்குமிரண் டரையான்றே முக்கால் அவிட்டம்**
**இரண்டுசெக் கொன்றே புரட்டை மூன்றே**
**சாற்றிய உத்திரட் டாதிரண்டே முக்கால்**
**தாலமிரண் டேகால்மர ஒன்றே காலாம்**
**தீர்க்கரவி நின்றநாளுக் கெட்டாநாள் உச்சம்**
**சேயிழையாய் அதுமுதலாய்ச் செல்கடிகை செப்பே** 68

இ-ள் : விசாகத்துக்கு அனுசம் ஒன்றேமுக்கால் நாழிகை செல்லும், அனுசத்துக்கு கேட்டை ஒன்றேகால் நாழிகை செல்லும், கேட்டைக்கு மூலம் இரண்டேகால் நாழிகை செல்லும், மூலத்துக்கு பூராடம் இரண்டேகால் நாழிகை செல்லும், பூராடத்துக்கு உத்திராடம் இரண்டரை நாழிகை செல்லும், உத்திராடத்துக்கு திருவோணம் மூன்றேகால் நாழிகை செல்லும், திருவோணத்துக்கு அவிட்டம் இரண்டு நாழிகை செல்லும், அவிட்டத்துக்குச் சதயம் ஒன்றேமுக்கால்

நாழிகை செல்லும், சதயத்துக்குப் பூரட்டாதி மூன்றே முக்கால் நாழிகை செல்லும், பூரட்டாதிக்கு உத்திரட்டாதி இரண்டே முக்கால் நாழிகை செல்லும், உத்திரட்டாதிக்கு ரேவதி இரண்டேகால் நாழிகை செல்லும், ரேவதிக்கு அசுபதி ஒன்றேகால் நாழிகை தாழ்க்கும் என்பது.

சூரியன் நின்ற நட்சத்திரம் இன்னது என்று அறிந்து அதற்கு எட்டாம் நட்சத்திரம் உச்சம் என்று அறிந்து, சென்ற நட்சத்திரத்துக்கு முன்பு சொன்ன நாழிகைதனைக் கூட்ட இத்தனை நாழிகை தொகை என்று அறிவது.

## இரவு நாழிகை முற்றும்

### முகூர்த்தாங்கிசம்

செப்பியதால் செல்கடிகை பெருக்கி ஆறில்
    தியதிபெய்து கதிர்நின்ற வோரைமுத லாக
முப்பதினால் கழித்துநின்ற உதய ஓரை
    மூன்றெய்து மாலரைப்பா கைமுறையே யுண்பா
ஐப்பசியில் சேய்வெள்ளி புந்தி திங்கள்
    பேயருக்கன் புதன்வெள்ளி அழலோன் ஆரல்
ஒப்பரிய பொன்காரி சனிபொன் உண்ணும்
    மொழிந்தவையும் இவ்வகையே உண்பரென உரையே. 69

இ-ள் : உதயாதி சென்ற நாழிகையை ஆறில் பெருக்கி தேதியையும் அதனுடன் கூட்டி, ஆதித்தன் நின்ற இராசி முதலாக ஒரு இராசிக்கு முப்பது கழித்தால் நின்றது அப்போதைய உதய இராசியாம். உதய இராசியால் சென்ற பாகை அறிந்து மூன்றே ஆறு மாவரை பாகைக்கு ஒரு அங்கிசம் என்று அறிவது. ஒரு இராசி ஒன்பது அங்கிசமாகக் கொள்வது. அசுபதி முதலாக 27 நாட்களையும் ஒரு இராசிக்கு 2¼ நாட்களாக மேடம் ஆதியாக அடைப்பது. அவை,

அசுபதி முதற்கால் மேடச் செவ்வாய்
அசுபதி இரண்டாம்கால் இடப வெள்ளி
அசுபதி மூன்றாம்கால் மிதுன புதன்

அசுபதி நான்காம்கால் கற்கடக சந்திரன்
பரணி முதற்கால் சிங்க ஆதித்தன்
பரணி இரண்டாம்கால் கன்னி புதன்
பரணி மூன்றாம்கால் துலாச் சுக்கிரன்
பரணி நான்காம்கால் விருட்சிக செவ்வாய்
கார்த்திகை முதற்கால் தனுர் வியாழன்
கார்த்திகை இரண்டாம்கால் மகரச் சனி
கார்த்திகை மூன்றாம்கால் கும்பச் சனி
கார்த்திகை நான்காம்கால் மீன வியாழன்

மற்றும் உண்டான நாட்களுக்கும் இப்படிக் கொள்வது உதய இராசியில் உற்ற கால அறிந்து இன்ன அங்கிஷம் என்பது.

முகூர்த்தாங்கிஷம் முற்றும்

## திரேகாணம் - காலவோரை

உரைத்திடிலோர் இராசியொரு மூன்றுகூ றாம் ஓரை
உடையவனுண் ணுமுதல்கூ றஞ்சாம் ஓரை
கருத்துடைய நடுவொன்பான் ஓரை காப்போன்
கடையுண்ணும் காணுமிவை கால ஓரை
அருக்கன்முதல் சனியீறாம் கிழமை ஏழு
அந்தணன்முன் புதனீறாய் உண்பான் முன்னே
சரித்தஇவர்க் கவ்வாறாம் கோள்கள் வந்து
தக்கவிரண் டரைக்கடிகை உண்பரெனச் சாற்றே. 70

இ-ள் : ஒரு இராசியை மூன்று கூறாக்கி இராசி உடையவன் முதல்கூறு உண்ணும். ஐந்தாம் இராசி உடையவன் நடுவிற் உண்ணும். ஒன்பதாம் இராசி உடையவன் கடைசி கூறு உண்ணும். இவ்வண்ணம் எல்லா இராசிகளுக்கும் திரேக்காணம் ஒட்டிக்கொள்வது.

ஞாயிறு முதல் சனிக்கிழமை ஈறாக ஏழு கிழமைகளிலும் வியாழன் முதல் புதன் ஈறாக ஏழும் அடைவே சிறுகாலே வந்து இரண்டரை நாழிகை உண்பர். இரண்டரை நாழிகை முதல் உண்ட கோள்களுக்கு ஐந்தாம் கோள் முறைமை. முறைமையாக வந்து உண்பர்.

திரேக்காணம் - காலவோரை முற்றும்

## கோள்கூறும் சுடர்ச்செலவும்

சாற்றிடில் ஓரையொன்று பாகை முப்பான்
சமனிரட்டை ஓரைவியன் ஒற்றை தம்மில்
ஏற்றவைந் தோடைந்தெட் டேழைந்து கூறாய்
எரிகாரி இரணியன்மால் புகருண்பா வியனில்
மாற்றுசமந் தனில்வெள்ளி மால்பொன் காரி
மணமகனுங் கோள்கூறு வளைக்கை நல்லாய்
தோற்றுவியன் முதல்பாதிக் கதிர்பின் திங்கள்
சுடர்ச்செலவு சமன்திங்கள் முதல்பின்சூழ் கதிரே.71

இ-ள் : ஒரு இராசியை முப்பது பாகை ஒற்றித்த இராசி வியன். இரட்டித்த இராசி சமன். இவற்றை ஐந்தும் ஐந்தும் எட்டும் ஏழும் ஐந்துமாக முப்பது பாகையையும் ஐந்து கூறாக்கி இதில் வியன் இராசியில் முதல் கூறு செவ்வாய், இரண்டாம் கூறு சனி, மூன்றாம் கூறு வியாழன், நான்காம் கூறு புதன், ஐந்தாம் கூறு வெள்ளியாக இவ்வகையே உண்பர். சமன் இராசியில் முதல் கூறு வெள்ளி, இரண்டாம் கூறு புதன், மூன்றாம் கூறு குரு, நான்காம் கூறு காரி, ஐந்தாம் கூறு செவ்வாயாக இவ்வகையே உண்பர். இவ்வடைவே கோள்கூறு உண்பர் என்று அறிவது.

கோள் கூறு முற்றும்.

## சுடர்ச்செலவு கொள்ளும்படி

வியன் இராசியில் முதற்கூறு பதினைந்து பாகையும் ஆதித்தன் உண். பிற்கூறு பதினைந்து பாகையும் சந்தின் ஊண். சமன் இராசியில் முற்கூறு பதினைந்து பாகையும் சந்திரன் ஊண். பிற்கூறு பதினைந்து பாகையும் ஆதித்தன் ஊண் என்பது.

## 2. பொதுவியல்

### முகூர்த்த விதானங்கள்

கதியுடை புணர்சீ மந்தம் கருதுபேர் காது நல்வாய்
புதுமயிர் கல்வி பூணூல் முடிமணம் பொருந்து பூமி
விதைமுதல் போக்குச் சாந்தி பிரதீட்டைவீ டெடுத்தல் மேலும்
பொதுவியல் விதானம் எல்லாம் புகல்செய்வன் பூவை அன்னாய். 72

*இ-ள் : புணர்ச்சி, சீமந்தம், நாமகரணம், அன்னவேதனம், அன்னப்பிரசானம், சவனம், வித்யாரம்பம், உபநயனம், அபிசேடம், விவாகம் செய்ய, கிருஷி ஆரம்பம், விதை விதைக்க முதலானவை, யாத்திரை, சாந்தி செய்ய, வீடெடுக்க பொதுவிலானவையெல்லாம் சொல்லுவன் என்றவாறு.*

### நிசேகம்

பூவையே அனையார் பூத்த நாள்முதல் நாலு நாளும்
மேவிடார் புணர்ச்சி பின்னை விரும்புநாள் பன்னி ரண்டில்
மேவிய கர்ப்பம் உண்டாம் ஈங்கிவை இரட்டை யானால்
பாவின ஒற்றை நாளேல் பெண்ணெனப் பகர்மின் னீரே. 73

*இ-ள் : ஸ்திரீ ருதுவான நாள் முதல் பதினாறு நாட்கள் அளவும் கர்ப்பம் உண்டாம். இதில் மூன்றில் நான்கு நாட்களும் விலக்கப்பட்டன. மற்ற பன்னிரண்டு நாட்களில் இரட்டித்த நாள் ஆண்பிள்ளை என்று அறிவது. ஒற்றித்த நாட்கள் எல்லாம் பெண்பிள்ளை என்று அறிவது.*

பகர்வரும் சோதி மூலம் பனையுருள் ஓணம் தோணி
தகைவிலுத் திரங்கள் மூன்றும் சதயநாள் அத்தம் சாலப்
புகழ்வர்கள் புணர்ச்சி விட்டம் சித்திரை புனர்தம் பூசம்
மகசிரம் குதிரை இந்நாள் மத்திபம் தீது மற்றே. 74

*இ-ள் :சோதி, மூலம், அனுசம், உரோகணி, திருவோணம், ரேவதி, உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, சதயம், அத்தம் இவை நிஷேகத்துக்கு உத்தமம் என்பது. அவிட்டம், சித்திரை, புனர்பூசம், பூசம், மிருகசீரிடம், அசுபதி இவை மத்திமம் என்பது. அல்லாதவை ஆகாது என்பது.*

தீதுவாம் எட்டி ருத்தை தீயவர் வாரம் செப்பில்
ஓதரும் பிறந்த நாட்கள் பகலுடன் ஒழிக்கப் பட்ட
தாதவிழ் குழலி கேளாய் ! சரராசி மிகவும் நன்றாம்
கோள்கள் நோக்கில் மிக்கவும் விழமி தாமை. 75

இ-ள் : உவா, அட்டமி, சதுர்த்தி, நவமி, சதுர்தசியும்; ஞாயிற்றுக்கிழமை, செவ்வாய்க்கிழமை, சனிக்கிழமையும்; பகலும், பிறந்த நாட்கள் மூன்றும், அர்த்த ராத்திரியும், காலை மாலை, வரத்து வெளுத்திருக்கப்பட்ட நாட்களும் விலக்கப் பட்டன. அல்லாதவையும், சர ராசிகளும் உத்தமம் என்பது. மற்ற இராசிகளும் சுபக்கிரகங்கள் நோக்கம் உண்டாக நலம் என்பது.

விழுமிய மதிகண் டங்கள் வெள்ளிபொன் அஞ்சோ டொன்பான்
எழுமிடம் நல்லர் புந்தி ஏழினோ டொன்பான் நல்லன்
நழுவுறு பாவர் பன்னொன் றாரொரு மூன்றும் நல்லர்
செழுமணிப் பூணி னாய்கேள்! புணர்ச்சியைச் செப்புங் காலே. 76

இ-ள் : உதயத்திலும், நான்காம் இடத்திலும், ஏழாம் இடத்திலும், பத்தாம் இடத்திலும் சந்திரன் நல்லன். சுக்கிரனும் வியாழனும் அஞ்சாம் இடத்திலும், ஒன்பதாம் இடத்திலும் நல்லர். புதன் ஏழாம் இடத்திலும், ஒன்பதாம் இடத்திலும் நல்லன். ஆதித்தன், செவ்வாய், சனி, இராகு, கேது ஆகியோர் பதினோறாம் இடத்திலும், ஆறாம் இடத்திலும், மூன்றாம் இடத்திலும் நல்லன் என்பது.

புணர்ச்சி முற்றும்.

## புங்க சவனம்

செப்பிய திங்கள் மூன்றில் திருவோணம் பூசம் சேர்ந்த
ஒப்பறு நற்கோள் வாரத் துதித்திட வெள்ளி திங்கள்
வெப்பரும் இருத்தை கன்னி வீணைநண் டெட்டில் கோள்கள்
துப்புறழ் வாயாய் ! நீரக்கித் துய்யபுங்க சவனம் சொல்லே. 77

இ-ள் : கர்ப்பிணியான மூன்றாம் மாதத்தில் பூர்வபட்சத்தில் திருவோணம், பூசம் நாட்களில்

சுபவாரங்களில் வெள்ளி, திங்கள் உதயமாகச் சதுர்த்தி, நவமி, சதுர்தசி; கன்னி, மிதுனம், கற்கடகம் இவையும் விலக்கி, அட்டமசுத்தி உண்டாக ஆகாசம் நிர்மலமாகப் புங்கசவனம் செய்வது.

புங்கிசவனம் முற்றும்.

## சீமந்தம்

சொல்லுநான் காறெண் திங்கள் தோணிமான் தலைபார் ஓணம்
புல்லுமுத் திரங்கள் அத்தம் பூசங்கள் புகட்கோள் வாரம்
நல்லவேண் இரட்டை பட்சம் நவமியோ டுவாத்தேள் சிங்கம்
மல்லவென் சீமந் தத்துக் கட்டம சுத்தி யாக்கே. 78

இ-ள் : நான்காம் மாதமாகுதல் ஆறாம் மாதமாகுதல் எட்டாம் மாதமாகுதல் பிராமணராதியானவர்க்குச் சீமந்தம் செய்வான். இரேவதி, மிருகசீரிடம், உரோகணி, திருவோணம், உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, அத்தம், புனர்பூசம், பூசம் இவை அழகிய கிழமையும் நல்லது. இரட்டித்த பட்சங்களும் நவமியும் உவாவும் தீது. இராசிகளில் விருச்சிகமும், சிங்கமும் ஆகாது. ஒழிந்தவற்றிலே அட்டம சுத்தி உண்டாக சீமந்தம் பண்ணுவது.

சீமந்தம் முற்றும்.

## விஷ்ணு பலி

ஆக்கிய சீமந் தத்துக் கமைவாரத் திங்கள் எட்டில்
மாக்கதிர் ஏறும் போதில் மருவுமுற் பட்சத் தேழில்
ஆக்கிய பன்னி ரண்டில் உரோகிணி ஓணம் நாளில்
பூக்குழல் மடவாய் ! விட்டுணு பலியிடப் புலவர் சொன்னார். 79

இ-ள் : எட்டாம் மாதத்தில் ஏறு பொழுதில் பூர்வபட்சத்தில் சப்தமி, துவாதசியான பட்சங்களிலே, உரோகணி, திருவோணம் இந்த நாட்களிலே சுபக்கிரகங்கள் நோக்குண்டாக விஷ்ணு பலியிடுவது.

விஷ்ணு பலி முற்றும்.

## பிள்ளைப்பெறு மனை

புலந்திரு வனையாய் ! மக்கள் பெறுமனை புகுநாள் அத்தம்
இலங்குமான் தலைமா வோணம் சித்திரை உத்தி ரங்கள்
கலம்புனை புனர்தம் சோதி காரிபொன் புகர்மால் திங்கள்
நலங்குடம் தேள்கு ருந்தை எட்டின்கோள் தவிர நன்றே. 80

*இ-ள் : பிள்ளைப்பெறும் அகத்துக்குக் குடிபுகும் நாள் அத்தம், மிருகசீரிடம், திருவோணம், சித்திரை, உத்திரங்கள் மூன்றும் (உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி), இரேவதி, அனுடம், புனர்தம், சோதி நல்லது. சனி, வியாழன், வெள்ளி, புதன், திங்கள் நல்லது. கும்பம், விருட்சிகம், சதுர்த்தி, நவமி, சதுர்தசி இவை ஒழித்து அட்டம சுத்தியாகச் சுபக்கிரகங்கள் நோக்கின இராசிகளிலே கொள்வது என்றவாறு.*

பெறுமனை முற்றும்.

## பிள்ளைப் பிறப்பு

நன்றுநற் குழவி தோன்றும் பொழுதினில் நன்னீ ராடிக்
கன்றொடும் பசும்பொன் பூமி கலைவல்ல மறையோர்க் கீய்ந்து
சென்றுமைந் தனையெ டுத்துத் திருமுகம் கண்டு செவ்வேள்
ஒன்றிய சாத கங்கள் ஓலையில் எழுதி வைப்பாம். 81

*இ-ள் : பிள்ளைப் பிறந்த பொழுதே, பிதா சுத்த தானம் (நீராடி) செய்து, கன்றும் பசுவும், திரவியமும், பூமி இவை நல்ல பிராமணர்களுக்குத் தானம் பண்ணி புத்திரன் முகம் கண்டு சாதகம் எழுதிவைப்பது என்றவாறு.*

## நாமகரணம்

எழில்பெயர் இடுநாள் பத்தில் ஈராறு ஓணம் தோணி
வழுத்துமான் தலைபார் மூலம் மகமத்தம் சதயம் அவிட்டம்
விழுப்பனை உத்தி ரங்கள் விளங்கிரு பூசம் நன்றாம்
ஒளித்தி டொன்பான் உவாவை ஒற்றித்த பட்சத் துள்ளே. 82

*இ-ள் : பிராமணருக்குப் பன்னிரண்டாம் நாளும் அல்லாதவர்க்கு பத்தாம் நாளும் நாமகரணம் பண்ணுவது.*

திருவோணம், இரேவதி, மிருகசீரிடம், உரோகிணி, மூலம், மகம், அத்தம், சதயம், அவிட்டம், அனுடம், உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, சுவாதி, புனர்பூசம், பூசம் இவை நன்று. இரட்டித்த பட்சங்களும், நவமியும் உவாவும் ஞாயிற்றுக்கிமை ஒழிய அல்லாதவை நன்று என்பது.

உள்ளுறு நிலையிராசி உதித்திட உச்சி முன்னே
எள்ளிறு நற்கோள் வாரத் தெட்டினில் கோள்கள் நீக்கி
உள்ளிய பகைநீ சத்தை நோக்குங்கால் உதய மாற்றிப்
பிள்ளைதன் நாமம் சாற்றிப் பிறைநுதல் கருங்கண் கோதாய் ! 83

இ-ள் : ஸ்திர இராசிகளிலே உச்சிக்கு முன்பே நற்கோள் வாரங்களிலே அட்டமசுத்தி உண்டாகப் பகை நீசங்களிலே நோக்குங்கோள் உதயம் மாற்றி நாமகரணம் பண்ணுவது

நாமகரணம் முற்றும்.

## உபநிஷ்கரணம்

பேதைகேள்! மூன்றாம் திங்கள் பேணும்உத் திரங்கள் தன்னில்
காதலன் தனக்குச் செய்யக் கதிரவன் தன்னைக் காட்டு
மாதநான் கான நாளில் மதிபசு தன்னைக் காட்டு
மோதுவா யுரைக்குச் சொன்ன காலங்கள் உபநிஷ் கரணம் 84

இ-ள் : பிள்ளை பிறந்த மூன்றாம் மாதம் உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி இந்த நாட்களிலே ஆதித்தனைக் காட்டுவது. நான்காம் மாதத்தில் இவைகளிலே சந்திரனையும் பசுவையும் காட்டுவது. நான்காம் மாதத்திலே அன்னப் பிரசானம் பண்ணுவது.

## காது குத்துவது

காணுமா றேழெண் திங்கள் கருதுநா ளீறா றெட்டில்
ஓணமான் தலைபூ சங்கள் அவிட்டமுத் திரங்கள் அத்தம்
தோணிசித் திரையே செங்கை சுபவாரம் பன்மூன் றீரா
ஆணியம் இரண்டு மூன்றைந் தாறேழில் காதமைக்க என்றே. 85

இ-ள் : ஆறாம் மாதம், ஏழாம் மாதம், எட்டாமாத மாகுதல், பன்னிரண்டாம் நாள் பதினாறாம் நாளாகுதல் காது குத்துவது. திருவோணம், மிருகசீரிடம், புனர்பூசம், பூசம், அவிட்டம், உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, அத்தம், இரேவதி, சித்திரை, திருவாதிரை இவை அழகிய[1] நற்கோள், வாரங்களிலே, திரயோதசி, துவாதசி, துவிதிகை, திரிதிகை, பஞ்சமி, சஷ்டி, சப்தமி நன்று. இவை காதுகுத்த நல்ல நேரங்கள் என்றவாறு.

**ஆளரி குடந்தேள் தீய ஆடுமான் சுறாவி ரண்டு**
**நாளிரு பட்சம் சேரும் கிழமைகள் நணுகில் கேடாம்**
**கேளவை எட்டில் மாற்றி கொடுங்கதிர் உச்சி முன்னே**
**வாளினை வென்ற கண்ணாய் ! வைத்திடும் காது வல்லே.** 86

இ-ள் : சிங்கம், கும்பம் விருட்சிகம் இவை தீயவாம். மேடமும், மகரமும் மத்திமம். அல்லாதவை நல்ல. கிழமைகளிலே இரண்டு பட்சம், இரண்டு நாட்கள் விலக்கப்பட்டன மற்றுள்ள நாட்களில் அட்டமசுத்தி உண்டாக உச்சிப்பொழுதுக்கு முன்னே காது வைப்பது என்றவாறு.

**வல்லிமுன் றிடண்டைந் தொன்பான் பன்னொன்றேழ் மதியம் நல்லன்**
**புவ்வாமுன் ஆறு பன்னொன் றினியர்கள் பொன்பத் தாறு**
**சொல்லிய எட்டுத் தீயர் சுங்கரெட் டாரேழ் பொல்லான்**
**நல்லனெட் டொழிய புந்தி காதிட நவிலுங் காலம்** 87

இ-ள் : 3, 2, 5, 9, 11ஆம் இடங்களில் மதி நல்லன். 3, 6, 11ஆம் இடங்களில் பாபக்கிரகங்கங்கள் நல்லர். வியாழன் 10, 6, 8 ஆமிடங்களில் தீயன். சுக்கிரன் 8, 9, 7ஆம் இடங்களில் தீயன். புதன் எட்டாமிடம் தீது ஒழிந்தவைகளில் நல்லன் என்பது.

**கன்னவேதனம் முற்றும்.**

---

1. உரைகளில் "அழகிய" என்பது நன்மைகளைத் தரவல்லது என்ற பொருளில் அமைந்துள்ளது.

## அன்னப்பிரசானம்

காலம்ஆ ரெட்டீ ராறில் கலமுருள் கைபூ சங்கள்
சீலமாம் உத்தி ரங்கள் சித்திரை சதயம் ஓணம்
கோலமான் தலைபுட் சோதி பனைகுரு புகர்மால் நன்றூண்
மேலுவா விரட்டை பட்சம் மீன்தேளாம் ஒழிய மேவே. 88

இ-ள் : ஆறாம் மாதமுதல் எட்டாம் மாதமாகுதல் ஆண்டு நிரம்பினலாதல் பூர்வபட்சத்திலே ஆகாசம் நிர்மலமானபோது இரேவதி, அத்தம், உரோகணி, புனர்பூசம், பூசம், அசுபதி, உத்திரங்கள் மூன்றும் (உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி), சித்திரை, சதயம், திருவோணம், மிருகசீரிடம், அவிட்டம், சுவாதி, அனுடம், வியாழன், வெள்ளி, புதன் இவைகளில் அன்னப்பிராசனம் ஆகாது. மீனமும் விருட்சிகமும், மேடமும் விலக்கப்பட்டன. அல்லாதவை நன்று.

## வாயூட்டு (சொற்பயிற்றல்)

மேதையொன் பானீ ராறும் வெள்ளியா றேழீ ராறு
தீதுபத் துடைய தீது திங்களுக் குடைய வாகா
கோதில்ரான் கிருமூன் றெட்டும் குருதியன் கொடியோர் மூன்று
மாதராய் ஆறு பன்னொன் றழகிய வாயு ரைக்கே. 89

இ-ள் : புதன் 9, 12ஆம் இடங்கள், சுக்கிரன் 9, 7, 12ஆம் இடங்கள் இவற்றில் தீயர், பத்தாமிடத்தில் எல்லோரும் தீயர், சந்திரனுக்குடையவும் விலக்கப்பட்டன. 4, 6, 8ஆம் இடங்களில் குரு பொல்லான். பாபக்கிரகங்கள் 3, 6, 11ஆம் இடங்களில் நன்றென்பது.

வாயூட்டு முற்றும்.

## அரைஞாண் கட்ட, கோடி உடுக்க

வாய்ந்தசீர் மகவுக் காண்டு நிரம்பிட அந்த நாளில்
தேய்ந்தநீர் தன்னால் தூய மறையினால் சுத்தி செய்தால்
மேய்ந்த பொன் னரைநாண் கட்டு எழில்பெற பிறந்த நாட்கே
காய்ந்தவேல் கண்ணாய் ! கோடிக் கலிங்கமும் அரையில் சாத்தே. 90

இ-ள் : பிள்ளை பிறந்தது முன்னூற்றறுபத்தஞ்சாம் நாளில் குளிப்பாட்டி, புண்ணிய யாகம் பண்ணி, பொன்னரை நாண் கட்டுவது. பிள்ளைப் பிறந்த நாளிலே கோடிப் புடவை கட்டுவது.

### சவனம்

சேரும்உத் திரங்கள் நான்கும் சிறந்தஉத் திராடம் நான்கும்
மோருமான் தலைபூ சங்கள் உத்திரட் டாதி மூன்றும்
பாருநன் றிருத்தை எட்டா றுவாமுதல் பட்சம் பொல்லா
வாரநற் கோள்நன் றாண்டு மூன்றைந்தில் மயிர்நாட் சொல்லே. 91

இ-ள் : உத்திரம் முதல் நான்கு நாட்களும், உத்திராடம் முதல் நான்கு நாட்களும், மிருகசீரிடம், புனர்தம், பூசம், உத்திரட்டாதி முதல் மூன்று நாட்களும் நல்லது. இருத்தையும் அட்டமியும், சஷ்டியும், உவாவும், பிரதமை இவை பொல்லாது. ஒழிந்தவை நல்லது என்பது. நற்கோள் வாரங்கள் நன்று. பிள்ளை பிறந்த மூவாண்டினும் ஐயாண்டிலும் சவனம் செய்வது.

### சவனத்துக்கு ஆகாத நாட்கள்

சொல்லிய மகரம் கன்னி துலையெரு தியாழ்மீன் நண்டு
நல்லவெண் மதியம் ஆறோ டீராறும் தோற்ற நாசம்
புல்லாமூன் றாறு பன்னொன் றினியர்கள் புகரே பொல்லான்
எல்லையில் குருவீ ராறு தீதெட்டில் எல்லாம் தீதே. 92

இ-ள் : மகரம், கன்னி, துலாம், இடபம், மிதுனம், மீனம், கற்கடகம் இவை நல்லர். சந்திரன் ஆறு, பன்னிரண்டு, உதயத்தில் பொல்லான். பாபக் கிரகங்கள் 3, 6, 11ஆம் இடங்களில் நல்லர். வெள்ளி ஏழாமிடம் ஒழிய நல்லன். அட்டமத்தில் எல்லோரும் பொல்லார் என்று அறிவது.

தீயபொன் வெள்ளி மூடம் தெக்கண அயன மாசி
யாய்தரு பிறந்த நாட்கள் அட்டம இராசி நாட்கள்
தூயசவ னம்செய் யார்கள் தான்மணம் புணர்ந்த ஆண்டு
நாயகி கருப்ப நாளும் மயிர்வினை நாசம் நாரி. 93

இ-ள் : வியாழன் வெள்ளி மூடமான (அஸ்தமான) நாட்களும், ஆடி முதல் ஆறு மாதமும் மாசி மாதமும் பிறந்த நாட்களிலும் ஆகாது என்பது. விவாகம் பண்ணின ஆண்டிலும் தன் மனையாள் கர்ப்பம் உண்டான ஆண்டிலும் மயிர்வினைக்கு விலக்கப்பட்டன.

### பல்விளக்க நாள்

**நாரியர்க் காகும் திங்கள் உதயம்ஞா யிற்றுக் குள்ள**
**சீரிய மறையோர்க் காகும் சேயவன் வேந்தர்க் காகும்**
**காரிசூத் திரர்க்காம் வெள்ளி பிறந்தவர் தங்கட் காகா**
**காவிவேற் கண்ணாய் ! இந்நாள் பல்லுகிற் விளக்குங் காலே.** 94

இ-ள் : திங்கட்கிழமை ஸ்திரிகளுக்காம். ஞாயிற்றுக் கிழமை பிராமணர்க்கு, செவ்வாய்க்கிழமை இராசாவுக்கு, சனிக்கிழமை சூத்திரர்க்கு, வெள்ளிக்கிழமை பிதிர் கர்மங்களுக்கு விலக்கப்பட்டன. சவனத்துக்குச் சொன்ன காலங்களிலே பல்லும் உகிரும் விளக்குவது.

### சரசுவதி யோகம்

**விளங்கிளை கதிரோன் மேவ மேதைமூ வஞ்சு பாகை**
**இளங்கொடி தன்னி லெய்த விந்துவெய் யோனு திப்ப**
**தளங்கொள்மால் கிழமை வந்தால் சரஸ்வதி யோக மாகும்**
**குளங்கொள்பால் அன்னம் அன்று குடுமின்னா மகள்த னக்கே.** 95

இ-ள் : ஆதித்தன் கன்னியிலே நிற்க; புதன் கன்னியில் பதினைந்தாம் பாகையில் நிற்க, சந்திராதியர் உதயமாகப் புதன்கிழமை வந்தவன்று சரசுவதி யோகம் என்று பேராம். அற்றை நாளிலே கருப்புக் கட்டியும் பால்சோறுமாகக் கணபதியும் சரசுவதியும் அமுது செய்ய எல்லா வித்தைகளும் வரும் என்பது.

**மகவினுக் கைந்தில் பெண்ணை மாவிரு பூசம் செங்கை**
**அகவிய ஓணம் ஆதி மூன்றத்தம் ஆதி மூன்று**
**பகரும்உத் திரங்கள் தோணி பார்நல்லி ருத்தை பன்மூன்**
**திகலுமெட் டுவாவீ ராறு நீக்கிமேல் இனிது கூறே.** 96

இ-ள் : பிள்ளைக்கு ஐந்து வயது புகுந்தவாறே உத்திராயனம் வந்த பின்பு ஆசாரியனைப் பூசித்து வித்தை ஆரம்பம் தொடங்குவான். அனுசம், அசுபதி, புனர்பூசம், பூசம், திருவாதிரை, திருவோணம், அவிட்டம், சதயம், அத்தம், சித்திரை, சுவாதி, உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, இரேவதி, ரோகணி இவை அழகிய (நல்லன). சதுர்த்தி, திரயோதசி, அட்டமி, உவாவும், துவாதசியும் விலக்கப்பட்டன என்றவாறு.

**கூறிய சனிசேய் வாரம் நிலையோரை கொள்ளார் திங்கள்**
**ஏறுபத் துதய மாறே ரீராரேழ் இயம்பார் புந்தி**
**நீறிடும் ஆறில் வெள்ளி ஆறேளெட் டனைத்தும் தீயர்**
**ஆறுபன் னொன்று மூன்று பாபர்நன் றோத வாய்ந்தால்** 97

இ-ள் : சனியும் செவ்வாயும் திர (ஸ்திர) இராசிகளும் விலக்கப்பட்டன. சந்திரன் 10, 6, 7, 12ஆம் இடங்களிலும் உதயத்திலும் பொல்லான். புதன் ஆறில் பொல்லான், சுக்கிரன் ஆறு, ஏழில் பொல்லான். அஷ்டமத்திலே எல்லோரும் பொல்லார். பாபக்கிரகங்கள் 6, 11, 3ஆம் இடங்களில் நல்லர் என்பது. இனி, ஒன்று சிறப்பித்தவதனால், ஆயுள் வேதத்துக்கும் சகல சாத்திரங்களுக்கும் அவிட்டம் விசேடம். சமுத்திரத்துக்கும் காந்துருவ சாத்திரத்துக்கும் நிமித்த சாத்திரத்துக்கும் புனர்பூசம் விசேடம் என்பது. கூப சாத்திரத்துக்கும், தர்க்க சாத்திரத்துக்கும்[1] திருவோணமும், யோக சாத்திரத்துக்குச் சதயம் விசேடம் என்பது.

### உபநயனம்

**வாய்ந்தமுப் புரிநூல் ஏழில் அணியுநாள் அனுசம் அத்தம்**
**மாய்ந்தஉத் திரங்கள் சோதி மான்தலை ரோணி வாசி**
**ஏய்ந்தசித் திரைபூ சங்கள் தோணிநன் றிருத்தை எட்டு**
**காய்ந்தபன் னொன்று பத்து முதலுவாக் கழிமுற் பட்சம்** 98

---

1. சோதிட சாத்திரத்துக்குச் சோதி நல்லது. கூப சாத்திரத்துக்கும், தர்க்க சாத்திரத்துக்கும் திருவாதிரை நல்லது. அசுவ சாத்திரத்துக்கு அசுபதி நல்லது. கர்ம சாத்திரத்துக்குத் திருவோணம் நல்லது. (அச்சு நூல். பக்கம். 33) என்பவை அச்சுநூலில் காணப்படும் அதிகப்படியான செய்திகளாகும்.

*இ-ள் : ஏழாவது வயதில் உபநயனம் பண்ணுவது அனுசம், அத்தம், உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, சோதி, மிருகசீரிடம், ரோகணி, அசுபதி, சித்திரை, புனர்பூசம், பூசம், இரேவதி இவை அழகிய (நல்லவை). பட்சங்களில் சதுர்த்தி, நவமி, சதுர்த்தி, அட்டமி, ஏகாதசி, பிரதமை, உவாவும் விலக்கப்பட்டன.*

பக்கம்பின் ஐந்தில் பின்பு பாபர்தம் வார வோரை
தெக்கண அயனம் திங்கட் குடையன செம்பொன் புந்தி
சுக்கிரன் ஆறில் சோமன் தோற்றமா றீரா றெட்டில்
பக்கவர் எழில்மூன் றாறு பன்னொன்று நல்லர் பொல்லார். 99

*இ-ள் : அமரபட்சத்துப் பஞ்சமிக்குப் பின்பும், பாபக் கிரகங்களும் அவர்கள் இராசியும், தெக்கண அயனமும் சந்திரனுக்கு உடையனவையும், வியாழமும், வெள்ளியும், புதனும் ஆறாமிடத்தில் நிற்கவும், சந்திரன் 6, 12ஆம் இடங்கள், உதயத்திலும் அட்டமத்தில் எல்லோரும் நிற்கவும் விலக்கப்பட்டன. 3, 6, 11ஆம் இடங்களில் சனி, ஞாயிறு, செவ்வாய், பாம்புகள் நல்லர் என்பது.*

பொல்லாத யோகம் விட்டி விதிபாதம் புகர்பொன் மூடம்
சொல்லாத கரணம் கம்பம் சூனியம் தூமங் கண்கள்
இல்லாதநாள் பிறந்த நாட்கள் பொருந்தாநாள் இவையொழித்து
நல்லாய் கேள் ! நோக்க முன்னூல் சேர்த்தினான் மறையி னாலே. 100

இ-ள் : பொல்லாத யோகங்கள் விட்டியும், விதிபாதமும், வெள்ளி, வியாழம் மூடம். பொல்லாத கரணம், கம்பம், சூனியம், தூமங்கள், குருட்டு நாட்கள், பட்சங்கள், பிறந்த நாட்கள், மூன்றிலும் பொருந்தாத நாட்கள் ஒழித்துச் சுபக்கிரகங்கள் நோக்கம் பெற ஆகாயம் நிர்மலமாகக் கொள்வது உபநயனம் என்றவாறு.

### உபகர்மம், மயிர்வினைக்கு ஆகும் நாட்கள்

நான்மறை அதனால் சிங்கம் ஞாயிற்றின் முன்உ வாவில்
தானமர் தருநாள் ஓணம் தையில்ஞா யிற்று வாவி
ஊனமில் அத்தம் சேர்நாள் ஓங்கும்வா கனம்சேய் மீனம்
மானனாய் ! விரத நாட்கள் மயிர்வினைக் காகும் மாண்பே. 101

இ-ள் : ஆவணி மாதத்தில் முன்னுவாவில் திருவோணம், புரட்டாசி மாதத்தில், கடையுவாவில் அத்தம் உபகர்மத்துக்கு நல்லது. இந்நாட்களிலே நல்ல முகூர்த்தத்திலே மயிர்க் களைவது, அபிசேடத்துக்குச் சொன்ன காலங்களிலே கொள்ளுவது.

உபகர்மம் முற்றும்.

## சமாவர்த்தனம்

**மாண்புடை வோணம் அத்தம் மகசிரம் அனுசம் பண்டி**
**காண்பரும் உத்தி ரங்கள் பூசங்கள் கடைமீன் நன்றாம்**
**தீண்டரும் இருத்தை எட்டோ டுவாமுதல் சனிசேய் சிங்கம்**
**கூண்டதேள் மேடம் எட்டில் கோளொளி குளிக்கக் கோதாய்.** 102

இ-ள் : திருவோணம், அத்தம், மிருகசீரிடம், அனுசம், உரோகணி, உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, பூசம், புனர்பூசம், இரேவதி இவை அழகிய (நல்லன). சதுர்த்தி, நவமி, சதுர்தசி, அட்டமி, உவா, பிரதமை; சனி, செவ்வாய்; சிங்கம், விருச்சிகம் இவை ஆகாது. அட்டமசுத்தி உண்டாக நீராடுவது. ஆகாச நிர்மலமாகக் கொள்வது.

சமாவர்த்தனம் முற்றும்.

## முடிசூட்டல்

**கோதில்மான் தலையு ரோணி குதிரையுத் திரங்கள் அத்தம்**
**சோதிசித் திரைபூ சங்கள் தோணியோ டனுசம் ஓணம்**
**ஏதமில் அவிட்டம் நன்றாம் இரண்டைந்தேழ் பன்மூன் றீரார்**
**ஓதிய மூன்றாம் பக்கம் உயர்முடி சூட நன்றே.** 103

இ-ள் : மிருகசீரிடம், உரோகணி, அசுபதி, உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, அத்தம், சோதி, சித்திரை, புனர்பூசம், பூசம், இரேவதி, அனுசம், திருவோணம், அவிட்டம் இவை அழகிய (நல்லன). பட்சங்களிலே துதியை, பஞ்சமி, சப்தமி, திரயோதசி, துவாதசி, திரிதிகை இவை அழகிய (நல்லன) என்றவாறு.

## முடிசூடும் நாள்

நன்றுநற் கோள்கள் வாரம் அங்கிஷம் நவிலும் ஓரை
கன்றிய தீக்கோள்தீது கன்னியும் துலாமும் ஆகா
வன்திறல் முடிசூட் டோரை உடையவர் கோளை நற்கோள்
ஒன்றிய உறவில் நின்று நோக்கிடில் உறவுண் டாமே. 104

*இ-ள் : சுபக்கிரகங்கள், வார அங்கிஷங்கள் நல்லர். பாபக் கிரகங்கள் தீது. பாபக்கிரக கேந்திரங்களும் ஆகாது. சுபக்கிரகங்கள் கேந்திரத்தில் கன்னியும் துலாமும் ஆகாது. அபிஷேகம் பண்ணுகிறபோது உதிக்கிற இராசி உடையவன் நற்கோளாய் நோக்கில், கேந்திரத்திலே நின்று நோக்கில் பந்துக்களை உடையனாம் என்றவாறு.*

உண்டாய் உச்சம் நின்ற கோளுச்சம் நோக்கு மாகில்
கொண்டானென் பிறநா டெல்லாம் கோளவை நீச னென்று
தண்டாது நீச நோக்கில் சாலநோய் கொண்டு சாவாம்
பண்டாரும் மொழியாய் ! வெய்ய பகைநோக்கில் பகையாம் பாரே.

*இ-ள் : அபிசேடம் பண்ணுகிற இராசி உடையவன் கோள் உச்சஸ்தானத்திலே நின்று உச்ச ஸ்தானத்திலே நின்ற கோளை நோக்குமாகில் பிற இராச்சியங்களெல்லாம் கொள்வர் என்பது. நீச ஸ்தானத்திலே நின்ற கோளை நோக்குமாகில் வியாதிபட்டு மறிக்கும் என்பது. சத்துரு கேந்திரத்தை நோக்குமாகில் சத்துரு பலரும் உண்டாம் என்பது.*

பார்த்திடில் தீக்கோள்ஆறு பன்னொன்றும் மூன்றும் நல்லர்
சீர்த்தவே ழுதயம் ஐந்தும் சிறந்தபன் னொன்றோ டொன்பான்
ஏற்றநற் கோள்கள் நன்றாம் எட்டிடம் எல்லாம் பொல்லார்
ஆற்றலை உடைய மன்னர் அணிமுடி சூடும் நாளே. 106

*இ-ள் : பாபக்கிரகங்கள் 11, 6, 3ஆம் இடங்களில் நல்லர். ஏழாமிடமும் உதயமும் 5, 7, 11, 9ஆம் இடங்களில் சுபர் நல்லர். அட்டமத்தில் எல்லோரும் பொல்லார்.*

அபிசேகம் முற்றும்.

## விவாகம்

சூடிய மணநாள் மூலம் இரேவதி மகமே சோதி
ஓடுமான் தலையும் ரோணி அனுசமுத் திரங்கள் அத்தம்
கூடில்நன் றுவாஇ ருத்தை அட்டமி கொடியோர் வாரம்
ஆடிமார் கழிபு ரட்டை மாசிதீ தென்னம் அன்னாய் ! 107

இ-ள் : மூலம், இரேவதி, மகம், சுவாதி, மிருகசிரம், உரோகணி, அனுசம், உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, அத்தம் இவை அழகிய (நல்லன). உவாவும், சதுர்த்தி, நவமி, சதுர்தசி, அட்டமி; சனி, செவ்வாய், ஞாயிறு, ஆடி, மார்கழி, புரட்டாசி, மாசி மாதங்களும் விலக்கப்பட்டன.

அன்னமே ! மிதுனம் கும்பம் அலவனே இடபம் வில்லு
கன்னிகோல் மூன்று பன்னொன் றாறுமூன்றில் கடுங்கோள் நன்று
பொன்னவன் எட்டில் தீயன் புகர்புதன் ஆறெட் டாகா
இன்னவர் ஏழில் தீயர் மதிநல்லன் இரண்டு மூன்றே. 108

இ-ள் : மிதுனம், கும்பம், கற்கடகம், இடபம், தனுசு, கன்னி, துலாம் மூன்றும் பன்னொன்றும் ஆறும் பாபக் கிரகங்கள் நல்லர். வியாழன் எட்டில் பொல்லான். வெள்ளியும், புதனும் ஆறும் எட்டும் பொல்லார். ஏழில் எல்லோரும் பொல்லார். சந்திரன் இரண்டும், மூன்றும் நல்லன் விவாகம் செய்ய என்றவாறு.

## அக்கினி பரிக்கிரகம்

மூன்றதாம் உத்தி ரங்கள் சித்திரை முறம்பார் தோணி
மான்தலை ஆரல் நாளில் மகரமீன கடகம் கும்பம்
ஏன்றசேய் சனிஇ ருத்தை இவையொழிந் தெழில்கோள் நோக்க
ஆன்றநூ... மறையோர் ஏத்த அங்கிதைக் கொள்ள லாமே. 109

இ-ள் : உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, சித்திரை, விசாகம், ரோகணி, இரேவதி, மகம், மிருகசீரிடம், கார்த்திகை இவை அழகிய (நல்லன). மகரம், மீனம், கடகம், கும்பம்; செவ்வாய், சனி வார உதயங்களும், இருத்தைப் பட்சமும்

இவை ஆகாது. சுபக்கிரகங்கள் நட்பாட்சி உச்சங்களிலே நின்று நோக்க விசேசித்துள்ள பிராமணர் அனுக்கிரகிக்க, அக்கினி பரிக்கிரகம் பண்ணுவது என்றவாறு.

## பூமி தரிசனம்

**ஆதிரை பரணி மூலம் அனுசம்உத் திரங்கள் ஓணம்**
**சோதிசித் திரையே பூசம் மகமிவை தூய பட்சம்**
**தீதுபத் திரையோ டொன்பான் செங்கதிர் காரி வாரம்**
**மாதுதேள் இடபம் துய்ய மறியாழ் வயல்செய் பாரே.** 110

இ-ள்: திருவாதிரை, பரணி, மூலம், அனுசம், உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, திருவோணம், சுவாதி, சித்திரை, பூசம், மகம் இவை அழகிய (நல்லன). நவமி தீது. ஞாயிறு, சனி பொல்லாது. கன்னி, விருட்சிகம், இடபம், மேடம், மிதுனம் நல்ல. அட்டமசுத்தி உண்டாக சொன்ன உதயங்களிலே பூமி பார்ப்பது செய் பார்ப்பது.

செய் பார்க்க முற்றும்

## கிருஷியாரம்பம் (ஏரிட)

**பார்கிழக் குத்தி ரங்கள் படவிரு பூசம் அத்தம்**
**சீரிய வாகும் ஒன்பான் இரட்டித்த பக்கம் தீதாம்**
**கூறிய மகரம் நண்டு குண்டைமீன் மிதுனம் நன்றாம்**
**காரியும் கதிரும் தீதாம் செய்யு கருது வோர்க்கே.** 111

இ-ள் : உரோகணி, மூலம், உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, இரேவதி, புனர்பூசம், பூசம் இவை அழகிய (நல்லன). நவமியும் இரட்டித்த பட்சங்களும் ஆகாது. மகரம், கடகம், இடபம், மீனம் இவை அழகிய (நல்லன்). சனியும் ஞாயிறும் பொல்லாதவை. பூர்வபட்சத்து சொன்ன நாளிலே ஏகபுத்தியாய் இச்சா ஞானமாய்த் தண்ணீராகிலும் பூவாகிலும் போட்டுப் பூமியை அர்ச்சித்து ஆரம்பிப்பான் என்றவாறு.

ஏரிட முற்றும்.

### எரு வைக்க

கருதும்உத் திரங்கள் மூன்றும் கலம்பனை புனர்தம் பூசம்
பொருவில்சித் திரையே செங்கை பொன்திங்கள் செவ்வாய் புந்தி
எருவிட நல்ல வாகும் இருத்தையெட் டுவாவும் தீதாம்
திருவன்னாய் ! உழவான் சொன்ன காலமே எருவும் செப்பே. 112

இ-ள்: உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, இரேவதி, அனுசம், பூசம், புனர்பூசம், சித்திரை, திருவாதிரை இவை அழகிய (நல்லன). வியாழன், திங்கள், செவ்வாய், புதன் இவை அழகிய (நல்லன). நவமி, சதுர்த்தி, சதுர்தசி, அட்டமி, உவாவும் ஆகாது. உவாவுக்கு முன்சொன்ன காலங்களிலே - முகூர்த்தங்களிலே எரு வைக்க என்றவாறு.

### விதைக்க

செப்பிய மூலம் அத்தம் இரேவதி அனுசம் தீபம்
தப்பிலுத் திரங்கள் ஓணம் மகம்முறம் சதயம் பூசம்
ஒப்பிலா ரோணி இந்நாள் உத்தமம் புனர்தம் அவிட்டம்
அற்பசி மகம்சி ரங்கள் மத்திமம் விதைய ணங்கே ! 113

இ-ள் : மூலம், அத்தம், இரேவதி, அனுஷம், சுவாதி, உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, திருவோணம், மகம், விசாகம், சதயம், பூசம், உரோகிணி இந்நாட்கள் உத்தமம். புனர்தம், அவிட்டம், அசுபதி, மிருகசீரிடம் இவை மத்திமம் விதைக்க என்பது.

அணங்குகேள் ! அஞ்சேழ் பன்மூன் அமைந்தபன் னொன்று மூன்றும்
இணங்குமுன் உவாவும் நன்றாம் ஈரைந்தும் இரண்டும் ஆறும்
குணங்கள்மத் திமமாம் குண்டை நண்டரி மகரம் மீனம்
வணங்குநன் றென்று வீணை குடந்துலை சமன்வ முத்தே. 114

இ-ள் : பஞ்சமியும், சப்தமியும், திரயோதசியும், ஏகாதசியும், பூரணை (பௌர்ணமி)யும் இவை உத்தமம். தசமியும், துதிகையும், சஷ்டியும் இவை மத்திமம். இடபம், மகரம், கடகம், சிங்கம் இவை அழகிய (நல்லன). மிதுனம், கும்பம், துலாம் மத்திமம், அல்லாதவை அதமம் என்றவாறு.

வழுத்திடில் நற்கோள் வாரம் உதயநன் றெட்டிற் கோளைக்
கழித்திடும் அருக்கன் வாரம் காலையே நெல்லு வித்தும்
ஒழித்திடும் சனியின் வாரம் உச்சியில் எள்ளு வித்தும்
கொழித்தசேய் வாரம் கூறு கொள்ளுடன் வாகு கூறே. 115

*இ-ள் : நற்கோள் வாரம் நன்று. இவை திங்கள், வியாழன், வெள்ளி, புதன். அட்டமத்திலே எல்லோரும் பொல்லார். ஞாயிற்றுக்கிழமை உதயத்திலே நெல் விதைக்க, சனிக்கிழமை உச்சிப் பொழுதில் எள் விதைக்க, செவ்வாய்க் கிழமை வரகு, கொள் விதைக்க நன்று.*

கூறியநாள் முதல்நாள் நன்று கரும்பிடக் கொடிக்காற் காயில்
ஏறிய மூலம் நன்றாம் எள்விதைக் கனுசம் செக்காம்
மாறிலா மரங்கள் வைக்க ரோகணி யாம்வழு தலைக்குத்
தேறிய பரணி நன்றாம் சித்திரை பயறு வித்தே. 116

*இ-ள்: அசுபதியில் கரும்பு வைக்கவும், கொடிக்காலுக்கு ஆயிலியம். மூலம் கிழங்கு வைப்பது. அனுசம் எள் விதைக்க. சதயமும் எள் விதைக்க. மாந்தோப்பு ரோகணியில் வைக்க. வழுதலை பரணியில் வைக்க, பாகல், பயறு விதைக்க சித்திரை இவை நன்று.*

விதை முற்றும்.

## கதிர் அறுக்க

வித்தக மகமும் ரோணி விசாகமா திரையோ டோணம்
அத்தமே பரணி சால அழகிய இருத்தை ஆகா
ஒத்தபொன் திங்கள் புந்தி உதயவா ரங்கள் நன்றாம்
கத்துமே அரிதேள் நண்டு குடங்கதிர் அறுக்க நன்றே. 117

*இ-ள் : மகம், உரோகணி, விசாகம், திருவாதிரை, திருவோணம், அத்தம், பரணி இவை அழகிய (நல்லன). சதுர்த்தி, நவமி, சதுர்தசி ஆகாது. வியாழன், திங்கள், புதன் இவர்கள் வார உதயங்கள் நன்று. இடபம், சிங்கம், விருச்சிகம், கற்கடகம், கும்பம் இவை நன்று. அல்லாதவை ஆகாது என்பது.*

கதிர் அறுக்க முற்றும்.

## புதிதூண்

**நன்றிரு பூசம் பார்மா நன்கலம் ஓணம்புள் செக்கு**
**ஒன்றிய கங்கை மூலம் முறம்பனை உத்தி ரங்கள்**
**துன்றுசித் திரையைந் தானம் சுபவாரம் புதிதுண தூய**
**கன்றுவா இருத்தை மீன்தேள் மறிதவிர காந்தள் கையாய் !** 118

*இ-ள் : புனர்பூசம், பூசம், ரோகணி, அசுபதி, இரேவதி, திருவோணம், அவிட்டம், சதயம், மகம், அத்தம், மூலம், விசாகம், அனுசம், உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, சித்திரை, மிருகசீரிடம் இவை அழகிய (நல்லன). நற்கோள் உதயங்கள் நல்ல. இருத்தையும் உவாவும்; மீனம், விருட்சிகம், மேடம் இவை தீது, மற்றவை நன்றென்பது. கதிர் கொள்வார்க்கு இவை காலமாகக் கொள்வது. நீர்ப் பாய்ச்சவும், நீரில் விதைக்கவும், வாய்க்கால் வெட்டவும் எல்லாம் விதைக்கச் சொன்ன காலங்களிலே கொள்வது.*

புதிதூண் முற்றும்

## தானியம் இட்டுவைக்க

**கைவரும் அத்தம் செங்கை உருளினம் அனுசம் கங்குல்**
**பொய்யிலுத் திரங்கள் வோணம் மகம்சிரம் சனிபொன் வாரம்**
**தையல்மா இருந்தை விட்டி சரராசி ஒழித்த தல்லால்**
**தையலாய் ! சூலி கன்னி தானமை தானி யந்தான்.** 119

*இ-ள் : திருவாதிரை, அத்தம், உரோகணி, அனுசம், பரணி, உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, திருவோணம், மிருகசீரிடம் இவை அழகிய (நல்லன). கிழமைகளில் சனியும், வியாழனும் நன்று, இருத்தை, அட்டமி, சரராசியும் ஆகாது என்பது. மற்றுள்ளவற்றிலே கர்ப்பிணியாதல், கன்னியாதல் எடுத்துத்தர தானியம் இட்டுவைப்பது.*

தானியம் இட்டுவைக்க முற்றும்

### தானியம் வாங்க

தானமாம் அத்தம் சோதி சதயம்உத் திரங்கள் அவிட்டம்
ஊனமில் முறமே தோணி உருளிரு பூசம் வோணம்
மானசித் திரையைந் தானம் அனுசநாள் மகம்மூ லத்தில்
வானுறை சனிபொன் கூடில் வைத்தா னியங்கள் வாங்கே. 120

இ-ள் : அசுபதி, அத்தம், சோதி, சதயம், உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, அவிட்டம், விசாகம், இரேவதி, புனர்பூசம், திருவோணம், சித்திரை, மிருகசீரிடம், அனுஷம், மகம், மூலம் இவை அழகிய (நல்லன). கிழமைகளில் சனியும், வியாழனும் நல்ல. இவர்கள் உதய அங்கிசங்களிலே தானியம் வாங்குவது.

தானியம் வாங்குவது முற்றும்.

### தனுசு இறுக்க

வாங்கிய தனுசு அவிட்டம் மருவிய இருத்தை நந்தை
ஓங்கிய சனிபொன் வாரம் உதயத்துக் குளிகன் கூட
தீங்கறும் அனுச நாளில் இருகாலில் திங்கள் சேர
வாங்கவன் தன்னைக் கோள்கள் நோக்கிடில் அழகென் றாரே. 121

இ-ள் : தனுசு, அவிட்டம், இருத்தை, நந்தை இவர்கள் ஆகாது. சனி, வியாழம் இவை, உதயங்கள் ஆகாது. குளிகன் முகூர்த்தம் ஆகாது. அனுசத்தின் இரண்டாம் காலிலே சந்திரன் நிற்ப, அந்தச் சந்திரனைக் கிரகங்கள் நோக்க, தானியம் சிறுக்க பின்னைத் தனுசு கொள்ளார் என்பது.

### யாத்திரைக்கு ஏற்ற நாட்கள்

ஆரலே ஆதி ஏழ்நாள் நந்தைசேய் கிழக்காம் தெற்கு
சீரிய மகத்தோ டேழ்நாள் பத்திரை சனி திங்கள்
சாறுமேற் கனுச மாறும் சேய்புதன் குருவ டக்கு
பூரணை அவிட்டம் ஏழ்நாள் புகர்கதிர் நன்று போக்கே. 122

இ-ள் : கார்த்திகை முதல் ஏழு நாட்களும், நந்தையும் செவ்வாய்க்கிழமையும் கிழக்குப் போவான், மகம் முதல் ஏழு

நாட்களும் பத்திரையும் சனியும் திங்களும் தெற்குப் போவான், அனுசம் முதல் ஆறு நாட்களும் செவ்வாயும் புதனும் வியாழமும் மேற்குப் போவான், அவிட்டம் முதல் ஏழு நாட்களும் பூரணையும் வெள்ளி, ஞாயிறும் வடக்குப் போவான் என்றவாறு. (*போவான்* என்பதற்கு யாத்திரைக்குப் *போகலாம்* என்பது பொருள்.)

**யாத்திரைக்கு ஆகாத நாட்கள்**

**போக்கினில் பரணி ஆரல் ஆதிரை பூரம் மூன்றும்**
**தீர்க்கும்ஆ யிலியம் கேட்டை சித்திரை விசாகம் சோதி**
**ஆக்கிய மகம்இ ருத்தை ஆதியட் டமியு வாக்கள்**
**நீக்கிடும் அருக்கன் சேய்மால் நிலையோரை நினைக்க லாகா.** 123

இ-ள் : பரணி, கார்த்திகை, திருவாதிரை, பூரம், பூராடம், பூரட்டாதி, ஆயிலியம், கேட்டை, சித்திரை, விசாகம், சோதி, மகம், இருத்தை, பிரதமை, அட்டமி, உவாக்கள், கிழமைகளில் ஞாயிறு, செவ்வாய், புதன் ஸ்திர ராசியும் யாத்திரைக்கு விலக்கப்பட்டன என்றவாறு.

**நினைவுறு விட்டி வில்லு விதிபாதம் நெடிய விட்டம்**
**துணிவுறு கிராணம் சூலம் தூயசங் கிராந்தி தூமம்**
**வனிதைகேள்! இடித்தல் மின்னல் மழைபெய்தல் இடறல் தும்மல்**
**இனையன செய்யப் போதில் எய்திடும் நாசம் எல்லாம்.** 124

இ-ள் : விட்டி, வில்லிடுதல், விதிபாதம், பரிவேடம், கிரகணம், சூலம், சங்கிரமம், தூமம், இடித்தல், மின்னல், மழை பெய்தல், இடறல், தும்மல் இவையெல்லாம் யாத்திரைக்கு விலக்கப்பட்டன என்றவாறு.

**எல்லையில் யாத்தி ரைக்கங் கேகுவான் ராசிக் காறும்**
**சொல்லிய இரண்டும் மூன்றும் பதினொன்றும் சுகத்தை நல்கும்**
**மல்லல்சேய் பகையைக் கூறில் ஆங்கவன் இராசிக் கெட்டில்**
**செல்லிடில் பகையைக் கொன்று தீர்த்துத்தன் பதியைச் சேரும்.** 125

இ-ள் : தன்னுடைய இராசிக்கு ஆறாமிடம், இரண்டாமிடம், மூன்றாமிடம், பதினோராமிடம் நல்ல.

சத்துருவைச் செயிக்கப்போகில் அவனுடைய அஷ்டமி இராசிகளிலே போவது. பனிரெண்டாம் இராசியிலேயும் அஷ்டமி இராசியிலேயும் போகில் சரீர வாதை உண்டாம் என்பது.

பதியுடை நற்கோள் எங்கும் நன்றைந்தில் பலரும் பொல்லார்
மதியிரண் டெட்டு நாலோன் ஒன்பதீ ராறு மாய்க்கும்
ததியுடை வெள்ளி தீயன் ஏழினில் தீக்கோள் பத்தும்
கதியுடை மூன்றும் ஆறும் பன்னொன்றும் இனியர் காணே. 126

இ-ள் : நற்கோள் உதய அங்கிசங்கள் நன்று. ஐந்தாம் இடத்தில் எல்லோரும் பொல்லார். சந்திரன், இரண்டாம் இடம், எட்டாமிடம், ஒன்பதாமிடம், பன்னிரண்டாமிடம் இவற்றில் தீயன். சுக்கிரன் ஏழாமிடம் பொல்லான். பாவக் கிரகங்கள் பத்தாமிடம், ஆறாமிடம், மூன்றாமிடம், பதினோராமிடம் இவற்றில் நல்லர் என்றவாறு.

முற்றும்.

*குறிப்பு :* இப்பதிப்பிற்காக எடுத்துக்கொள்ளப்பட்ட ஓலைச் சுவடியில் 60 முதல் 72 வரையிலான ஏடுகள் இல்லை. ஆனால் புதுமையான வகையில் ஒரு குறிப்பு ஒன்று காணப்படுகிறது. அது இந்த சாத்திரத்துக்கு மத்தியில் இந்த ஏட்டுக்குப் பின்னாலே 43 பாட்டுக்கள் இல்லாததத்தினாலே மேல்பாட புரிதிட்டிக்கி ஏட்டு இலக்கத்தில் அந்தக் காரியம் தெரியிரத்துக்காகப் பதினஞ்சு ஏடு நிறுத்தி, ஏட்டு இலக்கம் போட்டு இருக்குது. இதை யார் பார்த்தாலும் யோசனை செய்து பார்த்துக்கொண்டு இந்தப் பாட்டு ஆப்பிட்டால் (அகப்பட்டால்) எழுதவேண்டிய கடமை என்பதாகும்.

## சமுத்திர யாத்திரை

காண்டகு குதிரை விட்டம் கலம்பனை அத்தம் சோதி
தூண்டுமான் தலையோ டோணம் துலையெழு கடலில் போகி
ஈண்டிய நிதியும் எய்தும் எழில்புகர் புந்தி வாரம்
ஆண்டசீர் புரட்டை மாசி ஆடிநாள் மாதர்க் காகா 127

இ-ள் : அசுபதி, அவிட்டம், இரேவதி, அனுசம், அத்தம், சோதி, மிருகசீரிடம், திருவோணம் இந்நாட்களில் துலா முகூர்த்தத்தில் சமுத்திர யாத்திரை போக நன்று. வெள்ளி, புதன்; புரட்டாசி, மாசி, ஆடி இம்மாதங்கள் மாதர்க்கு ஆகாதென்றவாறு.

## கன்று காலி கொள்ள

மாதராய் ! பரணி கேட்டை சித்திரை சதயம் வாகை
சோதிஉத் திரங்கள் ஆயில் ஆதிரை புந்தி சுங்கன்
போதுவாய் இருத்தை விட்டி கோள்ஒழிந் துதய நாளில்
மீதரி சுறாவில் தோன்ற விதிக்கக்கேள் யாத்தி ரைக்கே. 128

இ-ள் : பரணி, கேட்டை, சதயம், அத்தம், சோதி, உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, ஆயிலியம், திருவாதிரை; புதன், வெள்ளி; உவா, இருத்தை இவை ஆகாது. அட்டமசுத்தி உண்டாக கன்றுகாலி முதலாயுள்ளவை கொள்ளவும் கொடுக்கவும் நன்று. நற்கோள் உதயங்களில் சிங்கம், மகரம், தனுசு இந்த முகூர்த்தங்களில் சமுத்திர யாத்திரை போக என்றவாறு.

## நட்சத்திர பட்சணம்

யாத்திரை புரவி முன்னாம் பயற்றஞ்சோ றெழில்பால் சாதம்
மாத்தயிர் நுரைத்த வெண்ணெய் மானின்ஊன் உதிரம் பாகு
சீர்த்தநெய் பாலின் சோறு கிச்சிலி செந்நெல் சோறு
வாய்த்தநற் சாதம் பாலின் சுட்டப்பம் வண்ண சோறே. 129

இ-ள் : அசுபதிக்குப் பயற்றஞ்சோறு, பரணிக்குப் பால் சோறு, கார்த்திகைக்குத் தயிர் சோறு, உரோகிணிக்குப் பாலில் நுரைத்த வெண்ணெய், மிருகசீரிடத்துக்கு மானின் ஊன், திருவாதிரைக்கு உதிரம், புனர்பூசத்துக்கு நெய், பூசத்துக்குப் பால் சோறு, ஆயிலியத்துக்குக் கிச்சலி, மகத்துக்கு மாங்கிசம், பூரத்திற்குச் செந்நெல் சோறு, உத்திரத்திற்கு இலைக்கறி, அத்தத்திற்குப் பாலில் வெந்த ஆப்பம், சித்திரைக்கு வண்ணச்சோறு.

வண்புகழ் நெல்லில் மாவில் கரைத்தநீர் முதிரை எள்நீர்
கண்சிறு மூலம் தாது மாதளை தருப்ப ணந்தேர்
தென்செந்நெல் கழுநீர் பூந்தேன் சர்க்கரை ஏனத் தூண்பால்
தண்டரும் ஆய நாட்கள் அனைத்துக்கும் உணவு தானே. 130

*இ-ள்: சோதிக்கு நெல்லிக்காய், அத்தத்துக்கு மாக்கரைத்த நீர், விசாகத்துக்குக் கொள்ளு, அனுசத்துக்கு எள், கேட்டைக்கு அரிசி கழுவின நீர், மூலத்துக்குக் கிழங்கு, பூராடத்துக்கு மாதளங் காய், உத்திராடத்துக்குத் தருப்பணம், திருவோணத்துக்குச் செந்நெல்லரிசி கழுவின நீர், அவிட்டத்துக்குத் தேன், சதயத்துக்குச் சக்கரை, பூரட்டாதிக்குப் பன்றி இறைச்சி, உத்திரட்டாதிக்குப் பால், இரேவதிக்குப் பருப்பு என்பது.*

## திதி பட்சணம்

காளெருக் கரிசி நீர்நெய் கஞ்சியோ டுப்புச் சோறு
பூணும்பொன் தோய்ந்த நீர்தேன் புளித்தமா தளங்காய்த் தண்ணீர்
ஊணமாங் கோவின் நீரோ டரிசிபால் சோறு கூட்டிப்
பூண்மதி ! முதிரை எள்ளு உளுத்தஞ்சோ றுணாம் பக்கம். 131

*இ-ள்: திதிக்குப் பட்சணம் கொடுக்கும்படி: பிரதமை - எருக்கிலை, துவிதியை - அரிசி கழுவின தண்ணீர், திரிதியை- நெய், சதுர்த்தி-கஞ்சி, பஞ்சமி-உப்பு, சஷ்டி-சோறு, சப்தமி- பொன் கழுவின நீர், அட்டமி-தேன், நவமி-மாதளங்காய்த் தண்ணீர், தசமி-கோவின் நீர், ஏகாதசி-அரிசி, துவாதசி-பால் சோறு, திரயோதசி-சர்க்கரை, சதுர்தசி-உதிரம், உவா- உளுத்தஞ்சோறு ஆகப் பதினைந்து பட்சணங்களும் கண்டு கொள்ளவும்.*

## வார பட்சணம்

பக்கணம் நெய்பால் கட்டி பரவும்எள் தயிர்நெல் பயறு
மிக்குநல் கிழமை கூழாம் விரும்புநெய் நெய்பால் கட்டி
திக்குநான் கினுக்கும் ஊணாம் சிறுகால்பால் தயிரும் உச்சி
ஒக்கும்நல் லந்தி எள்ளு நல்லிருள் ஊணாம் என்றே. 132

இ-ள் : ஞாயிறு-நெய், திங்கள்-பால், செவ்வாய்-சர்க்கரை, புதன்-எள், வியாழன்-தயிர், வெள்ளி-நெல், சனி-பயறு எழு வாரத்துக்கும் ஊண். உதயத்துக்குப் பால், உச்சிக்குத் தயிர், அந்திக்கு எள், இராத்திரிக்குத் தேன்; கிழக்கு-நெய், தெற்கு-எள், மேற்கு-பால், வடக்கு-சர்க்கரை. நான்கு திக்கும் இவ்வகையில் புறப்படுவதற்குப் பத்தியமாகப் புறப்படவேண்டில் சொன்னதுகளைத் தின்றாகுதல், கண்ணில் கண்டாகுதல், மனத்தில் நினைத்தாகுதல் போவதென்றவாறு.

**வார அடியால் செய்யும் வகை**

**அன்றடி பதினொன் றின்சொல் அருக்கற்கே ழரைதிங் கட்கு**
**ஒன்றிய கிடைசேயக் கொன்பான் நீர்சுற்றே ழரைநீ ரார்க்கப்**
**பொன்தனக் கெட்டில் யார்க்குச் சந்தணி புகழ்கை முக்கால்**
**கன்றிய சுள்ளி கிள்ளில் சனிக்கஞ்சில் கரும்பு சூடே.** 133

இ-ள் : ஞாயிறுக்கு 11 அடியில் வார்த்தை சொல்லிப் போவது, திங்களுக்கு 7½ அடியில் கடந்து போவது, செவ்வாய்க்கு 19 அடியில் தண்ணீர் சுற்றிப் போவது, புதனுக்கு 7½ அடியில் திருநீறு பூசிப் போவது, வியாழனுக்கு 8 அடியில் சந்தனம் பூசிப்போவது, வெள்ளிக்கு 3¾ அடியில் சுள்ளி முறித்துப் போவது, சனிக்கு 5 அடியில் கரும்பு சூடிப்போவது.

**சூழ்புவி வடக்குக் காலை சுடருச்சி கிழக்கே தேன்பால்**
**வீழ்தரு மாலை மேற்கு நள்ளிரா விரையப் போக**
**வாழ்பெருங் கிளைஞர் அங்கி மறையவர் களைவ ணங்கித்**
**தாழ்வில்கோள் நோக்கிப் போகில் சமைந்திடும் கருமம் தானே.** 134

இ-ள் : காலமே வடக்குப் போக்கில் போவது, உச்சிக்கு கிழக்குப் போக்கில் போவது, அந்திப்பொழுதில் தெற்குப் போக்கில் போவது, அர்த்த இராத்திரி மேற்குப் போக்கில் போவது. இப்படிப் போகும்போது தன்னுடைய வேந்து களையும், அக்கினியையும், பிராமணரையும் நமஸ்கரித்துச் சுபவாரங்கள் நோக்குண்டாகப் போவது என்றவாறு.

## எண்ணெய் வார்க்க

கருதுகிற பிறந்த நாட்கள் கதிர்புகர் பொன்சேய் கேட்டை
பொருவில்உத் திரங்கள் வோணம் பூரமா திரைபன் னான்கும்
தருமுவா ஆறெட் டீறா றொன்றுசங் கிராந்தி எண்ணெய்
பரிசியார் விருத்தர் நோயர் பாலர்க்கும் காலம் இல்லை. 135

இ-ள் : பிறந்தநாள் மூன்றிலும் ஞாயிறு, வெள்ளி, வியாழம், செவ்வாய்க்கிழமைகளும்; கேட்டை, உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, திருவோணம், பூரம், திருவாதிரை; சதுர்தசி, உவா, சஷ்டி, அட்டமி, துவாதசி, பிரதமை, மாதப்பிறப்புக்கள் எண்ணெய் வார்க்கலாகாது என்பது.

## சதாபிஷேகம்

காலாமா யிரத்தெட்டுத் திங்கள் கழிந்தபின் அத்தம் வோணம்
சாலுமுத் திரங்கள் தோணி சதயநாள் மகம்உ ரோணி
மேலுமொற் றித்த பக்கம் இசைந்தநற் கிழமை எய்த
சீலமா தங்கள் தம்மில் செய்சதா பிசேகம் தானே. 136

இ-ள் : ஆயிரத்தெட்டுப் பிறை தொடுவானுக்கு அத்தம், திருவோணம், உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, இரேவதி, சதயம், மகம், உரோகிணி இந்த நாட்களும், ஒற்றித்த பட்சங்களும், நற்கிழமைகளும் நற்கோள்கள் உதயங்களும், உத்திராயணம் பிறந்ததிலே சதாபிசேகம் பண்ணவும்.

## சிரார்த்தம்

தானமாம் பரணி வோணம் சதயம்மான் தலைமுப் பூரம்
ஏனமாய்ப் பூசம் அத்தம் ஆதிமூன் றனுசம் விட்டம்
போனபிற் பக்கம் ஐந்தில் மேல்மாசி புரட்டை தன்னில்
தேன்மொழி ! வெள்ளி நந்தை ஒழித்துநற் சிரார்த்தம் செய்யே 137

இ-ள் : அசுபதி, பரணி, திருவோணம், சதயம், மிருகசீரிடம், மூப்பூரம் (பூரம், பூராடம், பூரட்டாதி), மகம்,

பூசம், அத்தம், சித்திரை, சோதி, அனுசம், அவிட்டம், அமரபட்சத்து பஞ்சமிக்குப் பின்புள்ள பட்சங்களும், மாசி, புரட்டாசி இம்மாதங்களில் நன்று. வெள்ளிக்கிழமையும் நந்தையும் தீது. இவையொழித்துச் சிரார்த்தம் செய்வது என்றவாறு.

### பிதுர்கர்மம்

செய்பவன் மனைவி மக்கள் சென்மம்மூன் றிருபத் தேழ்நாள்
அய்யமில் அறுநாள் நான்கா றாவட்டம இராசி யாகா
எய்தும்அட் டமிஒன் பானில் கேட்டைஏழ் பரணி பன்மூன்று
அய்யமில் மகன்பின் போது சிராபயம் ஆய்ந்து கொள்ளே. 138

இ-ள் : சிரார்த்தம் பண்ணுகிறவன், தன் மனைவி பிறந்த நாள் மூன்றும், புத்திரர்களுடைய பிறந்த நாள் மூன்றும், தான் பிறந்தநாள் மூன்றும், இருபத்து ஏழாம் நாளும் இருபத்து நான்காம் நாளும், அட்டம இராசி, நாள் இவை தீது. அட்டமி, நவமி கூடின கேட்டை, சப்தமி கூடின பரணி, திரயோதசி கூடின மகம், உச்சிக்குப் பின்பு சர இராசி உதய இராசியாகக் கொள்வது.

### அட்டகை

கொள்விருத் தச்சி ரார்த்தம் குறித்தசங் கிராந்தி தீர்த்தம்
கொள்ளுவா ராகும் பின்னும் தென்புலத் தவர்கட் கெல்லாம்
எள்ளுமுக் கால்நாள் நந்தை பத்திரை ஈரேழ் காரி
வெள்ளிஇந் துதயம் ஏகா தேசிகொள் விரும்பார் மேலோர். 139

இ-ள் : சங்கிரம காலம், தீர்த்த காலம், உவாவிலும், விருத்தச் சிரார்த்தம் செய்வது. பிதுர் கர்மங்களுக்கு முக்கால் பட்ட நாட்கள், நந்தை, பத்திரை, சதுர்தசி; சனி, வெள்ளி, திங்கள் உதயம் ஏகாதசி இவை நன்று. பாபக்கிரகங்கள் நோக்க, பதினோராம் இடம் சுத்தமாகக் கொள்வது. மிக்கோரென்று சிறப்பித்தவதனால் மாசி, புரட்டாசி மாதங்களிலே அமரபட்சத்து அஷ்டமியில் சிரார்த்தம் செய்வது என்றவாறு.

### சாந்திகம், பௌடிகம்

விரும்பிரு பூசம் தோணி, வோணம்பார் மகம் விளக்கும்
கரும்பனை உத்தி ரங்கள் கைத்தலம் சதயம் தன்னில்
விரும்புதன் கதிர்சேய் காரி இருந்தைஎட் டுவாக்கள் நீத்தே
தரும்பிறை வளர்நாள் செய்யே சாந்திகம்ப வுடிகம் தானே. 140

இ-ள் : இருபூசம் (புனர்பூசம், பூசம்), இரேவதி, திருவோணம், ரோகணி, மகம், சோதி, அனுசம், உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, அத்தம், சதயம் இந்நாட்களில் புதன், ஞாயிறு, செவ்வாய், சனி இருத்தை, அட்டமி, உவா இவை தீது. பூர்வபட்சத்தில் சாந்திகம், பௌடிகம் செய்வது என்றவாறு.

### கச சாந்தி

தானிரு பூசம் தோணி சதயமுத் திரங்க ளவிட்டம்
மான்மகம் சோதி அத்தம் சித்திரை பனைபார் வாசி
மான்மதி வெள்ளி செம்பொன் வளர்கதிர் வாரம் தன்னில்
ஆனையின் சாந்தி செய்ய இருத்தைநீக் கினிய சொல்லாய். 141

இ-ள் : புனர்பூசம், பூசம், இரேவதி, சதயம், உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, அவிட்டம், மகம், சோதி, அத்தம், சித்திரை, அனுசம், உரோகணி, அசுபதி; திங்கள், வெள்ளி, புதன், வியாழன், இருத்தை அல்லாத பட்சம் கச சாந்தி செய்வது என்றவாறு.

### அசுவ சாந்தி

சொன்முறம் அவிட்டம் ஆரல் தோணிமான் தலையே துரகம்
மன்னுகை பூசம் நற்கோள் வாரத்தில் இருத்தை மாற்றிப்
பண்ணிய சரோப யத்தில் பரிசாந்தி பரிந்து செய்ய
மின்னாய்! கதிரோன் சோதி நின்றநாள் மிகவும் நன்றே. 142

இ-ள் : விசாகம், அவிட்டம், கார்த்திகை, இரேவதி, மிருகசீரிடம், அசுபதி, அத்தம், பூசம் இந்நாட்களிலே,

நற்கோள் வார உதயங்களிலே, சர இராசி உதய இராசியிலே, இருத்தை கூடாத பட்சங்களிலே அசுவசாந்தி செய்வது. ஆதித்தன் சோதியில் நிற்கையில் மிகவும் நன்று. நற்கோள் வாரத்திலே செய்வது.

### சர்வ சாந்தி

நன்றுகார்த் திகைமக ரத்தில் நான்மதி வளர்பக் கத்தில்
அன்றுஅட் டமிஈ ராறில் அமைந்தவான் பூச நாளில்
வன்திரல் உதயம் சுத்தி மாசாந்தி பண்ணும் சோதி
ஒன்றுநாள் வெய்யோன் சாந்தி யாவையும் வேந்தர்க் கோதாய். 143

இ-ள் : விசாகம், அவிட்டம், கார்த்திகை, மகரத்தில் பூர்வபட்சத்தில் இரேவதியும், மிருகசீரிடம், அசுபதி, அத்தம், பூசம் இந்த நாட்களிலும் நற்கோள் உதய வாரங்களும், சர இராசி உதயத்திலும், இருத்தை கூடாத பக்கங்களிலும் அசுவ சாந்தி செய்வது. சோதியில் ஆதித்தன் நின்ற நாளில் இராசாவானவர் சர்வ சாந்தி பண்ணுவது என்றவாறு.

ஓதும்உத் திரங்கள் அத்தம் வோணம்மான் தலைமா விட்டம்
சோதிசித் திரையோ டாரல் தோணிநாள் இருத்தை நீக்கி
மேதைபொன் கதிரோன் வெள்ளி மெய்நிலை யோரை தன்னில்
மாதராய் மறையோர்க் கெல்லாம் சுபகர்ம செய்கை மாண்பே. 144

இ-ள் : உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, அத்தம், திருவோணம், மிருகசீரிடம், அசுபதி, அவிட்டம், சோதி, சித்திரை, கார்த்திகை, இரேவதி இந்த நாட்களில் இருத்தை நீக்கி, புதன், வியாழன், ஞாயிறு, வெள்ளி இவ்வாரங்களில் நிலையோரை (ஸ்திர இராசி) இந்த நாட்களில் இராசாக் களுக்குச் சுபகர்மங்கள் செய்யலாம் என்றவாறு.

### வாகனம் ஏற, ஆயுதம் பயிற்ற

மான்தலை உத்திரங்கள் மகம்அத்தம் புனர்தம் வோணம்
ஏன்றசித் திரைபார் சோதி இரேவதி பனைமா நந்தை
தோன்றாபூ ரணைபொன் புந்தி புகர்மதி கதிர்வா ரங்கள்
ஆன்றவா கனங்கள் ஏற, ஆயுதம் பயிற்ற லாமே. 145

இ-ள் : மிருகசீரிடம், உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, அத்தம், புனர்தம், திருவோணம், சித்திரை, உரோகணி, சோதி, இரேவதி, அனுசம், அசுபதி, நந்தை, பூரணை; வியாழன், புதன், வெள்ளி, திங்கள், ஞாயிறு இவைகளிலே வாகனங்கள் ஏறவும், ஆயுதம் பயிற்றவும் நன்று என்றவாறு.

### படைக்காண, யுத்தம் செய்ய

ஆதிரை பரணி ஆரல் மகம்பூசம் ஆயில் கேட்டை
ஓதுசித் திரைபூ ராடம் வோணம்பார் விளக்கி ருத்தை
காதிய விட்டி செம்பொன் கடுங்கோள்கள் உதயம் செய்ய
தீதிலாப் படையைக் காண, செருச்செய்ய அழகி தன்றே. 146

இ-ள் : திருவாதிரை, பரணி, கார்த்திகை, மகம், பூசம், ஆயிலியம், கேட்டை, சித்திரை, பூராடம், திருவோணம், உரோகணி, சோதி இந்நாட்களும்; இருத்தை, விட்டியும்; வியாழம், ஞாயிறு, சனி, செவ்வாய் இவ்வார உதயங்களிலே படைக்காணவும், யுத்தம் செய்யவும் நன்றென்பது.

### ஆபரணங்கள் பூண

அழகிய குதிரை அத்தம் சித்திரை அனுசம் பூசம்
தொழில்கொள்மான் தலைபார் தோணி சுங்கன்மால் சனிபொன் திங்கள்
எழில்கொள்பூ ரணயே நந்தை எருதுயாழ் தனுமீன் கன்னி
பொழுதுபொன் பூணும் மாதர்க் கணியெலாம் புகழ்ந்து பூட்டே. 147

இ-ள் : அசுபதி, அத்தம், சித்திரை, அனுசம், பூசம், மிருகசீரிடம், உரோகணி, இரேவதி; வெள்ளி, புதன், சனி, வியாழன், திங்கள்; உவா, நந்தை; இடபம், மிதுனம், தனுசு, மீனம், கன்னி இவைகளிலே ஆபரணம் பூண நன்றென்பது. இவை விசேட ஸ்திரீகளுக்கு அலங்காரத்தும் நன்று என்பது.

### கோடி உடுக்க

பூட்டும்உத் திரங்கள் தோணி புரவிபார் இருபூ சங்கள்
மீட்டிய அத்த மாதி ஐந்துநாள் விட்டம் நற்கோள்
சூட்டிய வாரம் நன்றாம் துயரமெட் டிருத்தை சிங்கம்
கொட்டிய சரங்கள் நீக்கி நின்றதில் கூறை சாற்றே. 148

இ-ள் : உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, இரேவதி, அசுபதி, உரோகணி, புனர்பூசம், பூசம், அத்தம் முதல் ஐந்து நாட்களும் (அத்தம், சித்திரை, சோதி, விசாகம், அனுடம்),

அவிட்டம் இவையும்; நற்கோள் வாரங்களும் இவை நன்று. அட்டமி, இருத்தை இவை தீது. சிங்கமும் சர இராசிகளும் (மேடம், கடகம், துலாம், மகரம்) இவற்றில் ஆகாது என்பது.

**சாற்றிடு கூறை நற்கோள் உதயத்துத்து நன்று பாவர்**
**ஏற்றிடு மூன்றறு பன்னொன் றினியரேல் புந்தி நல்லன்**
**நீற்றிடும் எட்டில் யாரும் நின்றபன் னிரண்டும் நான்கும்**
**மாற்றவன் புகரேன் தீயன் ஆடைநாட் டதிக நல்லாய் !** 149

இ-ள் : நற்கோள் வார உதயங்கள் நன்று. பாவர் மூன்றாம் இடம், ஆறாமிடம், பதினோரமிடம் நன்று. புதன் ஏழாமிடம் நல்லன். எட்டாமிடம் எல்லோரும் தீயர், சுக்கிரன் பன்னிரண்டாம் இடமும் தீயன். அல்லாதவை நல்லர் கோடியுடுக்க என்றவாறு.

## தெய்வப் பிரதிட்டை

**அதிகநன் றிருபூ சங்கள் அனுசமைந் தாளம் தோணி**
**குதிரைஉத் திரங்கள் மூன்றும் மகம்நன்று சோதி யோணம்**
**புதியஆ திரையோ டத்தம் மத்திமம் புகழ்க்கோள் வாரம்**
**கதிர்வடக் குருநாள் தெய்வப் பிரதிட்டை செய்கமலக் கண்ணாய்.** 150

இ-ள் : உரோகிணி, புனர்பூசம், பூசம், அனுசம், மிருகசீரிடம், அசுபதி, இரேவதி, உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி இவை நன்று. சோதி, திருவோணம், அத்தம் இவை மத்திமம். நற்கோள் வாரம் நன்று. உத்தராயணம் பிறந்தபோதே தெய்வப் பிரதிட்டை செய்வது என்றவாறு.

## பிரதிட்டைக்கு ஆகாத நாட்கள்

**கண்ணில்லா நாட்கள் மாசி கடியபிற் பக்கம் ஒன்பான்**
**எண்ணுவர் இரட்டை பக்கம் இராப்புகர் செம்பொன் பூடன்**
**தண்ணிய சகடம் விட்டி சரஇராசி நிலையாய் நின்ற**
**அண்ணல்தன் ஓரைக் காறெட் டீராறு பிரதிட்டைக் காகா.** 151

இ-ள் : குருட்டு நாட்கள், மாசிமாதம், அமரபட்சம், நவமி, உவா, விட்டி, இரட்டித்த பட்சங்கள் இவை, இரவு சுக்கிரன், வியாழன் அஸ்தமனநாள், சகடயோகம், விட்டி, சர இராசி இவையும் பிரதிட்டை செய்விக்கிறவன் இராசிக்கு ஆறாம், எட்டாம், பன்னிரண்டாம் இடமும் பிரதிட்டைக்கு ஆகாது என்பது.

## பிரதிட்டைக்கு ஏற்ற நாட்கள்

ஆகாத பாவர் மூன்றோ டாறுபன் னொன்று நல்லர்
ஏகாத எட்டில் யாரும் ஏழிடம் வெள்ளி பொல்லான்
மாகாறு மதிய நான்கும் ஈராறு மறுவில் தீயன்
பாகாரும் விடையாய் ! வெள்ளி மிகநன்று பிரதிட்டை பண்ண. 152

இ-ள் : பாவக்கிரகங்கள் பதினோராம், ஆறாம், மூன்றாம் இடங்களில் நல்லர். அட்டமத்தில் எல்லோரும் தீயர். சுக்கிரன் ஏழாமிடத்தில் தீயன். சந்திரன் நான்காமிடம், பன்னிரண்டாமிடம் தீயன். இடபத்திலே வெள்ளி உதயமாகப் பிரதிட்டை செய்யப்பெறில் விசேடித்து நன்று.

பண்மொழி ! சரஞ்சேய் பின்னிற் பதினான்கு முன்னில் எட்டும்
பெண்ணெழு வர்க்கு நன்றாம் பெருகுச உபயம் தானும்
எண்ணும்பெண் தெய்வம் நாட்டல் இறைவர்க்கும் ஊர்க்கு மாகும்
நண்ணிய சங்கி ராந்தி மாதாந்தத் திருநாள் சாற்றே. 153

இ-ள் : சர இராசியிலும் செவ்வாய்க்கிழமையிலும், அமரபட்சத்து சதுர்தசியிலும், பூர்வபட்சத்து அட்டமியிலும் சப்தமாதர்களைப் பிரதிட்டை பண்ணுவது. திர இராசிகளும், உபய இராசிகளும் தெய்வப் பிரதிட்டைக்கு நன்றென்பது. இராசாவினுடைய நாளுக்கும் ஊர் பிறந்த நாளுக்கும் பொருந்தும் நாட்களிலே சங்கிரம காலத்திலும் மாதாந்தங் களிலும் திருநாள் எழுந்தருளிவிப்பது நன்று. இருத்தையும் இரட்டித்த பட்சங்களும் உவாவும் ஸ்ரீதேவிகளைப் பிரதிட்டைக்காம் என்பது. முன்பு சொன்ன நாட்களிலே சுபக்கிரகங்கள் நோக்க, பதின்மூன்றும் பிரதிட்டை பண்ணுவது என்றவாறு.

திருவமர் தேவர்க் கெல்லாம் சிறந்தவை காசி திங்கள்
உரியமுற் பக்கம் தன்னில் உயர்ந்தநாள் வாரம் ஏற்ற
தருமிக பவுத்தி ரங்கள் தருமருக் கொழுந்து சாற்றும்
பொருவரும் ஆடித் திங்கள் பதினான்கட் டமியும் போற்றே. 154

இ-ள் : தேவர்களுக்கு வைகாசி மாதத்தில் பூர்வ பட்சத்திலே சுபகர்மங்களுக்குச் சொன்ன நாளிலே, நற்கோள் உதய நாளிலே, ஆகாயம் நிர்மலமாகத் தெய்வங்களுக்கு எல்லாம் பவுத்திரம்,

மருக்கொழுந்து சாற்றுவது. ஆடி மாதத்தில் அமரபட்சத்தின் வாரங்களிலே அட்டமியாதல், பதினான்காதல் (சதுர்தசி) சாற்றுவது. பிரதிட்டையுமாம் என்பது.

**வாஸ்து**

**போற்றும்உத் திரங்கள் வோணம் பூசங்கள் மகம்பார் தோணி**
**தோற்றிய சதயம் சோதி மான்தலை அனுசம் தூயர்**
**மாற்றலெட் டுவாஇ ருத்தை மந்தனில் நற்கோள் வாரம்**
**ஏற்றுமூர் தாம்ப திக்க இயம்பினர் நிலையோ ரைக்கே.** 155

இ-ள் : உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, திருவோணம், புனர்பூசம், பூசம், உரோகணி, இரேவதி, சதயம், சோதி, மிருகசீரிடம், அனுசம் இவையெல்லாம் நன்று. அட்டமி, உவா, இருத்தை இவை ஆகா. சனி, புதன், வியாழன், வெள்ளி, திங்கள் இவ்வாரங்கள் உதயங்களும், திர ராசிகளும் கிரகம் பண்ணி யாகம் பண்ணுவது. வித்துவான் களுடன் கூடப்போய் சுபநிமித்தம் செய்வது. பூமியிலே சென்று மண்ணை அள்ளி கெந்தம் பார்த்து வாஸ்து நிச்சயிப்பது என்றவாறு.

**மனை எடுக்க**

**நிலைதரும் கீழ்திசைச் சாரில் அதைப்பாரு நின்ற தென்திசை**
**அலகில்சித் திரைவை காசி ஆடிஆ வணிமேல் சார்வாய்**
**மலரும்ஐப் பசியே வாய்ந்த கார்த்திகை வடசார் வாகும்**
**முவகுபங் குனியோ டானி புரட்டாசிமார் கழியொ ழித்தார்.** 156

இ-ள் : தையும் மாசியும் கீழ்திசைச் சார்பில் மனை எடுக்க நன்று. சித்திரையும் வைகாசியும் தென்சார்பில் கட்டவும். ஆடியும் ஆவணியும் மேல் சார்பில் கட்டவும். ஐப்பசி, கார்த்திகை வடசார்பில் கட்டவும். பங்குனி, புரட்டாசி, மார்கழி, ஆனி இவை எத்திசையும் ஆகாது என்றவாறு.

**ஒழுக்கிய குண்டை யாழ்நண் டுயர்கிழக் குடன்வ டக்காம்**
**மடிற்புரி அரிவை கோலுக் கழகிய கிழக்கும் தெற்கும்**
**விழித்திடும் தேளும் வில்லும் மகரமும் மேற்குத் தெற்காம்**
**வழத்துநற் குடம்மீன் மேடம் வாசலாம் வடக்கு மேற்கே.** 157

இ-ள் : இடபம், மிதுனம், கற்கடகம் இவ்விராசிகளில் பிறந்தவர்களுக்குக் கிழக்கும் வடக்கும் வாசல் விடலாம். சிங்கம், கன்னியும், துலாமும் இந்த இராசிகளில் பிறந்தவர் களுக்குக் கிழக்கும் தெற்கும் வாசல் விடலாம். விருட்சிகம், தனுசு, மகரம் இந்த இராசிகளில் பிறந்தவர்களுக்கு தெற்கும் மேற்கும் வாசல் விடலாம். கும்பம், மீனம், மேடம் இந்த இராசிகளில் பிறந்தவர்களுக்கு வடக்கு, மேற்கு வாசல் விடலாம் என்பது.

வடங்கொள்பார் தோணி பூசம் மிருகசிரம் அனுசம் அத்தம்
திடங்கொள்உத் திரங்கள் நன்று சித்திரை புனர்தம் மூலம்
தடந்தரு அவிட்டம் சோதி சதயமற் றிம்முற் பக்கம்
தெடம்பெரு விட்டி ருத்தை உவாவிட்டில் கோள்கள் நீக்கே. 158

இ-ள் : உரோகணி, இரேவதி, பூசம், மகம், மிருகசீரிடம், அனுசம், அத்தம், உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி இவை நன்று. சித்திரை, புனர்தம், மூலம், அவிட்டம், சோதி, சதயம் இவை மத்திமம். பூர்வபட்சம் நன்று. இருத்தையும் உவாவும் தீது. அட்டமசுத்தி உண்டாக வீடெடுப்பது என்றவாறு.

**கிரகாரம்பம்**

நீத்திடும் பாவ வாரம் நிலையோரை உபயங் கோள்மீன்
சேத்துதேள் சிங்கம் செம்பொன் குடம்புகர் திங்கள் ஏற்றில்
ஏத்துமால் வெள்ளி நின்றால் ஏழ்புகர் கொடிதீ ராறில்
தீத்திடும் மதிமால் பன்னொன் றாறுமூன் றினியர் தீக்கோள். 159

இ-ள் : பாவக்கிரக வார உதயம் நீக்கிச் சுபகிரகங்கள் வார உதயங்களிலே ஸ்திர இராசியும் உபய இராசியும் நன்றென்பது. விருட்சிகம் சிங்கத்தில் வியாழன் நிற்கினும், கும்பத்தில் சுக்கிரன், சந்திரன் நிற்கிலும், இடபத்தில் சுக்கிரன், புதன் நிற்கிலும் விசேடித்து நன்மை பண்ணுவான். வியாழன், வெள்ளி ஏழாமிடம் ஒழிய நல்லர். சந்திரனும் புதனும் பன்னிரண்டாமிடம் ஒழிய நல்லர். தேவாலயங் களுக்கும் கிரகாரம்பங்களுக்கும் வகுத்துச் சொல்லும் நாட்களில் கொள்வது என்பது.

## குடிபுக, திருவாண்டெழுத

தீங்கிலாது இல்லெ டுக்கச் செப்பிய காலம் தன்னில்
ஓங்கிய மாசி ஆடி புரட்டைமார் கழிஒ ழித்து
ஆங்குடி புகுத மாதே ! ஆடியில் ஆதி ரைக்கே
ஈங்கிவை மன்னர்க் கெல்லாம் எழுத்திட இனிதென் றோதே 160

*இ-ள் : கிரகாரம்பத்துக்குச் சொன்ன காலங்களிலே, மாசி, புரட்டாசி, மார்கழி, ஆடி மாதங்கள் விலக்கப்பட்டன. மற்ற மாதங்களிலே குடிபுகுதலாம் என்பது. ஆடி மாதத்தில் திருவாதிரை நன்று. உச்சிப்பொழுது இராசாக்களுக்குத் திருஎழுத்திடலாம் என்பது.*

## குரு உரை கேட்க

இனியதே உத்தி ரங்கள் இரேவதி அவிட்டம் வோணம்
அனுசம்மான் தலைபூ சங்கள் ஆதிரை அத்தம் கேட்டை
துணுவுறு மகமே மூலம் சோதிசித் திரைசேய் வாரம்
குணிசிலை நுதலாய் ! நன்று குருவுரை கொள்வார்க் கெல்லாம். 161

*இ-ள் : உரோகிணி, உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி இரேவதி, அவிட்டம், திருவோணம், அனுசம், மிருகசீரிடம், புனர்பூசம், பூசம், திருவாதிரை, அத்தம், கேட்டை, மகம், மூலம், சோதி, சித்திரை இந்நாட்களிலும் செவ்வாய்க் கிழமையும் தீட்சை பண்ணவும்.*

எல்லையில் உவாஇ ருத்தை அட்டமி எட்டில் கோள்கள்
புல்லிய மாசி ஆடி புரட்டைமார் கழியொழித்து
நல்லமுற் பக்கம் நிற்கும் ஓரைகோள் அமைந்த நாளில்
சொல்லுவார் சங்கி ராந்தி தோன்றில்மெய் சுத்தி பண்ணே. 162

*இ-ள் : உவா, இருத்தை, அட்டமி, மாசி, புரட்டாசி, மார்கழி மாதம் இவை ஆகாது. பூர்வபட்சத்தில் ஸ்திர இராசி உதயமாக, அட்டமசுத்தி உண்டாகச் சுக்கிரன் பிரகஸ்பதி[1] உள்ள நாட்களிலேயும் ஆகாயம் நிர்மலமாக உள்ள காலங்களிலேயும் சீவன் பிறந்த நாட்களிலேயும் தீட்சை பண்ணிக்கொள்ளவும்.*

*162. 1. பிரகஸ்பதி - குரு*

## குளம், கிணறு தோண்ட

சுத்தம்உத் திரங்கள் கேட்டை தோணிசித் திரைபார் வோணம்
அத்தம்மான் தலைபூ ராடம் மகமைந்தேழ் மூன்று பன்னொன்
றொத்தபன் மூன்றும் ஒன்று திதியோரை குடமீன் கேது
குத்திய எருது ரண்டில் குளங்குழி கூவல் சொல்லே. 163

*இ-ள் : உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, கேட்டை, இரேவதி, சித்திரை, உரோகணி, திருவோணம், அத்தம், மிருகசிரீடம், பூராடம், மகம் நன்று. பட்சங்களில் திரிதிகை, பஞ்சமி, சப்தமி, ஏகாதசி, திரயோதசி நன்று. இராசிகளில் கும்பம், மீனம், மகரம், இடபம், கடகம் இவற்றிலே அட்டமசுத்தி உண்டாக குளம், கிணறு, ஏறி கல்லுவது.*

கல்லுமாக் குளங்கள் கூவல் கதிர்துலாம் நடுவில் பத்தில்
செல்லுநாள் பெருநீ ராகும் சித்திரை நடுவில் பத்தில்
மல்லமாக் கரைகள் கட்டி மலையகா மெட்டில் சுத்தம்
மல்லுறு குழலாய் ! கோள்கள் அழகியோர்க் கிழமை ஆய்ந்தே. 164

*இ-ள் : ஐப்பசி மாதத்தில் நடு அகத்தில் பத்தில் முன் சொன்ன நாட்களிலே குளம், கிணறு வெட்டில் பெரும் நீராம். சித்திரை மாதத்தில் நடுபத்தில் முன்சொன்ன நாட்களிலே கரை கட்டில் மலைபோலே வளரும். அட்டமசுத்தி உண்டாக சுபக்கோள் வாரங்களிலே வெட்டுவது.*

## நோய் கொண்டால் மரணம்

ஆயில்முப் பூரம் சோதி ஆதிரை பரணி கேட்டை
ஏயுநற் சதயம் பக்கம் ஈராறு நான்கா றொன்பான்
காய்கதிர் செவ்வாய் காரி வாரங்கள் கலந்த நாளில்
நோய்கோளில் மரணம் என்று நவின்றனர் நூல்கள் வல்லோர். 165

*இ-ள் : ஆயிலியம், பூரம், பூராடம், பூரட்டாதி, சோதி, திருவாதிரை, பரணி, கேட்டை, சதயம், துவாதசி, சதுர்தசி, நவமி, சஷ்டி, ஞாயிறு, செவ்வாய் இந்த வாரங்கள், நட்சத்திரங் களிலே நோய் கொண்டால் மரணம் என்றவாறு.*

## நோய் கொண்டால் மருந்து கொள்ளநாள்

வல்லிரு பூசம் அத்தம் மான்சோதி உருள்மா பெண்ணை
சொல்லும்உத் திரங்கள் அவிட்டம் தோணிமான் தலைசெக் கோணம்
மெல்லிய சரங்கள் வாரம் வெய்யவன் எண்கோள் சுத்தம்
சொல்லிய இருத்தை நீக்கி மருந்துண்ணத் தெளிந்துகொள்ளே. 166

இ-ள் : புனர்பூசம், பூசம், அத்தம், சித்திரை, சோதி, உரோகணி, அசுபதி, அனுசம், உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, அவிட்டம், இரேவதி, மிருகசீரிடம், சதயம், திருவோணம்; கன்னியும் சர இராசிகளும், நற்கோள் வாரங்களும், ஞாயிறு, திங்கள், புதன், வியாழன், வெள்ளி இக்கிழமைகளும் அட்டமசுத்தி உண்டாக, இருத்தை நீக்கி மருந்து குடிக்க என்றவாறு.

## அறுக்க, வெதுப்ப நல்ல நாள்

தெரிதரும் ஆயில் கேட்டை செங்கைமூ லஞ்சேய் காரி
விரிதரும் இருத்தை கன்னி மேடக்கோல் கடகம் தம்மை
எரிதரும் தீக்கோள் நோக்க எட்டிடம் சுத்த மாக்கி
கருதுநோய் அறுத்துச் சுட்டுக் காரம்வைத் தட்டை கட்டே. 167

இ-ள் : ஆயிலியம், கேட்டை, ஆதிரை, மூலம் இந்த நாட்களில் செவ்வாய், சனி இக்கிழமைகளில், இருத்தை பட்சத்தில், கன்னி, மேடம், மகரம், கற்கடகம் இந்த இராசி களில் பாபக் கிரகங்கள் நோக்க, அட்டமசுத்தி உண்டாக, வியாதி அறுக்கவும், காரம் வைக்கவும், சுடவும், கட்டவும் நன்று என்பது.

## ஆரோக்கிய தானம் (நீராட) செய்ய ஏற்ற நாள்

கட்டிய உரோணி சோதி கலமகம் புனர்தம் ஆயில்
மட்டிய உத்தி ரங்கள் தவிர்த்திவை ஒழிந்த நாளில்
அட்டமி இருத்தை ஆன்ற தசமியில் வெள்ளி திங்கள்
சுட்டிய உதய வாரம் துயர்கெடக் குளிக்க நன்றே. 168

இ-ள் : உரோகணி, இரேவதி, சோதி, மகம், புனர்பூசம், ஆயிலியம், உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி இவை ஒழிந்த நாட்களிலே, அட்டமி, இருத்தை, தசமி இப்பட்சங் களிலே, வெள்ளி, திங்கள் இவ்வார உதயங்களிலே வியாதி தீர்ந்தால் குளிப்பது என்பது.

## மரண தோசம்

நன்றுணர் முக்கால் கால்நாள் வருநாள்பத் திரையாம் பக்கம்
வென்றிகொள் பொன்சேய் வெள்ளி வாரத்தி லவித்தல் சுட்டல்
என்றிவை உளஅந் நாளில் இறந்தவன் மரபு தன்னில்
பொன்றுவர் மூவர் என்று புகன்றனர் புலவர் பொன்னே. 169

இ-ள் : அரைநாள், முக்கால் நாள், கால் நாளுமாக வரு நாட்களும், பத்திரை திதி கூடி வியாழமும் செவ்வாய், வெள்ளி இவை கூடின நாளில் சாதல், சுடுதல், கெடுதல் செய்யில் அவனுடைய அங்கிசத்தில் மூன்றுபேர் மரணம் உண்டு என்பது.

பொன்னனாய் ! தருப்பை யாலே புனர்தேக தகனம் பண்ணி
பின்னுமந் தணரை யூட்டிப் பிறப்பில்லாத் தேவர் தம்மை
உண்ணிய பூசை செய்ய ஒழிந்திடும் சாக்கா டென்று
மின்னிடை மடந்தை நல்லாய் ! விளம்பினர் தமிழ் விரித்தோர். 170

இ-ள் : சாக்காடு தோஷம் தவிர்த்தேற தர்ப்பையினாலே பிரேதம் பண்ணித் தகனம் பண்ணி, மண் போசனம் பண்ணி, சிவபூசை உபசாரங்கள், தேவதைகளையும் பூசிக்கத் தோஷம் தீரும் என்றவாறு.

சாக்காடு தோஷம் முற்றும்.

## சேத்திர லபிதம்

விரிந்தவான் பரணி வோணம் விசாகமோ டத்த நாளில்
கருத்துடை நாலாம் காலில் கடகம்வந் துதிப்பக் கண்டு
திருந்திய செய்யில் மண்ணைத் தின்றிடச் செல்வம் மிஞ்சிப்
பொருத்தமும் புகழும் உண்டாம் பூமியும் தன்னி தாமே. 171

இ-ள் : பரணி, திருவோணம், விசாகம், அத்தம் இவை ஈற்றிலே நாலாம் கால்களிலே, கற்கடகம் உதயமாக ஒரு பூமியைப் பார்த்து மண்ணைத் தின்ன, அந்தப் பூமி தனக்காட்சியாம் என்பது.

மண் தின்ன முற்றும்.

## விலங்கு, கள்ளர் விலக்க

தாவிய விலங்கு கள்ளர் தன்செய்யில் புகாமல் வேண்டில்
ஏவில்கார்த் திகையி னின்று மகசிரம் உதிக்கும் போது
மேவிய பாழி றப்பு விறகினைக் கொணர்ந்து செய்யில்
பூவைகேள் ! வரம்பு தோறும் எரித்திடில் புகுதா தொன்றும். 172

இ-ள் : மிருகங்களும் புழுவும் கள்ளரும் செய்யில் (வயல்) புகாமல் இருக்கவேண்டில், கார்த்திகை நட்சத்திரத்தில் இருந்து மிருகசீரிடம் உதிக்கும்போது, பாழ்மனை எறப்பு விறகைக் கொண்டுவந்து செய்யின் வரப்புதோறும் எரிக்க யாதொன்றும் ஆகாது.

## மிருகம் விலக்க

ஒன்றிய சேயின் வாரத் துவாபதி னான்கு தன்னில்
வன்றிய அவிட்டம் அத்தம் மகசிர நாளில் சிங்கம்
கன்றிய வில்லு திப்பக் காஞ்சிரை முளையை நாட்ட
வென்றிகொள் விலங்கு செய்யில் மேவிடா மேவில் மாயும். 173

இ-ள் : செவ்வாய்க்கிழமை பதினான்காதல் (சதுர்தசி) உவாவாதல் இப்பட்சங்களும், அவிட்டம், அத்தம், மிருகசீரிடம் இந்நாட்களும் கூடி வந்த நாள் சிங்கமாதல் தனுசுவாதல் முகூர்த்தமாகக் காஞ்சிரமுளையைச் செய்யில், (வயல்) வரம்பில் நாலு மூலையிலும் நாட்ட மிருகங்கள் புகுதாது (புகாது) என்றவாறு.

மேவும்ஆ திரையும் நன்று வில்எழ மனையில் செய்யில்
ஏவிய கோணம் நான்கு எட்டியின் முளையை நாட்ட
தீமிரு கங்கள் விட்டில் எலியாழல் நாவாய் செய்யில்
தாவிடா மனையில் சாரா சாருமேல் மரணம் சாற்றே. 174

*இ-ள் : திருவாதிரையில் நன்று. தனு உதயமாக மனையிலும் செய் நாலு மூலைகளிலும் காஞ்சிர முளையை நாட்ட, மிருகங்கள், விட்டில், யாழல், யானை, நாவாய் புகுதாது என்பது.*

மிருகம் விலக்க முற்றும்.

## சத்துரு செயம்

**சாத்தும்ஆ திரையில் செவ்வாய்க் கிழமையில் தகரி லாதல்**
**சீற்றமாம் மகரத் தாதல் சேயெழப் பகைஞர் இல்லில்**
**தோற்றிய விறகை வாங்கி சுடலையில் தீயை மூட்ட**
**மாற்றலர் மாண்டு போகும் சூனிய மயிலே அன்னாய் !** 175

*இ-ள் : திருவாதிரை நாள், செவ்வாய்க்கிழமையாதல் மேடத்தில் செவ்வாய் நின்றுதிப்ப, அப்பொழுது சத்துருவின் எறப்பில் (மனை எறப்பு) விறகை வாங்கி, சுடுகாட்டில் இட்டு எரிக்க, சத்துரு மாய்ந்துபோம் என்பது*

சத்துரு செயம் முற்றும்.

## குமர் நீங்க

**அன்னைசித் திரைமா தத்தில் சித்திரை யான நாளில்**
**முன்னரை தன்னில் திங்கள் உதிப்பது முகூர்த்த மாகக்**
**கன்னியை பஞ்ச வர்ண நூல்புனைந் தரையில் கட்ட**
**மன்னிய குமரு நீங்கி வாழ்க்கையும் எய்தும் மண்மேல்.** 176

*இ-ள் : சித்திரை மாதத்தில் சித்திரை நாளில் முன்னரையிலே திங்கள் உதயமாகக் கன்னியாய் இருப்பவளைக் குளிப்பாட்டிப் பஞ்சவர்ண நூலாலே குளிகையாக்கி அரையில் கட்ட குமரும் நீங்கி வாழ்க்கை எய்தும் என்பது.*

குமர் நீங்க முற்றும்.

## புருஷனை ஸ்திரீயுடன் சேர்ப்பிக்க

**மண்ணிடை மனையாள் தன்னை வேண்டாராய் வாழ்வார் தம்மை**
**பெண்ணுடன் கூட்ட வேண்டி பெரியசித் திரைநாள் அத்தம்**
**திண்ணிதாய் உதிப்ப திங்கள் கிழமையில் திருவன் னாளை**
**புண்ணிய நன்னீ ராட்டிப் புணர்முலை சாத்தும் பூசே.** 177

இ-ள் : ஸ்திரீகளுடன் சேராமல் பிரிந்து திரிபவர்களைச் சேர்க்க வேண்டில், சித்திரை மாத நாள் அத்தம் உதயமாகத் திங்கட்கிழமையில் ஸ்திரீயை நீராட்டி மார்பில் சந்தனம் பூசிக் கூட்டிவிட ஒருநாளும் பிரியாது என்பது.

## வார விசேஷம்

சந்திரன் விதைசேய் பூசல் சனிதவங் கதிர்சே வித்தல்
மந்திரி மண்மால் கல்வி மயிர்வெள்ளி வாரம் நன்றாம்
அந்தமில் முடியே வித்தை அரும்பொருள் கன்னி தானம்
வந்துரு பகைநோய் தீர்க்க வருவதே கோல மானே! 178

இ-ள் : திங்கட்கிழமை விதைக்க விசேடம். செவ்வாய்க் கிழமை பூசல் செய்ய விசேடம். சனிக்கிழமை தவசு செய்ய விசேடம். ஞாயிற்றுக்கிழமை சபம் பண்ண விசேடம். வியாழக்கிழமை வித்தை ஆரம்பம் விசேடம். வெள்ளி மயிர் களைய விசேடம் என்பது. அபிசேகம் எய்திய பொழுதும், வித்தை வந்து எய்திய பொழுதும், திரவியம் வந்து எய்திய பொழுதும், கன்னிகாதானம் வந்து எய்திய பொழுதும், சத்துருவை செயிக்கவான பொழுதும் வியாதி பரிகரிக்கலாம் என்ற பொழுதும் வந்தெய்திய பொழுதே முகூர்த்தமாகக் கொள்வது ஏற்றவாறு.

## மேல்நோக்கிய, முகட்டு, கீழ்நோக்கிய நாட்கள்

மாமுதல் நான்கு மூலம் முதநான்கு மகநான்கு மூலம்
தான்முதல் நான்கு மேலாம் தக்கமான் தலைஅ விட்டம்
மேவுசித் திரையும் உச்சி விதித்திடும் ஈசன் நாலும்
தாவிய சோதி நாலும் சதயநால் கீழாங் காலை. 179

இ-ள் : அசுபதி முதல் நான்கு நாட்களும், மூலம் முதல் நான்கு நாட்களும், மகம் முதல் நான்கு நாட்களும் இவை மேல்நோக்கின நாட்கள். இவற்றில் விசேடமாக அகம் எடுக்கவும், ஊரேற்றவும் முயற்சியானவை செய்யவும் நன்று. மிருகசீரிடம், சித்திரை, அவிட்டம் இவை மூன்றும் **முகட்டு**

***நாட்கள்.*** இவற்றில் இருக்கவும், நிலைப்பட்ட காரியம் செய்யவும் நன்றென்பது. திருவாதிரை முதல் நான்கு நாட்களும், சோதி முதல் நான்கு நாட்களும், சதயம் முதல் நான்கு நாட்களும் ***கீழ்நோக்கிய நாட்கள்.*** இவற்றில் குளம் வெட்டவும், குழி கெல்லவும், கிணறு வெட்டவும் விசேடித்து நன்றென்பது.

### காரிய சுத்தி

**கால்கொண்ட மனத்துக் கேழும் கருதும்வா யுறைக்குப் பத்தும்**
**மால்கொண்ட மனைக்கு ரெண்டு வழிபோக்குக் கைந்து வாஸ்து**
**மேல்கொண்ட பிரதிட்டைக் காறு மயிர்வித்தை முடிசீ மந்தம்**
**மேல்கொண்ட நாம முன்னூல் கெட்டிடம் சுத்த மின்னே.** 180

இ-ள் : விவாகத்திற்கு ஏழாமிடமும், அன்னப் பிராசனத்துக்குப் பத்தாமிடமும், கிரக ஆரம்பத்துக்கு இரண்டாமிடமும், யாத்திரைக்கு ஐந்தாமிடமும், வாஸ்து பிரதிட்டை, காது குத்த, சவனம், வித்தை ஆரம்பம், அபிசேகம், சீமந்தம், நாமகரணம், உபநயனம் இவற்றுக்கு எட்டாமிடமும் சுத்தி கொள்வது.

### விலக்கப்பட்டவை

**சுத்தமா மணம்சி ரார்த்தம் யாத்திரை சோலை வைத்தல்**
**புத்திசேய் குருவைக் காண்டல் புணர்ந்திடல் அகம்எ டுத்தல்**
**வைத்தஏர் உழவு கூவல் மரக்கலம் மயிரே கல்வி**
**வித்திட மேடம் ஆதி கயலீறாய்க் களித்தார் கற்றோர்.** 181

இ-ள் : விவாகத்திற்கு மேஷம் ஆகாது. சிரார்த்த கர்மங்களுக்கு இடபம் ஆகாது. யாத்திரைக்கு மிதுனம் ஆகாது. விருட்சம் வைக்க கடகம் ஆகாது. ஆசாரியனைக் காண சிங்கம் ஆகாது, புணர்ச்சிக்குக் கன்னி ஆகாது. அகம் எடுக்க துலாம் ஆகாது. உழவுக்கு விருட்சிகம் ஆகாது. கிணறு வெட்ட தனுசு ஆகாது. சமுத்திர யாத்திரைக்குக் கும்பம், மகரம் ஆகாது. சவனத்திற்குக் கும்பம் ஆகாது. வித்தை ஆரம்பத்துக்கு மீனம் ஆகாது. இவையெல்லாம் விசேடித்து விலக்கப்பட்டன.

### சென்மத்திரய நாள் - தோசமும் அனுகூலமும்

கற்புநாள் மூன்றில் எண்ணெய் கடிமணம் சிரார்த்தம் போக்கு
வற்புறு பிணிம ருந்து மயிர்வினை மருவல் ஆகா
இற்புகல் உழுதல் வித்து இனிதுண்ணல் அறங்கள் செய்தல்
பொற்பணி மகுடம் ஆடை புனையலாம் புவியில் மாதே. 182

இ-ள் : பிறந்த நாள் மூன்றும் எண்ணெய் வார்க்க, விவாகம் செய்ய, சிரார்த்தம், யாத்திரை, வியாதி கொள்ள, மருந்து குடிக்க, சவனம் இவை விசேடித்து விலக்கப்பட்டன. இனி குடிபுகுதல், உழவு விதைக்க, புதியது உண்ண, தானம் செய்ய, ஆபரணம் பூண, அபிசேகம் பெற, கோடிப் புடவை உடுக்க விசேடித்து நன்றென்பது.

பொதுவியல் முற்றும்

## 3. பொருத்தவியல்

### மணப்பொருத்தம்

மாதவர் மணப்பொ ருத்தம் வழுத்துநாள் கணப்பொ ருத்தம்
மாதுமா கேந்திர மோடு ஸ்திரீதீர்க்கம் யோனி ராசி
மேதகு ஆதிப திக்கோள் வசியமி ரச்சு வேதம்
தீதறு மரங்கள் புள்ளு தெரிந்திட வுரைப்பன் தேனே. 183

இ-ள் : மணப்பொருத்தமாவது நாள் பொருத்தம் (தினப்பொருத்தம்) கணப்பொருத்தம், மாகேந்திரப் பொருத்தம், ஸ்திரீ தீர்க்கம், யோனிப் பொருத்தம், இராசிப் பொருத்தம், இராசியாதிபதிப் பொருத்தம், வசியப் பொருத்தம், இரச்சுப் பொருத்தம், வேதைப் பொருத்தம் என்கிற தசப் பொருத்தமும் விருட்சப் பொருத்தமும் பட்சிப் பொருத்தமும் அடவே சொல்வது என்றவாறு.

### நாள் பொருத்தம்

உரைத்திடில் இரண்டு நான்கா றெட்டொன்பா னீறா றீரேழ்
பரித்தவென் னிரண்டு பத்தொன் பானிரு பத்தி ரண்டு
இருத்திய இருபன் மூன்று இருபத்தா றிருபத் தெட்டும்
பொருத்தநன் றிருபத் தொன்பான் நாள்இவை பூவின் மாதே. 184

இ-ள் : 2, 4, 6, 8, 9, 12, 14, 16, 19, 22, 23, 25, 29 ஆகிய இந்த நாட்கள் எல்லாக் கருமங்களுக்கும் பொருந்தும் என்பது. இவை பத்தும் சென்றால் அவை தொட்டு எண்ணுவது நாள் பொருத்தம்.

மான்தலை புனர்தம் ஆரல் வயப்பரி சதயம் ஆடி
ஆன்றசித் திரைபங் கூனி அனுசமத் திபம்பார் செங்கை
ஊன்றிய வறிவன் ரோணி மகம்பூசம் வோணம் அத்தம்
தோன்றினன் ஒருநாள் அல்லா தொழிந்தனர் துணிந்து தேர்ந்தோர்.

இ-ள் : மிருகசீரிடம், புனர்பூசம், கார்த்திகை, அசுபதி, சதயம், உத்திராடம், சித்திரை, உத்திரம் இவை ஒன்பது நாட்களும் ஸ்திரீயும் புருஷனும் ஒரு நாளாகில் மத்திமம். உரோகணி, திருவாதிரை, உத்திரட்டாதி, இரேவதி, மகம், பூசம், திருவோணம், அத்தம் இவை எட்டு நாட்களும் இருவருக்கும் ஒரு நாளாகில் உத்தமம். மூலம், ஆயிலியம், விசாகம், கேட்டை, பூரம், பூராடம், பூரட்டாதி, பரணி, அவிட்டம், சோதி இவை பத்தும் ஒரு நாளாகில் ஆகாது.

நாள் பொருத்தம் முற்றும்.

## கணப்பொருத்தம்

தேரடுப் புத்தி ரங்கள் செங்கைமுப் பூரம் மக்கள்
பாரமான் தலைபூ சங்கள் பனைவிளக் கோணம் தோணி
மூரிபா அத்தம் தேவர் முறம் கேட்டை பயறு மூலம்
ஆரல்பாம் பவிட்டம் செக்கு மகம்கணம் அரக்கர்க் கங்கே. 186

இ-ள் : உரோகணி, பரணி, உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, திருவாதிரை, பூரம், பூராடம், பூரட்டாதி இவை ஒன்பது நாட்கள் *மக்கள் கணம்*. மிருகசீரிடம், புனர்பூசம், அனுசம், சுவாதி, திருவோணம், இரேவதி, அசுபதி, அத்தம் இவை ஒன்பதும் *தேவகணம்*. விசாகம், கேட்டை, சித்திரை, மூலம், கார்த்திகை, ஆயிலியம், அவிட்டம், சதயம் இவை ஒன்பதும் *இராட்சத கணம்* என்பது.

அரக்கரும் தேவர் தாமும் அலைப்பகை அரக்க ரோடே
பெருக்கவும் மனிதர் சேரில் பிணம்படு மக்க ளோடே
செருக்கிய தேவர் சேரின் மத்திமம் செல்வம் உண்டாம்
இருக்குமேற் கணங்கள் ஒன்றே இறைவனும் மாதும் ஒன்றே.187

*இ-ள் : மனுட கணமும் தேவ கணமுமாகில் மத்திமம். இராட்சத கணமும் தேவ கணமுமாகில் சிலுகாம் என்பது. இராட்சத கணமும் மனித கணமுமாகில் மரணம் உண்டாம் என்பது. இரண்டு பேரும் ஒரு கணமாகில் உத்தமம் என்பது.*

கணப்பொருத்தம் முற்றும்.

## மகேந்திரமும் ஸ்திரீ தீர்க்கமும்

ஒன்றுநான் கேழு பத்துப் பதிமூன்றெண் ணிரண்டு நாட்கள்
ஒன்றொழித் திருபான் ஐந்தும் இருபத்தோ டிரண்டு மாகில்
நன்றுமா கேந்தி ரந்தான் நாட்பதி மூன்றுக் கப்பால்
சென்றிடின் மிகவும் நன்று ஸ்திரீ தீர்க்கம் என்று செப்பே. 188

*இ-ள் : 1, 4, 7, 10, 13, 16, 19, 20, 22, 25 இந்த நாட்கள் நன்று. மகேந்திர பொருத்தம் என்பது. முன்போலே தொட்டு எண்ணாதே இருபத்து ஏழும் கண்டு கொள்க.*

ஸ்திரீதீர்க்கம் கொள்ளும்படி : ஸ்திரீ நாளிலே நின்று புருஷ நாள் அளவு எண்ணினால் பதிமூன்று நாட்களாகிலும் அதற்கு மேற்படிலும் அழகிய (நல்லன) என்றவாறு.

ஸ்திரீ தீர்க்கம் முற்றும்.

## யோனிப் பொருத்தம்

செப்பிய குதிரை யானைஆடு தீயநாகம் சாரை
தப்பில்பெண் நாய்பொன் பூனை தகர்புஞ்ஞை எலிஆண் பெட்டை
ஒப்பறு எருமை வேங்கை கிடாய்புலி யோடு புல்வாய்
கொப்புறு கலைநாய் வல்லான் குரங்குஆண் பசுகு ரங்கே.

*இ-ள் : அசுபதி-ஆண் குதிரை, பரணி-ஆண் யானை, கார்த்திகை-பெண் ஆடு, உரோகணி-நாகப்பாம்பு, மிருகசீரிடம்-*

சாரைப்பாம்பு, திருவாதிரை-பெண்ணாய், புனர்பூசம்-பெண்பூனை, பூசம்-ஆணாடு, ஆயிலியம்-கடுவன்பூனை, மகம்-ஆணெலி, பூரம்-பெண்ணெலி, உத்திரம்-எருது, அத்தம்-பெண் எருமை, சித்திரை-ஆண் புலி, சோதி-ஆண் எருமை, விசாகம்-பெண் புலி,கேட்டை-ஆண்மான், மூலம்-ஆண்நாய், பூராடம்-ஆண் குரங்கு, உத்திராடம்-மலட்டுப்பசு, திருவோணம்-பெண் குரங்கு என்றவாறு.

குரமிகு மனையில் பெண்டீர் குதிரையில் பெட்டை கூவல்
நரர்களில் புருஷர் நல்லர் பாற்பசு பிடியீ றாக
இருபதோ டேழு நாளும் யோனியிப் பரிசே யென்று
துரகமே ஆதி யாகச் சொல்லிடாய்த் துடியே அன்னாய் ? 190

இ-ள் : அவிட்டம்-பெண், சதயம்-பெண் குதிரை, பூரட்டாதி-புருஷன், உத்திரட்டாதி-பாற்பசு, இரேவதி-பெண் யானை. இவ்வகையால் இருபத்தேழு யோனியும் கண்டு கொள்க.

துடிபிடி யானை தன்னில் பகைநரர் துரகம் கோவுக்
கடியுடை யெருமை புல்வாய் கடிப்புலி பகைய தாகும்
கொடியபாம் புதனுக் காடு குரங்குக்கு நாய தாகும்
கடியபே ரெலிக்குப் பூனை பகையெனக் கருது நீயே. 191

இ-ள் : யானைக்குப் பகை மனிதர், குதிரைக்குப் பகை பசு, எருமைக்கும் புல்வாய்க்கும் பகை புலி, பாம்புக்குப் பகை ஆடு, குரங்குக்குப் பகை நாய், எலிக்குப் பகை பூனை.

### யோனிப் பொருத்தமும் இராசிப்பொருத்தம்

கருத்துடை ஆணும் ஆணும் கடும்பகை பெண்ணும் பெண்ணும்
திருத்தமாம் பெண்பெண் ணாகில் ஆணாணால் செல்வம் உண்டாம்
விருத்தமாம் பெண்ஆ ணாகி ஆண்பெண்ணேல் மிகவும் யோனி
பொருத்தமாம் இராசி ஏழில் மேற்படி புகழுண் டாமே. 192

இ-ள் : இரண்டு யோனியும் ஆண் யோனியானால் பகை உண்டாகும். இரண்டு யோனியும் பெண் யோனியாகில் உத்தமம். ஸ்திரீக்கு ஸ்திரீ யோனியாகிலும், புருஷனுக்குப்

புருஷ யோனியாகிலும் செல்வம் உண்டாம். ஸ்திரீக்குப் புருஷ யோனியாக, புருஷனுக்கு ஸ்திரீ யோனியாக மிகவும் நன்று. இவ்வகையால் யோனிப் பொருத்தம் பார்ப்பது.

### இராசிப் பொருத்தம் கொள்ளும்படி

ஸ்திரீ இராசியில் நின்று புருஷ இராசியளவு எண்ணில் ஏழாம் இராசியாகிலும், ஏழுக்கு மேற்படியாகிலும் உத்தமம். ஏழுக்குக் குறையில் ஆகாது என்பது.

### இராசி அதிபதிப் பொருத்தம்

உண்டாய் மறிக்கும் தேட்டு உறவுமான் விடையாழ் கோல்பெண்
குண்டைகோக் குறவு வீணை கொடியதேள் ஆதி ஆறும்
தண்டுபெண் தனக்குச் சிங்கம் மீனொழித் தெல்லாம் சார்வாம்
நண்டுக்கு விடையாழ் வில்மீன் நாரிநட் பென்று சொல்லே 193

இ-ள் : முன்பே நட்புப் பகை சொல்லி இருக்கச் செய்தேயும் விசேடித்து அதிபதிப் பொருத்தம் என்பது. மேடத்துக்கும் விருட்சிகத்துக்கும் உறவு மகரம், இடபம், மீனம், துலாம், கன்னி என்பது. இடப-துலாத்துக்கு உறவு மிதுனம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம், மேடம் என்பது. மிதுனத்துக்கும் கன்னிக்கும் சிங்கம் ஒழிய எல்லாம் உறவென்பது. கற்கடகத்துக்கு உறவு இடபம், மிதுனம், தனுசு, மீனம், கன்னியும் என்பது.

சொல்லிய சிங்கத் துக்குச் சுற்றமீன் மேட மாகும்
வில்லுமீன் தனக்குக் கும்பம் விடைமுதல் ஆறு நட்பாம்
சொல்லுமான் கும்பத் துக்குக் கோதையாழ் விடைமீன் விற்கோல்
சொல்லல்மா குழலி னாய்கேள்! அதிபதி பொருத்தம் ஆங்கே. 194

இ-ள் : சிங்கத்துக்கு உறவு மீனம், மேடம், தனுசு என்பது. தனுசு-மீனத்துக்கு உறவு கும்பம், இடபம், மிதுனம், கன்னி, கடகம், சிங்கம், துலாம் என்பது. மகரத்துக்கும்-கும்பத்துக்கும் உறவு கன்னி, மிதுனம், இடபம், மீனம்,தனுசு, துலாம் என்பது. இவை ஸ்திரீ இராசிகளுக்குப் பொருத்தம் கண்டுகொள்வது.

சூடாமணி -

## வசியப் பொருத்தம்

பொருந்திடு மறிக்குச் சிங்கம் தேளதாம் பொருவி டைக்கு
விரிந்தகற் கடகம் கோலாம் மிதுனத்துக் கரிவை மேலும்
திருந்துகற் கடகத் துக்குத் தேள்சிலை சிங்கத் துக்குக்
கருஞ்சுறா வசீக ரந்தான் கன்னிக்கு விடைமீன் பொன்னே 195

இ-ள் : மேடத்துக்குச் சிங்கமும் விருச்சிகமும் பொருந்தும். இடபத்துக்குக் கற்கடகமும் துலாமும் பொருந்தும். மிதுனத்துக்குக் கன்னி பொருந்தும். கற்கடகத்துக்கு விருட்சிகமும் தனுவும் பொருந்தும், சிங்கத்துக்கு மகரம் பொருந்தும். கன்னிக்கு இடபமும் மீனமும் பொருந்தும் என்பது.

பொன்னனாய் ! துலைக்குப் புல்வாய் பொருந்துந்தேள் அதற்கு நண்டு
கன்னியும் வசிய மாகும் கார்முகம் அதற்கு மீனாம்
சொன்னவில் மகரத் துக்குக் கும்பமாம் கும்பத் துக்கு
மன்னுமீன் மீனத் துக்கு மகரமாம் வசியம் தானே. 196

இ-ள் : துலாத்திற்கு மகரம் பொருந்தும், விருச்சிகத்துக்குக் கற்கடகம் பொருந்தும், கன்னியும் பொருந்தும், தனுவுக்கு மீனம் பொருந்தும். மகரத்துக்குக் கும்பம் பொருந்தும். கும்பத்துக்கு மீனம் பொருந்தும். மீனத்துக்கு மகரம் பொருந்தும் என்று சொல்வது.

## இரச்சுப் பொருத்தம்

வச்சலான மதியில் பாதி போல்மூன்று வரையைக் கீறி
மெய்ச்செய்த வரையின் மேலே விளங்கநால் வரைக் கீறி
அசுபதி முதலாய் உள்ள இரச்சுவை அடவே எண்ணி
உச்சியில் இருவர் நாலும் ஒருவரை யுறுமேல் கேடே. 197

இ-ள் : ஒத்த நிலத்தில் சந்திரனில் பாதி மூன்று வரையைக் குறி. அதில் குறுக்கு நாலு வரையும் கீறில் இருபத்து ஏழு வரையாம். இதில் மூன்று வரையில் அசுபதியை நாட்டி, மேல் நோக்கியும் கீழ்நோக்கியும் இருபத்தேழு நாளையும் எண்ணுவது. எண்ணிச் சென்றால்

ஸ்திரீ நாளும் புருஷ நாளும் ஒரு வரையிலுறில் ஆகாது என்பது. அதிலே சிறப்பித்தவதனால் அசுபதி, ஆயிலியம், மகம், கேட்டை, மூலம், இரேவதி இந்த ஆறு நாட்களும் *அடிக்கயிறு* என்று பெயராம். பரணி, பூசம், பூரம், அனுசம், பூராடம், உத்திரட்டாதி இந்த ஆறு நாட்களும் *இறங்குக் கயிறு* என்று பெயராம். இதன்மேல் கார்த்திகை, புனர்பூசம், உத்திரம், விசாகம், உத்திராடம், பூரட்டாதி இந்த ஆறு நாட்களும் *வயிற்றுக்கயிறு* என்று பெயராம். அதன்மேல் உரோகணி, திருவாதிரை, அத்தம், சோதி, திருவோணம், சதயம் இந்த ஆறு நாட்களுக்கும் *கழுத்துக் கயிறு* என்று பேராம். அதன்மேல் வட்டம் மூன்றிலும் மிருகசீரிடம், சித்திரை, அவிட்டம் இந்த மூன்று நாட்களுக்கும் சிரசு ரச்சு என்று பேராம். இவை இருபத்து ஏழும் கண்டு கொள்க. இவை ஒருவரை உறில் ஆகாது என்பது.

## இரச்சுக்கயிறு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| *சிரசுரச்சு* | மிருகசீரிடம் | | | சித்திரை | | | ஆவிட்டம் | |
| *கழுத்துரச்சு* | உரோ | திருவா | அத்த | | சுவாதி | திரு | | சதய |
| *வயிற்றுரச்சு* | கிருத் | புனர் | உத்-ம் | | விசா | உத்திரா | | பூரட் |
| *குறங்குரச்சு* | பர | பூச | பூரம் | | அனுச | பூரா | | உத்தி |
| *அடிரச்சு* | அசு | ஆயி | மகம் | | கேட் | மூல | | ரேவ |

**உறங்கயி ரடிய தாகில் ஒண்பொருள் கேட தாகும்**
**குறங்கினில் கயிறதாகில் கூறுக மலடி யென்று**
**நிரந்தரு வயற தாகில் நிச்சயம் மக்கள் சாவாம்**
**சிறந்தவான் கழுத்த தாகில் கொழுநன்சாம் சிரத்தில் பெண்சாம்.**

இ-ள் : அடிக்கயிறாகில் பொருள் நாசமாகும். குறங்குக் கயிறாகில் மலடி. வயிற்றில் கயிறதாகில் புத்திரர் நாசமாகும். கழுத்தில் கயிறாகில் கொழுநன் மரணமாகும். முகட்டில் கயிறாகில் பெண் சாகும். இவ்வகையால் இரச்சு கண்டு கொள்க.

## வேதப் பொருத்தம்

சார்ந்தமுச் சதிர மாகத் தலத்தினில் கீறி யத்தில்
ஆய்ந்தமுன் நான்கு கீறி அமைந்தவேதக் கயிற்றில் தானும்
சேர்ந்தமா மூலை வைத்துத் தெரிந்தெண்ணத் தெரிவை நாளும்
மாந்தர்நாள் தானும் ஏக வரையுரி மரணம் கானே. 199

இ-ள் : ஒத்த நிலத்திலே முச்சதிரமாகக் கீறி அதை மூன்று மூலையிலும் நன்நான்காய்க் கீறில் இருபத்து நான்கு வரையாம். இவை இருபத்து நான்கும் மூன்று மூலையுமாக இருபத்து ஏழும் கண்டுகொள்க. அசுபதி ஒரு மூலையிலே நாட்டி, இரேவதி இறுதியாக எண்ணினால் இருவர் நாளும் ஒருவரையில் உரில் ஆகாது என்பது. காண் என்று சிறப்பித்த வதனால் அசுபதி, மகம், மூலம் இவை தம்மில் பொருந்தாது. பரணிக்குக் கேட்டை பகை, கார்த்திகைக்கு அனுசம், உரோகணிக்கு விசாகம், மிருகசீரிடத்துக்குச் சோதி, திருவாதிரைக்கு அவிட்டம், புனர்பூசத்துக்குத் திருவோணம், பூசத்துக்கு உத்திராடம், ஆயிலியத்துக்குப் பூராடம், பூரத்துக்கு இரேவதி, உத்திரத்துக்கு உத்திரட்டாதி, அத்தத்துக்குப் பூரட்டாதி, சித்திரைக்குச் சதயம் இவை பொருந்தாது என்பது. இச்சொன்ன நாட்கள் ஒழிய மற்றுள்ள நாட்கள் பொருந்தும்.

வேதக்கயிறு




வேதக்கயிறு முற்றும்

## விருட்சப் பொருத்தம்

காஞ்சிரை நெல்லி அத்தி நாவல்கருங் காலி பின்னே
ஆஞ்செண் பகமே புன்னை ஆல்வாகை அரசு விளாவாம்
தீஞ்சுளைப் பலாவெ ருக்கு மாதளை சிறந்த வில்வம்
பூஞ்சினை மருது தாழை மகிழ்மூங்கில் பொழில்தே மாவே. 200

இ-ள்: அசுபதி-காஞ்சிரை, பரணி-நெல்லி, கார்த்திகை-அத்தி, உரோகணி-நாவல், மிருகசீரிடம்-கருங்காலி, திருவாதிரை- செண்பகம், புனர்தம்-புன்னை, பூசம்-ஆல், ஆயிலியம்-வாகை, மகம்-அரசு, பூரம்-விளா, உத்திரம்- பலா, அத்தம்-எருக்கு, சித்திரை-மாதுளை, சோதி-வில்வம், விசாகம்-மருது, அனுசம்-தாழை, கேட்டை-மகிழ், மூலம்-மூங்கில், பூராடம்-தேமா என்று அறிவது.

பொழில்வஞ்சி பலாசு வன்னி கடம்புளி வேம்பி லுப்பை
பழுதின்றிப் பரிமுன் காண பால்மரம் பலாசு புன்னை
எழில்சம்பு மகிழ்ப லாமா இலுப்பைசண் பகம்எ ருக்கு
மகிழ்வஞ்சி அரசால் அத்தி மாதளை வயிரம் ஏற்றே. 201

இ-ள் : உத்திராடம்-வஞ்சி, திருவோணம்-பலாசு, அவிட்டம்-வன்னி, சதயம்-கடம்பு, பூரட்டாதி-புளி, உத்திரட்டாதி-வேம்பு, இரேவதி-இலுப்பை. இவை இருபத்தேழும் கண்டுகொள்க. இவற்றில் பலாசு, புன்னை, நாவல், மகிழ், பலா, மா, இலுப்பை, சண்பகம், எருக்கு, வஞ்சி, அரசு, அத்தி, ஆல், மாதுளை இவை பதிநான்கும் பால் மரங்கள் என்பன. அல்லாதவை வைரம் என்பன.

வயிரம்ஆ ணாகிப் பெண்பால் மரமெனின் மக்கள் உண்டாம்
வயிரம தரிவை ஆண்பால் மரமெனில் மலடி யாகும்
வயிரம திரண்டு மாகில் மைந்தரும் பொருளும் மாயும்
வயிரம தொழிந்து ரெண்டு பாலெனில் வாழ்வுண் டாமே. 202

இ-ள் : புருஷன் வயிரமாய் பெண் பால் மரமாகில் மக்கள் (புத்திரர்) உண்டாம். பெண் வயிரமாய் ஆண் பால் மரமாகில் மலடியாம். ஆணும் பெண்ணும் வயிரமானால்

மைந்தரும் பொருளுமாயும். ஆணும் பெண்ணும் பால் மரமானால் செல்வம் உண்டாம்.

விருட்சப் பொருத்தம் முற்றும்.

**பட்சிப் பொருத்தம்**

வாழ்பரி முதலாய் ஐந்தும் வல்லூறா திரைமுத லாறும்
சூழ்வினை ஆந்தை யாகும் துய்யஉத் திரமுன் ஐந்தும்
தாழ்விலா வலிய னாகும் தடம்பனை முதலாய் ஐந்தும்
கோழியாம் வோணம் ஆதி ஆறுமா மயிலின் கூறே. 203

இ-ள் : அசுபதி முதல் ஐந்தும் வல்லூறு, திருவாதிரை முதல் ஆறும் ஆந்தை, உத்திரம் முதல் ஐந்தும் வலியன், அனுசம் முதல் ஐந்தும் கோழி, திருவோணம் முதல் ஆறு நாட்களும் மயில் என்பது.

**பட்சிப் பகை**

மயிற்பகை வல்லூ றாந்தை கோழிக்கும் அவையே யாகும்
செயில்பகை வலியனுக் காந்தை ஆந்தைக்கு வலியன் தீதாம்
இயற்றிய வலிய நல்லா தெல்லாம்வல் லூரி னுக்கே
உயிர்ப்பகை யல்லால் மற்றும் ஒழிந்தவை உறவாம் அன்றே. 204

இ-ள் : மயிலுக்கு வல்லூறும் ஆந்தையும் பகை; கோழிக்கு வல்லூறும் ஆந்தையும் பகை; வல்லூறுக்கு ஆந்தை பகை; ஆந்தைக்கு வலியான் பகை; வல்லூறுக்கு வலியன் ஒழிய மற்றவையெல்லாம் பகை என்றறிவது. சொல்லாதவை எல்லாம் உறவென்பது.

பட்சிப் பொருத்தம் முற்றும்.

**ஸ்திரீ புருட மரணம்**

அன்றுபெண் பிறந்த நாள்தொட் டாணின்நா ளளவும் எண்ணி
நின்றஅந் நாட்கள் தொட்டு நேரிழை நாளீ ரெண்ணி
சென்றதை ஏழுக் குற்ற சேடம தொன்றுக் கொன்று
மன்றலங் குழலாய் ! தாழ்ந்தோர் மரணம்வந் துறுவாம் மன்னோ ! 205

*இ-ள் : பெண் பிறந்த நாளிலே நின்று, ஆண் பிறந்த நாள் அளவும் எண்ணி, இத்தை ஏழில் கழித்து, நின்றதை இன்னதென்று அறிந்து, பின்னைப் புருஷன் பிறந்த நாளிலே நின்று ஸ்திரீ பிறந்த நாளளவும் எண்ணி, இதனையும் முன்போல் ஏழில் கழித்து நின்ற சேடத்தையும் அறிந்தால், இதில் ஒன்றுக்கொன்று தாழ்ந்தபேர் முற்பாடு மரணம் என்பது. முன்பு சொன்ன பொருத்தங்கள் எல்லாம் ஸ்திரீ நாள் தொட்டு எண்ணுவது.*

ஸ்திரீ புருட மரணம் முற்றும்.

## அங்குரார்ப்பணம்

**மன்னிய முளைக்கும் காலம் வரையின்றி மணம்செய் நாளில்**
**முன்னிலைந் தாம்நாள் கொள்ள மொழிந்தனர் ஒழிந்த முன்னாள்**
**தன்னையும் உரைத்தார் என்று சாற்றுவர் ஒன்ப தாம்நாள்**
**முன்னுநய னம்சீ மந்தம் மூன்றுநாள் ஐந்தாம் நாள்செய்.** 206

*இ-ள் : அங்குரார்ப்பணத்துக்குத் திதி, வார, நட்சத்திரங்கள் பார்க்கவேண்டியது இல்லை. விவாகத்துக்கு இட்ட முகூர்த்தத்துக்கு முதல் ஐந்தாம் நாள் கொள்வது. அது முடியாதாகில் மூன்றாம் நாள் கொள்வது. அதுவும் முடியாதாகில் ஒருநாள் கொள்வது என்பது நோன்புக்கு. உபநயனத்துக்கும் சீமந்தத்துக்கும் அஞ்சாம் நாள் கொள்வது என்றவாறு.*

## நட்சத்திர தேவதை

**அஞ்சொல்மருத் துவனியமன் அங்கிபிரசா வதிசந்திரன்**
**அரன்அதிதி அமரர்குரு அராப்பிதுர்க்கன் பேகன்**
**மிஞ்சரிமா அருக்கன்பிந் துவட்டவாகு மிகும்பெரு**
**மித்திரனிந் திரன்நிருதி புனல்விசுவ தேவர்**
**கஞ்சவயன் கரியதிரு மால்வ சுக்கள்**
**கடற்கடவுள் கருதுமசை மித்ர நாகர்**
**வெஞ்சவிலைப் பசிமுதல்நாள் இருபத் தேழு**
**இவ்வடையே இறைவரென எண்ணிக் கொள்ளே.** 207

இ-ள் : அசுபதிக்கு அசுபதிதேவர், பரணிக்கு எமன், கார்த்திகைக்கு அக்கினிபகவான், உரோகணிக்குப் பிரசாபதி, மிருகசீரிடத்துக்குச் சந்திரன், திருவாதிரைக்கு உத்திரன், புனர்பூசத்துக்கு அதிதி, பூசத்துக்கு வியாழன், ஆயிலியத்துக்கு ஸ்வயம், மகத்துக்குப் பிதிர்கள், பூரத்துக்கு அம்பிகை, உத்திரத்துக்கு ஆதித்தன், அத்தத்துக்குத் துவட்டர், சித்திரைக்குக் காற்று, சுவாதிக்கு அயிந்திரன், விசாகத்துக்கு மித்திரன், அனுசத்துக்கு இந்திரன், கேட்டைக்கு நிருதி, மூலத்துக்குப் புனல், பூராடத்துக்கு விசுவதேவர், உத்திராடத்துக்குப் பிரமா, திருவோணத்துக்கு விஷ்ணு, அவிட்டத்துக்கு வசுதேவர், சதயத்துக்கு வருணன், பூரட்டாதிக்குச் சகபாதன், உத்திரட்டாதிக்கு அகத்தியர், இரேவதிக்கு நாகர். இந்த இருபத்தேழு நாட்களுக்கும் தேவதைகள் என்பன.[1]

நட்சத்திர தேவதை முற்றும்.

## திதி தேவதை, கரண தேவதை, உவாச் சூழ்ந்த கரண தேவதை

எண்ணுமயன் மாலியமன் இந்து கந்த
இந்திரன்சீர் வசுக்களராத் தரும னீசன்
விண்ணில்வெயில் வேள்கலிமு னிறந்த தேவர்
மெய்த்தேவர் திதித்தேவர் விளம்புங் காலை

1. அசுபதிக்குச் சரசுவதி, பரணிக்கு துர்கை, கார்த்திகைக்கு அக்கினி, உரோகணிக்குப் பிரமா, மிருகசீரிடத்துக்குச் சந்திரன், திருவாதிரைக்கு உத்திரன், புனர்பூசத்துக்குத் தேவர்கள், பூசத்துக்கு வியாழன், ஆயிலியத்துக்கு ஆதிசேடன், மகத்துக்குச் சுக்கிரன், பூரத்துக்கு பார்வதி, உத்திரத்துக்கு சாத்தா, அத்தத்துக்கு சூரியன், சித்திரைக்குக் விஸ்வகர்மா, சோதிக்கு லட்சுமி, விசாகத்துக்குச் சுப்பிரமணியர், அனுசத்துக்கு வாயு, கேட்டைக்கு தேவேந்திரன், மூலத்துக்கு அசுரர், பூராடத்துக்கு வருணன், உத்திராடத்துக்கு விநாயகர், திருவோணத்துக்கு விஷ்ணு, அவிட்டத்துக்கு இந்திராணி, சதயத்துக்கு எமன், பூரட்டாதிக்குக் குபேரன், உத்திரட்டாதிக்குக் காமதேவன், இரேவதிக்குச் சனி. இவை நட்சத்திர தேவதைகளாம் என்று மாறுபட்ட நட்சத்திர தேவதைகளைக் குமாரசுவாமியம் (பாடல் எண். 11) சுட்டுகின்றது.

கண்ணர்பிர சாபதிசந் திரன்சயந்தன் வன்வசுக்கள்
கனமணிபத் திரனியமன் இவர்காண் தேவர்
ஒண்ணுதலாய் இயமனுடன் பிதுர்க்களரா வீசன்
உவாச்சூழ்ந்த கரணத்துக் கிறைவரென உரையே 208

இ-ள் : பிரதமை-பிரம்மா, துதிகை-விஷ்ணு, திருதிகை-இயமன், சதுர்த்தி-சந்திரன், பஞ்சமி-சுப்பிரமணியன், சட்டி-இந்திரன், சப்தமி-வசுக்கள், அட்டமி-சர்ப்பம், நவமி-தரும ருத்திரன், ஏகாதசி-ஆதித்தன், துவாதசி-காமன், திரயோதசி-கலி, சதுர்தசி-பிதுர்கள், அமாவாசை, பௌர்ணமி-விசுவதேவர், இவர்கள் பிரதமை முதலாகவும் திதி தேவதை என்றறிவது[1]. பவகரணம்-விஷ்ணு, பாலவகரணம்-பிரசாவதி, கவுலவகரணம்-சந்திரன், தைதுலை கரணம்-சயந்தன், கரசைக் கரணம்-வசுக்கள், வனசைக் கரணம்-மணிபத்திரன், பத்திரைக் கரணம்-இயமன். இவர்கள் சிங்க முதல் கரண தேவதை என்று அறிவது. இயமன், பிதுர்க்கள், சர்ப்பம், உருத்திரன் இவர்கள் உவாச் சூழ்ந்த கரண தேவதைகள் என்றவாறு.

---

1. திதி தேவதைகள் குறித்த மாறுபட்ட கருத்துக்கள் பல்வேறு நூல்களிலும் கூறப்பட்டுள்ளன. குமாரசாமியத்தில் (பாடல் எண். 54) பூர்வபட்சத்துத் திதிகளுக்கும், அமரபட்சத்துத் திதிகளுக்கும் வெவ்வேறு தேவதைகளை எடுத்துரைக்கிறது.

பூர்வபட்சத்துப் பிரதமை-துர்கை, துதியை-விசுவதேவன், திரிதியை-சந்திரன், சதுர்த்தி-விக்கினேஸ்வரன், பஞ்சமி-தேவேந்திரன், சட்டி-சுப்பிரமணியன், சத்தமி-சூரியன், அட்டமி-இலக்குமி, நவமி-சரசுவதி, தசமி-வீரபத்திரன், ஏகாதசி-பார்வதி, துவாதசி-விஷ்ணு, திரயோதசி-பிரமா, சதுர்தசி-உருத்திரன், பௌரணை-வருணன்.

அமரபட்சத்துப் பிரதமை-குபேரன், துதியை-வாயு, திரிதியை-அக்கினி, சதுர்த்தி-அசுரர், பஞ்சமி-தேவர்கள், சட்டி-அங்காரகன், சத்தமி-முனிவோர், அட்டமி, இலக்குமி, நவமி-சரசுவதி, தசமி-வியாழன், ஏகாதசி-சனி, துவாதசி-சுக்கிரன், திரயோதசி-நந்தீஸ்வரன், சதுர்தசி-மகேஸ்வரன், அமாவாசை-சதாசிவன்.

## ஆண் - பெண் - அலி நட்சத்திரங்களின் லிங்கங்கள்

உரைக்கிலத்த மிருபூசம் வோணமபி சித்தோ
டொண்பனையுத் திரட்டாதி பூரட் டாதி
தெரித்தபரி ஆண்லிங்கம் மூலம் செக்குச்
சிறந்தமான் தலைமூன்றும் தெளியுமலி என்க
வருட்பரணி முதல்மூன்றும் ஆயில்முதல் நான்கும்
ஆதிரைசித் திரையாதி மூன்றவிட்டம் தோணி
வருத்தமில் பூராடம் உத்திராடம் கேட்டை
மற்றவைபெண் லிங்கமென வழுத்து மாதே. 209

இ-ள் : அத்தம், புனர்பூசம், பூசம், திருவோணம், அபிசித்து, அவிட்டம், உத்திரட்டாதி, பூரட்டாதி, அசுபதி இவை *ஆண் இலிங்கம்.* மூலம், சதயம், மிருகசீரிடம், மூன்றும் *அலி* என்க. பரணி, கார்த்திகை, ரோகணி, ஆயிலியம், மகம், பூரம், உத்திரம், சித்திரை, திருவாதிரை, சுவாதி, விசாகம், அவிட்டம், இரேவதி, பூராடம், உத்திராடம், கேட்டை இவை *ஸ்திரீ இலிங்கம்* என்று பேராம். இவ்விலிங்கத்தாலே ஆண், பெண் அறிந்து பலாபலம் சொல்லுவது.

நட்சத்திர இலிங்கம் முற்றும்

## தெருட்சி நட்சத்திரப் பலன்

மாவிதவை யாம்பரணி மைந்தர் உண்டாம்
மலடிகார்த் திகைநன்மை ரோகணிமக சிரத்தில்
மேவுகோ ளுக்கினியாள் செங்கை வெப்பு
மிகுபுனர்தம் சுகம்பூசம் விளங்கியசீ ருனதாம்
பூவையர ளியுமாயில் மகம்கணவன் நல்லன்
பூரமக வில்லைப்பயன் உண்டுஉத் திரத்தில்
தேவிநலம் பெரியளத்தம் சித்திரையில் அறிவாம்
தீபத்தில் குடும்பிமுறம் விதவையெனத் தெருண்டால். 210

இ-ள் : அசுபதி-விதவை, பரணி-மைந்தர் உண்டாம், கார்த்திகை-மலடி, உரோகணி-நன்மை, மிருகசீரிடம்-கொழுநனுக்கு இனியள், திருவாதிரை-வெப்பு, புனர்பூசம்- மிகுந்த சுகம்,

பூசம்-சீருடையாள், ஆயிலியம்-பூவை வயிறழியும், மகம்-கணவன் நல்லன், பூரம்-மகவு இல்லை, உத்திரம்-பிரயோசனம் உண்டு, அத்தம்-தேவி நலம் பெரியாள், சித்திரை-அறிவு, சுவாதி-குடும்பி, விசாகம்-விதவை என்று அறிவது.

தெருளனுசம் நோய்கேட்டை பரத்தை மூலம்
சிறந்தபா லுடையாள்செழும் பூரா டத்தில்
உரியவடி யார்கெடுவர் உத்தி ராடம்
உயர்தவராம் சேயுமோணம் புண்ணியத்தை உடையவள்
வருபொருளுண் டாமவிட்டம் சதயம்நிதி யழிக்கும்
வாய்ந்த்தபூ ரட்டாதி மலடி யாகும்
பெரியஉத் திரட்டாதி வறுமை யாகும்
பிணிதோணி தெருட்சிநலம் பேசுங் காலே. 211

இ-ள் : அனுசம்-நோய், கேட்டை-பரத்தை, மூலம்-பாலுடையாள், பூராடம்-அடியார் கேடு, உத்திராடம்-தனம் உடையாள், திருவோணம்-புண்ணியவதி, அவிட்டம்-ஆஸ்தி (செல்வம்) உடையவன், சதயம்-ஆஸ்தி (செல்வம்) நாசம், பூரட்டாதி-மலடி, உத்திரட்டாதி-வறுமை, இரேவதி-பிணிபடும் என்பது.

## தெருட்சி - திதி பலன்

காலமுதல் பக்கத்தில் தெருளில் கள்ளி
கவினிரண்டின் மூன்றின்பங் கருதார் உண்டாம்
நாலில்மகம் பேரஞ்சில் ஆசார மாகும்
நற்குழவி பெறுமேழில் நாலிரண்டில் இழக்கும்
சாலவரும் நவமியினில் அறம்செய்யும் பத்தில்
தருக்குடையள் பதினொன்றில் பன்னிரண்டில் கீறல்
மேலுறுபன் மூன்றுதனைப் புகழும்பன் நான்கில்
மிகும்சோரம் பதினைந்தின் மிடிபடும்மெல் லியலே. 212

இ-ள் : பிரதமை-கள்ளி, துவிதிகை-அழகு, திரிதிகை-இன்பம், சதுர்த்தி-சத்துரு உண்டாம், பஞ்சமி-புத்திர லாபம், சஷ்டி-ஆசாரம், சப்தமி-புத்திரர், அட்டமி-புத்திரர் இழக்கும், நவமி-வாழும், தசமி-தர்மம் செய்யும், ஏகாதசி- பலம்

உடையவள், துவாதசி-கோபி, திரயோதசி-தன்னைப் புகழும், சதுர்தசி-சோரம் உண்டாம், அமாவாசை, பவுர்ணமி மிடிபடும் என்பது.

## இராசி, வார தெருட்சி பலன்

மெல்லிமறி பரத்தைவிடை கன்னியாழ் சோரம்
மிகும்அலவன் ஒழுக்கமிலி விறலரியும் பெண்ணு
செல்லமதி மிடிதுலைதேள் பரத்தை கன்னி
வண்சிலைமான் கற்புநிதி குடமீன் தீதாம்
பல்கதிரோன் வாரம்மக வில்லை திங்கள்
பத்தினியாம் சேய்விதவை பல்சிறுவர் புதர்க்கு
செல்வமிகும் குருவெள்ளி அழகுமிடி காரி
தெருண்டவர்தம் பலன்தன்னை வகைப்படிசேர்த் தறியே. 213

இ-ள் : மேடத்தில் திரண்டால் பரத்தையாம்; இடபம், கன்னி, மிதுனம் - சோரம் உண்டாம்; கடகம்-ஒழுக்கம் இல்லை; சிங்கம், கன்னி-நிதி உண்டாம்; துலாம்- மிடிபடும்; விருட்சிகம்-பரத்தை; தனுசு, கன்னி, மகரம்-கற்பு; கும்பம்-அர்த்த இலாபம்; மீனம்-தீதுண்டு.

ஞாயிறு-புத்திரர் இல்லை, திங்கள்-பதிவிரதை, செவ்வாய்-விதவை, புதன்-புத்திரர் உண்டாம், வியாழன்-செல்வம் மிகுதியும் உண்டாம், வெள்ளி-அழகு, சனி- மிடி படும் என்பது.

## 4. சாதகவியல்

### கிரக நோக்கு

சேரும் உதயம் ஏழிடங்கள் முழுநோக் கொன்பான் திகழ்முக்கால்
பாரில் ஐந்து மறைநோக்காம் பத்தும் நான்கும் கால்நோக்காம்
மாறில் மூன்று பன்னொன்றும் அரைக்கால் நோக்காம் ஆறெட்டும்
நாரி ! இரண்டும் பன்னிரண்டும் நயனம் இல்லை நவகோளே. 214

இ-ள் : பிறந்த பிள்ளை உதய இராசியும் ஏழாம் இராசியும் முழுநோக்கு. ஒன்பதாம் இராசி முக்கால் நோக்கு. ஐந்தாம் இராசி அரைநோக்கு. பத்தும், நான்கும் கால்நோக்கு. மூன்றும், பதினொன்றும் அரைக்கால் நோக்கு. ஆறும், எட்டும், பன்னிரண்டும் நோக்கில்லை என்பது. இவை எல்லாம் தாம் ஆட்சியில் நின்றபோது முழுநோக்கு. நட்பில் நின்றபோது சொன்ன இவற்றில் நான்கில் ஒன்று குறையும். உச்சங்களில் பத்தில் ஒன்று ஏறும். நீசங்களில் ஒன்று காலாய் குறையும். பகையில் ஒன்று அரைக்காலாய் குறையும். இவ்வகையில் நோக்கு அறிவது.

### சாதகம்

நவையில் குழவி பிறந்துவரும் நன்மை தீமை நாடுங்கால்
அவதிக் கர்ப்பம் முதலாக ஆராய்ந் தறிக அறியாயேல்
புவனம் தன்னில் சீர்நோக்கும் பொழுது கொள்க உதயமுயிர்
தவறில் மதிசேர் ஓரையுடல் தாமக் கூந்தல் மாமயிலே ! 215

இ-ள் : பூமியிலே *சனித்த புத்திரர்க்கு எல்லாம் நன்மை தீமை விசாரிக்கும்படி* : கர்ப்பதான முகூர்த்தமாகக் கொள்ளுவான் (கொள்ள வேண்டும்). கொள்ள முடியாதாகில் பூமியிலே சிரசு நோக்கும் பொழுது கொள்க. அது முடியாதாகில் சனித்தபோது கொள்க. சனிக்கிறபோது உதிக்கிற *உயிர்* என்றும் *சன்ம இலக்கனம்* என்றும் அறிவது. அப்பொழுது சந்திரன் நின்ற இராசி *உடல்* என்றும் *சந்திர இலக்கனம்* என்றும் அறிவது.

**பாலாரிட்டம்**

மாமன் சிறுவன் தாய்தந்தை மரணம் ஐந்தும் ஈரைந்தும்
பூமன் காரி மதிவெய்யோன் நிற்கப் புகழ்க்கோன் நோக்கிலவேல்
சோமர்க் கேழ்சேய் சனிநிற்கில் தாய்சாம் சுடர்க்கேழ் பிதாமரணம்
தீமைக் கோள்கள் உடலுயிரைப் பற்றி நிற்கில் சிறுவன்சாம். 216

*இ-ள் : உதய இராசிக்கு ஐந்தாம் இடம் செவ்வாய் நிற்கில் மாமன் மரணம் என்பது; சனி நிற்கில் பிள்ளை மரணம்; சந்திரன் நிற்கில் மாதா மரணம்; ஆதித்தனுக்கும் பத்தாமிடத்திற்கும் ஏழாமிடத்தில் செவ்வாய் நிற்கில் பிதா மரணம் என்பது. சன்ம இலக்கனத்திலும் சந்திர இலக்கனத்திலும் பாபக் கிரகங்கள் நிற்கில் பிள்ளை மரணம் என்பது.*

சாரும் உதயம் தனக்காறில் கதிராய் அதற்கேழ் சனிசெவ்வாய்
சேரில் மிகவும் பிதாவுடன்சாம் திங்கள் சாரில் தாயுடன்சாம்
காரி உதிப்ப சேய்நான்கில் கதிரோன் ஏழில் கலந்திடினும்
பாரில் மிகவும் பகல்கிடவான் பாம்பின் உதயம் இராக்கிடவார். 217

*இ-ள் : உதயத்துக்கு ஆறாமிடத்தே ஆதித்தன் நிற்ப, ஆதித்தனுக்கு ஏழாமிடத்தில் சனி, செவ்வாய் நிற்க, பிள்ளையும் பிதாவும் மரணம். உதயத்துக்கு ஐந்தாமிடத்தே சந்திரன் நிற்ப, அதற்கேழாம் இடத்தே செவ்வாய் நிற்கில் பிள்ளையும் மாதாவும் மரணம் என்பது. உதயத்தே சனி நிற்க, நான்காமிடத்தில் செவ்வாய் நிற்க, ஏழாமிடத்தே ஆதித்தன் நிற்க, சுபக்கிரகங்கள் நோக்கில்லையாகில் பிள்ளை அன்றே மரணம் என்பது. உதயத்தே பாம்பு நிற்க, சுபக்கிரகங்கள் நோக்கில்லையாகிலும் பிள்ளையன்றே மரணம் என்பது.*

கிடைத்த உயிரோ ருடல்தருநாள் வருநாள் தீதோர் கெழுமியகோள்
படைத்த நோக்கம் இன்றெனினும் பாலன் மரணம் தேயும்மதிக்
கடுத்த விருப்பால் தீக்கோளே அன்னை புதல்வ னுடனழியும்
தொடுத்த கூட லார்த்தீண்டில் செய்யில் மகற்சாம் சொன்னோமே. 218

இ-ள் : சன்ம இலக்கனமும் சந்திர இலக்கனமும் அதன் கோள் நிற்க, சேர்ப்பதான நாளும் சனித்த நாளும் தீதாகச் சனித்த நாளும் பிள்ளைக்குச் சுபக்கிரகங்கள் நோக்கு உண்டாகிலும் மரணம் என்பது. அமரபட்சத்துச் சந்திரனுக்கு முன்னும் தீக்கோள்கள் நிற்க, சுபக்கிரகங்கள் நோக்கா தொழியில் சனித்தபொழுதே பிள்ளை மரணம் என்பது. இல்லையேல் மாதா மரணம் என்பது. சனித்தபொழுதே சந்திரனைப் பரிவேடிக்கிலும் கிரகணம் தீண்டிலும் பிள்ளை அன்றே மரணம் என்பது.

சொன்ன பூசம் சித்திரைபூ ராட நாளில் மகத்தோன்றில்
பின்னும் நாற்கா லனும்பிறக்கில் பிதாத்தாய் பிள்ளை மாமன்சாம்
பன்னொன் றொன்பான் சனிசேயும் பாம்பின் பதிலும் பிதாமரணம்
பொன்னோக் காதே எட்டேழில் புதல்வன் பொன்றும் சனிசெவ்வாய்.

இ-ள் : பூசம், சித்திரை, பூராடம் இந்நாட்களில் முதற்காலிலே சனிக்கில் பிதா மரணம், இரண்டாம் காலில் மாதா மரணம், மூன்றாம் காலில் பிள்ளை மரணம், நான்காம் காலில் மாமன் மரணம். பதினொன்றாம் இடத்தாதல், ஒன்பதாம் இடத்தாதல் சனி, செவ்வாய் நிற்கிலும், ஒன்பதாம் இடத்திலே பாம்பு நிற்கிலும் பிதா மரணம் என்பது. அட்டமத்தால் ஏழாமிடத்தால் சனி, செவ்வாய் நிற்கிலும் பிள்ளை மரணம் என்பது. இவையெல்லாம் சுபக்கிரகங்கள் நோக்கில்லையாகில் என்று சொல்வது.

செவ்வாய் மூன்றில் உடன்பிறந்தார் சனிசேய் வெள்ளி பிள்ளைசாம்
தவ்வா மதியம் ஏழில்தாய் தந்தை மரணம் கதிர்ஏழில்
அவ்வாய் அலவன் உதிப்பஅதற் காறுமூன்று தீக்கோளேல்
மைவார் குழலே! பன்னிரண்டில் நற்கோள் நிற்கில் மகற்போமே. 220

இ-ள் : மூன்றாமிடத்தில் செவ்வாய் நிற்கில் உடன்பிறந்தார் மரணம் என்பது. ஏழாமிடத்தில் சனி, செவ்வாய், வெள்ளி நிற்கில் பிள்ளை மரணம். சந்திரன் எட்டாமிடத்தில் நிற்கில் தாய் மரணம், ஆதித்தன் ஏழாம் இடத்தில் நிற்கில் பிதா மரணம் என்பது. கற்கடகம் உதயமாக

ஆறாமிடத்திலும், மூன்றாமிடத்திலும் பாபக் கிரகங்கள் நிற்க, பன்ரெண்டாம் இடத்தில் பாபக்கிரகங்கள் நிற்கில் பிள்ளை மரணம் என்பது.

மகவின் உயிர்க்கு ஆறேழில் மற்றை எட்டில் முன்னான்கில்
மிகவும் தேயும் மதியுடனே வெங்கோள் நிற்க நற்கோள்கள்
திகழும் நோக்கம் இன்றெனினும் தேயும் மதிக்கு நாலெட்டில்
நிகழும் தீக்கோள் நின்றிடினும் மெச்ச மரணம் நிச்சயமே. 221

இ-ள் : உதயத்துக்கு ஆறாமிடத்தாதல், ஏழாமிடத்தாதல், எட்டாமிடத்தாதல், பன்னிரண்டாமிடத்தாதல் சீண (தேய்ந்த) சந்திரன் நிற்க, அவனுடனே பாபக் கிரகங்கள் நிற்க, நற்கோள் நோக்காது ஒழியினும், சீண (தேய்ந்த) சந்திரனுக்கு நான்காம் இடத்தாதல், எட்டாமிடத்தாதல் பாபக்கிரகங்கள் நிற்கிலும் பிள்ளை மரணம் நிச்சயம் என்றவாறு.

நிச்சய மேவும் கதிருதயம் நிகழ்பா டதனில் நிலவுதிப்ப
வச்சம் தீக்கோள் பன்னிரண்டில் மருவில் மரணம் மகற்கேபின்
பச்சை மதியும் கதிரவனும் பாலன் உயிர்க்குப் பன்னிரண்டில்
கச்சு முலையாய் ! நிற்பாரேல் காண்போம் என்பர் ஒருகண்போம். 222

இ-ள் : ஆதித்தனும் சந்திரனும் கூட உதயம்பண்ணி, அதற்குப் பன்னிரண்டாம் இடத்தே பாபக்கிரகங்கள் நிற்பினும், ஆதித்தன் அஸ்தமனமாக, சந்திரன் உதயமாக உதயத்துக்குப் பன்னிரண்டாம் இடத்தில் பாபக் கிரகங்கள் நிற்க, சுபக்கிரகங்கள் நோக்காது ஒழிய பிள்ளை மரணம் என்பது. உதயத்துக்கு பன்னிரண்டாம் இடத்தில் சந்திராதித்தர் நிற்கில் பிள்ளையின் இரண்டு திருட்டியும் (இரண்டு கண் பார்வையும்) கெடும் என்பது. ஒருவர் நிற்கில் ஒருகண் கெடும் என்றவாறு.

போதும் இராசி இரண்டினையும் பொன்னோக் கின்றித் தீக்கோள்கள்
சீத மதியம் உடன்நிற்கில் சிறுவன் குருபுத் திரன்நல்லன்
சாதித் ததிரேல் மறையவர்கோன் சனியே ஈனர்க் கீழ்ப்பட்டார்
ஆதி வணிகர் சூத்திரர்சேய் அரவேல் புலையா வன்தந்தை. 223

இ-ள்: சந்திர இலக்கனத்தையும் சன்ம இலக்கனத்தையும் சுபக்கிரகங்கள் நோக்காது ஒழிய, சந்திரனுடனே பாபக் கிரகங்கள் நிற்கப் பிறந்தோன் குரு புத்திரன் நல்லன் என்பது. சோரலிங்க கர்த்தா இன்னாரென்றறியில் சந்திரனுடனே ஆதித்தன் நிற்கில் பிராமணரை யாதல் க்ஷத்திரியரையாதல் என்க. சனியாகில் ஈனராதல் நான்கு சாதிக்கும் கீழ்ப்பட்டார் என்றவாறு. செவ்வாயாகில் வைசியராதல் சூத்திரனாதல் என்க. பாம்பாகில் புலையரென்றும் சொல்வது.

தந்த உடலைச் சனிநோக்க தகரில் மதிசேய் தான்நிற்க
வந்த குழவி இரந்துண்ணும் மகவின் உடலோ டுயிர்தன்னை
முந்த நோக்கில் சீர்கேடாம் உணர்செய் கால வோரையுடன்
செந்தேன் மொழியாய் ! சனிகண்டம் சேரப் பிறந்தான் சிறைபுக்கும்.

இ-ள் : சுபக்கிரக நோக்கின்றி இருந்த சந்திர இலக்கனத்தைச் சனி முழுநோக்கு நோக்க, சந்திரனும் செவ்வாயும் மேடத்தில் நிற்கப் பிறந்தான் பிச்சை பெற்று உண்பான். சந்திர இலக்கனத்தையும், சன்ம இலக்கனத்தையும் சுபக்கிரகம் நோக்காது ஒழிய, சனி முழுநோக்கு நோக்கப் பிறந்தான் சீர்கேடனாம். செவ்வாயின் காலவோரையில் சென்ம இலக்கனத்தில் கண்டங்களில் சனி நிற்கப் பிறந்தான் சிறை புகுவான் என்பது.

சிறந்த உதயம் சனியாயேழ் பாம்பாத் தெரிவை புகர்சேர
இறந்த மதிநாள் பிறந்தவன்தன் இருகால் கைகள் தறிப்புண்ணும்
பிறந்த உயிர்க்கால் சேயாகி பெரிய கதிரோன் அதிலுதிப்ப
குறைந்த மதிபாம் பொருகாலில் கூடில் குழவி உடல்பிளவாம். 225

இ-ள் : சனி உதயமாக, அதற்கு ஏழாமிடத்தில் பாம்பு கிடப்ப, கன்னியில் வெள்ளி நிற்க, அமரபட்சத்துச் சந்திரன் சென்று அழிகின்ற காலத்தில் பிறந்தவன் கை காலும் தறிப்புண்ணும் (வெட்டுப்படும்) என்பது. செவ்வாயின் அங்கிசத்தில் ஆதித்தன் நிற்க, அதுவே உதயமாக அமரபட்சத்துத் தேய்ந்தழிகின்ற சந்திரனும் பாம்பும் ஒரு காலிலே ஊறில் அப்பொழுது பிறந்தான் உடல் பிளப்புண்ணும் (பிளவுபடும்) என்றவாறு.

உடற்கட் கதிர்பாம் புறகாரி உதிப்பப் பிறந்தான் உடல்பிளவாம்
மடிக்கண் அரவு நோக்குபொற் றழிந்த மதிமகன் தலையறுமென்
தடித்த தகர்தேள் சேய்நிற்பச் சனிவந் துதிப்ப புதன்மூன்றில்
குடித்த நான்கில் உறப்பிறந்தான் குறளாம் கோவைச் செவ்வாயே. 226

இ-ள் : *அமரபட்சத்து அமாவசையில் கடக சந்திர இலக்கனத்தில் நின்ற சந்திரனுடனே ஆதித்தன் நிற்க, அவர்களுடன் பாம்பு நிற்க சனி உதயமாகப் பிறந்தவன் ஆயுதத்தாலே உடல் பிளப்புண்ணும் (பிளவுபடும்) என்பது. இராகு, கேதுக்கள் நோக்கப் பிரளய சந்திரன் (அஸ்தமனமான சந்திரன்) சுடற்சிலவாகப் பிறந்தான் தலை அறுப்புண்ணும் (அறுபடும்).* மேடத்திலாதல் விருச்சிகத்திலாதல் செவ்வாய் நிற்க, சனி உதயமாக, உதயத்துக்கு மூன்றாம் இடமாதல் நான்காம் இடமாதல் புதன் நிற்கப் பிறந்தானாகில் குறள் உருவாம் என்றவாறு.

அரிட்டம் முற்றும்.

## இராசயோகம்

வாய்ந்த கோள்கள் ஓரேழில் ஆறு மருவித் தமதுச்சம்
காய்ந்த மடங்கல் உதித்திடினும் கனகன் உதிப்ப ஐந்துக்கோள்
ஏய்ந்து உச்சம் எய்திடினும் இசைந்து நற்கோள் உச்சமுற
வாயந்த குடத்தில் காருதிப்ப வரினும் அரசர்க் கரசாமே. 227

இ-ள் : ஆதித்தன் முதலான ஏழு கோள்களிலும் ஆறு கோள்கள், தாம் உச்சத்து நிற்ப, சிங்கம் உதயமாகப் பிறந்தான் அரசர்க்கு அரசனாம் என்பது. ஐந்துக் கோள்கள் தாம் உச்சத்து நிற்ப, வியாழன் உதயமாகப் பிறந்தான் சக்திமானும் இராசாதி ராசனும் என்பது. நான்கு கோள்கள் தாம் உச்சத்து நிற்க, கும்பத்தில் வெள்ளி உதயமாகப் பிறந்தான் எல்லா உலகும் உடையவனாவான் என்றவாறு.

அரசர் நண்டில் நிறைந்தமதி தன்னை ஆறு கோள்நோக்க
உரைசால் குண்டை உதித்திடினும் ஒருகோள் உச்சம் உறவொழிந்தார்
கரைசேர் ஆட்சி நட்பேனும் கன்னி புதனாய்க் கயல்புகராய்
விரைசேர் குழலாய் ! தனுமதிபொன் மேவி யிடினும் வேந்தாமே. 228

இ-ள் : கற்கடகத்துப் பூரணச்சந்திரனை ஆறு கோள்கள் நோக்க, இடபம் உதயமாகப் பிறந்தான் இளையனாம் காலத்தே (சிறுவயதிலேயே) இராச்சியம் பண்ணுவான். சுபகோள்களில் ஒருகோள் உச்சத்தில் நிற்க, மற்ற கோள்கள் தாம் நட்பினும் ஆட்சியினும் நிற்கப் பிறந்தான் இராசாக்கள் வணங்க வாழ்வான் என்பது. கன்னியில் புதன் நிற்க, மீனத்தில் வெள்ளி நிற்க, தனுசுவில் வியாழனும் சந்திரனும் நிற்கப் பிறந்தான் பல போராட்டங்களையும் வென்று இராச்சியம் பண்ணுவான்.[1]

வேந்தன் அலவன் தனில்உதிப்ப வெய்யோன் மேடம் விடைபுகர்மால்
சேந்து வரினும் விடைமதியாய்ச் சிங்கம் கதிராய் சிலைகுருவாய்
ஆய்ந்த வெள்ளி உதயத்து அம்பொற் காலில் பிறந்திடினும்
வாய்ந்த மதிக்கா றேழெட்டில் மால்பொன் புகரேல் மன்னாமே. 229

இ-ள் : கற்கடகத்தில் வியாழன் உதயமாக, ஆதித்தன் மேடத்தில் நிற்க, வெள்ளியும் புதனும் இடபத்து நிற்கப் பிறந்தான் இராசாவாம் என்பது. சந்திரன் இடபத்திலே நிற்க, ஆதித்தன் சிங்கத்திலே நிற்க, வியாழன் தனுவில் நிற்க, வெள்ளி உதயமாகப் பிறந்தான் இராசாவாம் என்பது. சந்திரன் இடபத்திலே நிற்க, ஆதித்தன் சிங்கத்திலே நிற்க, வியாழன் தனுவிலே நிற்க, வெள்ளி உதயமாக வியாழக் காலில் பிறந்தான் இராசா என்பது.

மன்னும் மகரம் சநிமறிசேர் மதியம் நன்கு துலைவெள்ளி
பொன்னன் வில்லில் கதிர்சிங்கம் புலவன் வீணை பொருந்திடினும்
சுன்னும் மதியும் உச்சமுற சுடரும் புதனும் உயிர்க்காறில்
மின்னும் புகர்பொன் தம்மிடத்தே மேவும் எனினும் மிகவாழ்வே. 230

---

இதற்குமேல் சுவடியில் குறிப்பொன்று காணப்படுகிறது.

இதற்குப் பிறகு நாற்பது பாட்டு சுவடியில் இல்லை என்பதை, "இந்த சாத்திரத்துக்கு இந்த யேட்டுக்குப் பின்னாலே நாற்பது பாட்டு இல்லாததுனாலே மேல்ப்பாட்ட புரிதிப்படிக்கு யேட்டு லெக்கத்திலும் அந்தக் காரியம் தெரியிரத்துக்காகப் பதினஞ்சு யேடு நிருத்தி யேட்டு லெக்கம் போட்டு யிருக்குது. யிதை யார் பார்த்தாலும் யோசினை செயிது பார்த்துக்கொண்டு இந்தப் பாட்டு ஆப்பிட்டால் யெழுத வேண்டிய கடமை."

இ-ள் : சனி மகரத்தில் நிற்க, செவ்வாய் மேடத்திலும் சந்திரன் கற்கடகத்திலும், வெள்ளி துலாத்திலும், வியாழன் தனுவிலும், ஆதித்தன் சிங்கத்திலும், புதன் மிதுனத்திலும் நிற்கப் பிறந்தான் எக்காலமும் இராச்சியம் பண்ணுவான் என்பது. சந்திரனும் சனியும் தம்தம் உச்சத்திலே நிற்கப் பிறந்தான் இராசாவாம் என்பது.

வாழும் வெள்ளி மீனத்து மதிபொன் தனுவில் மண்மகன்தேள்
சூழும் அரிவை புதனுதயம் தோன்றில் அரசாம் சுடர்இரண்டும்
தாழ்வில் உச்சம் உறிலவையே உதிப்பக் குளிர்பொன் சனிகுடத்தில்
ஆழில் மேதை தேள்சேய்வந் தெய்திலும் பிறக்கும் இறையாமே. 231

இ-ள்: வெள்ளி மீனத்தில் நிற்கச் சந்திரனும் வியாழனும் தனுவில் நிற்ப, செவ்வாய் விருச்சிகத்தில் நிற்க, கன்னி புதன் உதயமாகப் பிறந்தான் எல்லாத் தேசத்துக்கு இராசா ஆவான் என்பது. சந்திரன், ஆதித்தன் தம்தம் உச்சத்திலே நிற்க, இவர்கள் உதயமாக வியாழன் கற்கடகத்திலே நிற்க, சனி கும்பத்திலே நிற்க, புதன் மிதுனத்திலே நிற்க, செவ்வாய் விருச்சிகத்திலே நிற்கப் பிறந்தான் இராசா ஆவான் என்பது.

இறைவன் சேனை தலையவனாம் முக்கோள் உச்சம் எழில்புகர்பொன்
அறையும் உச்சம் உச்சனவன் அருக்கன் மேடம் தனுக்குருவாம்
பிறையே வெள்ளி ஏழிடத்தே நோக்க இருகா விற்பிறந்தான்
பொறையும் வலியும் இருநிதியும் புகழும் கொடையும் மிகப்பூணும்.

இ-ள் : மூன்று கோள்கள் தத்தம் உச்சத்தில் நிற்கப் பிறந்தவன் சேனாபதியாம். வியாழனும் வெள்ளியும் தத்தம் உச்சத்திலே நிற்க, நற்கோள் அங்கிசத்தில் பிறந்தான் மந்திரியாம். மேடத்தில் சூரியன் நிற்க, வியாழன் தனுவிலே நிற்க, பூரணச்சந்திரனை ஏழாம் இடத்திலே சுக்கிரன் இருந்து நோக்க, நற்கோள் அங்கிசத்தில் பிறந்தான், பொறையும் பலமும், தனமும், சீரிய புகழும் கொடையும் உடையவனாம் என்றவாறு.

பூண்ட விடையில் மதிக்கேழில் பொன்னாய் முதற்கால் பிறந்திடினும்
தூண்டும் புகர்கால் பொன்னுதிப்ப சுறாவில் செவ்வாய் தோன்றிடினும்
நீண்ட குருவும் நிறைமதியும் சேர நெடுமால் பொன்சேர
மாண்ட புகரின் உதயத்து வரினும் கல்வி நிதியவர்க்காம். 233

இ-ள் : சந்திரன் இடபத்திலே நிற்க, அவனை ஏழாமிடத்தே வியாழமும் நோக்கு நோக்க, வியாழன் முதற் காலில் பிறந்தான் வித்துவானுமாய் இராச சேனாதிபதியுமாம் என்றது. வியாழன் உதயமாகச் செவ்வாய் மகரத்திலே நிற்க, வெள்ளி அங்கிசம் பிறந்தான் கீர்த்தியும், பலமும் ஸ்திரீயும் உடையவனாம் என்பது. வியாழனும் நிறைந்த சந்திரனுடனே கூடி நிற்க, புதன் கன்னியிலே நிற்க, வெள்ளி உதயமாகப் பிறந்தான் லோகத்துக்கதிபதியாய் வித்துவானுமாவான் என்பது.

நிதியுடை புகர்மீன் நிற்ப நெடுங்குரு உதிப்ப நீண்ட
மதியினைத் தீக்கோள் நோக்கில் மாநிதித் தலைவ னாகும்
கதியுடைப் புகர்பொன் திங்கள் தனைநோக்க துலாத்தில் காரி
உதயமாய்ப் பிறந்தான் வாழி ஒருவர்க்கும் ஒன்றும் ஈயான். 234

இ-ள் : வெள்ளி மீனத்தில் நிற்க, வியாழன் உதயமாக, நீண்ட (வளர்பிறை) சந்திரனைத் தீக்கோள் நோக்கப் பிறந்தானை சங்கநிதி, பதுமநிதி சென்று சேரும் என்பது. நிறைந்த சந்திரனை வெள்ளியாதல் வியாழமாதல் நோக்க, சனி துலாத்தில் உதயமாகப் பிறந்தான் சீமானுமாய் கடுஞ் சொல்லனுமாய் கண்ணுறையனுமாய் நெறியனுமாய் ஒருவர்க்கும் ஒன்றும் ஈயான்.

ஒன்றிய மதிக்கி ரண்டு பானுநற் கோள்கள் உண்டேல்
என்றும்வாழ்ந் திடுமென் முன்னேல் முந்தியன் பின்னே முன்னே
நின்றிரு பாலும் நற்கோள் நின்றிட உச்சக் கோள்கள்
அன்றவை நோக்கத் தோன்றும் ஆயிழை அரசி யாமே. 235

இ-ள் : நிறைந்த சந்திரனை இரண்டு பக்கமும் நற்கோள் நிற்கப் பிறந்தான் மதிக்கும் அளவும் சீமானாம் என்றது. முன்பே நிற்கில் முன்பே சீமானாம் என்பது. சென்ம இலக்கனத்தையும், சந்திர இலக்கனத்தையும் சுபக்கிரகங்கள் பற்றி நிற்க, உச்சக்கோள்கள் இவற்றை நோக்கும்பொழுது பிறந்த ஸ்திரீ இராச கன்னியாம் என்றது.

அரசுறு புதனு திப்ப அம்புலிக் கேழ்பொன் னேனும்
முரவிய புகர்பொன் கூட நிற்பினும் உடலுடன் உயிர்க்கு
விரவியைந் தேளில் செம்பொன் வெள்ளிநின் றிடினும் மிக்க
புரவலர் போற்றச் செல்வம் கல்விவந் தெய்தினும் பொன்னே. 236

இ-ள் : புதன் உதயமாகவும் நிறைந்த சந்திரனுக்கு ஏழாம் இடத்தே நிற்கப் பிறந்தான் சேனாதிபதியாம் என்பது. வெள்ளியும் வியாழமும் கூடி நிற்க, புதன் உச்சமாகப் பிறந்தான் தனவானுமாய் காரியவானுமாய் இருப்பான் என்பது. சென்மத்திற்கும் சந்திர இலக்கனத்திற்கும் ஐந்தாம் இடத்தேயாதல் ஏழாம் இடத்தேயாதல் வெள்ளியும் வியாழனும் கூடி நிற்க, புதன் உதயமாகப் பிறந்தான் நல்லவனுமாய் தனவானுமாய் ரூபியுமாய் வித்துவானுமாய் இருப்பான் என்பது.

பொன்னவன் வெள்ளி புந்தி பொலிவுடன் நோக்க அந்த
மின்னிளங் குழவி தன்னை மெலிந்ததீக் கோள்கள் நோக்கப்
பன்னெடுங் கதிர்கள் வீசும் பகலவன் தன்னைக் கண்ட
துன்னிருள் போல மாய்ந்து சுகம்மிகப் பெருகும் சொல்லே. 237

இ-ள் : வியாழனும் வெள்ளியும் புதனும் மேலான நோக்குமாகப் பிறந்த பிள்ளையைப் பாவக்கிரகங்கள் முழு நோக்காக நோக்கி நிற்க, தீமைகள் **ஆதித்தனைக் கண்ட** இருள்போல நீங்கும் என்பது. அமரபட்சத்துப் பாவக் கிரகங்கள் பலம் உடையார் என்பது.

## 5.வானியல் செய்திகள்

### விஷம், அயனம், விட்ணுபதம், சடாதாரி முகம்

பெருகிடும் மறிகோல் நண்டு மகரமும் அயனப் பேராம்
அரிவிடை குடம்தேள் விட்டுணு பதமென்ப அரிவை வில்மீன்
தருமிது னங்கள் நான்கும் சடாதாரி முகமே என்க
இரவினில் விளைவுண் டாகும் பகல்விளை வில்லை என்னே. 238

இ-ள் : சித்திரையும் ஐப்பசியும் *விஷமென்று* பேராம். தையும் ஆடியும் *அயனமென்று* பேராம். ஆவணி, வைகாசி, மாசி, கார்த்திகை இவை *விட்ணுபதம்* என்று பேராம். புரட்டாசி, மார்கழி, பங்குனி, ஆனி இவை *சடாதாரி முகம்* என்றுபேராம். இந்த மாதங்கள் இரவு சங்கிரமிக்கில் *மண்டலம்* விளையும். பகல் சங்கிரமிக்கில் விளைவில்லை என்பது என்றவாறு.

விளங்கிய கதிரோன் வாரம் சிறுமழை வெள்ளம் திங்கள்
களங்கொள்சேய் கலகம் புந்தி காற்றுப்பொன் காலம் நன்றாம்
வளம்கொண்ட வெள்ளி வெள்ளம் மந்தனில் மழைகே டாகும்
தெளிந்தசங் கிராந்தி விட்டி எட்டுவா இருத்தை தீதே. 239

இ-ள் : வருடாதி சித்திரை மாதம் முதல்தேதி ஞாயிற்றுக் கிழமையாகில் சிறுமழை; திங்கள்-வெள்ளம்; செவ்வாய்-கலகம்; புதன்-காற்று; வியாழன்-நற்காலம், வெள்ளி-பெருமழை; சனி-மழையில்லை. விட்டி, அட்டமி, உவா, இருத்தை இவையும் தீது என்றவாறு.

தீதில்உத் திரங்கள் அத்தம் திருவோணம் அவிட்டம் தோணி
ஓதுமான் தலையே மூலம் உத்தமம் சங்கி ராந்தி
சோதிசித் திரைபார் செக்குப் பூசங்கள் மகமே சென்னி
மாதராய் ! அனும் காலம் மத்திமம் தீது மற்றே. 240

இ-ள் : உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, அத்தம், திருவோணம், அவிட்டம், தோணி, மிருகசீரிடம், மூலம் இவை உத்தமம், சோதி, சித்திரை, உரோகணி, சதயம்,

புனர்பூசம், பூசம், அசுபதி, மகம், அனுசம் இவை மத்திபம். கார்த்திகை, ஆயிலியம், திருவாதிரை, விசாகம், பரணி, பூரம், கேட்டை இவை தீது என்பது.

**அஃகம்**

**மற்றிரு பூசம் பாருத் திரங்கள்மான் தலையில் ஏறும்**
**புற்றர வத்தம் சோதி ஆதிரை பரணி போந்தை**
**விற்றதிற் குறையும் அஃகம் மிக்கவை நிற்கும் விட்டி**
**சுற்றுவா இருத்தை எட்டும் குளிகனும் சுருங்கும் அஃகம்** 241

இ-ள் : புனர்பூசம், பூசம், உரோகணி, உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, மிருகசீரிடம் இவற்றில் அஃகம் ஏறும் என்பது. அத்தம், சோதி, திருவாதிரை, பரணி, அனுசம் இவையில் குறையும். மிக்கவையில் நிற்கும். விட்டி, உவா, இருத்தை, அட்டமி, குளிகன் இவைகளில் குறையும் என்பது.

**சுருக்கமில் சங்கி ராந்தி சுடர்சனி கிடக்கும் சோமன்**
**திருக்குடை செவ்வாய் நிற்கும் செம்பொன்மால் இருக்கும் வெள்ளி**
**தருக்குடை நடக்கும் இவற்றில் தாழ்ந்திடும் கடையில் அஃகம்**
**உரைத்தவை நிற்கில் நிற்கும் ஒழிந்தவை உயரும் என்றே** 242

இ-ள் : சங்கிரம காலம் ஞாயிறும் சனியும் கிடக்கும். இவற்றில் அஃகம் தாழும். திங்களும் செவ்வாயும் நிற்கில் இவை ஒத்து நிற்கும். புதன் வியாழன் இருக்கும். வெள்ளி நடக்கும். இவற்றில் அஃகம் ஏறும் என்பது.

**உயர்விடை சிலைமீன் சிங்கம் ஒளியிழை தகரில் வெய்யோன்**
**இயல்புடை வெண்பூ வெண்பட் டணிந்திடும் அதனில் ஏறும்**
**இயலிவை சிவப்புச் சாந்து ஆங்கதில் குறையும் அஃகம்**
**செயலள உபயம் நிற்கும் தரம்தாழும் சரத்தில் ஏறும்.** 243

இ-ள் : இடபம், தனுசு, மீனம், சிங்கம், கன்னி, மேடம் இவற்றில் ஆதித்தன் வெண்பூ, வெண்துகில் சாத்தும். இவற்றில் அஃகம் ஏறும். மிதுனம், மகரம், கடகம், துலாம், விருட்சிகம், கும்பம் இவற்றில் செம்பு, செந்துகில் சாத்தும்.

இவற்றில் அஂகம் குறையும். உபய இராசிகள் நிற்கும் என்றும், ஸ்திர இராசிகள் தாழும் என்றும், சர இராசிகள் ஏறும் என்றும் சொல்லுக என்றவாறு.

**ஏறரி மேடம் வெய்யோன் இயற்புலி உருவாம் மித்திர**
**பாறுமா மனிதர் மீன்சால் பாவையில் விடையாம் மாரி**
**ஆறலைத் திடுமி யாழ்கோல் தேளரிதாம் அரசர் தம்மில்**
**மாறுவா வருடை மற்றும் வந்ததே வந்து நிற்கும்.** 244

இ-ள்: இடபம், சிங்கம், மேடம் இவை முகூர்த்தமாகச் சங்கிரமித்தால் அவை ஆதித்தன் புலி உருவாம். இவற்றில் மனிதரெல்லாம் மாய்வர் என்பது. மிதுனம், கும்பம், கன்னி இவை முகூர்த்தமாகச் சங்கிரமித்தால் இவற்றில் ஆதித்தன் இடபம். பெருவர்ஷம் (மழை) உண்டாம். மிதுனம், துலாம், விருட்சிகம் இவற்றில் சங்கிரமித்தால் ஆதித்தன் வருடையாம். இதற்கு முன்னை மாதத்துக்குச் செய்தவகை செய்யும் என்பது.

**நின்றசங்கி ராந்தி நாடி நேர்வகுத் தொறுகூ றொன்பான்**
**ஒன்றுவித் தேழி றாக்கி ஒருமூன்றுக் கீய்ந்த சேடம்**
**ஒன்றெனில் குறையும் அஂகம் ஒன்றிரண் டேறும் மூன்றில்**
**நின்றிடும் அருக்கன் பாட்டில் நிலாஎழில் நிலையில் தாழும்.** 245

இ-ள்: சங்கிரமித்த நாழிகையை இரண்டு கூறாக்கி, ஒரு கூற்றிலே ஒன்பது கூட்டி, இத்தை ஏழால் பெருக்கி மூன்றுக் கீய்ந்து நின்ற சேடம் ஒன்றாகில் குறையும்; இரண்டாகில் ஏறும்; மூன்றாகில் நிற்கும். ஆதித்தன் அஸ்தமிக்கினும், சந்திரன் உதயத்திலும் தாழும் என்பது. இவை எல்லாவற்றையும் பார்த்து மிகுதியால் சொல்லுவது.

**தாழ்புயல் வெய்யில் பெய்யும் தையும்கார்த் திகையும் மற்றை**
**வாழும்ஐப் பசியி னோடு மார்கழி பெய்யில் பொய்யாச்**
**சூழ்சனி அருக்கன் சேய்வாரம் சொன்னசங் கிராந்தி யாமேல்**
**வீழ்புனல் இல்லை நற்கோள் மாரிமேல் மாரி மேன்மேல்.** 246

இ-ள் : தைமாதமும் கார்த்திகை மாதமும் சங்கிரம காலத்தில் வர்ஷம் (மழை) பெய்யில், மழை உண்டாம். ஐப்பசியும், மார்கழியும் பெய்யில், பெய்யாது. ஞாயிறு, செவ்வாய், சனியாகில் வர்ஷம் இல்லை. நற்கோள் வாரம் மழையுண்டு என்பது.

**மேஷசங்கி ராந்தி முன்பின் மிக்கவர் பிறந்த நாளில்**
**ஓவிலா தனத்தைப் போக்கும் உயர்ந்தவர் உளதாம் செல்வம்**
**தாவில்யாத் திரையாம் மூன்று தனபதி இருத்து மாறும்**
**கோவினால் பயனாம் என்றும் கொற்றவன் அருள மற்றே.** 247

இ-ள் : சங்கிரமித்த நாள் முன்னாளும் பின்னாளும் பிறந்த நாளாகில் அர்த்தநாசம் உண்டாம். அதற்குப் பின் ஆறு நாட்களும் அதற்கு முன் ஆறு நாட்களும் பதியில் சுகமே இருத்தும். அதற்குப் பின் மூன்று நாட்களும் அர்த்தம் உண்டாம். அதற்குப்பின் மூன்று நாட்களும் யாத்திரை உண்டாம். நாசம் உண்டாம். அதற்குப் பின் ஆறு நாட்களும் இராஜவசீகரம் உண்டாம். இவ்வகையால் இருபத்து ஏழு நாட்களும் கண்டு கொள்வது. இவற்றில் பிறந்த நாள் தொட்டு எண்ணுவர் என்றவாறு.

**ஆனிமார் கழியின் தேளாம் ஆடியில் தலைஉ வாவில்**
**வானிடி உதிரம் கூடல் மண்கம்பம் கிராணம் வட்டம்**
**மீன்விழுந் திடுதல் ஆலங் கட்டிகள் விழுதல் செய்யில்**
**தானியம் இவற்றுக் கஞ்சாம் திங்களில் சாயு மன்றே.** 248

இ-ள் : ஆனி, மார்கழி, கார்த்திகை, ஆடி இம்மாதங் களில் தலை உவாவினன்று இடித்தல், உதிரமாக வர்ஷித்தல் (பொழிதல்) பூகம்பம், கிராணம் (கிரஹணம்), பரிவேடம், நட்சத்திரம் வீழ்தல், ஆலங்கட்டி விழுதல் செய்யில் இம்மாதங்களுக்கு ஐந்தாம் மாதங்களிலே அஂஃகம் தாழும் என்பது.

**சாய்ந்தபங் குனியின் மாசி தையில்இக் குறிகள் உண்டேல்**
**ஏய்ந்தசந் தனம்பொன் பட்டுக் குறையுமேழ் திங்கள் தன்னில்**
**ஊர்ந்தஜப் பசிபுரட்டை உளவெனில் குதிரையானை**
**மாய்ந்திடும் இவற்றிற் கைந்தாம் திங்களில் மயிலே அன்னாய் !** 249

இ-ள் : பங்குனி, மாசி, தை மாதங்களிலே தலையுவாவின் முன்னே சொன்ன குறிகள் உண்டாகில் இவற்றுக்கு ஏழு மாதங்களுக்குள்ளே சந்தனம், பட்டு, பொன் இவை குறையும் என்பது. ஐப்பசி, புரட்டாசி இவற்றில் முன்சொன்ன குறிகள் உண்டாகில் ஐந்தாம் மாதத்துக்குள்ளே குதிரை, யானை நசிக்கும் என்பது.

**அன்னசித் திரைவை காசி இவையுறில் ஐந்தாம் திங்கள்**
**தன்னில்நூல் பருத்தி கொள்ளு தானியம் கிழங்கு சாயும்**
**முன்னதா வணியில் உண்டேல் முதிர்வெண் கலம்நெய் எண்ணெய்**
**தின்னும் கிழங்கு திங்கள் இரண்டினுள் குறையும் செவ்வே.** 250

இ-ள் : சித்திரை, வைகாசி இவற்றில் இந்தக் குறிகள் உண்டாகில் ஐந்தாம் மாதத்துக்குள்ளே நூல், பருத்தி, கொள்ளுத் தானியம், கிழங்கு இவை குறையும் என்பது. ஆவணி மாதத்தில் இக்குறிகள் உண்டாகில் இரண்டாம் மாதத்திற்குள் முதிரை, வெண்கலம், நெய், எண்ணெய் இவை எல்லாம் குறையும் என்பது.

## உத்திராடக்குறி

**செவ்வைகீழ்க் காற்றும் தீதாம் தென்னவர்க்கா காபின் மாரி**
**கவ்வைதென் கீழ்க்காற றாகில் கலகம்பசி கள்ளர் உண்டாம்**
**எவ்வமில் தெற்குப் பேராம் இல்லையேல் பசியால் மாயும்**
**மௌவலங் குழலாய் ! தென்மேல் மழைத்துளி மறந்து போமே** 251

இ-ள் : ஆடி மாதத்து உத்திராடத் தினத்தன்று உதய காலத்திலே கீழ்க்காற்றடிக்கில் பாண்டியனுக்குப் பொல்லாது. முன்மாரி இல்லை, பின் மாரி உண்டு. தென்கீழ் மூலை காற்றடிக்கில் கலகமும் பசியும் கள்ளரும் உண்டாம். தெற்குக் காற்றடிக்கில் யுத்தத்தினாலே மனிதர் மாய்வர் என்பது. இல்லையாகில் பசியாலே மாயும் என்பது. தென்மேல் மூலையில் காற்றடிக்கில் தேசம் விளைவின்றி அனர்த்தம் என்பது.

**போதுமேல் காற்றே மாரி ஒழித்தநல் கால மாகும்**
**ஏதமில் வடமேல் காற்றேல் மிருகங்கள் புழுக்கள் உண்டாம்**
**கோதிலா வடக்கே யாகில் குவலயம் வெள்ளக் கேடாம்**
**ஏதமில் வடகீழ்க் காற்றேல் முன்மாரி விளையும் எங்கும்.** 252

இ-ள் : மேல் காற்றாகில் வர்ஷத்து (மழை பொழிகின்ற) காலம் என்பது. வடமேற் காற்றாகில் மிருகங்களும் புழுக் களும் உண்டாம் என்பது. வடகாற்றாகில் வெள்ளக்கேடாம் என்பது. வடகீழ் மூலைக் காற்றாகில் முன் வர்ஷமாம் (மழைப் பொழிதல்) விளையும் என்பது.

**எங்குள வளியும் ஈண்டி எறிவது வலமே நன்றாம்**
**அங்கவை இடமே தீதாம் ஆடியுத் திராட மான**
**திங்களில் உவாவும் கூடி எழில்மிகும் இடைஉ வாவில்**
**செங்கதி ரவனை மேகம் மறைக்குமேல் சிறக்கும் மேகம்.** 253

இ-ள் : இச்சொல்லிப் போந்த காற்றெல்லாம் வலமாகி வீசில் உத்தமம். இடமாக வீசில் பொல்லாது என்பது. உத்திராடத்தோடே உவாவும் கூடில் உத்தமம் என்பது. ஆடி மாதத்தில் இடை உவா நன்று. உதயகாலத்தில் ஆதித்தனை மேகம் மறைக்குமாகில் மிகவும் வர்ஷிக்கும் (மழை பொழியும்). இல்லையானால் வர்ஷம் (மழை) இல்லை என்பது.

## பஞ்சமிக்குறி

**சிறப்புடை ஆடி தன்னில் சிறந்தமுற் பக்கம் ஐந்தில்**
**பிறகதிர் வாரம் அற்பம் மழைத்திங்கள் வெள்ள மாகும்**
**மறப்பரும் செவ்வாய் பூசல் புதன்காற்று வியாழன் மாரி**
**குறிப்பரும் வெள்ளி வெள்ளம் கொடுஞ்சனி குறையும் கொண்டல்.** 253

இ-ள் : ஆடி மாதத்துப் பூர்வபட்சத்துப் பஞ்சமி ஞாயிற்றுக்கிழமை வரில் அற்ப வர்ஷம் (மழை பொழிதல்), திங்களாகில் வெள்ளம், செவ்வாயாகில் பூசல், புதனாகில் காற்று, வியாழனாகில் நிறைய விளையும், வெள்ளியாகில் பெரிய வர்ஷம் (மழை பொழிதல்), சனி விளைவு இல்லை என்பது.

## சோதிக்குறி

**கொண்டல்மந் தாரம் காற்று குவலயம் முழக்கம் மின்னல்**
**நண்டின்முற் பக்கம் வந்த நவமியில் சோதி நாளில்**
**உண்டெனில் முன்னாள் மாரி உயர்முறம் தசமி தன்னில்**
**கண்டிடில் நடுவு பன்னொன் றனுசமேல் கடையில் பெய்யும்.** 255

இ-ள் : ஆடி மாதத்துப் பூர்வபட்சத்து நவமியும் சோதியும் கூடின நாளில் மந்தாரமாதல், மழையாதல், காற்றாதல், முழக்கமாதல், மின்னலாதல் உண்டாகில் முன் வர்ஷமாம் (மழை பொழிதல்). தசமியும் விசாகமும் கூடின நாளில் இக்குறி உண்டாகில் நடுவில் வர்ஷம் என்பது. ஏகாதசியும் அனுசமும் கூடின நாளில் இக்குறிகள் உண்டாகில் பின் வர்ஷம் என்பது.

## ஆடிக்குறி

**கடையினில் தசமி பன்னொன் உரோகணிநாட் கதிரைமேகம்**
**இடைஆடிப் பூரம் வெள்ளி பொன்திங்க ளேனும் மாரி**
**அடைமழை அல்லா வாரம் அற்பமேல் உத்தி ராடம்**
**திடமுடை ஆனி மூலம் வில்லும்மேற் கிடினும் தீதே.** 256

இ-ள் : அமரபட்சத்துத் தசமி, ஏகாதசியுடன் கூடிய உரோகிணி நாள் மந்தாரம் உண்டாகில் அவ்வாண்டு வர்ஷம் (மழை) மிகுதியென்றும், ஆடிப்பூரம், வெள்ளி, வியாழன், திங்களாகில் அடைமழை என்றும், அல்லாத வாரங்களில் யாகுதல், பெய்யில் அந்த வருஷத்துக்கு மழை இல்லை என்பது. ஆடி உத்திராடத்தினன்று மேற்கே வில்லிடில் அவ்வாண்டுக்கு வர்ஷமின்றி விளைவும் இல்லை என்பது.

## கர்ப்ப ஓட்டம்

**தீயபூ ராடம் வெய்யோன் சேர்ந்திடும் நாளில் வட்டம்**
**தூயமந் தாரம் காற்றுச் சுடரவன் ஆதி ரைக்கே**
**பாயும்நாள் தொட்டு முன்போல் ஒருநாட்குப் பதினா லாகக்**
**காயும்வேல் கண்ணாய் ! சொல்லும் கார்மழை கர்ப்பம் தானே.** 257

இ-ள் : மார்கழி மாதத்துப் பதினான்காம் தேதியினன்று இருபது நாழிகைக்குப் பின்பு, பூராடத்திலே ஆதித்தன் சென்று புகும் அன்று முதலாகப் பதிமூன்று நாட்களும் இருபது நாழிகையும் கர்ப்ப ஓட்டம். இந்நாட்களில் மந்தாரமாதல், காற்றாதல், பரிவேடமாதல் உண்டாகில் இந்தக் கர்ப்ப ஓட்டம்

நாள் ஒன்றுக்கு ஆனி மாதத்து ஏழாம் தேதி நாற்பது நாழிகைக்குப் பின்பு, ஆதித்தன் திருவாதிரையில் சென்று பிரவேசிக்கும் முன்பு சொன்ன நாளில் முழக்கம், இக்குறிகள் உண்டாகில், பின்பு சொன்ன வரிசையாய் பதினான்கு நாட்களும் வர்ஷிக்கும் (மழைப் பொழியும்). இக்கணக்கில் பின் சொல்லுக.

**கிரகண பலன்**

கருது பூரம் மகம்பூசம் கங்குல் ஆரல் முறம்புரட்டை
விரியும் அக்கினி மண்டலமாம் விட்டம் ஆயிலி விளக்கத்தம்
மருவும் குதிரை உத்திரமும் சித்திரை வாயு மண்டலமாம்
தெரியும் இவற்றில் அரவுறுமேல் சேரும் பசிநோய் தெளிந்தறியே. 258

இ-ள்: பூரம், மகம், பூசம், பரணி, கார்த்திகை, விசாகம், பூரட்டாதி இந்த ஏழில் கிரகணம் தீண்டில் *அக்கினி மண்டலமாம்*. அவிட்டம், ஆயிலியம், சோதி, அத்தம், அசுவதி, உத்திரம், சித்திரை இவை ஏழிலும் கிரகணம் தீண்டில் *வாயு மண்டலமாம்*. இவற்றில் கிரகணம் தீண்டில், பசியும் நோயும் கள்ளரும் உண்டாகி மனிதர்கள் மாய்வர் என்பது.

அறிவன் சதயம் கடைமூலம் அணிமான் தலையே பூராடம்
இறைவன் வருண மண்டலமாம் எழிற்பார் ஆடி பனைகேட்டை
மறுவில் புனர்தம் அபிசித்து மண்ணும் வோணம் மகேந்திரமாம்
விறள்கோள் பாம்பு மிகத்தீண்டில் வெள்ளம் பெரித்து விளையும்பார்

இ-ள் : உத்திரட்டாதி, சதயம், இரேவதி, மூலம், மிருகசீரிடம், பூராடம், திருவாதிரை இவை ஏழிலும் கிரகணம் தீண்டும்பொழுது *வருண மண்டலம்* என்று பேராம். உரோகிணி, உத்திராடம், அனுசம், கேட்டை, புனர்பூசம், அபிசித்து, திருவோணம் இவை ஏழிலும் கிரகணம் தீண்டும் பொழுது *மகேந்திர மண்டலம்* என்று பேராம். இவற்றில் கிரகணம் தீண்டில் நிறைய வர்ஷம் (மழை) என்பது. பூமியில் விளையும் என்பது.

விளங்கும் கதிர்கள் தன்னையரவு தீண்டு பொழுது மின்முழக்கம்
வளைந்து கூடில் மழைதுளிவில் மருவில் மாரி வளம்சுரக்கும்
துளங்கும் அரசர் செங்கோல்கள் சோமனஅ தனையும் அருக்கனையும்
தளங்கொல் அரவம் பதினைந்தில் சாரில் பசிநோய் தப்பாதே. 260

இ-ள் : சந்திர-ஆதித்தரைக் கிரகணம் தீண்டும்பொழுது மின்னுதல், நட்சத்திரம் விழுதல், இடி இடித்தல், பரிவேசித்தல், மழைத்துளி விழுதல், வில்லிடுதல், காற்றடித்தல் செய்யில் மழை பெய்து தேசமெல்லாம் விளையும். இராசாக்களுக்கு செயம் உண்டாகும். சந்திரனைக் கிரகணம் தீண்டிப் பதினைந்து நாளையிலே சூரியனையும் தீண்டிடில் இராசாக்களுக்கு ஆகாது. தேசத்தில் பசியும் நோயும் உண்டாகி, மனிதர்கள் மாய்வர் என்பது.

தப்பில் கதிர்கள் தமையரவும் தான்கொண் டெழுமேல் மழைதவறா
ஒப்பம் உண்ட வளிபாடே உமிழில் உலகம் விளைவுண்டாம்
அப்பி யுடனே விழுந்திடுமேல் ராசா செங்கோற் கழிவுண்டாம்
செப்பு முலையாய் ! ஊடறுக்கில் திண்ணம் உலகம் சிதைந்திடுமே. 261

இ-ள் : சந்திராதித்தர் உதயத்திலே இராகு-கேதுக்கள் பற்றிக் கொண்டு எழுமாகில் மழை இல்லை. மழை உண்டாப் போலே விழுமாகில், மழை பெய்து உலகமெல்லாம் விளையும் என்பது. அஸ்தமிக்கின்ற காலத்தில் பற்றின உடனே விழுங்கிடில் இராசாக்களுக்கு மரணம் உண்டு என்பது. ஊடறுக்குமாகில் பூமிக்கெல்லாம் அழிவுண்டு என்பது.

## சென்ம நட்சத்திர தோடமும் பரிகாரமும்

சிதைவில் பிறந்த முன்னாட்கள்
    சென்ம இராசி யார்தீண்டில்
புதல்வன் மனைசேய் பொழில்வாவி
    பொன்பேர் உற்றா ருடன்பொன்றும்
அதனை ஒழிக்கில் வெண்கலத்தில்
    நெய்வார்த் தரவைப் பொன்னாலே
மதிசேர் நுதலாய் ! சேர்த்ததனில்
    வைத்துக் கொடுக்க மறையோர்க்கே. 262

இ-ள் : பிறந்த நாள் முன்பின் மூன்றிலும் சென்ம வாரத்திலும், சென்ம இராசியிலும் கிரகணம் தீண்டில் புத்திரர் பெண்டாட்டி, பூமி, குளம், பந்துக்கள், அர்த்தம் இவை மாளும். அது தவிர்க்கவேண்டில், வெண்கலத்தாலான கிண்ணியில் நெய் வார்த்துப் பொன்னாலே பாம்பு படம் கூட்டி, நெய்யிலிட்டுப் பிராமணர்க்குக் கொடுக்கத் தீரும் என்பது.

## கிரகங்கள் வெற்றி தோல்வி

**மறுவெண் திங்கள் சனிசேயை விழுங்கில் மன்னர் கோல்வளரும்**
**பிறைபொன் புகரை விழுங்கிடினும் பின்னும் வெள்ளி வியாழத்தை**
**அரவுண் டிடினும் பசிபெரிதாம் பொன்னன் புகரோன் சனிசேயைத்**
**திரவுண் டிடினும் பசிபெரிதாம் செவ்வாய் சனியுண் டிடில்பேராம்.** 263

இ-ள் : கிரகண காலத்தில் திங்கள், சனி, செவ்வாய் விழுங்கில் இராசாக்களுக்கு இராச்சியம் உண்டாம். இவன் வியாழன் வெள்ளியை விழுங்கிடினும், வெள்ளி வியாழத்தை விழுங்கிடினும் பஞ்சமாம், வியாழன், வெள்ளி, சனி, செவ்வாயை விழுங்கிடினும் மழை வெகு வர்ஷம். செவ்வாய் சனியை விழுக்கில் படையாம் என்பது.

**பேரா மதிக்குச் சேய்புந்தி பொன்னன் வெள்ளி சனிதோற்கில்**
**சீராய் அரசர் கோலோங்கும் சேய்க்குப் புந்தி மதிதோற்கில்**
**ஆராய் அமைச்சர் அழிவாகும் அமைச்சன் தோற்கில் பசிபூசல்**
**வாரார் முலையாய்! புகர்பூசல் மந்தன் தோற்கில் குறும்பறுமால்.** 264

இ-ள் : திங்களுக்குச் செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி தோற்கில் இராசாவுக்கு நன்று. செவ்வாய்க்குப் புதன், திங்கள் தோற்கில் இராசாவுக்கும் மந்திரிக்கும் அழிவு. வியாழன் தோற்கில் பசி பூசம் உண்டாம். வெள்ளி தோற்கில் பூசல் உண்டாம். சனி தோற்கில் குறும்பு அழியும் என்பது.

**அறியும் புகர்க்கு மதிதோற்கில் அரசர்க் கிடுக்கண் அமைச்சுபுகர்**
**குறையும் கொண்டல் சேய்சனிகள் தோற்கில் குறும்பர்க் கழிவாகும்**
**மறையந் தணர்க்குச் சேய்சனிகள் மதியம் தோற்கில் மழைபெரிதாம்**
**பொறைவெண் புந்தி புகர்தோற்கில் போகம் விளையும் புகலுங்கால்.**

இ-ள் : புதனுக்குச் சந்திரன் தோற்கில் இராசாக்களுக்கு விதனம் உண்டாம். வியாழனுக்கு வெள்ளி தோற்கில் கொண்டல் குறையும். செவ்வாய், சனி தோற்கில் குறும்பர்க்கு அழிவு உண்டாம் என்பது. வியாழனுக்குச் செவ்வாய், சனி, சந்திரன் தோற்கில் வர்ஷம் (மழை) பெரிதாம். புதனுக்கு வெள்ளி தோற்கில் தேசம் விளையும் என்பது.

புகர்க்குச் சனிசேய் புதன்தோற்கில் பொழியும் மாரி மதிதோற்கில்
பகைக்கு ராசா பொன்தோற்கில் பசிநோய் பூசல் பலவுண்டாம்
மிகைத்த சனிக்கு மதிதோற்கில் விளைவு குன்றும் பொன்தோற்கில்
திகைக்கும் பசியாம் புகர்தோற்கில் மழைபொன் சேய்மால் செருப்பெரிதாம்

இ-ள் : வெள்ளிக்குச் சனி, செவ்வாய், புதன் தோற்கில் வர்ஷம் (மழை) பெருக உண்டாம். சந்திரன் தோற்கில் இராசாக்களுக்குப் பகையுண்டாம். வியாழன் தோற்கில் பசியால் மாய்தல் உண்டாம். வெள்ளி தோற்கில் மழை இல்லை. செவ்வாய், புதன் தோற்கில் யுத்தம் பெரிதாய் உண்டாம் என்பது.

செருக்கும் சிங்கம் முதலாறில் சேர்ந்த கோட்கள் வருங்கோளைப்
பெருக்க வெல்லும் குடமாதி ஆறில் நின்ற பெருங்கோளை
விரிக்கில் வருங்கோல் அவைவெல்லும் வெற்றிதோல்வி மெல்லியலாய் !
உரைக்கில் வெற்றி புகர்தோற்கில் ஒழிந்தார் வெற்றி வடக்குறிலே. 267

இ-ள் : சிங்கம் முதல் ஆறு இராசிகளிலும் நின்ற கோள்கள் வருங்கோள்களை வெல்லும். கும்பம் முதல் ஆறு இராசிகளும் நின்ற கோள்களை வருங்கோள் வெல்லும். வெள்ளி தெற்கே நிற்கில் வெற்றி, அல்லாத கோள்கள் வடக்கே நிற்கில் வெற்றி என்றவாறு.

வடித்த பொன்னன் உடன்அதற்கோள் அந்தணர் அம்பு சேயுறினும்
கடுத்த சேயோ டேழாறும் காரி செவ்வாய் பாம்புறினும்
தடித்த மீன்தேள் கடைவிடையில் நடுவோ டரிமுன் சனியுறினும்
இடுக்கண் பெரிதாய் மழையின்றி எட்டொன் றாகும் மனுவெல்லாம்.

சூடாமணி - 16

இ-ள் : வியாழத்துடனே சனியாகுதல், சேயாகுதல், பாம்பாகுதல் நிற்பினும், வியாழத்துக்கு ஏழாமிடத்தில் இவர்கள் நிற்பினும், செவ்வாயும் பாம்பும் கூட நிற்பினும், செவ்வாயும் சனியும் பாம்பும் கூடி நிற்பினும், மீனத்துக்குக் கடையிலாதல், விருட்சிகத்திற்குக் கடையிலாதல், இடபத்திற்கு நடுவிலாதல், சிங்கத்திற்கு முதற்காலிலாதல் சனி நிற்பினும் மழையின்றித் தேசத்தில் மனுவெல்லாம் எட்டொன்றாகும் என்பது.

## துர்விடய இலட்சணம்

மனுவோர் அரிதேள் கயல்தனுவில் மந்தன் செவ்வாய் வக்கரிக்கில்
வினையே பெருகும் வேந்தர்க்கு வெள்ளிக் கேழில் பொன்மேவில்
துனியாம் சுங்கன் படிநடத்தல் புகர்மால் கிடையே கதிர்நிற்கில்
சனிசேர் கதிக்கு முன்சனிசேய் நடத்தல் பஞ்சம் நாடெல்லாம். 269

இ-ள் : இடபம், சிங்கம், விருட்சிகம், மீனம், தனுசு, சனியாதல் செவ்வாயாதல் வக்கரிக்கில் இராசாக்களுக்குக் கேடு என்பது. அல்லாத இடங்களில் வக்கரிக்கில் நாட்டுக்குப் பொல்லாது (கேடு) என்க. வெள்ளிக்கு ஏழாம் இடத்தில் வியாழன் நிற்கில் *சமசத்தயோகம்* என்று பெயராம். வெள்ளி தெற்கே போதல், புதன் வடக்கே போதல், இவர்களுக்கு இடையே சூரியன் நிற்க மத்திமம். இவர்களுக்கு முன்னே சனி, செவ்வாய் நிற்க பஞ்சமாம் என்றவாறு.

நாடும் கதிர்பொன் சேய்சனியை நணுகி மாதம் நாலரைபின்
ஓடும் கோள்கள் வக்கிரமாய் உரைக்கில் பிரியும் எட்டரையாம்
தேடும் கதிர்க்கு முன்புகரோன் செல்ல செவ்வாய் பின்செல்லில்
சாடுங் கொண்டல் பூராடம் வெள்ளி வெள்ளம் மழைசால. 270

இ-ள் : வியாழன், செவ்வாய், சனி இவர்களுடனே ஆதித்தன் கூடில் நாலரை மாதங்கள் சென்றால் இவர்கள் வக்கரிக்கத் தொடங்குவார்கள். ஆதித்தன் நின்ற மாதம் முதல் எட்டரை மாதத்தில் வக்கிரம் நீங்கும் என்க. ஆதித்தனுக்கு முன்னே வெள்ளி செல்ல, செவ்வாய் பின்னே செல்லினும், பூராடத்தில் வெள்ளி நிற்பினும் பெருவருஷமாக வருஷிக்கும்.

## பரிவேடம்

சால அருக்கன் உதயத்தில் சாரில் வட்டம் தானழிவாம்
மேலை உச்சி விளைவுண்டாம் வெய்யோன் பாடி லாசழிவாம்
மாலை மதியைப் பரிவேடம் வளைக்கில் அடுக்க மழைபொழிதல்
கோல முலையாய்! படைவேந்தர்க் குடைசாய்ந் திடுதல் பிழைவருதல்.

*இ-ள்: ஆதித்தன் உதயகாலத்தில் பரிவேசிக்கில் வர்ஷம் (மழை) இல்லை. உச்சிகாலத்தில் பரிவேசிக்கில் விளைவு உண்டாம். மத்தியான காலத்தில் பரிவேசிக்கில் அரசருக்கு அழிவுண்டாம். மாலை மதியை பரிவேசிக்கில் அடுத்து மழை உண்டாம். வில்லாகில் அரசர் கீர்த்திக்கு அழிவாகும் என்றவாறு.*

பிழையா மதியைப் பொன்வெள்ளி
யுடனே வளைக்கில் பெருமழையாம்
மழைதான் தாழ்க்கும் சிறிதாகில்
மதியைச் சனிசே யுடன்வளைக்கில்
பழிதான் பசிநோய் பலவுளவாம்
பாம்பு தீண்டும் பொழுதளவே
அழிவாம் அரசர் சாகாவிடில்
வளைக்கில் நாட்டுக் கழிவாமே. 272

*இ-ள் : சந்திரன், சுக்கிரன், பிரசாபதியுடனே பரிவேசிக்கில் வர்ஷம் (மழை) பெரிதென்க. வட்டம் சிறிதாகில் மழை தாழும் என்பது. சந்திரனைச் சனி, செவ்வாயுடனே வளைக்கில் பசியும் நோயும் பெருக உண்டாம். கிரகணம் தீண்டும் பொழுது வளைக்கில் இராசாக்களுக்கு அழிவுண்டாம். விட்டபோது பரிவேசிக்கில் நாட்டுக் குடிக்கு அழிவுண்டாம் என்பது.*

## நட்சத்திரம் விழும் குறி

ஆடு கயல்தேள் தனுசிங்கம் எழில்மீன் விழுமேல் அரசழிவாம்
கோடு மகரம் துலையலவன் கும்பம் அகங்கள் குறைந்திடுமால்
தேடு மிதுனம் மந்திரிசாம் தெரிவை உதயம் பிணிபெரிதாம்
ஏடும் இடபம் மழையில்லை உடுவீழ் குறியென் றுணர்ந்துரையே

இ-ள் : மேடம், மீனம், விருச்சிகம், தனுசு, சிங்கம் இவை உதயமாக நட்சத்திரம் வீழில் இராசாக்களுக்கு அழிவு உண்டாம். மகரம், துலாம், கடகம், கும்பம் இவை உதயமாக வீழில் அகம் தாழும் என்பது. மிதுனத்தில் உதயமாக வீழில் மந்திரி மரணம். கன்னியில் வீழில் வியாதியுண்டாம். இடபத்தில் வீழில் மழையில்லை என்றவாறு.

## பிறைக்குறி

உரைசேர் பிறைமீன் மேடத்தில் உதயம் தெற்கு விடைகும்பம்
விரைசேர் குழலாய் ! சமநோக்கு மிக்க தெல்லாம் வடக்குயரும்
பெரியோர் சொன்ன நெறியொழியப் பிறைதான் தோன்றில் பெரும்பசியாம்
கரைசேர் பக்கம் ஓரிரண்டும் கதிர்பொன் புகரும் காண்புரையே. 274

இ-ள் : பங்குனி மாதத்திலும் சித்திரை மாதத்திலும் பிறை காண தெற்குயரும் என்பது. வைகாசிக்கும் மாசிக்கும் சமநோக்கு என்பது. மற்ற எட்டு மாதமும் வடக்குயரும் என்பது. இச்சொன்ன நெறி ஒழிய வருமாகில் பூமியெல்லாம் பசியால் மாயும் என்பது. பிறை காணலாவது பட்சங்களில் துவிதியையும் ஞாயிறும் வியாழமும் வெள்ளியும் விசேடம் என்பது.

## மகாவோட்டம்

காணும் மாசி கலைமதியம் கருது மகமீன் நான்கினிலும்
பேணும் தென்பால் மீன்சேரில் பெரிதாம் அஃகம் இரண்டாமீன்
பூணில் ஒன்று முக்காலாம் பொருந்தும் மூன்றில் பாதியதாம்
சேணின் வடபால் மீன்சேரில் செகத்தில் அஃகம் சிறிதென்னே. 275

இ-ள் : மாசி மாதத்தில் மகத்து நின்று, சந்திரன் மக நட்சத்திரத்திலே தெற்கு மீனைச் சேரில் மிகுந்த அஃகம். இரண்டாம் நட்சத்திரத்தில் ஒன்று முக்காலாம். மூன்றாம் நட்சத்திரத்திலே நிற்கில் ஒன்று பாதி. எல்லாவற்றுக்கும் வடக்கு நட்சத்திரத்தில் நிற்கில் ஒன்று காலாம் என்றவாறு.

## வியாழ சரிதை

சிறிய மேடம் குருவாகில் தேசம் எங்கும் விளைவுண்டாம்
குறியாம் குண்டை பொன்சேரில் கொண்டல் பொழியும் கோபல்கா
பொறிகொள் மிதுனம் குருவிரும்பிற் பொன்முத் தரிதாம் சூலானாம்
கறவை பூசல் மழைபெரிதாம் கடகம் சிங்கம் கடும்பசிநோய். 276

*இ-ள் : வியாழன் மேடத்தில் நிற்கும் ஆண்டு ஐப்பசி என்னும் ஆண்டாம். அவ்வாண்டில் நிறைய விளையும். இடபத்தில் நிற்கும்பொழுது கார்த்திகை ஆண்டாம். இவ்வாண்டில் அடைமழை பெய்யும். காலி (கால்நடைகள்) பல்காது (பெருகாது). மிதுனத்தில் நிற்கும்போது மார்கழி என்னும் ஆண்டாம். அவ்வாண்டில் பொன்னும் முத்தும் குறையும், சூல்கொண்ட கர்ப்பம் ஆணாகப் பிறக்கும், பசு பால் கறக்கும்.*

நோக்கும் பொன்னன் கன்னியுறில் நூலும் தூசும் எளிதாகும்
கோக்கும் கொண்டல் விளைவுண்டாம் குறையும் பருத்தி உப்புடனே
ஆக்கும் துலையும் மழைபெரிதாம் அப்பம் மலியும் நிறைகுன்றும்
வீக்கும் தேளில் பசிமிடிநோய் வில்லில் மழைபோர் மிகவுண்டாம்.

*இ-ள் : வியாழன் கன்னியில் நிற்கும்பொழுது பங்குனி என்னும் ஆண்டாம். அவ்வாண்டு மிகவும் மழை பெய்து விளைந்து அஃகம் பெரிதாம். நூலும் புடவையும் எளிதாகும். பருத்தி, உப்பு, நெய் குறையும் என்க. துலாத்தில் வரும்பொழுது சித்திரை என்னும் ஆண்டாம். அவ்வாண்டில் மிகவும் வர்ஷம் பெய்து, நானாவித தானியமும் மிகவும் உண்டாம். அஃகம் பெருத்து அளப்பன எல்லாம் மலிந்து, நிறுப்பன எல்லாம் குறையும் என்க. விருச்சிகத்தில் நிற்கும் பொழுது வைகாசி என்னும் ஆண்டாம். அவ்வாண்டு வர்ஷம் இன்றி விளைவும் குன்றி நோய் மிகவுண்டாம். தனுவில் நிற்கும்பொழுது ஆனி என்னும் ஆனி என்னும் ஆண்டாம். அவ்வாண்டு வர்ஷம் மிகப்பெய்து குளங்களெல்லாம் உடைந்து துர்க்காலம் நற்காலமாய் எங்கும் விளையும் ராசாக்களுக்கு எங்கும் பூசல் உண்டாம்.*

மிகவும் மகரம் பொன்சேரில் மிடியோர் பெரிதாம் விளைவில்லை
அசலும் கும்பம் மழைபிழையாய் அஃகம் பெருகும் மீனத்தில்
பகைநோய் பசியாய் விளைவின்றிப் பரிமா வானை மிகமாயும்
புகலும் ஆடை பசிமுதலாய்ப் புரட்டை ஈறாம் புவிக்கெல்லாம். 278

இ-ள் : மகரத்தில் வியாழன் நிற்கும்பொழுது *ஆடி* என்னும் ஆண்டாம். அவ்வாண்டு வர்ஷமின்றி, விளைவின்றி பசியும் பெருக உண்டாய்ப் பருத்தியும் எள்ளும் மலியும் என்க. கும்பத்தில் நிற்கும்பொழுது *ஆவணி* என்னும் ஆண்டாம். அவ்வாண்டு அடைமழையாய் எங்கும் விளைந்து தானியம் பெருத்து, வியாதியாலும் யுத்தத்தாலும் மனுஷரெல்லாம் மாய்வர் என்பது. மீனத்தில் நிற்கும்போது *புரட்டாசி* என்னும் ஆண்டாம். அவ்வாண்டு விளைவின்றிப் பஞ்சமாய் யானை, குதிரை, மனுசர் அடையப் பசியாலும் நோயாலும் மாய்வர் என்பது. பருத்தியும் எள்ளும் குறையும். சூலிகள் ஆண் பெறுவார்கள். இப்படி ஐப்பசி முதல் புரட்டாசி ஈறாக மேடம் முதல் மீனம் ஈறாக எண்ணிக்கொள்வது.

## சுக்கிர சரிதை

புவியில் மறிஅரி யாழ்அலவன் புகரோ நிற்கில் புயல்பெரிதாம்
குவைகொள் அரிபெண் துளியில்லை கோல்தேள் வெள்ளம் கொடுஞ்சிலைவேல்
துவலை தோன்றில் துளியாய்போம் சுறாவும் குடமும் துடர்மீனும்
நவையில் வெள்ளி நின்றிடுமேல் நாளும் நாளும் மழைபெரிதாம். 279

இ-ள் : மேடம் முதல் நான்கு இராசிகளிலும் வெள்ளி நிற்கில் வர்ஷம் உண்டாம். சிங்கம், கன்னியில் நிற்கும் நாளில் வர்ஷமின்றி விதைத்த விதையும் தீயும் என்க. துலாம் விருச்சிகத்தில் நிற்கும் பொழுது வெள்ளம் போம். தனுசில் நிற்கும்பொழுது வர்ஷம் தோன்றத் துளியாய்போம். மகரம் முதல் மூன்று இராசியிலும் நிற்கும்பொழுது அடைமழையாம் என்றவாறு

பெரிதாய் குதிரை சனிசேரில் பெய்யும் மாரி துயர்தோன்றல்
குறிதாம் பரணி விளைவுடனே பொருவாம் ஆரல் முதல்மூன்றும்
குறியோன் நிற்கின் மனுமாய்ந்து கார்தான் மறுக்கும் ஆதிரையில்
சொரியாய் நிற்கும் மழைபுனர்த்தம் துளியும் விளைவும் அளவாமே.

*இ-ள் : அசுபதியில் சனி நிற்கில் வர்ஷம் பெய்து விளையும்; பரணியில் அழிவுண்டாம், எல்லாத் தானியங்களும் விளையும்; கார்த்திகை, ரோகணி, மிருகசீரிடம் இந்நாட்களில் நிற்கில் வர்ஷமின்றிப் பஞ்சமாய் மனுமாயும்; திருவாதிரையில் நிற்கில் வர்ஷம் குறைவறப் பெய்து தேசமெல்லாம் விளையும்; புனர்பூசத்தில் வர்ஷமும் விளையும், மத்திமமாய்க் கீழ்ச்சாதி பல்கும் என்றவாறு.*

அளவில் பூசம் சனியெய்தில் அற்பம் விளைவாய் கீழ்பல்கும்
வளமில் ஆயில் மகப்பூரம் மாரி மறந்து மனுமாயும்
களவு சனியுத் திரம்எய்தில் சார்சற் றாகி எள்பயறு
விளைவு மத்த முதனான்கில் வெள்ளம் பெருத்து மிடிதீரும். 281

*இ-ள் : பூசத்தில் சனி நிற்கில் அற்ப விளைவாய் மிருகங்கள், கீழ்மக்கள் பல்கும் என்பது. ஆயிலியம், மகம், பூரம் இவற்றில் சனி நிற்கில் வர்ஷமின்றி (மழையின்றி) தேசம் விளைவின்றி அஃகம் குறைந்து பசியாலும் நோயாலும் மாயும் என்பது. உத்திரத்தில் நிற்கில் அற்ப வர்ஷம் (மழை). எள்ளும் பயரும் வரகும் விளையும். அத்தம், சித்திரை, சுவாதி, விசாகம் இவை நான்கும் வர்ஷம் குறைவறப் பெய்து தேசமெங்கும் விளைந்து அஃகமும் பெருகும் என்றவாறு.*

தீர நீலன் பனையேறில் தென்னர்க் கழிவு விளைவுண்டாம்
காரி கேட்டை முதலைந்தும் கருதிப் பசிநோய் பகைபெரிதாம்
வேரில் அவிட்டம் முதல்மூன்றும் வெள்ளம் பெருகி விளைந்திடுமாம்
பாரில் அறிவன் கலம்சனிபோல் பசியால் மாயும் படியெல்லாம். 282

*இ-ள் : அனுடத்தில் சனி நிற்கில், வருஷித்துக் குளங்களெல்லாம் நிறைந்து விளையும். பாண்டியனுக்கு அழிவுண்டாம். குறும்புக்கு அழிவுண்டாகும். கேட்டை முதல் ஐந்து நாட்களிலும் நிற்கில் வர்ஷமின்றி எல்லாம் தீய்ந்து மனுடரெல்லாம் பகையாலே மாயும். அவிட்டம் முதல்*

மூன்று நாட்களிலும் நிற்கில், தேசம் குறைவற விளைந்து, கன்று காலியும் பல்கி மனுடரெல்லாம் சுகமே இருப்பார்கள். உத்திரட்டாதி, ரேவதி இவையில் நிற்கில் வர்ஷமினறி மனுடரெல்லாம் நோயாலும் பசியாலும் மரணமடைவர். இச்சொன்ன பலன் செவ்வாய்க்கு ஒக்கும் என்றவாறு.

## புதனோட்டம்

படியில் மேதை குடமாதி நான்கும் பருதி முன்னோடும்
நெடிய தண்டு முதல்நான்கும் முடனாய் நிற்கும் பின்னோடும்
கடிய கதிரை புதன்பிரிதல் கதிரோன் கன்னி புணர்ந்திடுதல்
கொடியி னிடையாய் புகர்தெற்கே வுறுதல் பஞ்சக் குறியாமோ. 283

இ-ள் : புதன், கும்பம் முதல் நாலு இராசிகளிலும் (கும்பம், மீனம், மேடம், இடபம்) ஆதித்தனுக்கு முன்னே ஓடுவன. மிதுனம் முதல் நாலு இராசிகளிலும் (மிதுனம், கடகம், சிம்மம், கன்னி) ஆதித்தனுடன் கூடி நடப்பன. துலாம் முதல் நாலு இராசிகளிலும் (துலாம், விருச்சிகம், தனுசு, மகரம்) ஆதித்தனுக்குப் பின்னே ஓடுவன. இச்சொன்ன வழி ஒழித்து, ஆதித்தனை விட்டுப் புதன் பிரிந்திருப்பதுபோல் தோன்றினாலும், ஆதித்தன் கன்னியில் நின்றாலும், வெள்ளி தெற்கே போனாலும் வர்ஷமில்லை என்று சொல்லுவது என்றவாறு.

## கோள்நிலை

குறித்த கதிரோன் புகர்புந்தி குலவி நிற்கும் ஒருமாதம்
செறித்த மதிநாள் இரண்டேகால் செவ்வாய் மாதம் ஒன்றரையாம்
கறுத்த சனியாண் டிரண்டரையாம் கனகன் தானும் ஓராண்டாம்
மிறுத்த பாம்பாண் டொன்றரையாம் இராசி ஒன்றில் நின்றிடுநாள். 284

இ-ள் : ஆதித்தன், புதன், சுக்கிரன் ஒரு இராசியில் ஒரு மாதம் நிற்பார்கள். சந்திரன் ஒரு இராசியில் இரண்டேகால் நாள் நிற்கும். செவ்வாய் ஒரு இராசியிலே ஒன்றரை மாதம் நிற்கும். சனி ஒரு இராசியிலே இரண்டரை ஆண்டுகள் நிற்கும். வியாழன் ஒரு இராசியிலே ஓராண்டு நிற்கும். இராகு- கேதுக்கள் ஒரு இராசியிலே ஒன்றரை ஆண்டுகள் நிற்கும் என்றவாறு.

## 6. மனை, ஆருட செய்திகளும் பிறவும்

### மனைப் பொருத்தம்

நாட்டு ஊர்க்கு மனையதற்கு நலங்கொள் எட்டெட் டறைசெய்தால்
வீட்டு நடுவு நாலரையும் விரிஞ்சன் மூலையும் நாலும்பர்
ஈட்டும் திசைகள் ஒருநான்கில் இருநான் கறையும் இறையவர்க்காம்
கூட்டும் நாற்பத் தெட்டறையும் குணமாய்க் கொள்க குலமனைக்கே.

இ-ள் : ஏற்றுகின்ற ஊரையும் எடுக்கின்ற மனையையும் அறுபத்து நான்கு அறைகளாக்கினால் நடுவில் நாலறைகளும் பிரத்தானம். நான்கு மூலைகளும் பேய். திக்கு நான்கில் எட்டு அறைகளும் தேவர்கள். மற்ற 48 அறைகளிலும் மனை கொள்வது.

மனையைசி சிறுகோ லாலளந்து வந்து குழியின் பேராயம்
மனையை எட்டால் பெருக்கியபின் பன்னி ரண்டில் கழித்தவர்க்கம்
மனையை ஒன்ப தால்பெருக்கிப் பத்தில் கழிக்க குழியாகும்
நினைமூன் றேத்தி எட்டீய்ந்து நின்ற சேடம் நிலையோனி. 286

இ-ள் : மனையைச் சிறுகோலால் அளந்து கண்ட குழியின் பேர் *ஆயம்* என்பது. இதனை எட்டில் பெருக்கி, பனிரண்டால் கழித்து நின்றதன்பேர் *ஆக்கமாம்*. ஆயத்தை ஒன்பதால் பெருக்கி, பத்தால் கழித்தது *குழியாம்*. ஆயத்தை மூன்றால் பெருக்கி எட்டில் கழித்து நின்ற சேடம் *யோனி* என்றவாறு.

நிலைகொள் ஆயம் எட்டேற்றி நெறிமூ வொன்பான் கழித்ததுநாள்
அலகில் சிலநான் கால்பெருக்கி ஆறை ஐந்தில்[1] கழித்தபக்கம்
இலகும் ஒன்பான் உடன்பெருக்கி ஏழில் கழிக்க இதுகிழமை
உலைவில் மூவொன் பதில்பெருக்கி, ஒன்பான் கழித்த தங்கிசமே. 287

இ-ள் : முன்சொன்ன ஆயத்தை எட்டில் பெருக்கி இருபத்து ஏழில் கழித்து நின்ற சேடம் *நாள்* என்பது. ஆயத்தை

---

1. மூவைந்தில்

நான்கில் பெருக்கி, முப்பதால் கழித்த சேடம் *பக்கம்*. ஆயத்தை ஒன்பதால் பெருக்கி, ஏழால் கழித்து நின்ற சேடம் *கிழமை* என்க. ஆயத்தை இருபத்து ஏழில் பெருக்கி, ஒன்பதில் கழித்து நின்ற சேடம் *அங்கிசம்* என்றவாறு.

**அஞ்சொல் இருபத் தேழ்பெருக்கி நூற்றில் கழித்து ததுவாழ்நாள்**
**செஞ்சொல் அஞ்சில் சில்வானம் வரினும் அஃகம் சிறுத்தழியும்**
**மிஞ்சும் எனினும் யோனிநாள் பக்கம் கிழமை எய்திடினும்**
**வஞ்ச மான அங்கிசங்கள் வாழ்நாள் குறைதல் மனைக்காகா.** 288

இ-ள் :ஆயத்தை இருபத்தேழில் பெருக்கி, நூற்றில் கழித்த சேடம் ஆயுள் என்பது. ஆயுள் சிலவானப்படினும் (பின்னமாக இருப்பினும்) அஃகம் சிறுத்து அழிவு பெருக்கினும், யோனி, நாள், பட்சம், கிழமை பொல்லாதவை வரினும் அங்கிசங்கள் பொல்லாதவை வரினும் ஆயுள் குறைந்து மனைக்காகாது என்றவாறு.

## யோனி அறிதல்

**ஆகும் கிழமை முதலெட்டு பருந்து பூனை அரிசுணங்கன்**
**நாகம் கருப்பை கரிமுயலாம் யோனி நல்ல நாற்றிசையும்**
**மேகம் சேர்தற் காமுணர்வு சக்தி விளைவோ டரசிமாதோய் !**
**சோகம் சுகமற் இவற்றாற்குண் சக்தி விளைவு சுகம்நன்றே** 289

இ-ள் : கிழக்கு-பருந்து, தென்கிழக்கு-பூனை, தெற்கு-சிங்கம், தென்மேற்கு-நாய், மேற்கு-பாம்பு, வடமேற்கு-எலி, வடக்கு-யானை, வடகிழக்கு-முயல். ஆக எட்டுத் திக்கிலும் எட்டு யோனியும் கண்டு கொள்வது. இவற்றில் பருந்தும் சிங்கமும் பாம்பும் யானையும் நன்றென்பது.

## அங்கிசம் அறியும்படி

தற்கரம், உணர்வு, சத்தி, தானியம், இராச்சியம், துக்கம், வியாதி, சோகம், சுகம் என்ற ஒன்பதிலும் இராச்சியம், புத்தி, சத்தி, தானியம், சுகம் நன்றென்பது. அல்லாத நான்கும் ஆகாது. அவை தற்கரம், துக்கம், நோய், சோகம் இவை தீது என்பது.

நன்றாம் கிழக்கு முதலெட்டில் நாட்டில் நல்லான் தொழுக்குப்பை
குன்றாம் படப்பை யெருமைநிலை தொழுநெல் கூடு ளிடம்நீர்சால்
என்றார் மனைக்கு கிணறுகிழக் கீசன் மதிநீரே ழில்கிழவன்
தன்றாள் கதிர்மேல் நீட்டியெதிர் தலைவைத் திடங்கீழ் தான்கிடக்கும்.

இ-ள் : கிழக்கு-அடுக்களை, தென்கிழக்கு-பசுத் தொழுவம், தெற்கு-குப்பை, தென்மேற்கு-தோப்பு, மேற்கு-எருமைத்தொழு, வடமேற்கு-நெற்கூடு, வடக்கு-உண்கையிடம், வடகிழக்கு-தண்ணீர்சால் வைப்பது.

## *கிணறு வெட்டு*

*கிணறு வெட்டு :* கிழக்கு - வியாதி, வடகிழக்கு - இன்பம், வடக்கு - நன்மை, வடமேற்கு - ஆயுதத்தால் மரணம், மேற்கு - சம்பத்து, தென்மேற்கு - சத்துரு, தெற்கு - ஸ்திரீ மரணம், தென்கிழக்கு- புத்திரர் ஹானி (அழிவு), பிரமஸ்தானத்தில் அர்த்தஹானி (பொருள் அழிவு) என்பது.

*வாஸ்து புருஷன் கிடக்கும்படி :* ஆதித்தன் நின்ற இராசியிலே காலை நீட்டி அதற்கு ஏழாம் இராசியிலே தலையை வைத்து, இடக்கை கீழாகக் கிடப்பான் என்றவாறு.

## வாஸ்து நிலை

கிடந்தான் மேடம் ஒருபத்தில் கிளரும் விடையில் மூவேழில்
அடங்கோல் கடகம் பதினொன்றில் அரிவைதா னாறில் தேனெட்டில்
குடந்தான் இருபத் தாறிரண்டில் கூறும் மகரம் தேதியினில்
இடந்தான் எடுக்க லாமென்றார் எல்லாத் திசையும் நல்லோரே. 291

இ-ள் : வாஸ்து புருஷன் எழுந்திருக்கும் நாள் சித்திரை மாதம் 10ஆம் தேதி, வைகாசி மாதம் 21ஆம் தேதி, ஆடி மாதம் 21ஆம் தேதி, ஆவணி மாதம் 6ஆம் தேதி, கார்த்திகை மாதம் 8ஆம் தேதி, மாசி மாதம் 20ஆம் தேதி, தை மாதம் 22ஆம் தேதி இவற்றில் எல்லாத் திக்கிலும் எடுக்கலாம் என்றவாறு.

**சுவர் பிளக்கில்**

நல்ல மனையில் சுவர்பிளக்கில் அருக்கன் திசையில் நாசம்சேய்
அல்லல் உறும்பொன் சாவுபுதன் அழகாம் புகர்மேல் ஆக்கமதாம்
கொல்லும் காரி மதிநிதியாம் கூற்றம் பாம்பாம் எனக்கொள்க
எல்லை அருக்கன் சேய்பொன்மால் புகர்சனி மதியாம் யெண்டிசைக்கே. 292

இ-ள் : அகத்தில் சுவர் கிழக்கே பிளக்கில் - நாசம், தென்கிழக்கே பிளக்கில்- சிலுகு(அல்லல்), தெற்கு - மரணம், தென்மேற்கு - அழகு, மேற்கு - ஆக்கம், வடமேற்கு - சாவு, வடக்கு - அர்த்த இலாபம் (பொருள்வரவு), வடகிழக்கு - ஸ்திரீ மரணம் என்று அறிவது. இந்தத் திக்கு எட்டிலும் கிழக்கு ஆதித்தன், தென்கிழக்கு-செவ்வாய், தெற்கு-வியாழன், தென்மேற்கு-புதன், மேற்கு-வெள்ளி, வடமேற்கு-சனி, வடக்கு-சந்திரன், வடகிழக்கு-பாம்பு நிலை என்று அறிவது.

**புற்று**

எண்டிசையும் கிழக்குமுதல் எட்டுத் திக்கும்
இந்திரன்தீ யமன்நிருதி வருணன் வாயு
வண்டமுறும் மதியீசன் அட்ட திக்கும்
கலன்நடுவே அயன்மேலே புற்றெ டுக்கில்
மண்டியசா விந்திரனில் செல்வம் மங்கி
மனைஇடியும் மன்துயரம் நிருதி வாழ்வு
கொண்டவரு ணன்மகவு காற்றுக் கூற்றம்
குலமதியே நலமீசன் குறுகு நோயே. 293

இ-ள் : எட்டுத் திக்குகளிலும் கிழக்கு-இந்திரன், தென்கிழக்கு-அக்கினி, தெற்கு-எமன், தென்மேற்கு-நிருதி, மேற்கு-வருணன், வடமேற்கு-வாயு, வடக்கு-சந்திரன், வடகிழக்கு-ஈசன் என்று அறிவது. இவற்றிலே மனைக்கு நட்டாமுட்டி சிந்தனை சொல்லும் பொழுது, இன்ன தெய்வத்தின் பெயருடையான் கொண்டான் என்றும் சொல்லுவது. தெய்வநிலை பிரமஸ்தானத்தில் புற்றெடுக்கில்

சாவு, இந்திரனில் செல்வம், அக்கினியில் மனை இடியும், எமனில் துக்கம், நிருதியில் வாழ்வு, வருணனில் புத்திர இலாபம், வாயுவில் கூற்றாம், சந்திரனில் நன்மை, ஈசானனில் வியாதி என்று சொல்லுவது.

## செஞ்செல்லு

குறுகியசெஞ் சிதலயன்மேல் தோன்றில் நன்றாம்
கொடுங்கதிர்க்கே டங்கியிடு நிதியால் இன்பம்
பெருநிருதி மழைவருணன் செல்வம் காற்று
பெண்போக்கு மதிவாழ்வு பீடை ஈசன்
கறவையிட முறியின்கீழ்க் காலி மாயும்
கட்டில்படி சாலின்கீ ழட்டில் நோயாம்
இறைவரிடம் ஊருணிஅம் பலங்கள் பள்ளி
எழில்நாடு கெடுஞ்சுவர்மேல் எங்கும் நன்றாம். 294

இ-ள் : செஞ்சிதல் பிரமதானத்தில் தோன்றில் நன்மை, கிழக்கு-கேடு, அக்கினி-நிதிப்பெருக்கு, இயமன்-இன்பம், நிருதி-வர்ஷம் (மழை), வருணன்-செல்வம், வாயு-ஸ்திரீயை போக்கும், சந்திரன்-வாழ்வு, ஈசானன்-பீடை. இப்படி கன்று காலித்தொழுவில்-கன்று காலி நாசம், கட்டிற் கீழ், வாசப்படிக் கீழ், அடுக்களைக்கீழ் நோயாம். தேவஸ்தானம், ஊருணி, அம்பலங்கள், பள்ளி இவற்றில் தோன்றில் நாடு கெடும் என்பது. இவை சுவற்றின்மேல் தோன்றில் நன்றாம் என்பது.

## கோடி கிழியில் நன்மை - தீவை

நற்கோடி கிழியில்மடி மூன்று செய்து
நயந்தகடைத் தலைகீழாய்க் கிழக்கே வைத்து
பொற்கொடி முதல்தலையை மேற்கே வைத்தால்
பூவிலயன் கொலையருக்கன் செல்வமிடை புதல்வன்
கெற்கோல மனை குயிலின் இன்ப மொழியாம்
அழலெரிக்கும் இரவிக்கு நடுவுற்றால் இடராம்
தெற்கோடிச் சாலுமிதற்கெ ரிக்குமிடை துன்பம்
செழுமலரோர்க் கிடைபிணிதென் மேல்சிறுவர் பெறுமே. 295

இ-ள்: *புதுப்புடவை கீறினால் நன்மை-தீமை அறியும்படி:* புதுப்புடவை மூன்று மடிப்பாக மடித்து கடைத்தலையை கீழாக்கிக் கிழக்கே வைத்து முதல்தலையை மேலாக மேற்கே விரித்துப் பார்க்க, கிழிவு பிரமஸ்தானமாகில் மரணம், ஆதித்தனில்-செல்வம், இவ்விரண்டும் நடுவாகில்- புத்திரர் உண்டாம், அக்னியில்-அஃகம் ஏறும், அக்னிக்கும் பிரமனுக்கும் நடுவில் இன்பம், அக்னிக்கும் ஆதித்தனுக்கும் நடுவில் உற்றார்க்கு இடர், இயமனுக்குச் சாவு, இயமனுக்கும் பிரமாவுக்கும் நடுவில் வியாதி, நிருதியில் புத்திர இலாபம் என்பது.

**பெருநிருதி காலனிடை பகைமலரோன் நடுவேல்**
**பேரின்பம் வருணநிதி நிருதிநீ ரிடையில்**
**நறுநுதல்போ டயனிடையில் புடவை காற்றில்**
**நட்டார்நீள் மணம்நான்முகன் காற்றி டைநோய்**
**நிறைமதிக்கே அயனிடையில் பிணிமதிகாற் றிடையில்**
**நேரார்கே டீசன்நலம் நிலாஈசர்க் கிடையில்**
**வருபொருள்போம் அயனீசர்க் கிடையில் இன்பம்**
**ஒண்கதிரோர்க் கிடைநன்று நற்புடவை கிழிவே.** 296

இ-ள் : நிருதிக்கும் இயமனுக்கும் நடுவில் சத்துரு உண்டாம், நிருதிக்கும் பிர்மனுக்கும் நடுவில் இன்பம், வருணனில் அர்த்த இலாபம், வருணனுக்கும் நிருதிக்கும் நடுவில் பெண்பேறு. வருணனுக்கும் பிர்மனுக்கும் நடுவில் புத்திரர் உண்டாம், காற்றில் மித்திரர் உண்டாம், காற்றுக்கும் வருணனுக்கும் நடுவில் கலியாணம் உண்டாம், காற்றுக்கும் பிர்மனுக்கும் நடுவில் வியாதி, சந்திரனில் கேடு உண்டாம், சந்திரனுக்கும் பிர்மனுக்கும் நடுவில் பிணி, சந்திரனுக்கும் காற்றுக்கும் நடுவில் சத்துரு நாசம், ஈசனில் நலம், ஈசனுக்கும் சந்திரனுக்கும் நடுவில் அர்த்தஹானி(பொருள் அழிவு), ஈசனுக்கும் பிர்மனுக்கும் நடுவில் இன்பம், ஈசனுக்கும் ஆதித்தனுக்கும் நடுவில் நன்மை உண்டாம் என்றவாறு.

புதுப்புடவை கீறில் முற்றும்

## ஆயுதப் பொருத்தம்

கிழக்குநெடும் சுரிகைகதிர் மேல்வினவில் சிரங்காம்
கொழுமுநலம் குலவணிகன் பகைகேடு பறையன்
விழிக்குமரி நலம்பெருகும் முனையில்குறை வாகும்
வேளாளன் நிருதியின்மேல் மிடிபெருகும் புலையன்
அழிக்கும்நெடும் ராசனது செல்வம் உண்டாம்
அழல்வளி யிற் கீழ்ச்சாதி துயரம் சொல்லும்
பழிப்பில்மதி தனம்பெருகும் குலமும் பார்ப்பான்
பாம்பின்மேல் பறைசாதி பழியொடுகே டுளவாம். 297

*இ-ள் : ஆயுதம் கொண்டு, ஆதித்தன் நின்ற திசையில் நின்று வினவில் சிரங்குண்டாம், அர்த்த இலாபம் உண்டென்று சொல்வது. அக்கினி திசையில் நின்று வினவில் சேதம் உண்டு என்றும், இயமன் திசையில் நின்று வினவில் அர்த்தலாபம் உண்டு என்றும், நிருதியில் வினவில் மனமடியன் என்றும், வருண திசையில் நின்று வினவில் வருகிறவன் நன்மை ஸ்திரீ உண்டென்றும், வாயு திசையில் நின்று வினவில் துக்கம் என்று சொல்வது. சோமன் திசையில்நின்று வினவில் அர்த்தலாபம் உண்டென்றும், ஈசன் திசையில் நின்று வினவில் பழியும் கேடும் உண்டு என்று சொல்வது.*

## பஞ்சபட்சி

உளங்கொள் நந்தை கதிர்செவ்வாய் அகாரம் ஓங்கும் பத்திரைமால்
தளங்கொள் மகரம் தானிகாரம் சயையும் பொன்னும் தானுகரம்
விளங்கும் இருந்தை புகரெகரம் வெய்ய சனிபூ ரணையொகரம்
துளங்கும் இடையாய் ! புகர்கடிகை அவ்வா வையூண் சொன்னோமே.

*இ-ள் : ஞாயிறும், செவ்வாயும் நந்தை, அகரம், பத்திரை புதன், திங்கள் - இகரம் என்பது. சேயும் வியாழமும் உகரம் என்பது. வெள்ளியும், இருந்தையும் எகரம், பூரணையும் சனியும் ஒகரம். இவற்றில் சொன்ன கிழமைகளிலும் பட்சங்களிலும் உதயம் ஆதி முதலாக அஸ்தமனம் அறுதியாக ஓரொன்றுக்கு ஆறு நாழிகையாக முப்பது நாழிகையும் அடவே உண்ணும் என்றவாறு.*

*அட்சர புணர்ச்சி சக்கரம்*

| வாரம் | உண்டி | நடை | அரசு | நித்திரை | மரணம் |
|---|---|---|---|---|---|
| நத்தை ஞாயிறு செவ்வாய் | அ | இ | உ | எ | ஒ |
| பத்திரை திங்கள் புதன் | இ | உ | எ | ஒ | அ |
| சயை வியாழன் | உ | எ | ஒ | அ | இ |
| இருத்தை வெள்ளி | எ | ஒ | அ | இ | உ |
| பூரணை சனி | ஒ | அ | இ | உ | எ |

**பஞ்சபட்சிப் புணர்ச்சி**

**சொன்ன அகாரம் வல்லூறூண் துய்ய இகாரம் ஆந்தைஊண்**
**முன்னை உகாரம் வலியன்ஊண் மொழியின் எகாரம் கோழியிலூண்**
**பன்னும் ஒகாரம் மயிலினூண் பகர்ந்த அடவே பறவைதனக்**
**குண்ணும் இரண்டு நடைமூன்று உறக்கம் நாலு சாவஞ்சே 299**

*இ-ள் : அகாரம் வல்லூறு ஊண்; இகாரம் ஆந்தை ஊண்; உகாரம் வலியன் ஊண்; எகாரம் கோழி ஊண்; ஒகாரம் மயிலின் ஊண், இச்சொன்ன அடைவிலே முற்பட்சி ஊண்; இரண்டாம் பட்சி நடக்கும், மூன்றாம் பட்சி அபிசேகம், நான்காம் பட்சி உறக்கம், ஐந்தாம் பட்சி மரணம் என்பது.*

**சாய்ந்த அகரம் ககரமுடன் சகரம் தகரம் தானங்ஙன்**
**வாய்ந்த நகரம் பகரமகரம் வகர மாகும் எட்டெழுத்தும்**
**மாய்ந்த பருந்து முதல்யோனி இருநான் கினுக்கும் அடைவாகில்**
**ஏய்ந்த போரும் வெற்றியும்தாம் இதனால் பறவை இயல்பென்னே. 300**

இ-ள் : அ-க-ச-த-ந-ப-ம-வ எட்டெழுத்தையும் கிழக்கு முதலாக்கி அடைப்பது. இவற்றுக்குப் பருந்து முதலாகச் சொல்லிப் போந்த யோனி எட்டையும் அடைத்துக் கொள்வது. இந்த யோனியாலும் முன்சொன்ன பட்சியாலும் பலாபலம் வெற்றி - தோல்வியும், பேர் பொருத்தமும் உறவும் பகையும் விரித்துச் சொல்லுவது என்றவாறு.

## பெயர்ப் பொருத்தம்

**இயம்புமுன் எழுத்தே பாலன் இரண்டது குமரர் மூன்றேல்**
**வயம்புகழ் அரச னாலும் நோயைந்து மரணம் மாதே**
**பயன்கொள்தன் பேரெ ழுத்து வரும்பெயர் எழுத்தும் பத்தால்**
**வியந்துபன் தாக்கி எட்டில் கழித்தேற்றி வெற்றி பாரே.** 301

இ-ள் : இயம்பு தன் எழுத்தென்று சொன்னவதனால் எல்லா எழுத்தையும் அ-இ-உ-எ-ஒ என்கிற அஞ்சிலே அடைத்தால் இவ்வடைவிலே தன் பெயரெழுத்தையும் முன்கொள்ளுகிற எழுத்தையும் பார்த்தால் ஒன்றாகில் பாலன் என்றும், இரண்டாம் எழுத்தாகில் குமரன் என்றும், மூன்றாம் எழுத்தாகில் அரசன் என்றும், நான்காம் எழுத்தாகில் நோய் என்றும், ஐந்தாம் எழுத்தாகில் மரணம் என்றும் செல்வது. இவற்றில் நாலும் அஞ்சும் ஆகாது என்பது. இன்னமும் வேறு சொல்லுவது. பூர்வ நாமத்தில் தன் பெயரெழுத்தில் சரவெழுத்தை நீக்கி நின்ற எழுத்தை எண்ணி அதை பத்தால் பெருக்கி, எட்டுக்கு ஈய்ந்து நின்ற சேடத்தை அறிந்தால் இரண்டு வகையிலும் ஏற்றமானது பொருந்தும் என்று சொல்வது.

## நட்டாமுட்டி சிந்தனை

**பாரினில் நட்டாமுட்டி சிந்தனைப் பகர வேண்டில்**
**சீரிய தறிக்கால் கீழ்க்கால் சிறப்புடை யோரைக் காண**
**காரியம் வினவி நின்றார் ஓரைகள் கவிப்பு நோக்க**
**கூறிய தாய றிந்து கோளின்வலி யறிந்து கூறே.** 302

இ-ள் : நட்டாமுட்டி சிந்தனை சொல்லவேண்டில், தறிக்காலும் கீழ்க்காலும், காலவோரையும், திரேக்காணமும் உதய ஆருடமும் உண் ஊட்டும் நோக்கும் இவை அறிந்து, இக்கோள்களை நட்பு, ஆட்சி, உச்சம், பகை நீசங்களாலே பலாபலம் நயப்பித்துக் கொள்வது என்றவாறு.

**தறிக்கால்**

**கூறிய மறியில் சேய்மால் புகர்மதி குண்டை சுன்பொன்**
**சீறுசேய் புகர்யாழ் செவ்வாய் சனிதிங்கள் அருக்கன் நண்டில்**
**ஏறிய மதிமால் வெய்யோன் புகர்மதி இரவு காரி**
**பாறிய புகர்சேய் கன்னி பொன்சனி அருக்கன் செவ்வாய்.** 303

இ-ள் : மேடத்தில் முதல்கால் செவ்வாய், இரண்டாம் கால் புதன், மூன்றாம் கால் வெள்ளி, நான்காம் கால் திங்கள்; இடபத்தில் முதல்கால் சனி, இரண்டாம் கால் வியாழன், மூன்றாம் கால் செவ்வாய், நான்காம் கால் வெள்ளி; மிதுனத்தில் முதல்கால் செவ்வாய், இரண்டாம் கால் சனி, மூன்றாம் கால் திங்கள், நான்காம் கால் ஆதித்தன்; கடகத்தில் முதல்கால் திங்கள், இரண்டாம் கால் புதன், மூன்றாம் கால் ஆதித்தன், நான்காம் கால் வெள்ளி; சிங்கத்தில் முதல்கால் ஆதித்தன், இரண்டாம் கால் சனி, மூன்றாம் கால் சுக்கிரன், நான்காம் கால் செவ்வாய்; கன்னியில் முதல்கால் வியாழன், இரண்டாம் கால் சனி, மூன்றாம் கால் ஆதித்தன், நான்காம் கால் செவ்வாய் என்றவாறு.

**செவ்விய துலையில் வெள்ளி மதிசேய்மால் தேள்சேய் காரி**
**வெவ்வெயில் குருவில் சேய்மால் வெயில்குரு மகரம் பொன்னம்**
**எவ்வமில் காரி தேரோன் சனிகுடம் புகரோன் இந்து**
**தவ்வமில் கதிர்மால் மீன்பொன் சனிரவி பொன்த றிக்கால்** 304

இ-ள் : துலாத்தில் முதல்கால் வெள்ளி, இரண்டாம் கால் சந்திரன், மூன்றாம் கால் செவ்வாய், நான்காம் கால் புதன்; விருச்சிகத்தில் முதல்கால் செவ்வாய், இரண்டாம் கால் சனி, மூன்றாம் கால் ஆதித்தன், நான்காம் கால் வியாழம்;

தனுசுவில் முதல்கால் செவ்வாய், இரண்டாம் கால் புதன், மூன்றாம் கால் ஆதித்தன், நான்காம் கால் வியாழம்; மகரத்தில் முதல்கால் வியாழம், இரண்டாம் கால் சனி, மூன்றாம் கால் ஆதித்தன், நான்காம் கால் சனி; கும்பத்தில் முதல்கால் வெள்ளி, இரண்டாம் கால் திங்கள், மூன்றாம் கால் ஆதித்தன், நான்காம் கால் புதன்; மீனத்தில் முதல்கால் வியாழன், இரண்டாம் கால் சனி, மூன்றாம் கால் சனி, நான்காம் கால் வியாழம் என்றவாறு.

## இராசி நிலை

**காதுசேர் மறிசெக் கீழ்பால் தென்கீழ்க் கடகம் சிங்கம்**
**தீதிலா தெற்குத் தென்மேல் சேயிழை கோல்தென் மேற்கு**
**மாதனு வடமேல் மிக்க மகரஞ்சால் வடக்கு மீனம்**
**ஓதிய வடகீழ் நிற்ப துண்பது உண்டாம் ஓரை. 305**

இ-ள் : மேடமும் இடபமும் கிழக்கு நிலை, மிதுனம் - தென்கிழக்கு, கற்கடகமும் சிங்கமும் தெற்கு, கன்னி- தென்மேற்கு, துலாமும் விருட்சிகமும் மேற்கு, தனுசு- வடமேற்கு, மகரமும் கும்பமும் வடக்கு, மீனம்-வடகிழக்கு நிலை என்பது.

## ஊட்டுக் கொள்ளும்படி

மேடம் முதலான இராசிகள் எல்லாம் தந்தமதில் கடைக்காலை உண்ணும். இரண்டாம் கால் மூன்றாங்காலை உண்ணும், மூன்றாங்கால் இரண்டாம் காலை உண்ணும். நாலாங்கால் முதற்காலை உண்ணும். இப்படி மற்ற இராசிகளும் உண்ணும். கீழ்க்காலும் இப்படி உண்ணும் என்றவாறு.

## இராசி நோக்கு, கவிப்பு

**ஓரைபன் னொன்றொன் பானேழ் சந்திர உபய நோக்கும்**
**சார்கவிப் புதய மாதி இரண்டரை கடிகை தன்னை**
**நாரிதான் கவிக்கும் பின்னை இடைமுதல் அடவே நண்ணும்**
**மார்புகர் பொன்மேல் மேதை மதியிடை புவக்கோள் எல்லாம். 306**

*இ-ள் :* சர இராசிகளெல்லாம் பதினோராம் இராசியை நோக்கும், ஸ்திர இராசிகள் ஒன்பதாம் இராசியை நோக்கும், உபய இராசிகள் ஏழாம் இராசியை நோக்கும், மேடத்தில் முதல்கால் கும்பத்தில் நாலாங்கால் ¼ நோக்கும், இரண்டாம் கால் மூன்றாம் காலை ½ நோக்கும், ஒழிந்தவையும் இப்படியே நோக்கும் என்பது.

*கவிப்புக் கொள்ளும்படி :*சிறுகாலே யாதொரு இராசி உதிப்பது இரண்டரை நாழிகை அவ்விராசி தன்னைத் தானே கவிக்கும். இரண்டாம் இராசி இரண்டரை நாழிகை இரண்டாம் இராசியைக் கவிக்கும். இப்படி பன்னிரண்டு இராசியையும் முப்பது நாழிகை கவிக்கும் என்பது. இவையெல்லாம் இடமே வந்து கவிக்கும் என்பது.

*உதய கவிப்பு :* வினவினவன் நின்ற இராசி ஆருடம் என்று அறிவது, அப்போது உதிக்கின்ற இராசியை உதயம் என்று அறிவது.

உதய கவிப்பு , ஆருடக்கவிப்பு முற்றும்.

## உச்சக்கோள், இடைநிலைக்கோள், பூமிக்கோள்

வெள்ளியும், வியாழமும் உச்சக்கோள்கள் என்பன. புதனும், சந்திரனும் இடைநிலைக்கோள்கள் என்பன. சனியும், செவ்வாயும், பாம்பும், ஆதித்தனும் பூமிக்கோள் என்று அறிவது. இவ்வாறாலே உச்சத்திலே கேட்டது, பூமியிலே கேட்டது, மற்றுள்ளவையும் இப்படியே பார்த்துச் சொல்வது.

உச்சக்கோள், இடைநிலைக்கோள், பூமிக்கோள் முற்றும்

## இராசிகளின் சாதி

**புவிபுகழ் மீன்தேள் நண்டு பொன்மதி மறையோன் சிங்கம்**
**குவிமறி விற்சேய் தேரோன் கொற்றவன் மிதுனம் கோல்சால்**
**நவில்புதன் வணிகன் குண்ட நாரியாம் மகரம் வெள்ளி**
**பவனிவே ளாளன்காரி பஞ்சமன் புலையன் பாம்பே** 307

இ-ள் : மீனம், விருட்சிகம், கற்கடகம், வியாழன், திங்கள் இவை பிராமணன். சிங்கம், மேடம், தனுசு, செவ்வாய், ஞாயிறு இவை சத்திரியன். மிதுனம், துலாம், கும்பம், புதன் இவை வைசியன். இடபம், கன்னி, மகரம், வெள்ளி இவை சூத்திரன். சனி பஞ்சமன், பாம்பு புலையன் என்று அறிவது.

இராசிகளின் சாதி முற்றும்

**இராசிகளின் நிறம்**

பாம்புசனி சுறவு வீணை பைந்தொடி கறுப்பு மேதை
தேம்புமீன் குடம்தேள் பச்சை மதிதிங்கள்வெங் கதிரோன் சுங்கன்
தாம்பனை விடைகோல் நன்று வெள்ளைசேர் தகர்வில் சிங்கம்
பாம்புகழ் சிவப்புக் சீவன் இறைவன்பொன் நிறமே சொல்லாய் 308

இ-ள் : பாம்பு, சனி, மகரம், கன்னி இவை கறுப்பு. புதன், மீனம், கும்பம், விருட்சிகம் இவை பச்சை. திங்கள், ஞாயிறு, வெள்ளி, இடபம், துலாம், கடகம் இவை வெள்ளை. செவ்வாய், மேடம், தனுசு, சிங்கம் இவை சிவப்பு. வியாழன் பொன்னிறம், இப்படி நிறம் சொல்லுவது என்றவாறு.

**கிரகங்களின் அளவு, மருக்கள்**

இனியபொன் புந்தி நாகம் நெடியவர் இந்து செவ்வாய்
சனிகுறி அருக்கன் சுங்கன் சமனன் மருவ டுக்கள்
பனிமதி தலைசேய் பின்பு பார்க்கவன் முகம்தோள் பைம்பொம்
வனிதைமால் கைக்கீழ் வெய்யோன் மருங்கார மந்தன் காலே. 309

இ-ள் : வியாழன், புதன், பாம்பு நெடியது. திங்கள், செவ்வாய், சனி குறியது. ஞாயிறு, வெள்ளி சமனளவு, இவற்றின் மருக்கள் : சந்திரனுக்குத் தலையிலேயும், செவ்வாய்க்கு முதுகிலேயும், வெள்ளிக்கு முகத்திலேயும், வியாழத்துக்கு தோளிலேயும், புதனுக்குக் கைக்கீழும், ஞாயிறுக்கு மருங்கிலும் பாம்பு, சனிக்கு காலிலே மரு உண்டு.

## இராசி, கிரகங்களின் கால்கள்

காலிரண் டருக்கன் காரி கன்னிகோல் மிதுனம் கும்பம்
நாலுள சேய்பொன் குண்டை நற்சிலை சிங்கம் மேடம்
கால்பல வெள்ளி பாம்பு கடகந்தேள் சிறகே காலாம்
சேல்சுறா இரண்டும் திங்கள் புதனறு கால்கள் செப்பே. 310

இ-ள் : ஞாயிறு, சனி, கன்னி, துலாம், மிதுனம், கும்பம் இவை இருகால் சீவன்; செவ்வாய், வியாழம், இடபம், தனுசு, சிங்கம், மேடம் இவை நாற்கால் சீவன்; மீனம், மகரம் இவை சிறகே காலாக உடையவை; திங்கள், புதன் அறுகால் சீவன் என்று சொல்வது.

இராசி, கிரகங்களின் கால்கள் முற்றும்.

## தாது, மூல, சீவன்

செப்பிய தறிக்கால் மேடம் முதலோரை தினமும் ஒன்பான்
தப்பறத் தாது மூலம் சீவனென் றடவே சாற்றும்
ஒப்பிலா போக்கு நிற்ப வருவன முன்போ லாகும்
ஒப்பிலா ஓரை வாரம் ஆண்பெண்ணென் றடவே ஓதே. 311

இ-ள் : மேடம் முதலான இராசிகள் பன்னிரண்டும் தாது, மூல, சீவன் என்று அடவே ஒட்டுவது. தறிகால் நாற்பத்தெட்டையும் மேடம் முதற்கால் இப்படியே ஒட்டுவது. அசுவ தி முதல் இருபத்து ஏழு நாளையும் இப்படியே ஒட்டுவது, கழிகாலம், நிகழ்காலம், வருங்காலம் என்று இவ்வடைவே ஒட்டுவது. ஞாயிறு முதலான கிழமை களையும் மேடம் முதலான இராசிகளையும் ஆண்-பெண் என்று ஒட்டுவது.

ஓதிய கதிர்கள் முப்ப தறிக்கால்கோள் மதிக்கு நாலேழ்
சேய்தனக் கெட்டு மேதைக் காறுசெம் பொன்னுக் கொன்பான்
ஏதமில் வெள்ளிக் கேழு சனிக்குமூன் றராவி ரண்டு
கோதிய கதிராம் தூரம் இடையுறு உருவும் ஓதே. 312

இ-ள் : ஆதித்தனுக்குக் கதிர் 30, திங்களுக்கு 28, செவ்வாய்க்கு 8, புதனுக்கு 6, வியாழத்துக்கு 9, வெள்ளிக்கு 7, சனிக்கு 3, பாம்புக்கு 2, ஓதிய என்றமையால் தந்த மாட்சியில் சொன்னவை நட்பில் நாலத்தொன்று குறையும். பகை, நீசத்தில் ஒன்று, முக்கால் குறையும். உச்சத்தில் பத்திலொன்று குறையும். இவற்றில் நடையும் உருவும், வரும் நாளும், பொருளும், மானமும், வயதும் மற்றும் எல்லாம் சாரித்துச் சொல்லுவது.

தறிக்கால் முற்றும்.

## கிரக நவலோகம்

ஓங்கிய அருக்கன் பஞ்ச லோகமொண் திங்கள் ஈயம்
தீங்கிலா வெண்கலம் சேய்செம்பு புதன்தரா வியாழம் செம்பொன்
பாங்குடை வெள்ளி வெள்ளி சனிபணி இரும்பு கல்லாம்
பூங்குழல் மடவாய் ! கோள்கள் தாதுவைப் பொருந்தும் போதே. 313

இ-ள் : ஆதித்தன் தாதுவாய் வந்தபோது பஞ்ச உலோகம் என்பது. சந்திரன் வரில் ஈயம், வெண்கலம். செவ்வாய் வரில் செம்பு. புதன் வரில் தரா. வியாழன் வரில் பொன். வெள்ளி வரில் வெள்ளி. சனி, பாம்பு கல் என்றும் இரும்பென்றும் சொல்லுவது.

தாது முற்றும்.

## கிரகமூலம்

பொருந்திய மூலம் வெய்யோன் மலைமரம் மதிபூ வாழை
இரும்புசேய் தூறு மேதை படர்வன் வியாழம் புன்னை
கரும்புசெண் பகமாம் வெல்ளி கிழங்கொடு கொடிபூக் காரி
இரும்பனை மஞ்சள் இஞ்சி இராகுவெற் றிலைமுடத் தூரே. 314

இ-ள் : ஆதித்தன் மூலமாய் வந்தபோது மலைமரம் வைரமாம்; திங்கள் பூவாழை; செவ்வாய் சிறுதூறு; புதன் படர்வன; வியாழன் புன்னை, கரும்பு, செண்பகம்; வெள்ளி கிழங்கு, கொடி, பூ; சனி பனை, மஞ்சள், இஞ்சி, இராகு வெற்றிலை முடத்தூறு (முள்ளுடையவை) என்று சொல்வது.

## கிரக மூலதாது

தூய்சுடர் மூலதாது வைக்கோலை சோமன் புல்லு
தீய்ச்செவ்வாய் வரகு சாமை தினைமேதை இலைகோல் செம்பொன்
காய்ச்சநெல் கடலை கூரை வெள்ளிகொள் கடுகு சோறு
மாய்ச்சனி மிளகு முள்ளெள் கரியனக் கயறு மாதே. 315

இ-ள்: ஆதித்தன் மூலதாதுவாய் வந்தபோது வைக்கோல், ஓலை முதலானவை என்பது; சந்திரன் புல் என்பது; செவ்வாய்க்கு வரகு, தினை, சாமை என்பன; புதன் இலை, கோல் என்பன; வியாழன் நெல், கடலை, புடலை என்பன; வெள்ளி கொள்ளு, கடுகு, சோறு என்பன; சனி மிளகு, முள், எள் என்பன; பாம்பு கயிறு என்பது.

## கிரக மிருகம்

மாதராய் ! களிறு வெய்யோன் மதிபரி செவ்வாய் ஆடு
மேதகன் எருது வேந்தன் வெள்ளிகோள் எருமை காரி
தாதராக் காட்டில் நாற்கால் இருகால்கோள் வலிதே மாந்தர்
ஓதிய புவிக்கோள் மிஞ்சில் ஊர்வன பறவை உச்சம். 316

இ-ள் : ஆதித்தன் சீவனாய் வந்தபோது ஆனை, மதி, பதி முதலானவை என்க; திங்கள்-குதிரை முதலான கொம்பு இல்லாதவை; செவ்வாய்-ஆடு முதலானவை; புதன் - கன்றுகள்; வியாழன் - எருது; வெள்ளி - பசு, சனி - எருமை, ஊர்பன்றி, நாய்; பாம்பு காட்டில் வாழும் மிருகங்கள் என்பது. இருகால் கோள் வலிதாக வந்தபோது மனிதர் சீவன் என்பது. பூமிக்கோள் வலிதாய் வந்தால் ஊர்வன, தவழ்வன என்பன. உச்சக்கோள் வலிதாய் வந்தபோது பறவை என்பது.

## சீவ தாது

பறைதரு சீவ தாது பகலவன் உகிர்தோல் திங்கள்
பொறைதரு முத்து நத்தை பூமன்மற் றியஊன் புந்தி
இறகொடு பீலி வேந்தன் புழுகுகஸ் தூரி வெள்ளி
அறையும்வெண் சாம ரங்கள் சனிமயிர் அரவு கொம்பே. 317

இ-ள் : ஆதித்தன் சீவதாதுவாய் வந்தபோது உகிர், தோல் முதலானவை; சந்திரன் - முத்து, நத்தை, பலகறை முதலானவை; செவ்வாய் - உலர்ந்த மாமிசங்கள்; புதன் - இறகு பீலி; வியாழன் - புனுகு, கஸ்தூரி என்க. வெள்ளி - வெண்சாமரை, எலும்பு; சனி - மயிர்; பாம்பு - கொம்பென்று சொல்லுவது. இவையெல்லாம் நட்பு, ஆட்சி, உச்சம், பகை, நீசங்களினாலே வலிபார்த்து தாது, மூல சீவன்கள் நிச்சயிப்பது.

**கிரக வடிவு**

கொம்பனாய் ! கதிர்நான் மூலை மதிவட்டம் துடிசேய் கூர்மால்
வெம்புமுக் கோணம் வேந்தன் நீள்வட்டம் வெள்ளி எண்கோண்
நம்பிய சனியில் பாம்பு நெடிதுறு புகரில் சேரில்
அம்பனூர் புகரூர் மதிநீர் அறிவன்வீ டல்லார் காடே. 318

இ-ள் : ஆதித்தன்-நாலு மூலை; சந்திரன்-வட்டம்; செவ்வாய்-துடி; புதன்-முக்கோணம்; வியாழன்-நீள்வட்டம்; வெள்ளி-எண்கோணம்; சனி-வில் போன்றிருக்கும்; பாம்பு நெடிது என்ப. இவையால் கேட்ட உருக்களின் பேர் சொல்லுவது. சேர்விடம் சொல்லுவது. வியாழம் ஊருக்குள்ளும்; வெள்ளி, திங்கள் நீருக்குள்ளும்; புதன் வீட்டுக்குள்ளும்; செவ்வாய், சனி, ஞாயிறு காட்டுக்குள்ளும் என்பது.

**கிரகங்கள் சேருமிடம்**

காடுநன் நிலம்ஊர் ஏரி கருமலை சிற்றூ ராறு
நாடிய கிணறு தோட்டம் நதிக்கரை கயமுந் நீர்கள்
மேடம்முன் கயலீ ராக உறைவிடம் தீக்கோள் மிஞ்சில்
கேடது காணா நற்கோள் மிஞ்சிடில் கெடுதி போகா. 319

இ-ள் : காடு, விளைநிலம், ஊர், குளம், மலை, சிற்றூர், ஆறு, கிணறு, தோட்டம், ஆற்றங்கரை, கயம், முந்நீர்கள் (கடல்) இவை மேடம் முதலாகச் சேர்விடம் சொல்வது. தீக்கோள்கள் மிஞ்சில் காணாது. நற்கோள் மிஞ்சில் காணலாம் என்று சொல்வது.

## சிரோதய, பிருட்டோதய இராசிகள்

போகமார் கன்னி கோல்தேள் பொங்கரி மிதுனம் கும்பம்
வேகமார் தலையெ ழுச்சி விலங்குமீன் மகரம் பின்னால்
மோகிடார் கெடுதி பாடு உதயமும் இரண்டு நோக்கில்
தோகையாய் ! ஒன்றேல் பின்பு தொன்றுநோக் கிலதோன்றா.320

இ-ள் : கன்னி, விருட்சிகம், துலாம், சிங்கம், மிதுனம், கும்பம் இவை தலையால் எழுச்சி. மீன், மகரம் விலங்கு நோக்கம் இல்லாதவைப் பின்னுதயமும் பாடும் சிரோதயமாகில் கெடுதி காணும். ஒன்று நோக்கில் சிரோதயமாகில் பின்பு தோன்றும். பின்னுதயமாகில் கெடுதி காணாது என்றவாறு.

## களவு அறிய

தோன்றிய உயிர்கள் பேர்கள் எழுத்தெல்லாம் தூய்தாய் எண்ணி
மூன்றுடன் மூன்றைத் தாக்கி முன்சென்ற ஓரை கூட்டி
ஊன்றிய பேருக் கீய்ந்தால் ஒக்குமேல் இல்லை சேடம்
தோன்றுமேல் அப்பேர் கள்ளன் வாரத்தால் துணிந்து சொல்லே. 321

இ-ள் : ஆயித்த பேரில் எழுத்தை எல்லாம் எண்ணி, ஆறில் பெருக்கில் உதயாதி சென்ற இராசியும் கூட்டி எட்டு பேருக்கு ஈய்ந்தல் ஒத்ததாய் இல்லை பேர் கள்ளரல்லர். சேடம் உண்டாகில் சேடம் எத்தனை என்று அறிவது. அத்தனையாம் பெயர் கள்ளர் என்பது. "வாரத்தால் துணிந்து சொல்" என்றவதனால் அவ்வீயாத சேடம் எத்தனையாங் கிழமைக்குச் சொன்ன குணங்கள் அவனுடைய இடத்தில் உண்டாகில், அவன் கள்ளனாகத் துணிவான் என்பது "தோன்றிய" என்றவதனால், அப்பொழுது உதிக்கிற நாளை அறிந்து, கார்த்திகை முதல் மூன்றும் புகுநாள் என்றும், அதற்குப்பின் மூன்றும் போனநாள் என்றும் இப்படி இருபத்து ஏழுநாளும் பார்த்துப் பகுநாளாகில் இந்தப் பேரிலே உண்டென்பது. ஊன்றிய பேர் என்றவதனால் ஈய்ந்து பெற்ற சேடம் ஏழால் கழித்து நின்ற சேடம் முற்ற கிழமைக்கு உடையானைக் கள்ளர் என்பது.

சொல்லிடில் முட்டி வெய்யோன் தோல்மரம் சோமன் நீரில்
புல்லிய சேய்தீ வேந்தன் புந்திபச் சிலைபொன் செங்கல்
நல்லவான் புகர்ப ளிங்கு மணல்சனி கரிமண் நாகம்
கல்லுடன் விதைவேர் மற்றும் முன்புபோல் கண்டு கொள்ளே. 322

*இ-ள்: ஆதித்தன்-தோல், மரம்; சந்திரன்-நீரில் வாழ்வன; செவ்வாய்-நெருப்பில் வெந்தது; புதன்-பச்சிலை; வியாழன்-செங்கல் பொடி; வெள்ளி-பளிங்குமணல்; சனி-கரி, மண்; பாம்பு-கல், விதை, வேர் மற்று முன்பு சொன்ன தாது, மூல, சீவ வகையை அறிந்து சொல்லுவது.*

## சிந்தனை

கண்டசிந் தனைபு விக்கோள் வலிதோன்ற புவியென் காதல்
மண்டியல் இடைநி லைக்கோள் வலிதெனில் இடையென் மற்றை
அண்டசிந் தனையே உச்சக் கோள்வலி தென்னில் ஆங்கே
வண்டுபோல் தாது மூலம் சீவன்கள் உணர்ந்து பாரே. 323

*இ-ள்: பூமிக்கோள் வலிதாகில் பூமி சிந்தனை என்றும், இடைநிலைக்கோள் வலிதாகில் இடையில் சிந்தனை என்றும், உச்சக்கோள் வலிதாகில் ஆகாய சிந்தனை என்றும் இன்னவகை அறிந்து முன்போல் தாது, மூல, சீவன் பார்த்துச் சொல்லுவது.*

பால்மதி முகூர்த்தம் சேய்நாள் பதினைந்தாம் வெள்ளி பைம்பொன்
மேலொரு திங்கள் மேதை இரண்டாறு திங்கள் வெய்யோன்
நீலனாண் டொன்று காலம் நினைத்திடும் கர்மம் எல்லாம்
சாலவும் நன்று நற்கோள் வலியவேல் தவறாம் தீக்கோள். 324

*இ-ள்: முடியும் முடியாது என்று கேட்ட பொருளுக்குக் காலம் சொல்லும்படி, சந்திரனுக்கு ஒரு முகூர்த்தம்; செவ்வாய்க்கு ஒரு நாள்; வெள்ளிக்குப் பதினைந்து நாள்; வியாழத்துக்கு ஒரு மாதம்; புதனுக்கு இரண்டு மாதம்; ஆதித்தனுக்கு ஆறு மாதம்; சனிக்கு ஓராண்டு என்று. காரிய சிந்தனைக்கு நற்கோள் வலிதாகில் நன்றென்றும், தீக்கோள் வலிதாகில் தீதென்றும் கொள்வது.*

## பிறந்த நாள் அறிய

கோதிலா ரூடம் தன்னிற் குறித்ததற் கைந்தொன் பானில்
மாதவர் பிறந்த நாட்கள் வருமதில் வகுத்தோன் எண்ணி
ஓதிய சரங்கள் வாமந் திரம்வல உபயம் செவ்வேள்
ஏதமில் சரமே முந்நாள் இடங்கடை இடநாள் மற்றே. 325

இ-ள்: பிறந்த நாள் சொல்லும்படி வினவினவன் ஆருட இராசியிலும் அதற்கு ஐந்தாம் இடத்திலும் ஒன்பதாம் இடத்திலும் கண்டுகொள்க. இவை மூன்றிலும் ஒன்று நிச்சயிக்கவேண்டில், வினவினவன் இடபால் உற்றிருக்கில் சர இராசி என்றும், வலபால் உற்றிருக்கில் திர (ஸ்திர) இராசி என்றும், செவ்வே இருக்கில் உபரய இராசி என்றும், அவ்விராசியில் இந்நாள் என்று அறிய வேண்டில் சர இராசியில் முதல் நாள் என்றும், திர இராசியில் கடைநாள் என்றும், உபய இராசியில் நடு நாள் என்றும் சொல்வது.

## அட்சரமும், தெய்வமும், யோனியும், பதாகையும்

மற்றமுற் கதிர்சேய் பொன்மால் புகர்சனி மதிபால் பீறாய்
முற்றிகை முதலாய் நாடி ஏழரை முறையில் பேறும்
சொற்றதிற் பாதி யோனி கொடியதில் பாதி தெய்வம்
மற்றகா ராதி ஈரெட் டெழுத்திரண் டரையில் பேறும். 326

இ-ள் : கிழக்கு-ஞாயிறு; தென்கிழக்கு-செவ்வாய்; தெற்கு-வியாழன்; மேற்கு-புதன்; தென்மேற்கு-வெள்ளி; வடமேற்கு-சனி; வடக்கு-சந்திரன்; வடகிழக்கு-பாம்பு. இவர்கள் இந்தத் திக்குகளிலே நின்று ஏழரை நாழிகையில் பேறும் என்பது. யோனியும் பதாகையும் மூன்றே முக்கால் நாழிகையில் பெயரும். தெய்வம் ஒண்ணே முக்கால் அரைக்கால் நாழிகையில் பெயரும்.

*அட்சரம் :* அ, ஆ-கிழக்கு; இ, ஈ-தென்கிழக்கு; உ, ஊ-தெற்கு; ரு, ரூ-தென்மேற்கு; லு, லூ-மேற்கு; ஏ, ஐ-வடமேற்கு, ஓ, ஔ-வடக்கு; அம், அஹ-வடகிழக்கு. இவை இரண்டரை நாழிகையில் பெயரும்.

இவர்களெல்லாம் நின்ற நிலையிலேயே நிற்கில் கள்ளரும் கேட்டளவும், காரியம் கொள்ளப்போவாரும் உளரே என்பது. இவர்கள் பெயரில் பெயர்ந்த திக்கிலே போம் என்பது.

*இராகு ஓடும்படி :* கற்கடகம் முதல் சிங்கம் ஈறாக ஒரு இராசிக்கு இரண்டரை நாழிகையாக்கி, உதய முதலிடமே ஓடும். இப்படி இராசியும் தறிக்காலும் அறிந்து தாது, மூல, சீவன் பார்த்துச் சொல்வது. நட்டம் தப்பாமல் சொல்லுவது.

## அட்சரமும், இராகு ஓட்டமும்

போரெழுத் தொருபத் தெட்டில் பெரியசேய் புகர்மால் பொன்சுன்
சூரியன் மதிஇ ராகு கேதுவென் றிவர்க்குச் சேரார்
தோரிரண் டொருவ ருக்கு உரகநண் டாதி வாரம்
சாருமை அரையா நாடி அறிநட்டம் தறிக்கால் தன்னால். 327

இ-ள் : க, ங-செவ்வாய்; ச, ஞ-வெள்ளி; ட, ண-புதன்; த, ந-வியாழன்; ப, ம-சனி; ய, ர-ஆதித்தன், ல, வ-சந்திரன்; ழ,ள-இராகு; ள, ன-கேது. இவ்வட்சரங்களிலே கோள்களுக்கு என்றும், இவர்கள் நின்ற திக்குகளுக்கும் என்றும் அறிவது. இவ்வட்சரங்களால் கேட்ட உருக்கள் பெயரும், காரியம் கொள்ளப் போவார் பெயரும் அறிவது.

*இராகு ஓடும்படி :* உதயாதி முதலாக ஒரு இராசிக்கு இரண்டரை நாழிகையாகக் கடகம் முதல் சிங்கம் ஈறாக இடமே ஓடும் என்று அறிவது. இந்த இராசியும் தறிக்கலும் அறிந்து, இதனால் தாது மூல சீவன்களும் நிச்சயித்து நட்டங்கள் எல்லாம் தப்பாமல் சொல்வது.

## கீழ் நீர் இராசி

காலமான் தலையே கேட்டை அத்தம்முதல் நான்கு தோணி
மேலுமூன் றறிவர் முன்மூன் றிருபூசம் ஆயில் சால
சேல்சுறா விடைநண் டிந்து புகரராச் செழுநீ ருண்டாம்
நாலுதை யாரு டத்து நற்கோள்கள் நன்மை சாற்றே. 328

இ-ள் : மிருகசீரிடம், கேட்டை, அத்தம் முதல் நான்கும், திருவோணம் முதல் மூன்றும்; புனர்பூசம், பூசம், கும்பம், துலாம், மீனம், மகரம், இடபம், கடகம் இந்த இராசிகளும்; திங்கள், வெள்ளி, பாம்பு இக்கோள்களும் நீர் உண்டு என்பது. அல்லாதவை நீரில்லை என்பது. சொன்ன உதய ஆருடக் கவிப்புகளாலும் இவற்றில் சுபக்கிரகங்கள் நிற்பினும் நோக்கினும் உதய ஆருடங்களுக்கும் நான்காம் இராசியிலும் பெருக்க, நீர் உண்டு என்பது. இவற்றில் பாப கிரகங்கள் நிற்கில் நோக்கில் நீர் இல்லை என்பது. கவிப்பு இராசி சல இராசியாகில் மேலூற்று என்பது. அல்லாதவை கீழ் ஊற்று என்பது. ஊற்றுக்கும் கோளுக்கும் இராசிக்கும் அடைத்தத் திக்கிலேயே என்பது. அல்லாதவை கீழ் உற்று என்பது. ஆறு, நீர் வரவுக்காலெல்லாம் உதய ஆருடத்திற்கு ஏழாம் இராசியிலே பலன் சொல்வது. மழைக்குப் பத்தாம் இராசியாலே பலன் சொல்லுவது. இச்சொன்ன சல இராசி சலக்கிரகமாகில் மழையுண்டு என்பது என்றவாறு.

**சார்கதிர் சுடரீ ரெட்டுச் சந்திரன் நாலு சேய்பத்**
**தேள்புத னொன்பான் ஏழ்பொன் புகரைந்து சனிமூ வேழாம்**
**மூரரா ஒருபத் தைந்தாம் உச்சம்சாண் முழமாம் ஆட்சி**
**பாரிலான் மட்டு நட்பாம் பகைநீசம் தூரம் பாவாய் !** 329

இ-ள் : ஆதித்தனுக்குக் கதிர்-16; சந்திரனுக்கு-4; செவ்வாய்க்கு-10; புதனுக்கு-9; வியாழனுக்கு-7; வெள்ளிக்கு-5; சனிக்கு-2; பாம்புக்கு-15 கதிர் என்பது. இக்கதிர்கள் கிரகங்கள் உச்சத்தால் நிலத்திற்குச் சாண் என்றும்; ஆட்சிக்கு முழம் என்றும்; நட்புக்கு ஆள்மட்டம் என்றும்; பகை நீசத்தால் தூரம் என்றும் சொல்வது. நற்கோள் வரில் வெட்ட எளிதென்றும் தண்ணீர் நல்லது என்றும் சொல்வது. தீக்கோள் வரில் பாறை என்றும் தண்ணீர் உவர்ப்பென்றும் சொல்லுவது என்றவாறு.

## பூமி சல்லியம்

**பாரறை நாலே ழிற்றே பனைவைத்துப் பன்னேழ் நாள்சூழ்ந்**
**தேர்வல தென்மேற் கீசன் முதல்வடக் கொருநாட் கெண்ணிச்**
**சீர்மிக மிதுன மேற்காம் தெற்கொடு கிழக்கும் எண்ணி**
**நீர்மதி நின்ற நாட்பின் நிருதியேமேல் நிறுத்து வட்டம்.** 330

இ-ள் : சிறுகாலே மேற்கு நோக்கப் பார்த்திருந்த ஒத்த நிலத்திலே கீழ்மேலாக எட்டு ரேகையும், தெற்கு வடக்கு ஐந்து ரேகையுமாகக் கீறில் இருபத்தெட்டறையாம். இவ்வறைகளில் தென்கிழக்கு மூலையறையிலே அனுடத்தை நிறுத்தி வலமாக 17 நாள் அனுடம், கேட்டை, மூலம், பூராடம், உத்திராடம், அபிசித்து, திருவோணம், அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி, அசுவனி, பரணி முதல் நாளுமாக எண்ணித் தென்மேல் அறையிலே திருவாதிரையை நிறுத்தி புனர்பூசம், பூசம், ஆயிலியம் என்றெண்ணி, ஆயிலியத்துக்கு மேலறையிலே மகத்தை வைத்து தெற்கு நோக்கி மகம், பூரம், உத்திரம், அஸ்தம், சித்திரை, சோதி, விசாகம் என்றெண்ணி இருபத்தெட்டு நாளும் இருபத்து எட்டு அறையிலும் நிறுத்துவது.

வட்டமுன் மாலை வாயு வாரல்மேல் தன்பின் மாலை
நெட்டிரா நிறுத்தி முன்போல் நினைத்திரு சக்க ரத்தால்
வட்டநற் காலம் தோறும் திசைமாறி மதிமேல் தோன்றும்
மூட்டின வைத்துச் சோமன் உறவெண்ணில் நல்நீர் உண்டாம். 331

இ-ள் : இரா முன்பொழுது, பகல் முன்பொழுது கீறினாற்போலே கீறி, கிழக்கு நோக்கிப் பார்த்திருந்து, வடமேற்கு மூலையில் கார்த்திகை நிறுத்தி, முன்போல் எண்ணிக்காண்பது. இராப் பின்பொழுது, பகல் பின்பொழுது கீறினார்போலே கீறிக் காண்பது. இப்படி நான்கு பொழுதும் எண்ணினால் சந்திரன் என்று பெயராம். அப்பொழுது சந்திரனிலே உதிக்கிற இராசியை சந்திர உபயம் என்று அறிவது. அவற்றில் பிரதானமான முழு நாட்களில் ஒன்றை நிறுத்தி, அன்று சந்திரன் நின்ற நாளளவும் பெருநீர் என்று அறிவது. இராகு நின்ற நிலையளவு முன்போல் எண்ணிப் பழங்கிணறு என்பது. வெள்ளி நீருண்டென்பது. வியாழன் நின்ற அளவு எண்ணி பூசல்லியம் என்று அறிவது. உத்திராடத்தின் பின்னே அபிசித்தை நிறுத்துவது. முன்பு சொன்ன அனுசம் முதலான நாட்கள் எல்லாம் 2¼ நாழிகை ஏறும் என்று அறிவது.

உண்டவப் பேர்க ளந்த வடிவேல்மேல் நாலே நிறுத்தித்
தான்பதி னாறுக் கீய்ந்தால் தலையோடுடன் பிட்டி கையாம்
கண்சுள்ளி தெய்வம் சாம்பல் கரிசவம் சாலி பொன்கல்
மண்டுகம் சொம்பு நாய்சால் மான்திரு விழியாய்த் தோன்றும். 332

இ-ள் : பூச்சல்லியம் வினவினபொழுது அடி அளந்து அவ்வடித் தொகையை மேலே இருபத்தெட்டுக் கூட்டிப் பதினாறுக்கீய்ந்தால் ஈயாத சேடம் ஒன்றாகில் தலையோடு; இரண்டாகில் எலும்பு; மூன்றாகில் இட்டிகை; நான்காகில் ஓடு; ஐந்தாகில் விறகு; ஆறாகில் தெய்வங்கள்; ஏழாகில் சாம்பல்; எட்டாகில் கரி; ஒன்பதாகில் பிணம்; பத்தாகில் தானியம்; பதினொன்றாகில் பொன்; பன்னிரண்டாகில் கல்; பதிமூன்றாகில் தவளை; பதினான்காகில் கொம்பு; பதினைந்தாகில் நாய்; பதினாறாகில் சால். இவ்வகையிலே பதினாறு பொருள்களையும் அறிவது. முன்பு கீறின சொன்ன சக்கரத்தாலே வினவின இடத்திலே கிடக்குது என்று சொல்வது.

### சந்திர கதி

தோன்றிய மேட மாதி மீன்வடி வாகச் சோமன்
ஏன்றபோக் கிருப்புப் பூசல் எழில்மறை பயிற்றல் பிள்ளை
ஊன்றுநோய் வெறுப்பே கேடு பசிவினை உறக்கம் ஊணாம்
வான்றவன் மதிகு ணத்தால் வரும்பலன் அறிந்து சொல்லே. 333

இ-ள் : மேஷத்தில் நடை, இடபத்தில் இருப்பு, மிதுனத்தில் பூசல், கற்கடகத்தில் வேதம் ஓதல், சிங்கத்தில் சிறுபிள்ளை, கன்னியில் நோய், துலாத்தில் வெறுப்பு, விருச்சிகத்தில் கெடுதி, தனுவில் பட்டினி, மகரத்தில் அனுபோகம், கும்பத்தில் உறக்கம், மீனத்தில் ஊண். யாதொருவன் காரியம் வினவினபோது சந்திர கதியைப் பார்த்து இதனால் உள்ள பலாபலன் சொல்லுவது.

### இரவியின் அங்கிச குணம்

வழித்திறம் படர அஞ்சான் வயிறுடல் பெரியன் கோபி
விழித்திற மாகச் செய்வன் மெய்மையன் தூயன் சத்த
அழிபெரும் போகி செல்வன் அனையமோ வரய நண்பன்
பழிப்பிலான் சுருண்டு நீண்ட பங்கயன் பருதிக் காலான். 334

### *ஆதித்தன் அங்கிசத்தான் குணம்*

*இ-ள் : யாத்திரை போகவேண்டி இருப்பன், வயிறும் சரீரமும் பெரியன், கோபி, சிவப்புள்ள கண்களையுடையவன் மேனியும் சிவப்பன், சத்தியவானாவான், சத்த (சப்த) போகத்தை உடையவன், செல்வன், செயமோவரயன், அன்பன், சோதியன், அழகிய மயிர் சுருண்டு நீண்டிருக்கும் என்பது.*

### சந்திரன் அங்கிச குணம்

காந்தனன் முகத்தில் வங்கன் கண்சிறி தயமோ வாயன்
சேர்ந்தவர்க் கன்பன் நயந்தன் செய்நன்றி குறளன் செல்வன்
வாய்ந்தமா நிறவன் வார்த்தை நிலையிலான் மயிர்நீண் டையன்
தோய்ந்திடும் நீரில் தங்கும் சோமனங் கிசத்து னானே. 335

### *சந்திரன் அங்கிசத்தான் குணம்*

*இ-ள் : அழகன், முகத்தில் மருவன், கண் சிறியன், மோவாயன், அடுத்தவர்க்கன்பன், சோதி, மந்தன், செய்நன்றி உடையன், குறளன், சீமான், மாநிறவன், வார்த்தை நிலையில்லான், தான் நீண்ட மயிரன், எப்பொழுதும் குளிப்பன், பின் மனத்தான் என்பது.*

### செவ்வாயின் அங்கிச குணம்

அஞ்சிடான் கடுஞ்சொ லாளன் அரும்பொருள் அற்பன் கோபி
வெஞ்சமர் விரும்பிச் செய்யன் மேதினி திருத்தும் மெய்யன்
வஞ்சகன் உலோபி சற்றூண் மருவுடை முதுகன் தேசன்
விஞ்சிய கிலேசி வீரன் வெவ்வியன் செவ்வாய் காலன். 336

### *செவ்வாய் அங்கிசத்தான் குணம்*

இ-ள் : அஞ்சான், கடுஞ்சொல்லாளன், சீவனம் இல்லை, கோபி, பூசல் விரும்பும், நிறம் சிவப்பு, பூமி திருத்தும், வஞ்சகன், உலோபி, சற்றுண்பன், முதுகில் மருவுடையவன், பிரகாசி, எப்பொழுதும் துக்கப்படுவான், வீரன், செவ்வியன் என்றவாறு.

### **புதன் அங்கிச குணம்**

**செவ்வியன் தியாகி மோகி தெய்வங்கள் பேணும் சத்யன்**
**கைவரும் பாடல் ஞானி காளையன் கருதும் சூரன்**
**மெய்வரும் தருமென் தேசன் மேம்படு குணத்தன் அன்பன்**
**மைவரும் குழலாய் ! நன்றி மறந்திடான் மாலின் காலான்.** 337

### *புதன் அங்கிசத்தான் குணம்*

இ-ள் : செவ்வியன், சத்தியவாசகன், மோகி, தியாகி, தெய்வங்களைப் பேணுபவன், பாடவல்லவன், ஞானி, காளையக்காரன், சூரன், தர்மவான், நேசமுடையன், மேம்பாட்டுக் குணத்தான், நன்றி மறவாதவன் என்பது.

### **வியாழ அங்கிச குணம்**

**மாதவன் சுத்தன் தேசன் மந்திரி தருமன் செல்வன்**
**காதலர் பெருக நீண்ட கவ்வியன் சிவந்த கண்ணன்**
**நீதியன் இனிய சொல்லான் நீண்டமோ வாயன் ஐயன்**
**மேதகு அறிவன் பல்கால் குளித்திடும் வியாழக் காலன்.** 338

### *வியாழ அங்கிசத்தான் குணம்*

இ-ள் : தவமுடைய சுத்தன், தேசி, மந்திரி, தர்மவான், செல்வன், நிறை புத்தியும் பிள்ளைகளும் உடையவன், வித்துவான், சிவந்த கண்ணன், நீதியாளன், இனிய சொல்லன், சுகனமோவாயன், மிகவும் அறிவுடையவன், எப்பொழுதும் குளிப்பன் என்பது.

**வெள்ளி அங்கிச குணம்**

காதலன் வீரன் சூரன் காளையன் கருதும் தேசம்
ஓதுமெய் வடிவன் திண்ணன் உத்தமன் ஒழியாச் செல்வன்
பாதக மில்லா நெஞ்சன் பண்டிதன் பருத்த மெய்யன்
போதவான் செய்த நன்றி மறந்திடான் புகரின் காலன். 339

*வெள்ளி அங்கிசத்தான் குணம்*

இ-ள்: சிநேகி, வீரன், மகாசூரன், காளையமுடையவன், நேசம் உடையவன், ஓதும் வல்லவன், அழகியன், திண்ணியன், உத்தமன், தீர்க்கவான், சுத்தன், வித்துவான், சரீரம் பெருத்திருக்கும், புத்திமான், செய்நன்றி மறவாதவன் என்பது.

**சனி அங்கிச குணம்**

புகழிலான் பொய்யன் அஞ்சான் புறவடி பெரியன் ஊணன்
இகல்பெறு வயிறன் கள்ளன் இருந்தவன் குறளன் தோளன்
அகழியன் ஆடை பேணும் அரும்பொருள் அற்பம் ஈட்டும்
தகவிலன் காரியன் மெய்யன் சனியனங் கிசத்தான் தானே. 340

*சனி அங்கிசத்தான் குணம்*

இ-ள் : புகழ் இல்லான், பொய்யன், அஞ்சான், கால் தடித்திருக்கும், மிகவும் போசனப் பிரியன், வயிறு பெரியன், கள்ளன், மகாதபசு உடையவன், குறளன், தோள் வலியன், உலோபி, ஆடை விருப்பன், தரித்திரன், தயையிலான், நிறம் கருப்பன் இந்தக் குணங்களினாலே அறியாதவனையும் இன்ன அங்கிசத்தான் என்றும் கொண்டு போனாரையும் காரியம் கொள்ளப்போனோரையும் குலவகையால் அறிந்து சொல்வது என்றவாறு.

## கோசாரபலமும் திசாபுத்தி பலனும்

ஆன்றபன் னொன்றுமூன் றீரைந் தாறு
அருக்கன்மதி ஒன்றுமூன் றாறேழ் பத்தோ
டேன்றபதி னொன்றரவு சனிசேய் மூன்றே
இருமூன்றே பத்தொன்றுமா இரண்டு நான்கு
மூன்றிருவெட் டீரைந்து பன்னொன் றொன்பான்
மொழிந்திடுபொன் பதினொன்பான் ஏழைஞ்சி ரண்டாம்
மான்றபுகழ் பன்னொன்றீ ராறிரண் டொன்று
வருநான்கு மூன்றெந்தொன் பான்வருவர் வாழ்வே. 341

*இ-ள் : ஆதித்தன் பதினோராம் இடமும், மூன்றாம் இடமும், பத்தாம் இடமும், ஆறாம் இடமும் நல்லன். செனனமும் மூன்றாம், ஆறாம், ஏழாம், பத்தாம், பதினோராம் இடங்களில் சந்திரன் நல்லன். மூன்றாம், ஆறாம், பத்தாம், பதினோராம் இடங்களில் இராகுவும், சனியும் செவ்வாயும் நல்லர். இரண்டாம், ஆறாம், நான்காம், எட்டாம், பத்தாம், பதினோராம் இடங்களில் புதன் நல்லன். பதினோராம், பன்னிரண்டாம், இரண்டாம், எட்டாம் ஒன்றாம், நான்காம், மூன்றாம், ஐந்தாம், ஒன்பதாம் இடங்களில் வெள்ளி நல்லன் என்றவாறு*

## கிரக பலன்

வாடகதி ரோனைந்தொன் பான்நான்கீ ராறும்
மதியைந்தொன் பானீரா றிரண்டு நான்கெட்
டாடசனி சேய்ரவிரா றொன்பான் ஐந்தாம்
ஆம்புதன்ஐந் தொடுமூன்பா னொன்றெட் டீரா
ஊட்டியவீ ராறுஎட்டீ ரைந்துமூன்று நான்கோ
டீராறு புகர்மூன்றோன் விட்டீ ராறு
சேட்டீரம் சொன்றோ டொன்பான் வியன்ற
பதினொன்றில் கோட்கள் விடிற்கேள் வேதம். 342

### *கிரக வேதைகள் கொள்ளும்படி*

இ-ள் : முன்பு சொன்ன கோசார பலத்தில் ஆதித்தன் பதினோரம் இடத்தில் பலன் தருவது. ஐந்தாமிடம் சுத்தமாகில்

மூன்றாமிடத்தில் பலம் தரும். ஒன்பதாமிடத்தில் சுத்தமாகில், பத்தாமிடம் பலம் தரும். நான்காமிடம் சுத்தமாகில் ஆறாம் இடம் பலம் தரும். பன்னிரண்டாமிடம் சுத்தமாகிலும் என்று அறிவது. சந்திரன் ஒன்றாமிடம், மூன்றாமிடம், ஆறாமிடம், ஏழாமிடம், பத்தாமிடம், பதினோராம் இடங்களில் பலம் தரும் என்பது. எட்டாமிடம், பத்தாமிடம், மூன்றாமிடம், நான்காமிடம், பன்னிரண்டாமிடம் சுத்தமாகில் என்று அறிவது. வெள்ளி பதினோராமிடம், பன்னிரண்டாமிடம், எட்டாமிடம், ஒன்பதாமிடம், நான்காமிடம், மூன்றாமிடம், ஐந்தாமிடம் பலம் தரும். மூன்றாமிடம், ஆறாமிடம், ஏழாமிடம், ஐந்தாமிடம், எட்டாமிடம், பதினோராமிடம், ஒன்பதாமிடம் சுத்தமாகில் என்று அறிவது. இவ்விடவே கிரகபலம் பார்த்துக் கிரகவேதை சொல்வது.

கோள்வேதை வரிலுரைத்த கோசரங்கள் பலியா
கோசரக்கோள் கோள்வேதம் தன்னில் நிற்க
கோள்வேறு கோசரத்தை நிற்கு மாகில்
கொடியவரும் நலம்கொடுப்பர் விபரீத மான
நாளோரை முதல்கோள்கள் கதிர்சேய் முன்னே
நலந்தருவர் பொன்வெள்ளி நடுவில்பலம் தருவர்
நீள்காரி மதிபின்னே நினைத்தபலன் தருவர்
நிறைந்தபுதன் பாம்புபலா பலமென்று நேரே. 343

இ-ள் : கிரகவேதை வரில் கோசரபலன் பலியாது என்று முன்பு சொன்ன கோசரக்கோள் கிரகவேதை நிலையிலே நிற்பக் கிரக வேதை கோள்கள் கோசரத்திலே நிற்பாராகில் தீதான கோள்களும் நன்மை தரும். இவை கொள்ளும்படி. சந்திர இலக்கனத்துக்குப் பதினோராம் இடத்தில் கோள்கள் உண்டாகிலும் ஒன்பதாமிடத்தில் ஆதித்தன் நிற்க, மூன்றாம் இடத்தில் கோள்கள் உண்டாகிலும், நான்காமிடத்தே ஆதித்தன் நிற்க, பத்தாமிடத்தில் கோள்கள் உண்டாகிலும், ஆதித்தன் பன்னிரண்டாம் இடத்தே நிற்க, ஆறாம் இடத்தே கோள்கள் உண்டாகிலும் ஆதித்தன் பலன் தரும். மற்றுள்ளவையும் இப்படி விபரீதமாகப் பார்த்துக்

கொள்ளுவது. ஆதித்தனும் செவ்வாயும் முன்னே பலன் தரும். வியாழனும் வெள்ளியும் நடுவே பலன்தரும். சனியும் சந்திரனும் பின்னே பலன் தரும். புதனும் பாம்பும் போம்போது பலன் தரும்.

## அங்க சனி

என்றும் தீயன் வாயோராண் டினியன் வலக்கை நாலாண்டு
சென்று நடத்தும் காலாறும் தீமை இடக்கை நாலாண்டும்
நன்றி யூணாம் வயிறைந்தும் நயனம் இரண்டும் தனமுண்டாம்
கன்றும் புலங்கள் இரண்டுமுடி கவிழ்க்கும் தலைமூன் றுடன்காரி.

இ-ள் : வாயில் நிற்கும் ஓராண்டும் தீமை செய்விக்கும் வலக்கை நாலாண்டு இனிமை உண்டாக்கும். காலில் நிற்கும் ஆறாண்டும் யாத்திரை உண்டாக்கும். இடக்கை நாலாண்டும் காரியம் சேதம் உண்டாம். வயிற்றில் நிற்கும் ஐயாண்டும் ஊண் உண்டாம், கண்ணில் நிற்கும் ஈராண்டும் அத்த இலாபம் உண்டாகும். புயத்தில் நிற்கும் ஈராண்டு வியாதி உண்டாக்கும். தலையில் நிற்கும் மூவாண்டும் அபிஷேகம் உண்டாகும்.

## அங்க சூரியன்

காராய் குழலாய் ! தளைமூன்று அரசாம் கல்வி வாய்மூன்றும்
சீராய் வயிரைந் திடம்உண்ணும் செம்பொன் தேடும் கையெட்டும்
பாரேழ் நடத்தும் காலெட்டும் பகலோன் நின்றால் பிறந்திடுநாள்
நேரே தொட்டுக் கால்நின்ற தினமீ றெண்ணி நிகழ்த்திட்டேன். 345

இ-ள் : தலையில் நிற்கும் மூவாண்டும் இராச்சியம் பண்ணிவிக்கும்; வாயில் நிற்கும் மூவாண்டும் வித்தை உண்டாகும்; வயிற்றில் நிற்கும் ஐயாண்டு விருந்தோடு உண்ணும்; வலக்கையில் நிற்கும் எட்டாண்டும் அர்த்தலாபம் உண்டாம்; காலில் நிற்கும் எட்டாண்டும் வழி (யாத்திரை) நடத்தும் என்றவாறு. இவையெல்லாம் பிறந்தநாள் தொட்டுக் கோள்நின்ற நாளளவும் எண்ணிப் பலன் சொல்வது

## அங்கச் செவ்வாய்

இடவாய் மூன்று வலக்கண்ணில் இரண்டின் பமிடக்க ணிரண்டழிவர்
மிடறோ மூன்றும் கைமூன்று மேம்பா டிடக்கை மூன்றில்துயர்
மடவாய் வலப்பால் ஒன்றுநலம் இடமென் றழிவு வயிறைந்தூண்
நடப்பர் வலக்கால் இரண்டுநலம் நடக்கும் இடக்கால் யாத்திரையாம்.

இ-ள் : வாயில் நிற்கும் மூவாண்டும் துக்கம், வலது கண்ணில் இரண்டும் இலாபம், இடது கண்ணில் இரண்டும் அழிவாம், கழுத்து மூவாண்டும் மேம்பாடு, இடக்கை மூவாண்டும் துக்கம், வலப்பால் ஒன்று நன்மை, வயிற்றில் ஐந்து ஊண் உண்டாம், வலக்கால் இரண்டும் நலம் உண்டாம், இடக்கால் இரண்டும் யாத்திரை உண்டாம்.

## அங்க புதன், வியாழன், வெள்ளி

சேத மாக்கும் தலைமூன்றும் செல்வ மாக்கும் கழுத்தில்மூன்
றோது நன்மை வலக்கைமூன் றுள்ளத் திரடாம் இடக்கைமூன்
றாதி வயிற்றில் ஐந்தாக்கம் அரையில் இரண்டும் அழிவுண்டாம்
பாதம் எட்டு நலம்உண்டாம் பைம்பொன் புந்தி புகர்நின்றால். 347

இ-ள் : தலையில் மூன்றும் அழிவு, கழுத்தில் மூவாண்டும் அர்த்தம் உண்டாம், வலக்கை மூன்றும் நன்மை, இடக்கை மூன்றும் துக்கம், வயிற்றில் ஐந்தும் ஆக்கம், அரையில் இரண்டும் அழிவு, காலில் எட்டும் திரி (ஸ்திரி) உண்டாம். வியாழன், வெள்ளி, புதன் நின்றால் என்று சொல்வது.

## காலச்சக்கரம்

நின்ற பருதி ஐயாண்டு நிலாமூ வேழும் சேயேழும்
என்று வேதை ஒன்பதும்பொன் பத்தும் வெள்ளி ஈரெட்டு
மன்றும் காரி நான்குந்தம் மாட்சி ஒன்றில் அடுத்துண்பர்
நன்றி ஓரை ஒன்பதுகால் நான்கும் இரண்டே காலாமே. 348

## காலச்சக்கரம் கொள்ளும்படி

இ-ள் : ஆதித்தனுக்கும் சந்திரனுக்கும் ஆண்டு 21; செவ்வாய்க்கு ஆண்டு 7; புதனுக்கு ஆண்டு 9; வியாழனுக்கு ஆண்டு 10; வெள்ளிக்கு ஆண்டு 16; சனிக்கு ஆண்டு 4. இவ்வகைப்படியிலே தத்தம் உண்பர். இராசியாவது காலென்றும் இரண்டேகால் நாள் என்றும் அறிந்துகொள்வது.

**காலை அறிந்தால் கால்சேரும் இராசிக் காலொன் பதுன்கருதும்**
**சொல்ல ஒருநாள் உவாமீதில் முன்னோ ரைந்தான் ஊணையெனும்**
**ஏலும் மூவைந் திறகீய்ந்தால் ஈவோர்க் கடிகைக் கீவாகும்**
**வாலி தாங்கா லினிற்சென்ற கடிகை கண்டும் அறிந்துரையே.** 349

இ-ள் : இன்ன நாளில் இத்தனையாம் கால் என்று அறிவது. அக்காலில் கிடக்கும் இராசி ஒன்பதிலும் உண்ணும். அவ்வாண்டு அவனுக்கு பரமாயுள் என்று அறிவது. இதன் முதல் இராசி உண்ணும் கோள்களில் ஆண்டு பதினைந்துக் கீய்ந்தால், ஈவு ஒரு நாழிகை கீழ் என்பது. அக்காலில் சென்ற நாழிகை கழித்து நின்ற ஆண்டு இன்னதென்று அறிவது. ஆண்டொன்றுக்கு ஐந்தேகாலாக நாளும் கழித்து நின்ற தொகை ஒருவனுக்குச் சொல்லும் பரமாயுள் என்று அறிவது.

### சவ்வியச்சக்கரம்

**மறிஏறு யாழ்நண் டரிபெண்கோல் வளர்தேள் தனுமா முதற்காலூண்**
**கறவே சால்மீன் தேள்கோல்பெண் தூயநண் டரியா ழிருகோலூண்**
**குறியே ஆடு மீன்சால்மான் குறிவில் கொடியே றியாழ்முக்கால்**
**சிறைசேர் நண்டு புலிபெண்கோல் தேள்வில் சுறாசால் சேல்பிறகால்.** 350

இ-ள் : அசுபதி முதல் கால் மேடம், இடபம், மிதுனம், கற்கடகம், சிங்கம், கன்னி, துலாம், விருட்சிகம், தனுசு இந்த ஒன்பது இராசியும் உண்ணும். இரண்டாம் கால் மகரம், கும்பம், மீனம், விருட்சிகம், துலாம், கன்னி, கடகம், சிங்கம், மிதுனம் இந்த ஒன்பது இராசியும் உண்ணும். மூன்றாம் கால் இடபம், மேடம், மீனம், கும்பம், மகரம், தனுசு, மேடம்,

இடபம், மிதுனம் இந்த ஒன்பது இராசியும் உண்ணும்; நான்காம் கால் கற்கடகம், சிங்கம், கன்னி, துலாம், விருட்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம் இந்த ஒன்பது இராசியும் உண்ணும் என்பது.

கால்தேள் கோல்பெண் குளிரரியாழ் கன்றொடு தகர்மீன் கங்குல்கால்
சாலே மான்வில் கொழிஎருது யாழ்தரு நண்டரி பெண்ணிருகால்
கோல்தேள் சிலைமான் குடம்மீன்தேள் கோல்பெண் முக்கால் குளிரியாழ்
மால்சேல் கோறிமீன் குடமான்வில் பிறகால் ஆரால் மாலொக்கும்.351

இ-ள் : பரணி முதல்கால் விருட்சிகம், துலாம், கன்னி, கற்கடகம், சிங்கம், மிதுனம், இடபம், மேடம் இவை ஒன்பதும் உண்ணும்; இரண்டாங்கால் கும்பம், மகரம், தனுசு, மேடம், இடபம், மிதுனம், கற்கடகம், கன்னி இவை ஒன்பதும் உண்ணும்; மூன்றாங்கால் துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம், கற்கடகம், துலாம், கன்னி இவை ஒன்பதும் உண்ணும்; கடகம், சிங்கம், மிதுனம், இடபம், மேடம், மீனம், கும்பம், மகரம் இவை நாலாம் கால் உண்ணும் என்றவாறு.

## அபசவ்வியச் சக்கரம்

மாவில் சுறாசால் மீன்மறிசேல் வருதண் டரிநண் டுருள்முதற்கால்
பூவில் பெண்சோல் தேள்மீன்சால் பொய்மான் வில்தேள் துலைஇருகால்
காவில் பெண்மான் நண்டுயாழ் சேல்தகர் விற்கே குடமுக்கால்
தூவில் கயல்சால் மான்பின் தேள்துலை பெண்சிங்கம் குளிர்விற்கால். 352

இ-ள் : உரோகணி முதற்கால், தனுசு, மகரம், கும்பம், மீனம், மேடம், இடபம், மிதுனம், சிங்கம், கற்கடகம் இவை ஒன்பதும் உண்ணும்; இரண்டாம் கால் கன்னி, துலாம், விருட்சிகம், மீனம், கும்பம், மகரம், தனுசு, விருட்சிகம், துலாம் இவை இரண்டாம் காலை உண்ணும்; கன்னி, சிங்கம், மிதுனம், கடகம், இடபம், மேடம், தனுசு, மகரம், கும்பம் இவை மூன்றாம் காலை உண்ணும்; மீனம், மேடம், இடபம், மிதுனம், சிங்கம், கடகம், கன்னி, துலாம் விருட்சிகம் இவை நாலாங்காலை உண்ணும் என்பது.

குளிர்மீன் மறிஏறு யாழ்சிங்கம் குளிர்பெண் கோல்தேள் முதற்கால்
தளமார் தண்டு விடைமறிவில் கலைசால் கொறிதிகர் எருதிருகால்
துளையார் மிதுனம் புலிகுளிர்பெண் துலைதேள் மீன்சால் கலைமுக்கால்
வளையார் சிலைதேள் துலைமகள் அரியலவன் குண்டை மறிநாற்கால்.

இ-ள்: மிருகசீரிடத்துக்கு முதல்கால் மீனம், மேடம், இடபம், மிதுனம், சிங்கம், கற்கடகம், கன்னி, துலாம், விருட்சிகம் இவை ஒன்பதும் உண்ணும்; இரண்டாம்கால் மிதுனம், இடபம், மேடம், தனுசு, மகரம், கும்பம், மீனம், மேடம், இடபம் இவை ஒன்பது உண்ணும்; மூன்றாம்கால் மிதுனம், சிங்கம், கற்கடகம், கன்னி, துலாம், விருட்சிகம், மீனம், கும்பம், மகரம் இவை ஒன்பதும் உண்ணும்; நான்காம் கால் தனுசு, விருச்சிகம், துலாம், கன்னி, சிம்மம், கற்கடகம், மிதுனம், இடபம், மேடம் இவை ஒன்பதும் உண்ணும் என்றவாறு.

மறிமான் தலையும் முதற்கால் மாவின் நடைக்கால் இடைத்துண்ணும்
சிறிமான் விழியாய் ! ஆதிரையின் முதற்கால் ரோகணி வருநாற்கால்
பெருமா முதல்முன் அவைவலநாட் பின்முன் றிடநாள் பெறும் வலநாள்
இறுமா ஓரை உயிராதி உடலாய் இருமூன் றிருடல்பின் 354

இ-ள் : திருவாதிரை முதல்காலுக்கு உரோகணி, நான்காம் காலுக்கும் ஒட்டினாற்போல் ஒட்டிக்கொள்வது. இரண்டாம் காலுக்கு மிருகசிரத்து இரண்டாம் கால்போலே ஒட்டிக்கொள்வது; மூன்றாம் காலுக்கு மிருகசிரத்து மூன்றாம் கால்போலே ஒட்டுவது; நான்காம் காலுக்கு மிருகசிரத்து நான்காம் கால்போலே ஒட்டுவது. அசுபதி முதல் மூன்று நாளும் வலவோட்டு நாள் என்பது. உரோகிணி முதல் மூன்று நாளும் இடவோட்டு நாள் என்பது. இப்படி மும்மூன்றாக இருபத்து ஏழு நாளும் ஒட்டிக்கொள்வது வலவோட்டுச் செல்லாம். அசுபதி-பரணி ஒட்டினாற்போலே ஒட்டிக் கொள்ளவும். இடவோட்டுக்கெல்லாம் முதல் இராசி உயிரும் முடிந்த இராசி உடலுமாகக் கொள்ளுவது. வலவோட்டுக்கு எல்லாம் முதல் இராசி உடலும் முடிந்த இராசி உயிருமாகக் கொள்ளவும். (அசுபதி முதலான வடவோட்டுக்கெல்லாம் அப்போது புசிப்பதே உயிர். முடிவே உடல். உரோகிணி

முதலான இடவோட்டுக்கெல்லாம் புசிப்புநாள் உடல், முடிவு நாள் உடலாகவும் வைத்துக்கொள்ளுவது.

உடற்கோள் மறிமுன் வலவோட்டு ஊனொடும் தேள்முன் இடவோட்டு
இடக்கோள் தனுமே டத்தில்விழு மீன்தேள் பாயும் அரிவீணை
பிடிக்கத் தத்தும் பெண்ணாம் நண்டில் அரியின் மேல்புறளும்
மடுத்த பொழுது தீக்கோளும் மரணம் நற்கோள் அழிவுண்டாம். 355

இ-ள் : வலவோட்டுக்கெல்லாம் மேடம் முதலாக உண்ணும். இடவோட்டுக்கெல்லாம் விருட்சிகம் முதலாக உண்ணும் என்பது. தனுசில் நின்று மேடத்தில் பாயும்; மீனத்தில் நின்று விருட்சிகத்தில் பாயும்; சிங்கத்தில் நின்று மிதுனத்தில் பாயும்; கன்னியில் நின்று கடகத்தில் பாயும்; கடகத்தில் நின்று சிங்கத்தில் பாயும். இவ்வகை வந்து அடுத்தபோது தீக்கோளானால் மரணம் என்பது; நற்கோளானால் வியாதியும் அர்த்தமும் அழிவுண்டாகும்.

உண்டாம் அரச ராலழிவு இளைப்பும் இருக்க உண்சேயூண்
தண்டார் வெதுப்புத் தீப்பாடு சனியூன் சிறையும் வழக்காடும்
கண்டார் உவப்ப மைந்தருடன் கல்வி புதனூண் கனகம்பொன்
வண்டார் குழலாய் மனைபுகுவர் மதியூண் வெள்ளி வாழ்வுண்டாம். 356

இ-ள் : ஆதித்தன் உண்ணும்பொழுது, கொற்றவரால் விதனம் உண்டாம். இளைப்பும் பித்தமுமாம், செவ்வாய் ஊணில் வெதுப்பும் அக்கினியும் உண்டாம். சனி ஊணில் சிறையும் வழக்காட்டும் உண்டாம். புதன் ஊணில் இலாபம், வித்தை ஆரம்பம் உண்டாம். வியாழன் ஊணில் அர்த்த இலாபம் மிக உண்டாம். சந்திரனில் விவாகமும் பரஸ்திரீயின் சேர்க்கையும் உண்டாம். வெள்ளியில் வாழ்வுண்டாம். இவ்வகை பார்த்து நன்மை தீமை சொல்லுவது.

வாழும் பரமா யுதனுக்கு மன்னும் ஓர்கோ ளாண்டதனை
யாழின் சொல்லா யீந்தனை ஆண்டு தோறும் ஏற்றியிட
வேலின் கோட்டும் பறித்தூணாம் இராசி யான முதலூணும்
சூழத் துயரம் தீக்கோளூண் துடரும் நன்மை சுகம்தரும்கோள்.357

இ-ள் : ஒரு காலுக்குச் சொல்லும் பரமாயுளை அறிந்து அதற்கு ஓரோர் கோள்கள் உண்ணும் ஆண்டை ஈய்ந்தால் அந்த ஈவு ஓராண்டிற்கு ஊணாம். அதன்படியே கோள்களுக்கு முன்பு சொன்ன ஆண்டுகள் தோறும் ஏற்றியிடப் பிரிச்சூணாம். ஒரு இராசியிலே அந்த இராசியினுடையவன் முதாலாக ஏழு கோளும் பிரிந்து உண்ணும் என்பது. தீக்கோள் உண்ணும் பொழுது வியாதியும், அர்த்த அழிவும் உண்டாம். நற்கோள் உண்ணும்பொழுது அர்த்த இலாபம் உண்டாம். நினைத்த காரியம் எல்லாம் முடியும் என்பது.

காலச்சக்கரம் முற்றும்.

## மகாதிசை ஆண்டுகள்

கோதில் அருக்கன் மதிசெவ்வாய் கொடிய வாரம் சனிபுந்தி
கேது வெள்ளி யாரால்முதல் ஏழும் அன்பாய் அடவடவே
ஓதும் மாண்ட ஈரைந்தேழ் ஒருபத்தெட்டு பதினாறு
மீது லொருபத் தொன்பதுபதி னேழும் இருபதுமே. 358

இ-ள் : ஆதித்தனுக்கு ஆண்டுகள் 6; சந்திரனுக்கு ஆண்டுகள் 10; செவ்வாய்க்கு ஆண்டுகள் 7; இராகுவுக்கு ஆண்டுகள் 18; வியாழனுக்கு ஆண்டுகள் 16; சனிக்கு ஆண்டுகள் 19; புதனுக்கு ஆண்டுகள் 17; கேதுவுக்கு ஆண்டுகள் 7; சுக்கிரனுக்கு ஆண்டுகள் 20. கோளும் இவ்வடைவே உண்ணும் என்பது. கார்த்திகை முதல் ஒன்பது நாட்களும் உத்திரம் முதல் ஒன்பது நாட்களும், உத்திராடம் முதல் ஒன்பது நாட்களும் இவ்வாறு உண்பார்கள்.

## மகாதிசைகளின் பலன்கள்

### சூரிய திசை

இருக்கும் பதிபோம் இருநிதிபோம் இடரும் இளைப்பும் பித்தமுமாம்
அருக்கன் திசையில் மதியூணில் ஆளும் நிதியும் மடந்தையரும்
பெருக்கம் சேயூண் பகைபசிபோர் பிணிதீப் பாடு பெரிதாவூண்
மரிக்கும் மனைவி போர்சிறையாம் மக்கள் சுற்றம் நிதிமாயும். 359

இ-ள் : ஆதித்தன் திசையில் ஊரை விட்டும் போகும். அர்த்தஹானி (பொருள் நாசம்) உண்டாகும். இடரும், இளைப்பும், பித்தம் உண்டாகும். திங்கள் திசையில் அடியாரும், திரவியமும், பந்து சனங்களும் உண்டாம். செவ்வாய் திசையில் பகையும், பசியும், பூசலும், வியாதியும் அக்கினி பயமும் உண்டாம். இராகு திசையில் மரணமும், பிணி, சிறையும், பந்துக்கள் மரணமும் அர்த்தஹானியும் (பொருள் நாசம்) உண்டாம் என்பது.

நிதியும் தனமும் பரிகளிலும் நிகழும் குருவின் திசைசனிமேல்
பதியும் பொருளும் அடியாரும் பாழாய்ப் பசிநோய் பகைபெரிதாம்
மதியும் பெயரும் கல்விகளும் மைந்தர் தானும் வரும்புதன்ஊண்
சதியும் பிணியும் சாவுமராத் தனமும் புவியும் தரும்புகர்தான். 360

இ-ள் : வியாழ திசையில் அர்த்த இலாபமும் வாகனங்களும், அரசர்கள் நோக்கு உண்டாம். சனி திசையில் சேத்திரங்களும் அர்த்தமும் அடியாரும் கன்று காலியும் போம். பசியும் நோயும் பகையும் தேசாந்திர பெருக்கும் உண்டாம். புதன் திசையில் அறிவும் கல்வியும், புத்திர இலாபமும், அர்த்த இலாபமும் தெய்வ பூசையும் உண்டாம். கேதுவின் திசையில் களவு, பகை, வியாதி, யாத்திரை, விஷம், மரணம் உண்டாம். வெள்ளியின் திசையில் தம் பூமி, ஸ்திரீகளும், அடியார் குழாங்களும் சுகமும், கன்று காலியும் பெருக உண்டாம் என்பது.

## அந்தர திசை கொள்ளும்படி

புகலும் திசையில் ஓரொருகோள் பொருந்தும் அண்டை முற்றித்த
தொகையும் ஓராண் டதற்குள்ள நாளே அறிந்து சோராமல்
மிகவும் உடையான் முதலாக அடவே விளிக்க ஆண்டுதொறும்
பகரும் அந்தர் திசையூணாம் பாலும் தேனும் போல்மொழியாய் ! 361

இ-ள் : திசையுண்ணும் கோள்களில் ஒரு கோள் உண்ணும் ஆண்டின் நாளதனை அறிந்து, அதனை முற்றிக்க, ஓராண்டுக்கு உண்ணகடவ நாளாம். இவ்வகையே ஆண்டுதோறும் நாளை ஏற்றில் உடையவன் முதலாக ஊட்டுவது.

*ஊட்டும்படி*

*ஆதித்தன் உண்ணும் ஆண்டை மூன்றில் பெருக்க, பதினெட்டு ஆண்டுகள் ஓராண்டுக்குப் பதினெட்டு நாளானால் ஆறு ஆண்டுகளுக்கு 108 நாட்கள். ஆதித்தன் திசையில் ஆதித்தன் ஊண் 108 நாட்கள் என்பது. மற்றுள்ளதும் இவ்வகையே ஆண்டின் அடவே பெருக்கிக்கொள்வது.*

**ஆதித்தன் திசைக்குப் புத்திகளும் பலன்களும்**

ஆய்கதிரில் கதிர்பீடை பொன்உற்றார் அழிவர்
மணிமதில்மேல் வெற்றிகள்ஆ யிழைபே ரிடர்போம்
சேம்பதனில் பொன்வெற்றி தேசம் உண்டாம்
தீயர்மேல் பகைஇயர்நோய் பயம்செம்பொன் அழிவாம்
தூயகுரு நோய்பீடை கலகமிடர் பாவம்
தன்னரசர் பயம்மக்கள் அழிவுபகை புதனேல்
நோயிறைவ ராலிடுக்கன் கேது போக்கு
நோய்பொருள்போம் புகரில்தலை நோவு வெதுப்பாம். 362

*1. ஆதித்தன் திசையில் ஆதித்தன் ஊண், மாதம் 3, நாள் 18-க்குப் பலன் : பீடை, அர்த்தஹானி (பொருள் நாசம்), இராசாவால் தொல்லை என்பது.*

*2. சந்திரன் ஊண், மாதம் 6-க்குப் பலன் : வெற்றி, அர்த்த இலாபம், ஸ்திரீபேறு, வியாதி க்ஷமிக்கும், காரிய இலாபம் என்பது.*

*3. செவ்வாய் ஊண், மாதம் 4, நாள் 6-க்குப் பலன் : இராசாக்களாலே வெற்றி உண்டாம் என்பது.*

*4. இராகு ஊண், மாதம் 10, நாள் 24-க்குப் பலன் : பகை, மனத்து இடர், வியாதி, அர்த்தஹானி பயம் என்பது.*

*5. வியாழன் ஊண், மாதம் 9, நாள் 18-க்குப் பலன் : வியாதி, பீடை, கலகம், இடர், சனவிரோதம் உண்டாம் என்பது.*

*6. சனியின் ஊண், மாதம் 11, நாள் 12-க்குப் பலன் : இராசபயம், புத்திரநாசம், சத்துரு உண்டாம் என்பது.*

*7 புதன் ஊண், மாதம் 10, நாள் 6-க்குப் பலன் : சரீர வியாதி, வயிற்று நோவு, குட்டம், இராசபயம், பிரபுக்களால் விதனம் என்பது.*

*8. கேது ஊண், மாதம் 4, நாள் 6-க்குப் பலன் : தேசாந்திரம், வியாதி, யுத்தஹானி, பூசல் என்பது.*

*9. வெள்ளி ஊண், மாதம் 12-க்குப் பலன் : சரீரத்தில் கிலேசம், தலைவியாதி, சுரம் என்பது. ஆக ஆண்டு ஆறும் கண்டுகொள்ளவும்.*

## சந்திரன் திசைக்குப் புத்திகளும் பலன்களும்

**ஆன்றமதி தனில்மதியம் பெண்டீர் மக்கள்**
**ஆடையணி சேர்பித்தம் களவுபகை இடர்தீ**
**ஊன்றரவு பகைமிடிபோம் உற்றார்பொன் அழிவாம்**
**உயர்குருபொன் பரியானை பசுக்கல்வி அழிவாம்**
**ஏன்றசனி மனமிடிநோய் இடர்மனையாள் மரணம்**
**எழில்மேதை தவம்தானம் கூறையணி ஞானம்**
**கான்றரவு வஞ்சனைகள் காசழிவு போக்கு**
**கடிவெள்ளி கன்னியர்பொன் கதிர்புகழ்பே ரழகாம்.** 363

*1. சந்திர திசையில் சந்திரன் ஊண், 10 மாதங்களுக்குப் பலன் அர்த்தலாபம், ஸ்திரீ, வெற்றி, புத்திர இலாபம், புடவை ஆபரணம் பேறு என்பது,*

*2. செவ்வாய் ஊண், 7 மாதங்களுக்குப் பலன் : பித்தம், களவு, பழி, சரீர கிலேசம், அக்கினி பயம், அபசெயம் என்பது.*

*3. இராகு ஊண், 18 மாதங்களுக்குப் பலன் : சத்துருவால் நாசம், தேசாந்திரம், அர்த்தநாசம், மிடி என்பது.*

*4. வியழான் ஊண், 16 மாதங்களுக்குப் பலன் : தனம், குதிரை, யானை, கன்று காலி, வஸ்திராபரணம், வித்தை என்பது.*

*5. சனி ஊண், 19 மாதங்களுக்குப் பலன் : மனத்துக்கம், வியாதி, ஸ்திரீ மரணம், விதனம் என்பது.*

6. புதன் ஊண், 17 மாதங்களுக்குப் பலன் : தவம், தானம், வஸ்திரம், ஞானம் என்பது.

7. கேது ஊண், 7 மாதங்களுக்குப் பலன் : வஞ்சனை, பொருள் அழிவு, யாத்திரை, பித்தம், வேந்து நாசம் என்பது.

8. வெள்ளி ஊண், 20 மாதங்களுக்குப் பலன் : இராசாக்கள் ஸ்திரீ பேறு, அர்த்த இலாபம், வஸ்திராபரணம் என்பது.

9. ஆதித்தன் ஊண், 6 மாதங்களுக்குப் பலன் : இராச சேவை, பட்டப்பேர், ஐஸ்வரியம், வியாதி, நாசம், சத்துரு நாசம் உண்டு என்பது. ஆக 10 ஆண்டுகளும் கண்டு கொள்க.

## செவ்வாய் திசைக்குப் புத்திகளும் பலன்களும்

பேரழலில் சேயரசர் பயங்களவு வாதம்
பிணியரவு சிறைபகைதீ படைபாம்பால் மரணம்
சீரியபொன் தேவர்களைத் தொழுமறையோர் சேரும்
தீர்த்தயாத் திரைநல்லன் செற்றலில்புச் சனிதான்
ஊரழிவு நிலைசெம்பொன் அழிவுண்டாம் புந்தி
பொருளழிவு தீக்கள்ளர் வேந்தரால் சர்ப்பம்
ஆர்படையில் இடிப்புகளவு வழிபுகர்நோ யாகும்
ஆதித்தன் தண்மதி அழகுபெரி தாமே. 364

இ-ள் : செவ்வாயின் திசையில் செவ்வாயின் ஊண், 4 மாதங்கள், 27 நாட்களுக்குப் பலன் : இராசபயம், ஸ்திரீ பயம், வேந்துபயம், களவு, வாதம், வியாதி என்பது.

2. இராகு ஊண், 12 மாதங்கள், 18 நாட்களுக்குப் பலன் : சிறை, பகை, அக்கினி பயம், பூசல் பயம், வியாதி, பொருள் அழிவு, ஆயுதத்தால்-விடத்தால் மரணம் என்பது.

3. வியாழன் ஊண், 11 மாதங்கள், 6 நாட்களுக்குப் பலன் தெய்வபக்தி, பிராமணர் சேர்க்கை, அர்த்தம், தீர்த்தம், நல்லாடை வரவு என்பது.

4. சனி ஊண், 13 மாதங்கள், 6 நாட்களுக்குப் பலன் : ஊர் அழியும், வேந்து நாசம், நிலைகுலையும், பொருள் அழிவு, பல விரோதம் என்பது.

5. புதன் ஊண், 11 மாதங்கள், 27 நாட்களுக்குப் பலன் : அக்கினியில் கள்ளரால், இராசக்களால் அழிவு என்பது.

6. கேது ஊண், 4 மாதங்கள், 27 நாட்களுக்குப் பலன் : படையால், இடியால், அக்கினியால், கள்ளரால் மரணம் என்பது.

7. வெள்ளி ஊண், 14 மாதங்கள், 2 நாட்களுக்குப் பலன் : வியாதி, புன்சொல், பொருள் அழிவு, சத்துருவால் விதனம், மிருகங்களால் மெலிவு என்பது.

8. ஆதித்தன் ஊண், 4 மாதங்கள், 6 நாட்களுக்குப் பலன் : தர்மம் செய்யும், தானம் பண்ணும் என்பது.

9. சந்திரன் ஊண், 7 மாதங்களுக்குப் பலன் : முத்து, மாணிக்கம், தானியம், அர்த்தம் பெருக உண்டாம் என்பது. ஆக ஆண்டுகள் எழுக்கும் கண்டுகொள்க.

## இராகு திசைக்குப் புத்திகளும் பலன்களும்

பெரியரவு உற்றார்பெண் புவியட் டம்போம்
பேணுகுரு சுகமின்பம் தனமதுபெண் கூடும்
கரியசனி கலகம்வழக் குவாதம் பித்தம்
கணக்கனோ தேவருலகா தலர்பே ரரவே
எரிமரணம் பகைவெறுப்பாம் வெள்ளி யுற்றால்
இடர்தீரும் மகவுண்டாம் இரவிபுவி குளம்நீர்
திருமதியில் பெண்ணுற்றார் சேர்வர்தனம் அழிவாம்
சேய்கருவி யால்படு தீக்களவு பிணியே. 365

1. இராகுவின் திசையில் இராகு ஊண், 2 ஆண்டுகள், 8 மாதங்கள், 12 நாட்களுக்குப் பலன் : வேந்து நாசம், ஸ்திரீ நாசம், அர்த்தநாசம், வியாதி பயம், வியாதி விட்டுப்போதல் என்பது.

2. வியாழன் ஊண், 2 ஆண்டுகள், 4 மாதங்கள், 24 நாட்களுக்குப் பலன் : சுகமின்பம், அர்த்தம், ஸ்திரீகூடுகை என்பது.

*3. சனி ஊண், 2 ஆண்டுகள், 10 மாதங்கள், 6 நாட்களுக்குப் பலன் : கலகம், வழக்கு, வாதம், பித்தம் என்பது.*

*4. புதன் ஊண், 2 ஆண்டுகள், 6 மாதங்கள், 18 நாட்களுக்குப் பலன் : அர்த்தம், தெய்வ இரட்டை (அருள்), புத்திர இலாபம் என்பது.*

*5. கேது ஊண், 1 ஆண்டுகள், 18 நாட்களுக்குப் பலன் : அக்கினி பயம், பயம், மரணம், பகை, வெறுப்பு, பொருள் அழிவு என்பது.*

*6. வெள்ளி ஊண், 3 ஆண்டுகள் பலன் : உற்றார் வரவு, வியாதி, சுபத பத்திரம், கீர்த்தி உண்டாம் என்பது.*

*7. ஆதித்தன் ஊண், 10 மாதங்கள், 24 நாட்களுக்குப் பலன் : பூமிபேறு, குளம் பேறு, சத்துரு நாசம் என்பது.*

*8. சந்திரன் ஊண், 1 ஆண்டுகள், 6 மாதங்களுக்குப் பலன் ஸ்திரீ சேர்க்கை, வேந்துக்கள் சேர்க்கை, திரவியம் வந்து செலவழியும் என்பது.*

*9. செவ்வாய் ஊண், 1 ஆண்டுகள், 18 நாட்களுக்குப் பலன் கருவியால் பாடு, அக்கினி பயம், களவு போகும், வியாதி உண்டாகும் என்பது. ஆக ஆண்டுகள் பதினெட்டுக்கும் கண்டுகொள்க.*

### வியாழ திசைக்குப் புத்திகளும் பன்களும்

**களங்குருவில் ஆடைஅணி பூமியோகம் காரி**
**தருமங்கள் குருக்கள்கன் னியால்பு தியநோய்**
**விளங்கரசால் பெண்டீரோ தேடு கேது**
**மிடிநடைபொன் கேடுமக்கள் அழிவதுதான் வெள்ளி**
**வளர்ந்தபகை பொருளழிவு மனைகேடு நடையாம்**
**வண்பருதி மன்னவரால் வாழ்வுமதி பகைநேர்**
**அளந்தறியா நிதிமாதர் சேய்சிரங்கு சொறிநோய்**
**அரவுபிணி சிறைமரணம் மனையிடம்விட் டழிவாம்.** 366

*1. வியாழ திசையில் வியாழன் ஊண், 2 ஆண்டுகள், ஒரு மாதம், 18 நாட்களுக்குப் பலன் : இராசப் பிரியம், பத்திரம், ஆபரணம், ஒழுக்கம், பிரதாபம் என்பது.*

*2. சனி ஊண், 2 ஆண்டுகள், 6 மாதங்கள், 12 நாட்களுக்குப் பலன் : தர்மம் செய்யும், குருக்கள் உபதேசம், வேசை உண்டாம் என்பது.*

*3. புதன் ஊண், 2 ஆண்டுகள், 3 மாதங்கள், 6 நாட்களுக்குப் பலன் : வியாதி, இராசாக்களால் - ஸ்திரீக்களால் கேடு என்பது.*

*4. கேது ஊண், 11 மாதங்கள், 6 நாட்களுக்குப் பலன் : மிடி, பரதேசம், பொருள் அழிவு, பல விரோதம், பயம் என்பது.*

*5. வெள்ளி ஊண், 2 ஆண்டுகள், 8 மாதங்களுக்குப் பலன் பொருள் அழிவு, பகை, ஸ்திரீ மரணம், தேசாந்திரம் என்பது.*

*6. ஆதித்தன் ஊண், 9 மாதங்கள், 18 நாட்களுக்குப் பலன் இராசாக்களாலே வாழ்வு, சுகம், சத்துரு நாசம் என்பது.*

*7. சந்திரன் ஊண், 1 ஆண்டு, 4 மாதங்களுக்குப் பலன் : பகைபோம், ஸ்திரீகூடுகை, அர்த்த இலாபம் என்றது.*

*8. செவ்வாய் ஊண், 11 மாதங்கள், 6 நாட்களுக்குப் பலன் சிரங்கு, சொறி, நோய், இளைப்பு, பல விரோதம் என்பது.*

*9. இராகு ஊண், 2 ஆண்டுகள், 4 மாதங்கள், 24 நாட்களுக்குப் பலன் : பிணி, சிறை, மரணம், பூமி விட்டுப் போகை, அழிவுண்டாம். ஆக ஆண்டு பதினாறும் கண்டு கொள்க.*

**சனி திசைக்குப் புத்திகளும் பலன்களும்**

அழிவுசனி பெண்ணா கும் மக்கள் காலி
அடியார்கே டருந்துயரம் புதனுறவு சுகம்பொன்
சுழலரவு பகைபெண்டிர் நோய்வாத பித்தம்
சுங்கன்மட வர்க்குறவு பொன்வெற்றி சுகமாம்
எழுகதிர்நோய் பொருள்மக்கள் அழிவுமதி வழக்காம்
இடர்மரணம் பறிக்கும்சேய் குட்டம் துயர்நோய்
தழுதளைபாம் பிடர்கரங்கால் முறிவுபெண்டிர் வழக்குத்
தருகுருவில் உறவடியார் தனம்தானம் இடுமால். 367

1. சனி திசையில் சனி ஊண், 3 ஆண்டுகள், 3 நாட்களுக்குப் பலன் : பெண்டிர் கேடு, மக்கள் மரணம், கன்று காலி கேடு, அடியார் கேடு, துக்கம், வியாதி, அபிமானம், தேசாந்திரம், விதனம் என்பது.

2. புதன் ஊண், 2 ஆண்டுகள், 2 மாதங்களுக்குப் பலன் : உறவு, சுகம், இலாபம், தானம் என்பது.

3. கேது ஊண், ஒரு ஆண்டு, 1 மாதம், 9 நாட்களுக்குப் பலன் : பகை, ஸ்திரீ நோய், வாதபித்தம் என்பது.

4. சுக்கிரன் ஊண், 3 ஆண்டுகள், 2 மாதங்களுக்குப் பலன் : ஸ்திரி சேர்க்கை, வெற்றி, சுகம், தோழமை, தானியம் என்பது.

5. ஆதித்தன் ஊண், 11 மாதங்கள், 12 நாட்களுக்குப் பலன் : வியாதி, மக்கள் அழிவு, பொருள் அழிவு, பலவிதனம் என்பது.

6. சந்திரன் ஊண், ஒரு ஆண்டு, 7 மாதங்களுக்குப் பலன்: வழக்கு, விதனம், ஸ்திரீ மரணம், பறிகொடுக்கும், உற்றார் உறவினர் கேடு என்பது.

7. செவ்வாய் ஊண், ஒரு ஆண்டு, ஒரு மாதம், 9 நாட்களுக்குப் பலன் : குட்டம், துக்கம், வியாதி, தழுதலை, தொழுநோய் என்பது.

8. இராகு ஊண், 2 ஆண்டுகள், 10 மாதங்கள், 6 நாட்களுக்குப் பலன் : இடர், கைகால் முறிவு, ஸ்திரீ வழக்கு, அர்த்தஹானி என்பது.

9. வியாழன் ஊண், 2 ஆண்டுகள், 6 மாதங்கள், 12 நாட்களுக்குப் பலன் : உறவு, அடியார் சேர்க்கை, அர்த்த இலாபம், தானம் பண்ணுதல் என்பது. ஆக ஆண்டுகள் பதினெட்டும் கண்டுகொள்க.

## புதன் திசைக்குப் புத்திகளும் பலன்களும்

இடும்புதனில் புதன்கல்வி தனம்பூமி பூசை
இருங்கேது நடைபொன்போம் இறைவர்பயம் புகரேல்
நடும்புகழ்பொன் பெண்பேறு கதிர்போக்கில் இலாபம்
நாடுமதி கயங்குட்டம் பகையரசால் நடுக்கம்
கடுங்கனற்கா மாலைதலை நோயுமிறை அச்சம்
கடியரவு பெண்பொருட்டால் பரதேசம் நடத்தும்
நெடுங்குருவில் அரசாளும் தூய்மையது இன்பம்
நீலன்மிடி நோய்சிலுகு வழக்காட்டு நிகழ்த்தும். 368

1. புதன் திசையில், புதன் ஊண் 2 ஆண்டுகள், 4 மாதங்கள், 27 நாட்களுக்குப் பலன் : கல்வி, அர்த்த இலாபம், பூமி, தெய்வபூசை, வெற்றி என்பது.

2. கேது ஊண், 11 மாதங்கள் 27 நாட்களுக்குப் பலன் : தேசாந்திரம், பொருள் அழிவு, இராசபயம், துக்கம், கலகம் என்பது.

3. சுக்கிரன் ஊண் 2 ஆண்டுகள், 10 மாதங்களுக்குப் பலன்: புகழ் உண்டாம், ஸ்திரீ சேர்க்கை, அர்த்தஇலாபம் உண்டாம் என்பது.

4. ஆதித்தன் ஊண், 10 மாதங்கள், 6 நாட்களுக்குப் பலன்: போகம் உண்டாம் என்பது.

5. சந்திரன் ஊண் ஒரு ஆண்டு, 5 மாதங்களுக்குப் பலன் : க்ஷய வியாதி, குட்டம், பகை அரசரால் பயம் என்பது.

6. செவ்வாய் ஊண், 11 மாதங்கள், 27 நாட்களுக்குப் பலன் : காமாலை, தலைநோவு, இராசபயம், துக்கம் என்பது.

7. இராகு ஊண் 2 ஆண்டுகள், 6 மாதங்கள், 18 நாட்களுக்குப் பலன் : ஸ்திரீ பொருட்டால் பரதேசம், பொருள் அழிவு, உற்றார் கேடு என்பது.

8. வியாழன் ஊண் 2 ஆண்டுகள், 3 மாதங்கள், 6 நாட்களுக்குப் பலன் : இராச்சியம் உண்டாம், சுத்தன் இன்பம், அர்த்தஇலாபம் என்பது.

*9. சனி ஊண் 2 ஆண்டுகள், 8 மாதங்கள், 9 நாட்களுக்குப் பலன் : மிடி, வியாதி, செலவு, வழக்கு, பயம் உண்டாம். ஆக ஆண்டுகள் பதினேழுக்கும் கண்டு கொள்க.*

**கேதுவின் திசைக்குப் புத்திகளும் பலன்களும்**

நிகழ்கேது வினில்பெண்டிர் மக்கள் பிரிவாம்
நெடும்புகரில் நோய்வழக்காட்டு குடிகெடும்பெண் பெறுமாம்
திகழ்கதிரில் நோய்வழக்குப் புண்தீப்பா டுளதாம்
திங்கள்நிதி போஞ்சிலுகாம் வெகுமரணம் சேயென்
இகழ்வரெதி ரில்லார்நோய் பொன்னழிவாம் பாம்பேல்
இடர்விடம்தீ வெட்டடியார் சேர்த்தி வியாழம்
புகழ்பொருள் தியர்சேர்த்தி சனிவம்பு வழக்கு
பொருளழிவு புதன்மைந்தர் பொன்றுவர்மண் போமால்.369

*1. கேதுவின் திசையில் கேது ஊண் 4 மாதங்கள், 27 நாட்களுக்குப் பலன் : பெண்டிரும் மக்களும் பிரிந்து போவர், சத்துருக்கள் உண்டாம் என்பது.*

*2. சுக்கிரன் ஊண் ஒரு ஆண்டு, 2 மாதங்களுக்குப் பலன் : வழிக்காட்டு, அக்கினிபயம், வம்ச மரணம், பெண்பேறு அழிவுண்டாம் என்பது.*

*3. ஆதித்தன் ஊண் 4 மாதங்கள், 6 நாட்களுக்குப் பலன் : வெதுப்பு, வழக்கு, புண், அக்கினி பயம், பல விரோதம், துக்கம் என்பது.*

*4. சந்திரன் ஊண் 7 மாதங்களுக்குப் பலன் : அர்த்தம் பெற்றிழக்கும், பிள்ளை பெற்று இழக்கும், சுகமாய் இருக்கச் செய்து சிலுகாய் பிள்ளைகள் மரணம் என்பது.*

*5. செவ்வாய் ஊண் 4 மாதங்கள், 27 நாட்களுக்குப் பலன்: தரமல்லாதார் கொடி கட்டுவார், வியாதி, பொருள் அழிவு, மனமிடி என்பது.*

*6. இராகு ஊண் ஒரு ஆண்டு, 18 நாட்களுக்குப் பலன் : இடர், விடம், அக்கினி பயம், வெட்டு, வெதுப்பு, மரணம் உண்டாம் என்பது.*

7. வியாழன் ஊண் 11 மாதங்கள், 6 நாட்களுக்குப் பலன்: புகழ், அர்த்த இலாபம், பிராமணர் சேர்க்கை, சீக்குப்பெண் பேறு, இராசா நோக்குண்டாம் என்பது.

8. சனி ஊண் ஒரு ஆண்டு, ஒரு மாதம், 9 நாட்களுக்குப் பலன் : வழக்கு, பொருள் அழிவு, வாதபித்தம், பரதேசம் போகை என்பது.

9. புதன் ஊண் 11 மாதங்கள், 27 நாட்களுக்குப் பலன் : மக்கள் அழிவு, பூமி விட்டுப்போம், வேந்துபயம், வெதுப்பு, விதனம் உண்டாம். ஆக ஆண்டுகள் ஏழுக்கும் கண்டு கொள்க.

**சுக்கிர திசைக்குப் புத்திகளும் பலன்களும்**

மாப்புகரில் புகழ்ஞான மாதர்மக்கள் நிதிமண்
வளர்கதிர் கண்வயிறு மணமுடிப்பால் சிறையாம்
கோப்புமாறி பகைமிடிநோய் காய்ப்பில்கா மாலைநோய்
குசன்பொருள்பெண் கூடும்காடு நலம்பெண் கூட்டம்
பாம்பில்காண் பலர்விடநோய் காமாலை தலைநோய்
கனகன்மிக நல்லன்மந்தன் காவலரால் கருமம்
பூப்பதனில் அரசால்பொன் பகையும் உறவாம்
பொருள்கேது கலகமுறவு பொன்றும்பொன் அழிவாம். 370

1. சுக்கிர திசையில் சுக்கிரன் ஊண் 3 ஆண்டுகள், 4 மாதங்களுக்குப் பலன் : ஞானம், ஸ்திரீ கூட்டம், இனிய பெண் பேறு, அர்த்த இலாபம், பூமிபேறு, சுகம் என்பது.

2. ஆதித்தன் ஊண் ஒரு ஆண்டுக்குப் பலன் : கண்ணோய், வயிற்று நோய், மனமிடி, சிறை என்பது.

3. சந்திரன் ஊண் ஒரு ஆண்டு, 8 மாதங்களுக்குப் பலன் : பகை, மிடி, வியாதி, கொடுமை, குற்றம் உண்டாம் என்பது.

4. செவ்வாய் ஊண் ஒரு ஆண்டு, 2 மாதங்களுக்குப் பலன்: போகம், ஸ்திரீ பேறு, பூமி பேறு, அர்த்த இலாபம் என்பது.

5. இராகு ஊண் 3 ஆண்டுகளுக்குப் பலன் : இடர், வியாதி, காமாலை, தலைவியாதி, அர்த்தநாசம், உறக்கம் உண்டாம் என்பது.

6. வியாழன் ஊண் 2 ஆண்டுகள், 8 மாதங்களுக்குப் பலன் : வஸ்திராபரணம், இராசப்பிரியம், ஸ்திரீபேறு, மனப் பிரியம் என்பது.

7. சனி ஊண் 3 ஆண்டுகள், 2 மாதங்களுக்குப் பலன் : நன்மை, ஸ்திரீகள் கூட்டம், இராசாக்களால் பல பிரபுக்கள் சேர்க்கை.

8. புதன் ஊண் 2 ஆண்டுகள், 10 மாதங்களுக்குப் பலன் : இராசாக்களாலே அர்த்த இலாபம், சத்துரு நாசம், சத்துரு செயம், தோழமை, உறவு, நினைத்த காரியம் முடியும்.

9. கேது ஊண் ஒருஆண்டு, 2 மாதங்களுக்குப் பலன் : கலகம், வேந்து நாசம், பொருள் அழிவு, காரியம், தேசம் குழப்பம் என்பது. ஆக ஆண்டுகள் இருபதுக்கும் கண்டு கொள்க.

***அந்தர் தீசை கொள்ளும்படி :*** ஒரு கோளுக்கு உண்ணும் முன்பு சொன்ன நாட்களை 120 கூறுபண்ணி ஒரு ஆண்டு வருமதை அறிந்து, ஆண்டுதோறும் ஏற்றி, வரும் நாளை அறிந்து முன்போலே பலாபலன் சொல்லுவது.

## பரகித கணிதம்

**பொன்னவன் அனைய முன்னோர் பொருந்திய நவகோள் எண்ணம்**
**பண்ணியவட நூலால் செய்த பரஹித பனுவல் தன்னை**
**பண்ணிய தமிழி னாலே மண்ணியநோக் கறியும் வண்ணம்**
**அன்னமின் நடையி நாய்கேள் ! உரைசெய்வன் அழிவில் லாமல்.** 371

இ-ள் : பிரகஸ்பதி, ஏனைய வித்துவான்களால் செய்யப்பட்ட புத்தகத்தையெல்லாம் தமிழினாலே மற்றுள்ளோர் அறியும் வண்ணம் உரைசெய்வேன் என்றவாறு.

## யுகம் பிறக்கும் வகை

அழிவிலா இராசி ஈரா றதனைவான் கலைய தாக்கி
ஒழிவிலா எண்பால் தாக்கில் கிருதயுகம் அதுபால் தாக்க
வழுவிலா திரேத நாற்பான் வான்றுவா பரம தாகும்
கழிவிலா இருபால் தாக்கக் கலியுக வருட மாமே. 372

*இ-ள் : இராசி பன்னிரண்டையும் வைத்து, ஒரு இராசிக்கு 1800 கலையாக வைத்து, எல்லாவற்றையும் கலையாக இறங்கவிட்டு நின்ற தொகையை எண்பதால் பெருக்கக்* ***கிரேதாயுகம்.*** *60ஆல் பெருக்க* ***திரேதாயுகம்,*** *40ஆல் பெருக்கத்* ***துவாபர யுகமாம்.*** *இருபதில் பெருக்கக்* ***கலியுக வருடமாம்*** *என்றவாறு.*

வரும்சக ஆண்டி ரண்டாய் வைத்துமேல் அறுப துக்கீய்ந்
திருந்துகீழ்ப் படிமூ வேழால் பெருக்கிக்கண் கைகால் ஈய்ந்தோன்
பொருந்துவித் துள்ளே தேவர்க் கீய்ந்தது கண்மேல் கூட்டி
இருந்தபன் னிரண்டால் தாக்கி முன்னதற் கீய மாதம். 373

*இ-ள் : சகரனுக்குச் சென்ற ஆண்டை இரண்டு படியாக வைத்து மேலிற் படியை அறுபதில் தரித்து நின்ற சேடம் அறிந்து, கீழிற்படியை இருபத்து ஒன்றால் பெருக்கி, அதன் மேலே, கண்கால் ஈய்ந்தோ ரென்றும் கூட்டி, உள்ளே தேவர் என்னும் கருவியால் தரித்துப் பெற்ற பலமே மாதம் என்றவாறு.*

ஈயாது முப்பான் மாறி இதற்கீய்ந்த தியதி பின்னும்
ஈயாத தறுபால் தாக்கி முன்னதற் கீய்ந்த நாடி
ஓயாமல் இருப தாண்டு உத்தமம் பின்னால் ஐந்தும்
ஏயாமத் திமம்பின் தீதாம் இருபதும் விளங்கும் காலம். 374

*இ-ள் : ஈயாத சேடமும் 30இல் பெருக்கி, முன்பில் கருவியால் தரித்துப் பெற்ற பலம் தியதியாம், ஈயாத சேடம் அறுபதில் பெருக்கி, முன்பில் கருவியால் தரித்துப் பெற்ற பலம் நாழிகை என்று அறிவது. முன்பினில் மேலிப்படி இருபதாண்டு உத்தமம். விம்சதி என்று அறிவது.*

நாற்பதுக்குள் மத்திமம் விம்சதி என்று அறிவது. நாற்பதுக்குள் மத்திபம் விம்சதி என்று அறிவது. அறுபதுக்குள்ளாகில் விம்சதி என்று அறிவது. இப்படி இருபதாகக் கழித்து மேல் நின்றவை ஆண்டாகவும், கீழ் நின்றவை மாதமும் தியதியும் நாழிகையும் என்றறிவது. இன்ன ஆண்டில், இன்ன மாதத்தில், இன்ன தியதியில், இன்ன நாழிகையில் விம்சதி புகுதும் என்றறிவது என்றவாறு.

**வாக்கியம் பிறக்கும் வகை**

**விளங்கிய வாக்கி யத்தெண் விகலையோர் முப்பத் தைந்தும்**
**வளங்கலை பத்தும் பாகை பதின்மூன்று வைத்து முன்னில்**
**உளங்கொள்வாக் கியத்தை எண்ணி ஒன்றொடு தாக்கி ரண்டே**
**இளங்கொடி இரண்டேல் ஏற்று மற்றுமில் வகையால் ஏற்றே.** 375

இ-ள் : 35 விகலையும், 10 கலையும், 13 பாகையும் வைத்து முதல் வாக்கியம் காண வேண்டில், ஒன்றோடே இத்தைப் பெருக்குவது. இரண்டாம் வாக்கியம் காண வேண்டில், இரண்டுடன் பெருக்குவது. முடிந்த வாக்கியம் காணவேண்டில் 248இல் பெருக்குவது.

**தற்காலம் பிறக்க**

**ஏற்றிய தொகையைத் தீட்டி விகலையீ ரிருபத் தொன்று**
**மேற்றிய கலையோ ராறும் வைத்தமுன் போல தாக்கி**
**மாற்றிது தன்னை முன்னம் எண்ணிய தொகையை வாங்கிக்**
**கூற்றவேல் விழியாய் ! சேட மேடாதி துலாத்தில் கொள்ளே.** 376

இ-ள் : முன்பு பெருக்கின தொகையைத் தீட்டிவைத்து, 41 விகலையும், 6 கலையும் முன்புபோலே வைத்து முன்பு சொன்னதைப் போலத் தாக்கி, இத்தொகையிலே களைந்து நின்ற சேடம் மேடாதி துலாதி என்றறிவது என்றவாறு.

**கொண்டதில் புகன்ற கோடி களைந்துசாக் குறித்த சாவு**
**கண்டரு மதியில் கொண்டு காச்சம தரித்துப் பெற்ற**
**பண்டுமுன் தீட்டி வைத்த படியின்மே டாதி வாங்கி**
**மண்டல னிகழ்து லாதி கூட்டவாக் கியம் தாமே.** 377

இ-ள் : முன்பு மேடாதி துலாதி அறிந்து நின்ற தொகையிலே புசாகோடி களைந்து சாக்கொள்வது சந்திர சாவில் சாக்கொண்டு சமஸ்காரம் பண்ணி சாபலம் முழுவதும் முன்பு தீட்டிவைத்த படியிலே மேடாதி களைந்து துலாதி கூட்டுவது. இப்படிக் களைந்து கூட்ட நின்றது வாக்கியம் என்று அறிவது. மேடாதி துலாதியையும் புசாகோடியையும் சாக்கொள்ளும் படியும் பின்பே கிரகசாரத்தில் கண்டு கொள்வது என்றவாறு.

## கலியுகம் பிறக்க வகை

வாக்கியத் தொகையை வைத்துப் பிழைத்ததில் தொகையை வாங்கி
நீக்கிநின் றதனால் வந்த தொகைஎண்ணி நேராய் வந்த
வாக்கியம் தன்னை ஈற்றில் வாக்கியம் தன்னை வாங்கி
வாக்கியம் பிழையா தென்றார் மண்ணினில் வடித்த நூலோர்.378

இ-ள் : வாக்கியம் 248 வைத்து பிழை தீர்க்கவேண்டும். வாக்கியம் இத்தனையாம் வாக்கியம் என்றறிந்து, முன்பின் தொகையைக் களைந்து நின்ற சேடம் எத்தனை என்று அறிந்து அத்தனையாம் வாக்கியத்தைக் களைந்து நின்ற அலகு நினைத்த வாக்கியம் என்று சொல்வது என்றவாறு.

வடித்தநூற் றிருபான் நாலும் வாக்கியம் காணவேண்டில்
முடித்தவாக் கியத்தில் பாதி மொழிந்தனர் முடிவு காணீர்
துடித்தவாக் கியத்தில் இத்தில் முன்னில்வாக் கியத்தில் சூட்டத்
திடத்தவாக் கியமி ராசி மண்டலம் குறையில் சேர்த்தே. 379

இ-ள் : 124-ஆம் வாக்கியம் காணவேண்டில், முடிந்த வாக்கியத்தில் பாதி அலகு கொள்வது. முடிந்த வாக்கியம் காணவேண்டில் முதல் வாக்கியத்தையும் 247ஆம் வாக்கியந்தையும் கூட்டிக் காண்பது. குறைந்தவற்றுக் கெல்லாம் இராசி மண்டலம் கூட்டிக் கொள்வது.

சேர்த்திய சகர னாண்டில் கைசெய்த வில்லோன் என்றே
ஏர்த்திடக் கலியாண் டித்தின் நூலோன்த னுக நீசன்
சீர்த்தது தாக்கி நெல்சேய் வெலியீபத் துன்ற சேட
மேற்பதி னாலில் தாக்கி அதற்கீய விடுவ நாடி. 380

இ-ள் : சகர ஆண்டிலே கைசெய்த வில் என்ற கூட்டக் கலிக்குள் சென்ற ஆண்டாம் என்பது. யார் சேடம் பெருக்கி யிற்றால் முன்னமே பெற்றது வரிசை செய்து முன்களைந்த வாக்கியத்துடனே கூட்ட சுத்த தினம் என்பது.

*தாற்காலிகம் அறியும்படி*

அன்றைய வாக்கியத்தை வைத்து முன்னாளை வாக்கியத்தை அதில் களைந்து நின்ற சேடத்தைக் காணவேண்டும். நாள் தொகையில் பெருக்கி, நின்றது விகலை. முன்னாம் அதனை வரிசையால் ஒட்டு அதிலே முன்பு களைந்த வாக்கியத்தையும் துருவத்தையும் கூட்டி நாள் பார்த்தால் அப்பொழுது கண்ட நாழிகையை அந்நாளில் சென்ற நாழிகை என்று அறிவது என்றவாறு.

**சுத்தி நட்சத்திரம்**

நாடனை ஏழில் தள்ள வெள்ளிமுன் நயந்த வாரம்
ஓடிய வாரம் தன்னில் ஒருமூன்று வாரம் எட்டில்
பாடிய விடுச்சொல் நாடி தனில்மூன்று கடிகைப் பார்க்கக்
கூடிது ரூப மாகும் கொண்டசங் கிராந்திக் கெல்லாம். 381

இ-ள் : சுத்த தினத்தை ஏழில் கழித்து நின்றது வெள்ளி முதலாக அன்றைக் கிழமை என்று அறிவது. அக்கிழமை அன்னதனை என்றறிந்து அதிலே மூன்று கிழமை கழித்து நின்ற தொகையை வேறே வைத்து முன்பு சொன்ன நாழிகையை இன்னதனை என்று அறிந்து அதிலே மூன்று நாழிகையைக் கீழே வைத்துப் பார்க்க, அவ்வாண்டுக்குச் சங்கிரம துருவம் பார்ப்பது.

**நட்சத்திரம் எடுக்க**

எல்லையில் தினத்தில் மன்னன் வீடுசூழ் குளமெ டுத்துப்
பல்லியோ ளிக்க றித்த பலமமு தாகும் சேடம்
செல்விகேள் ! ஏழில் மாவென் றறிந்தது விருத்தம் சேடம்
சொல்லிடில் அற்றை நாட்டுத் தோன்றுவாக் கியம தாமே. 382

இ-ள் : கலிசுத்த தினத்தை வைத்து அதிலே சென்ற மாதத்தையும் தேதியையும் கூட்டி, இதிலே மன்னன் வீடு சூழ்குளம் என்று பதினைந்து லட்சத்து அறுபத்தையாயிரத்து நானூற்றுப் பதினொன்று எடுத்து ஏழில் கழித்துச் சனி முதலாக வாரம் கண்டு பல்லியோனி ஒன்று மூவாயிரத்து முப்பத்து ஒன்றுக்கு ஈய்ந்தது விருத்தபலன் சேஷம் அன்றைக்கு வாக்கியம் என்று அறிவது.

ஆமமு தத்தை முன்னோன் கரிசெத்தோ னத்த னேத்தி
ஏமமாய் விருத்தம் சூதோ னீர்நீர் செங்கால் பெருத்தி
தாமென இரண்டுங் கூட்டித் தனிக்கீறிக் கோத மன்னன்
வாமனக் கூட்டிக் கண்டால் வாக்கியத் துருவ மாமே. 383

இ-ள் : அமுத பலத்தை "மன்னோகரி செற்றோ னத்த" னென்று இராசி 11, பாகை 7, கலை 31, வினாடி ஒன்று வைத்துப் பெருக்கி ஒருபுறம் வைத்துக்கொண்டு, இரண்டாவது வந்த விருத்த பலத்தைச் "சூதோனீர்நீர் செங்கல்" என்று பாகை 27, கலை 44, வினாடி 6-ம் வைத்துப் பெருக்கி, அமுதபலம் பெருக்கினதும் கூட்டி, அதிலே மூலத்துருவம் "தனிக்கீறி கோத மன்னன்" என்று இராசி 11, பாகை 10, கலை 34, வினாடி 31-ம் கூட்டில் *வாக்கியத்துருவம்* என்றவாறு.

துருவமும் தனத்தின் வாக்கியம் தொகைசேர்க்க உதய சந்திரன்
மருவிய பரியாய் சென்ற நாள்மட்டும் வருத்தி மிச்சம்
பொருள்களை எண்ணூர் வைத்துப் பொறித்ததை வாங்கிச் சேடம்
வருகலை யிலிய தாக்கி வாக்கிய கெதிக்கீய் நாடி. 384

இ-ள்: கண்ட துருவமும் வாக்கியம் 278-ம் முடியும் வரை அதுவே துருவமாகும். அந்தத் துருவத்தில் அந்த வாக்கியமும் கூட்டிக்கண்டது உதய சந்திரன் கண்ட இராசியை 2¼-ஆல் பெருக்கி, அசுபதி முதல் நட்சத்திரச் சேடம் 800 கலை வைத்து ஒரு நட்சத்திரமாக முழு நட்சத்திரத் தொகை கண்டு சேடத்தைக் கலையாக்கி 800 கழித்துநின்ற கலையை சுன்னிட்டு 6-ல் பெருக்கி அன்றைய சந்திரகதிக்குக் கொடுக்க வந்த ஈவு நாழிகையாகவும், சேஷத்தை சுன்னிட்டு 6-ஆல் பெருக்கி கெதிக்கு ஈய்ந்து வினாடி என்று அறிவது.

## திதி நாழிகைகாண

நாடியும் வினாடி கண்டு நற்றிதி காண வேண்டில்
சூடிய மதியி லத்தைக் கதிர்கொன்றுத் திதியின் சூழ்ச்சி
கூடிய பாகை ஈறார் திதிக்கொன்று குணிதம் சேடம்
வாடிய கெதிய லத்தை ரவிகெதி வாங்கிக் காண்பாய். 385

*இ-ள் : நாடியும் வினாடியும் கண்டபின் திதி காண வேண்டி அன்றையில் உதய சந்திரனை வைத்து அத்தேதியில், உதய சூரியனைக் கொண்டு எடுத்து நின்ற சேடம் இராசி 1க்கு 2½ திதியாகவும், திதிக்கு பாகை 1-12 ஆகவும் கணக்கிட்டுச் சேடத்தை 7820 கலைவைத்து, அதிலே நின்ற கலையை எடுத்துப்போட்டுச் சேடத்தைச் சுன்னிட்டு ஆறில் பெருக்கி, சந்திர கெதியில் சூரிய கெதியை வாங்கி ஈவு கண்டு நாடி வினாடி காண்பது என்றவாறு.*

## யோக, கரணம் காண

காண்பது யோகத் தோடு கரணமும் தியாச்சி யங்காண்
தேன்படு முன்ன தாகச் செப்பினோம் வகையைத் தேடு
ஊண்படு மகர மாணம் யோக்கியாதி மாதம் தோறும்
தேன்படும் கதியா தித்தன் செப்பினோம் கருத்தில் வைப்பாய். 386

*இ-ள் : காணவேண்டிய யோகமும் கரணங்களும் தியாச்சியங்களும் இந்நூலிலே முன்னமே சொன்னோ மாயினும் அகரமானமும் யோகத்தாதியும் சூரிய கதியும் மாதங்களையும் சொன்னோம் இதைக் கருத்தில் வைப்பாய்.*

## கதிகள் காண

வையாசி அலவனன்பத் தேழ தின்மேல்
　　வருடைஅரி ஒன்றாகும் மங்கைமீன் இரண்டாம்
மெய்யாசி துலைமூன்றும் வில்தேள்தை நான்காம்
　　விளங்குகதிர் ஞாயிறுக்கு விபரம தாகப்
பொய்யாத வாக்கியத் தின்றுகொண்டு மறுநாள்
　　பொருத்தியவாக் கியத்தில்எளி பூரணையின் கதியாம்
செய்வானித் திகரண்மதி யிற்கதிர் வாங்கி
　　தினயோக மதிகர்சேர் சொலகடிகை சுத்தம். 387

இ-ள் : 1. வைகாசி, ஆனி, ஆடி - 57;
2. சித்திரை, ஆவணி - 58;
3. புரட்டாசி, பங்குனி - 59;
4. மாசி, ஐப்பசி - 60;
5. மார்கழி, கார்த்திகை, தை - 61

இவை சூரிய கதி என்பது. சந்திர கதியாகிய 248-லும் அந்தந்த வாக்கியத்தில் மேல் வாக்கிய கீழ்வாக்கியத்தில் வாங்கிக் கண்ட சேடம் கலையாக்கி, அதுவே சந்திரகதி என்பது. திதிக்கும் கரணத்துக்கும் சந்திர கதியில் சூரியகதியை வாங்கி நாழிகை காண்பது. யோகத்துக்குச் சந்திரகதி, சூரியகதியை ஒன்றாகக் கூட்டி நாழிகை காண்பது. யோக, கரண, தியாச்சியம் இந்நூல் முன்னமே சொன்ன விதமானம் அறிவது. அகரமானம் யோக்யாதி இதை அடுத்து வருகிற இலக்கத்தில் அறிவது. பங்குனி 7-5-2; சித்திரை 1-13-4; வைகாசி 7-9-11; ஆனி 12-13-14; ஆடி 14-13-12-12; ஆவணி 12-10-98; புரட்டாசி 8-6-4-3; ஐப்பசி 1-2-3; கார்த்திகை 6-7-9-10; மார்கழி 12-13-14-14; தை 14-13-12; மாசி 12-9-8. இவை சந்திரன் அகரமானம். இனி சூரியன் யோக்யாதி அறிய, பங்குனி 2-4-9-10; சித்திரை 11-13-16-17; வைகாசி 19-21-22-24; ஆனி 24-25-24; ஆடி 24-23-22-21; ஆவணி 19-17-15-13; புரட்டாசி 11-8-6; ஐப்பசி 2-1-3-5; கார்த்திகை 6-8-90; மார்கழி 10-11-11; தை 11-9-8-7; மாசி 6-4-2. இவை சாதிர அகரமானத்துக்கும் பூர்வபங்குனி பிரதமை முதலும் ஆறு மாதத்தைக் களைந்து அப்பால் ஆறு மாதம் கூட்டுவது. சகரமானத்துக்கு சித்திரை முதல் ஆறு மாதமும் கூட்டுவது. இவைக்கெல்லாம் 8 நாட்களுக்கு ஒரு இலக்கம்

---

*1861-ல் வெளிவந்துள்ள அச்சு நூலில்,*

**அர்த்தாதிகம்**

துருவுதற் கால மொன்றும் தோன்றும்வாக் கியத்தின் முந்நாள்
மருவும்வாக் கியத்தை வாங்கி வந்தநா ழிகையால் சேடம்ஞ
பெருகிட விகலை முன்னாம் பெற்றது வரிசை செய்து
துருவமுன் களைந்து வாக்கி யத்துடன் சூட்டச் சுத்தம்

இ-ள் : பெற்ற பலம் கலையாக வைத்து நின்ற சேடம் அர்த்தாதிகம் கூட்டி அல்லாதொழியில் போக்குவது என்று அறிவது என்ற பாடலும் உரையும் அமைந்து காணப்படுகிறது.

பகிர்ந்து களைவதும், கூட்டுவதும் அறிந்து சந்திரனுக்கு அகரமானமும் சூரியனுக்கு யோக்கியாதியும் அறிவர் என்றவாறு.

## நவக்கோள் எண்ணும்படி

**சத்தமா தினத்தில் சென்ற மாதங்கள் தியதி கூட்டி**
**அத்தினம் அதனில் சூள்ப்போம் தோந்தெற்கே குளம கத்தி**
**வைத்தெலாக் கோட்கும் கண்ட மந்தன்முன் வாரம் கண்டு**
**மொற்றிடு பதினால் தாக்கி முக்கோடி நெல்லென் றீயே.** 388

*இ-ள் : சுத்ததினம் வைத்து அதில் சென்ற மாதமும் தியதியும் கூட்டி, இதிலே சூள்ப்போந்தோர் தெற்கே குளம் என்று பதினைந்து லட்சத்து எண்பத்து ஏழாயிரத்து ஆறு களைந்து நின்ற சேடமெல்லாம் கோள்களுக்கும் கண்ட தினம் என்று பேராம். இக்கண்டத்தைச் சனி முதலாகக் கிழமை காண்க. ஆதித்தனை எண்ணும்படி கண்டத்தை இருபதால் பெருக்கி, முக்கோடி நெல்லென்று 7315-க்கு ஈவது.*

**ஈயல மண்ட லார்த்தம் இருந்ததீ ராறில் தாக்கி**
**ஆயமுன் கருவிற் கீய்ந்தால் அப்பலம் இராசி சேடம்**
**தோயுமுப் பானில் தாக்கிச் சொன்னதிற் கீயப் பாகை**
**கூயதை அறுப்பால் தாக்கி அதற்கீயக் கலையாம் கோதாய்!** 389

*இ-ள் : முன்பு முக்கோடி நெல்லுக்கு ஈய்ந்த பலத்தை மண்டலார்த்தம் என்று அறிவது. நின்ற சேடத்தை 12இல் பெருக்கி, முன்புற்று நின்ற கருவிற்கு ஈய்ந்தபடி இராசியாகி வைத்து நின்ற சேடத்தை 12-இல் பெருக்கி, முதற்கருவி ஆதரித்துப் பெற்ற பலம் பாகமாக வைத்து நின்ற சேடத்தை 60இல் பெருக்கி, முன்பிற் கருவியால் தரித்து சேடத்தைக் கலையாக வைப்பது.*

## சந்திர கணிதம்

**கோதில்மண் டலார்ந்தம் தாக்கி கோற்றொடி வேத நூலில்**
**கோதறி கலையும் நீக்கி தருமாறன் போசம் கூட்டு**
**ரோதிமத் திம்ம பாத ரதிவேதம் பாற்போக்கில் சூட்சம**
**மோதியா திராசிக் குள்ளும் மேடாதி துலாதி அப்பால்.** 390

இ-ள் : மண்டலத்தைக் கோதிலென்று 30-இல் பெருக்கி வேதநூலென்று 618-க்கு ஈய்ந்து கலையாகக் களை நின்றதில் தருமாற போகமென்று இராசி 10, பாகை 12 பாகை 15 கூட்டிக் கண்டது ரோதி மத்திமம். இயல் பாகை ஆதியாகத் தேம்பாதென்று இராசி 2, பாகை 18 வாங்கி 6 இராசிக்கு உள்ளாகிற மேடாதி என்றும் துலாதி என்றும் அறிவது.

இராசி 3, பாகை 5, கலை 7 மூலதுருவம் கூட்டத்துங்க மத்திமமாம். இதைச் சந்திரன் மத்திமத்திலே களைந்து, மேடாதி துலாதி அறிந்து புசாகோடி முன்போல் கொண்டு சமாஸ்காரம் செய்து சாபல முழுதும் சந்திரன் மத்திபுல மேடாதி களைந்து துலாதி கூட்டச் சந்திரன் சமாஸ்காரமாம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. கோமான் | 20 | 9. வெண்ணூ | 157 | 17. சோரவல் | 210 |
| 2. கையில் | 39 | 10 விண்ணேரக | 83 | 18. சேய்பே | 278 |
| 3. வைப்பு | 59 | 11. வேட்டை | 168 | 19. புத்தோளா | 25 |
| 4. பெய்பெண் | 77 | 12. சிறந்தா | 213 | 20 பழையா | 791 |
| 5. எந்தை | 97 | 13. மூவரதா | 229 | 21 உடையா | 295 |
| 6. சுந்தரன் | 155 | 14. தையில் | 236 | 22. சேறையா | 268 |
| 7. இந்திரன் | 193 | 15. வாதுமால் | 252 | 23. பொற்கோ | 30 |
| 8. பொதுவ | 150 | 16. நல்லூரா | 261 | 24. நல்லோனி | 301 |

**எண்செவ்வாய் தனக்குக் கண்ட எண்ணேழ்பூ வரித்துப் போதில்**
**மண்டியீ ராறு முப்ப தறுபதால் மாறி மூன்றில்**
**கண்டதை இராசிப் பாகை கலைகொள்மண் டலார்த்த பூநீர்**
**கொண்டுநீ ராடக் கீய்ந்த வருபலம் கலையில் கூட்டே.** 391

இ-ள் : செவ்வாய்க்கு எண் கண்டதை வைத்து எண்ணேழ் பூ என்னும் 687 கருவியால் தரித்துப் பெற்றபலம் விபலமாம். சேடம் 12 அறுபதால் பெருக்கி, முன்புற்று நின்ற கருவியால் தரித்துப் பெற்ற பலம் இராசி, பாகை, கலை கொண்டு சேடம் புகட்டி மண்டலத்தை பூநீரென்று 48-ல் பெருக்கிப் பொய்யிலான் என்னும் 2130 கருவியால் தரித்துப் பெற்ற பலம் கலையாம், இதை முன்பு எண் நின்றதிலே கூட்டுவது.

கூட்டியே கன்னி தேரோன் பகல்நீக்கி விடைகு சர்க்குத்
தீட்டிதில் பாகை யாதி சுதிரினில் களைந்த சேட
மாட்டொடு துலாதி ஆய்ந்து சாபலம் பாதி யாக்கி
வாட்டமத் திமத்தின் மேடம் துலைகூட்ட மந்தம் சேய்க்கே. 392

*இ-ள் : கன்னி தேரோன் பகலென்று இராசி 11, பாகை 8, கலை 31 களையச் செவ்வாய் மத்திமமாம், மத்திமத்தைத் தீட்டுவைத்து இதிலே பாகை தியாகவே ராணி என்றும் இராசி 3, பாகை 28, மந்தோச்சம் எடுத்து நின்ற சேடம் மேடாதி துலாம் அறிந்து புசா கோடி கொண்டு சமாஸ்காரம் பண்ணு சாபலத்தைப் பாதி செய்து, செவ்வாய் மத்திமத்திலே மேடாதி களைந்து துலாதி கூட்ட மந்தவரையாம்.*

மந்தத்தை அருக்க னார்த்தம் மத்திமத் ததனால் வாங்கி
அந்தமில் மகர மாதி ஆறுமந் தாதி சாவாம்
வந்தகற் கடக மாதி ஆறுவத் திமசா வாகும்
சந்தித்துச் சாக்கன் கொண்டு சாபலம் பாதி செய்யே 393

*இ-ள் : மந்தரையில் ஆதித்தன் மத்திமத்தைக் களைந்து, மகரம் முதல் ஆறு இராசிகளும், அந்தாதிச் சாவாகும். கடகம் முதல் ஆறு இராசிகளும் நடு சாவாகும். இவையறிந்து சாக்கொள்ளும்படி கொண்டுவந்த சாவைப் பத்தி செய்வது.*

செய்துமே டாதி மர்த்த ரையினில் சேர்க்கச் செவ்வே
வெய்யலக் கிரார்த்த மாகும் வேராணி களைமந் தொச்சம்
தையல்கோல் மேடம் ஆய்ந்து சாக்கொள்சா பலத்தை முற்றும்
பொய்யில்செய் மத்தி மத்தில் துலைரகூட்டப் புடம தாமே. 394

*இ-ள் : முன்பு அரித்து நின்ற பலத்தை மந்த வரையிலும் மேடாதி களைந்து துலாதி கூட்ட, சீக்கிர வரையும், இச்சீக்கிர வரையில் வேராணி என்ற இராசி 3, பாகை 28 களைந்து நின்ற சேட மேடாதி துலாதி அறிந்து புசாகோடி கொண்டு சாசமாஸ்காரம் செய்து சாபலம் முழுதும் செவ்வாய்ச் சுத்தமத்தில் கூட்ட முதற்களைதல் செய்யப் புடமத்திமமாம்.*

புடந்தனில் அருக்கன் ஆர்த மத்திமம் அதனைப் போக்கி
அடைந்தகோல் மேடம் கண்டு மகராதி அறிந்து சாவாய்ந்
திடந்தரு புசையே கோடி கொண்டுசா பலத்தை எல்லாம்
புடம்தனில் மேட நீக்கித் துலைதூட்டப் பூமன் சுத்தம். 395

*இ-ள் : முன்புவைத்த புட மத்திமத்திலே ஆதித்தன் மத்திமத்தைக்களைந்து சேட மேடாதி துலாதி மகராதி கடகாதி அறிந்து புசா கோடி கொண்டு சாசமாஸ்காரம் பண்ணி சாபலம் முழுவதும் புடமத்திலே மேடாதி களைந்து துலாதி கூட்ட செவ்வாய் சுத்தம் என்றவாறு.*

பாற்புசை கோடி என்று பகர்ந்தோரை முடிமூன் றொட்டிக்
கோற்புசை அதனில் சாக்கொள் கோடியைப் புசைய தாக்கிச்
சேற்றவை முக்காற் பாவைச் சேர்வதற் களைந்து சேடம்
பேற்கலை யாக்கிப் பெற்ற சாமேல்லை சேடம் பின்னே. 396

*இ-ள் : மேடாதி களைந்து தூலாதி கூட்டுவது என்றுஅறிந்து புசாகோடி கொண்டு நின்றது புசையாகில் இராசி ஒன்றுக்கு யாவு 8 ஆகவும், பாகை 3¾ லாகவும் யாவின் தொகைக் கண்டுவைத்துச் சேடத்தைக் கலையாக்கி கண்ட யாவில் கீழ் யாவைத்து மேல் யாவை வாங்கி நின்றதில் கலையைப் பெருக்குவது.*

பின்சாவில் முன்சா நீக்கிப் பெற்றகா லிடையைத் தாக்கி
குன்றதாற் கீய்ந்த பேறு கூட்டுமேற்பேற் சாவின் மேற்சா
பின்சாவிற் களைய வில்லேற் பெற்றயா மாறி வைத்து
முன்போல ஈய்ந்து பெற்ற மொய்குழல் ! களைமேற் சாவில்.397

*இ-ள் : கீழிற் சாவிலே மேற்சாவைக் களைந்து நின்ற சேடத்தாலே நடுவில் நின்ற கலையைப் பெருக்கி, குன்றாதா ரென்னும் 225இல் அகத்தபலத்தை மேற்சாவிலே கூட்டுவது, கீழிற் சாமேல் வைத்து மேற்சாவைக் கீழே வைத்து முன்போலே களைந்து பெருக்கித் தரித்துப்பெற்ற பலத்தையே சாவிலே களைவது என்றவாறு.*

சாக்கொளப் போத தாகில் முதற்சாவாற் கலையைத் தாக்கி
மாக்கலை வரிசை செய்து மத்திமத் ததனில் கூட்டத்
தீக்கவும் முன்போல் ஈந்தித பலங்கலை யாவமன் றெண்ணி
தூக்கிய துலாதி மேடம் களைந்திட வருக்கம் தூய்தாம் 398

*இ-ள் :* சாக்கொளப் போதாதாகில் முற்காலில் நின்ற கலையைப் பெருக்கி, முன்போலே தரித்து மேற்சாவில் கூட்டுவது. கலையாமல் அக்கலையை வரிசையால் ஒடுகிற ஆதித்தன் மத்தியத்திலே முற்படத் தரித்து துலாதி மேடாதியா யத்தைக் கூட்டுவது. இப்படிக் கூட்ட ஆதித்தனுக்குச் சுத்த ஸ்புடம் என்றவாறு.

### *ஆதித்தன் மந்தசா*

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. மேலோன் | 8 | 9. மாலெண் | 72 | 17. கூடலன் | 16 |
| 2. வெள்ள | 17 | 10. வேலெண் | 78 | 18. மைக்கண் | 119 |
| 3. உள்ளான் | 25 | 11. புத்தேள் | 85 | 19. மால்பாக | 112 |
| 4. வில்லி | 23 | 12.மறை | 91 | 20 சீராமன் | 124 |
| 5. நல்லீர் | 41 | 13. எல்லை | 97 | 21 பூதநாதன் | 126 |
| 6. கைநீர் | 49 | 14.மாயோதன் | 12 | 22. கேபரக | 128 |
| 7. செப்பு | 57 | 15.வெண்கோல் | 17 | 23. ஐயாரன் | 229 |
| 8. வீதூர் | 64 | 16. நாயகன் | 112 | 24. மைஞ்ஞா | 126 |

தூய்கண்டத் தறுநூ றேத்தி இரவிதூ ரம்போய் நீக்கி
ஆயும்பன் னிரண்டு முப்ப தறுபதால் பெருக்கி முன்னில்
தேய்கின்ற இராசி பாகை கலைகொள்மண் டலார்த்தம் எட்டாய்
ஈய்ந்தவப் பலமன் னீக்கொண் சோதிமா யவனே றேற்றே. 399

*சந்திரனை எண்ணும்படி :* மண்டலத்தை வைத்து 60இல் பெருக்கி இரவி தூரம் போமென்ற 16 ¾, 363 கருவியால் தரித்துப் பெற்றபலம் இராசு பாகை, கலை கொண்டு, ஈயாத சேடம் புகட்டி மண்டலத்தை எட்டால் தரித்துப் பெற்ற பலம் களைந்து ஒண்சோதி மாயதி மாயவனென்று இராசி 11, பாகை 23 மூல துருவம் கூட்டில் சந்திரன் மத்வமாம்

ஏற்றமத் திமமாம் திங்கட் கினிதுங்கன் எண்கண் டத்தே
மாற்றிலா விண்ணோர்க் கீய்ந்து வருபலம் போக்கிச் சேட
மாற்றுமீ ராறில் முப்ப தறுபதால் பெருக்கி முன்னில்
தேர்த்ததில் சித்தி இராசி பாகையும் கலையும் செய்யே. 400

*துங்கன் எண்ணும்படி : கண்டத்தை வைத்து மாற்றிலா விண்ணோரென்னும் 3232 கருவியால் தரித்துப் பெற்ற பலம் விரபலம் சேடம் 12-30-60 இல் பெருக்கி, முன்புற்ற நின்ற கருவியால் தரித்து இராசி, பாகை, கலை கொண்டு, ஈயாத சேடம் புகட்டுவது.*

செய்யமண்ட லார்த்த முன்னே மன்பெருக்கினில் கோபத் தீய
கெய்திய பலமும் நீக்கி என்போதும் பொன்னி கூட்டத்
துய்யமத் திமமாம் அத்தை சோமன்மத் தியத்தின் வாங்கி
மையில்சா முன்போல் செய்து மறிநீக்கி மதியில் எண்ணம். 401

*இ-ள் : மண்டலத்தை முன்னை மன் என்று 195இல் பெருக்கி, கோபத்தீயென்னும் 400 கருவியால் தரித்துப் பெற்ற பலம் கலையாம். இதை முன்பு எண்ணி நின்றதில் களைந்தது என்போது பொன்னி என்றும் என்றவாறு.*

*செவ்வாய் மந்தசா*

| | | | | | |
|---|---|---|---|---|---|
| *1.* | *40* | *9.* | *388* | *17.* | *682* |
| *2.* | *8* | *10.* | *875* | *18.* | *704* |
| *3.* | *124* | *11.* | *472* | *19.* | *723* |
| *4.* | *167* | *12.* | *512* | *20.* | *746* |
| *5.* | *210* | *13.* | *552* | *21.* | *761* |
| *6.* | *285* | *14.* | *558* | *22.* | *779* |
| *7.* | *300* | *15.* | *622* | *23.* | *778* |
| *8.* | *344* | *16.* | *553* | *24.* | *780* |

*மகர சா*

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | 90 | 9. | 791 | 17. | 1446 |
| 2. | 479 | 10. | 875 | 18. | 1525 |
| 3. | 267 | 11. | 960 | 19. | 1600 |
| 4. | 351 | 12. | 1144 | 20. | 1674 |
| 5. | 443 | 13. | 1126 | 21. | 1674 |
| 6. | 532 | 14. | 1206 | 22. | 1806 |
| 7. | 616 | 15. | 1290 | 23. | 1786 |
| 8. | 705 | 16. | 1368 | 24. | 1952 |

*கடக சா*

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | 439 | 9. | 2288 | 17. | 2332 |
| 2. | 837 | 10. | 2380 | 18. | 2282 |
| 3. | 1193 | 11. | 238 | 19. | 2237 |
| 4. | 1433 | 12. | 2400 | 20. | 2448 |
| 5. | 1737 | 13. | 2244 | 21. | 2134 |
| 6. | 1942 | 14. | 2367 | 22. | 2077 |
| 7. | 1841 | 15. | 2382 | 23. | 2014 |
| 8. | 2198 | 16. | 2352 | 24. | 1952 |

**புதன் கணிதம்**

பூகண்டம் நூற்றில் தாக்கிப் புதனுக்கு வெள்ளச் சேதம்
நீகண்ட தீரா ரையா றிருமுப்பான் பெருக்கி முன்னீய்ந்
தாகின்ற இராசி பாகை கலைசெய்பூக் கொள்க வென்றே
போகங்கொள் மண்ட லார்த்தம் பெருங்களி பொறிகால் என்றே. 402

இ-ள் : கண்டத்தை வைத்து 100-இல் பெருக்கி, வெள்ளைச் செந்தேன் என்று 8797-க்கு ஈய்ந்து பெற்ற பலம் மண்டலார்த்தம். அதை வேறே வைத்து சேடம் 1230-60இல் பெருக்கி முன்பில் அர்த்தாதிக்கம் உண்டெனில் கருவியால் அரித்துவந்த பலம் இராசி, பாகை, கலையாக வைத்து சேடத்தில் அர்த்தாதிக்கம் உண்டெனில் ஒன்றேத்தி முன்வைத்த மண்டலார்த்தத்தைப் பூக்கொள்ள என்ற 106-க்குப் பெருக்கி பொலிகாலென்ற 230க்கு ஈவது.

என்றதில் பலமும் கூட்டி நட்டார்வே லோன்செய் யென்று
என்றதில் களையப் புந்தி மத்திமம் அதனை வெய்யோன்
சென்றம மத்தில் நீக்கிச் சேடங்கோல் மேடம் தேர்ந்து
நின்றதில் கடக மாதி மகராதி அறிக நேரே. 403

*இ-ள் : முன்பு மண்டலார்த்தத்தைப் பெருக்கி, ஈய்ந்த பலங்களையாம். இவை முன் ராசி, பாகை, கலையும் கூட்டி நட்டார் வேலோன் செய்யென்று மூலத்துருவம் கலை 21, பாகம் 8, இராசி 7 களைய புதனுக்கு மத்திமமாம். அதைத் தீட்டி வந்து ஆதித்தன் மத்திலீய்ந்த புதன் மத்திமத்தைக் களைந்து, சேடம் மேடாதி துலாம் அறிந்து கடகாதி மகராதி காண்பது.*

நேர்ந்தசா பலத்தில் பாதி நீள்கதிர் மத்தி மத்தில்
சேர்ந்தமே டாதி நீக்க சிக்கிர வரையா மித்தில்
ஆர்ந்தவேழ் இராசி நீக்கி அறிகொழி துலாதி சார்க்கோல்
கூர்த்தசா பலத்தை வெய்யோன் நடுவுடன் துலாதி கூட்டே 404

*இ-ள் : முன் புதன் மத்திமத்தை ஆதித்தன் மத்திமத்தில் களைந்து கடகாதியா மகரத்தியால் அறிந்து நின்றது புசாகோடி கொண்டு சா பலம் அறிந்து அந்தித்து ஆதித்தன் மத்திமத்தில் மேடாதி களைந்து துலாதி கூட்ட சீக்கிர வரையாம். அந்தச் சீக்கிரவரையில் மந்தொச்சம் இராசி 7 களைந்து சேடம் முன்போல் மேடாதி துலாதி அறிந்து சாசமஸ்காரம் பண்ணி சாபல முழுதும் ஆதித்தன் மத்திமத்தில் மேடாதி களைந்து துலாதி கூட்ட புதன் சுத்த மத்திமம் என்றவாறு.*

கூட்டிட புடமாம் இத்தில் குலப்புத நடுவை நீக்கி
ஆட்டொடு துலாதி நண்டு மகராதி அறிந்து சாவாய்ந்
தோட்டியே புசையே கோடி ஒழிந்துச்சா சமாஸ்க ரித்து
பூட்டிய பலம்பு டத்தில் துலைகூட்டப் புதர்க்குத் தூய்தாம் 405

*இ-ள் : முன்பு கண்ட மத்திமத்திலே புதன் மத்திமத்தைக் களைந்து சேட மேடாதி துலாதி மகராதி கடகாதி அறிந்து புசா கோடி கொண்டு சாசமாஸ்காரம் பண்ணி சாபலம் முழுதும் புடமத்திமத்தில் மேடாதி களைந்து துலாதி கூட்ட புதன் சுத்தமாம் என்றவாறு.*

## புதன் மந்தசா

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | 19 | 9. | 141 | 17. | 201 |
| 2. | 38 | 10. | 151 | 18. | 205 |
| 3. | 55 | 11. | 161 | 19. | 208 |
| 4. | 72 | 12. | 170 | 20. | 210 |
| 5. | 88 | 13. | 178 | 21. | 212 |
| 6. | 73 | 14. | 185 | 22. | 213 |
| 7. | 118 | 15. | 191 | 23. | 214 |
| 8. | 126 | 16. | 166 | 24. | 215 |

## மகரசா

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | 93 | 9. | 540 | 17. | 945 |
| 2. | 185 | 10. | 595 | 18. | 68 |
| 3. | 187 | 11. | 650 | 19. | 120 |
| 4. | 248 | 12. | 703 | 20. | 1608 |
| 5. | 308 | 13. | 754 | 21. | 104 |
| 6. | 397 | 14. | 805 | 22. | 1136 |
| 7. | 425 | 15. | 853 | 23. | 1198 |
| 8. | 464 | 16. | 200 | 24. | 1197 |

## கடகசா

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | 141 | 9. | 1006 | 17. | 1481 |
| 2. | 278 | 10. | 171 | 18. | 1284 |
| 3. | 104 | 11. | 1125 | 19. | 1280 |
| 4. | 532 | 12. | 1171 | 20. | 1272 |
| 5. | 466 | 13. | 1217 | 21. | 1256 |
| 6. | 782 | 14. | 1237 | 22. | 1242 |
| 7. | 846 | 15. | 1258 | 23. | 1221 |
| 8. | 931 | 16. | 1223 | 24. | 1197 |

## வியாழக் கணிதம்

தூய்கண்டத் தோர்கள் பெய்த வில்வாளி யிற்பீற் கீய்ந்து
போயதீ ராறு முப்ப தறுபதால் பெருக்கி முன்போல்
ஈயபல இராசி யாதி மண்டிலம் வண்டோ டொன்றேய்
ஆயதால் பெருக்கிப் பொய்யில் ஆர்க்கரித் ததுமு னீர்க்கே 406

*வியாழன் எண்ணும்படி :* இரண்டத்தை வைத்துக் கொடுத்துச் சுன்னாவது 10இல் பெருக்கி, வில்வாளியில் பீறென்ற 43323-க்கு ஈய்ந்து பெற்ற பல மண்டலார்த்தம் வேறே வைத்துச் சேடம் 1-3-160இல் பெருக்கி, முன் பிற்கருவிக் கீய்ந்து பெற்ற பலம் இராசி, பாகை, கலையாக வைத்து சேடத்தில் அர்த்தாதிக்கம் உண்டென்னில் ஒன்று கூட்டி மண்டலார்த்தத்தை வண்டோடு என்ற 511-க்குப் பெருக்கிப் பொய்யிலார் என்ற 231-க்கு ஈய்ந்து பெற்ற பலம் கலை இவை முன்வைத்த இராசி, பாகை, கலையில் களைவது என்றவாறு.

நிக்கதிர் குடிசூழ் பொன்னே எனக்களை நின்ற சேடம்
கோக்குரு நடுவா மித்தி லாரோரை களைந்து கோலா
டாக்கின தறிந்து சாக்கோள் அன்னதில் பாதி தன்னை
மாக்குரி களைந்து பின்னும் துளைகூட்ட மந்த மாமே. 407

இ-ள் : முன்பு சமாஸ்காரம் பண்ணி நின்ற இராசி, பாகை, கலையில் குடிசூழ் பொன்னே என்ற வாக்கிய இலக்கம் பூருவத் துருவங்களை 35 பாகம் ஆறாய் 8 களைந்து நின்ற சேடம் வியாழ மத்திமமாம். இவை தீட்டி மந்தொச்சம் இராசி ஆறு வாங்கி, மேடாதி, துலாதி அறிந்து, புசாகோடி கொண்டு சாசமஸ்காரம் பண்ணி அர்த்தித்து மத்தி மேடாதி களைந்து துலாதி கூட்ட மந்தவரையாம் என்றவாறு.

மாதராய் மந்தன் தன்னில் அருக்கன்மத் திமத்தை வாங்கி
ஆதியாய் ஆதி கோலென் றறிந்தபின் நடுவந் தாதி
சாதுசா வறிந்து சாக்கோள் சாடலம் புகுந்து தேரே
தீதிலா மந்தங் கூட்டச் சீக்கிர வரைய தாமே. 408

இ-ள் : முன் வைத்திருக்கிற மந்தவரையில் ஆதித்தன் மத்திமத்தை வரைக்கி நின்ற சேடம் மேடாதி துலாதி மகராதி

கடகாதி அறிந்து புசாகோடி கொண்டு சாக்கொண்டு சாசமஸ்காரம் பண்ணி பாதி செய்து மந்தவரையில் கூட்டுதல், களைதல் செய்யச் சீக்கிரம் வரையாம்.

சீக்கிரத்தில் இராசி ஆறு களைசேட மேடம் கோல்தேர்
சாக்கொள்சா பலத்தை முற்றும் தடங்குறு மத்தி மத்தில்
போக்குமே டாதி கூட்டு தூலாதியேற் புடம தாகும்
ஆக்கிய புடத்தில் நீக்க அருக்கன்மத் திமத்தை யாங்கே. 409

இ-ள் : முன் சீக்கிரவரையில் மந்தொச்சம் இராசி ஆறு களைந்து சேட மேடாதி துலாதி அறிந்து புசாகோடி கொண்டு சாசமஸ்காரம் பண்ணி சாபலம் முழுதும் சுத்தமத்தில் மேடாதி களைந்து துலாதி கூட்ட புடம் மத்திமமாம். அவையில் ஆதித்தன் மத்திமம் களைவது.

ஆங்கதிர் சேட மேடம் துலாதியாய்ந் தாதி சாவாம்
தீங்கில்மத் திமச்சா தேர்ந்து புசாகோடி தெரிந்து கொண்டு
தாங்குசா சமாஸ்க ரித்துச் சாபலம் புடத்தில் அடேல்
வாங்குகோ லாகில் கூட்டு வான்குரு சுத்த மாமே. 410

இ-ள் : புடமத்தில் ஆதித்தன் மத்திமத்தைக் களைந்து நின்ற சேடம், மேடாதி துலாதி மகராதி கடகாதி அறிந்து, புசாகோடி கொண்டு சமாஸ்காரம் பண்ணி சாபலம் முழுதும் புடமத்திமத்தில் மேடாதி களைந்து துலாதி கூட்ட வியாழத்துக்குச் சுத்தமமாம்.

### *வியாழன் மந்தசா*

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | 20 | 9. | 181 | 17. | 305 |
| 2. | 40 | 10. | 199 | 18. | 315 |
| 3. | 9 | 11. | 217 | 19. | 324 |
| 4. | 81 | 12. | 239 | 20. | 321 |
| 5. | 104 | 13. | 25 | 21. | 337 |
| 6. | 121 | 14. | 266 | 22. | 342 |
| 7. | 111 | 15. | 280 | 23. | 363 |
| 8. | 163 | 16. | 293 | 24. | 344 |

*மகர சா*

| | | | | | |
|---|---|---|---|---|---|
| *1.* | *36* | *9.* | *319* | *17.* | *533* |
| *2.* | *74* | *10.* | *348* | *18.* | *554* |
| *3.* | *111* | *11.* | *378* | *19.* | *579* |
| *4.* | *147* | *12.* | *407* | *20.* | *589* |
| *5.* | *183* | *13.* | *431* | *21.* | *604* |
| *6.* | *217* | *14.* | *492* | *22.* | *607* |
| *7.* | *251* | *15.* | *487* | *23.* | *628* |
| *8.* | *281* | *16.* | *511* | *24.* | *637* |

*கடக சா*

| | | | | | |
|---|---|---|---|---|---|
| *1.* | *56* | *9.* | *437* | *17.* | *628* |
| *2.* | *111* | *10.* | *472* | *18.* | *628* |
| *3.* | *165* | *11.* | *504* | *19.* | *425* |
| *4.* | *216* | *12.* | *533* | *20.* | *648* |
| *5.* | *266* | *13.* | *558* | *21.* | *649* |
| *6.* | *312* | *14.* | *581* | *22.* | *647* |
| *7.* | *357* | *15.* | *604* | *23.* | *644* |
| *8.* | *398* | *16.* | *605* | *24.* | *637* |

**சுக்கிர கணிதம்**

சுத்தவன் புகர்க்குக் கண்டம் தூயஐ நூறில் தாக்கி
வைத்ததீக் கருவி மைதிலி ராகவர்க் கீயந்த சேடம்
எத்தவீ ராறு முப்ப தறுபதால் பெருக்கி முன்னீய்ந்
தெத்தநுண் ணிடையாய் ! ஓரை முதற்பாகை கலையி ருந்தே. 411

*வெள்ளியை எண்ணும்படி :* கண்டத்தை வைத்து 500-ல் பெருக்கி, மைதிரி ராகவனென்ற 112346க்கு ஈய்ந்து பெருபல மண்டலார்த்தம் அந்த மண்டலார்த்த பலம் வேறு வைத்துச் சேடம் 13-30-60இல் நபருக்கு முன் பிற்கருவிக் கீயந்து பெற்ற பலம் இராசி பாகை கலை கொள்வது.

இருத்தமண்ட லார்த்த முல்லை ஏற்றியே பொலிவார்க் கீய்ந்து
வரும்பலன் முன்க ளைந்து கண்டோன்வெய் யோன்தாள் வாங்கப்
பொரும்புகர் நடுவாம் இத்தை பொலிசுடர் நடுவில் நீக்கி
அருந்துலை மேட மாதி மகரநண் டாதி யாய்ந்தே. 412

இ-ள் : மண்டலார்த்தத்தை முல்லை என்ற 95-க்குப் பெருக்கிப் போல்வன் என்ற 330-க்கு ஈய்ந்தது பெற்ற பலம் முன்திரட்டி வைத்த இராசி, பாகை, கலையிலே களைந்து அதில் கண்டோன் வெய்யோன் தாள் என்ற பூருவத் துருவம் கலை 1, பாகம் 7, இராசி 2 களைய வெள்ளு மத்திமமாம். அந்த மத்திமத்தைத் தீட்டிவைத்து அதை ஆதித்தன் மத்திமத்தில் களைந்து சேட மேடாதி துலாதி அறிந்து அந்தாதிச் சாமத்தி மச்சா வரிந்து புசா கோடி கொண்டு முன்போலச் சாக்கண்டு சாசமாஸ்காரம் பண்ணுவது என்றவாறு.

ஆய்ந்தது பகுத்தா டாதி அருக்ன்மத் திமத்தில் போக்கித்
தீய்ந்துலை யாதி கூட்டச் சீக்கிர வரை மூன் றோரை
வாய்ந்தமந் தோச்சம் வாங்கி மறிதுலை அறிந்து சாக்கொள்
போந்தசா பலந்து லாதி பொலிசுடர் நடுவில் பூட்டே. 413

இ-ள் : முந்தின சாபலத்தை அர்த்தித்து ஆதித்தன் மத்திமத்தில் மேடாதி களைந்து துலாதி கூட்ட சீக்கிர வரையாம். அதில் பொற்கோயிலென்ற மந்தோச்சம் இராசி 3 களைந்து சேடமேடாதி துலாதி அறிந்து புசகோடி கொண்டு சாமஸ்காரம் பண்ணி சாபலம் முழுதும் ஆதித்தன் சுத்தமத்தில் கூட்டுதல் களைதல் செய்யப்பட மத்திமமாம்.

பூட்டிட புடமாம் இத்தில் புகர்நடு வதனை வாங்கி
ஆட்டொடி துலாதி பாய்ந்து நடுவுமந் தாதிச் சாவும்
காட்டிய தரித்துச் சாக்கொள் கைதுசா பலம்பு டத்தில்
பாட்டுக்கோ லாதி யாகில் குதிகளைப் புகரோன் சுத்தம். 414

இ-ள் : முன்பு எண்ணி வைத்த புடத்திலே சுக்கிரன் மத்திமத்தைக் களைந்து நின்ற சேடமாதி துலாதி அந்தாதி சாவு, மத்திமசாவு அறிந்து, புசா கோடி கொண்டு சாசமாஸ்காரம் பண்ணி சாபலம் முழுவதும் புடத்திமத்தில் கூட்டுதல் களைதல் செய்ய சுக்கிரன் சுத்தமாம்.

## சுக்கிரன் மந்த சா

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | 11 | 9. | 63 | 17. | 85 |
| 2. | 21 | 10. | 7 | 18. | 85 |
| 3. | 30 | 11. | 76 | 19. | 85 |
| 4. | 36 | 12. | 79 | 20. | 86 |
| 5. | 39 | 13. | 81 | 21. | -- |
| 6. | 53 | 14. | 82 | 22. | -- |
| 7. | 59 | 15. | 83 | 23. | -- |
| 8. | 61 | 16. | 84 | 24. | -- |

## மகர சா

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | 95 | 9. | 845 | 17. | 1559 |
| 2. | 490 | 10. | 937 | 18. | 1645 |
| 3. | 285 | 11. | 1208 | 19. | 1726 |
| 4. | 320 | 12. | 1719 | 20. | 1811 |
| 5. | 470 | 13. | 1209 | 21. | 1894 |
| 6. | 567 | 14. | 1297 | 22. | 1974 |
| 7. | 660 | 15. | 1386 | 23. | 2052 |
| 8. | 753 | 16. | 1474 | 24. | 2129 |

## கடக சா

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | 616 | 9. | 2717 | 17. | 2591 |
| 2. | 1161 | 10. | 2752 | 18. | 2535 |
| 3. | 1608 | 11. | 2767 | 19. | 2475 |
| 4. | 1964 | 12. | 2762 | 20. | 2413 |
| 5. | 2230 | 13. | 1742 | 21. | 2347 |
| 6. | 2424 | 14. | 272 | 22. | 2276 |
| 7. | 2561 | 15. | 2681 | 23. | 2240 |
| 8. | 2657 | 16. | 2541 | 24. | 2129 |

## சனி கணிதம்

புகல்சனி சண்டை மூதூர் நெற்கோட்டத் தீந்து போக்கி
சிகைசெய்தீ ராறு முப்ப தறுபதால் பெருக்கிச் சேர்ந்த
வகையைமுன் னதற்கீய்ந் தோரை முதல்வைத்து மண்க ளார்த்தம்
பகரில்பெண் வண்டென் றேற்றி பொலிகாற்கீய் பலமுன் பாய்ச்சே. 415

*சனியை எண்ணும்படி :* கண்டத்தை வைத்து மூதூர் நெற்கோட்டம் என்ற 1866-க்கு ஈய்ந்து பெற்ற பல மண்டலார்த்தம் அவை வேறுவை சேளம் 12-30-60ல் பெருக்கி, முன்பில் கருவியால் அரித்துப் பெற்ற பலம், இராசி, பாகை, கலையாக வைத்துச் சேடம் அர்த்தாதிக்கமாகில் ஒன்று கூட்டி மண்டலார்த்தத்தைப் பெண்வண்டு என்கிற 517-க்குப் பொலிகாலென்ற 230-க்கு ஈய்ந்து பெற்ற பலம் முன்பு வைத்து இராசி, பாகை, கலையில் கலையுடன் கூட்டுவது.

பாஞ்சதி லைம்மு கன்பொய் மெய்யன்ப தரித்த சேடம்
பூஞ்சனி நடுவாம் இத்தில் பூசாநெய் களைந்து கோலா
பாஞ்சிகை அறிந்து சாக்கொண் டதிற்பாதி மேடம் ஆதி
தாஞ்சனி நடுவில் நீக்கித் துலைகூட்டச் சனிக்கு மந்தம். 416

இ-ள் : முன்பு நின்ற இராசி, பாகை, கலையில் ஐம்முகன் பொய் மெய் என்ற பீருவத் துருவம் கலை-59, பாகம்-1, இராசி-7 களைய சனிக்கு மத்திமமாம். அந்த மத்திமத்தைத் தீட்டிவைத்து, அதில் மந்தோச்சம் பூசா நெய் என்ற இராசி 7, பாகம் 26 களைந்த சேடம் மேடாதி துலாதி அறிந்து புசாகோடி கொண்டு கோடியுறிற் புசையாக்கி, சாக்கொண்டு சாசமாஸ்காரம் பண்ணி, சாபலத்தை அர்த்தித்துப் பாதியை மத்திமத்தில் மேடாதி களைந்து துலாதி கூட்ட மந்தவரையாம்.

சனிமந்தன் தன்னில் வெய்யோன் தன்னடு வதனைத் தள்ளி
இனியமே டாதி கோலால் எரிசுறா வரிந்து சாக்கொண்
டனையதில் பாதி மேடம் ஆதிபந் தத்தில் கூட்டச்
சினவிய குலவேற் கண்ணால் சீக்கிர வரையாம் செவ்வே. 417

*இ-ள் : சனி* மந்தவரையில் ஆதித்தன் மத்திமத்தைக் களைந்த சேடம், மேடாதி துலாதி மகராதி கடகாதி அறிந்து

புசாகோடி கொண்டு சாசமாஸ்காரம் பண்ணி, சாபலம் பாதி செய்து மந்தவரையில் கூட்டுதல் களைதல் செய்ய சீக்கிர வரையாம்.

செவ்விய சீக்கி ரத்தில் கூடாப்பெண் ணென்ற சேடம்
தவ்வமில் மரிகோல் தேர்ந்து சாக்கொள்சா பலத்தை முற்றும்
செவ்விய சனியின் மத்தி மத்தியில்மே டாதி நீக்கில்
சவ்விய புடமா மத்தில் கதிர்நடு வதனை வாங்கே. 418

இ-ள் : சீக்கிர வரையில் கூடாப் பெண்ணென்ற மந்தொச்சம் 26, இராசி 7 களைந்து சேட மேடாதி துலாதி அறிந்து புசாகோடி சா முன்போலக் கொண்டு சாசமாஸ்காரம் பண்ணி சாபலம் முழுதும் சனி மத்திமத்திலே கூட்டுதல், களைதல் செய்ய புட மத்திமமாம். இதில் ஆதித்தன் மத்திமம் களைவது என்றவாறு.

வாங்கிமே டாதி கோல்முன் மகராசி கடக மாதி
ஆங்கவை அறிந்து சாக்கொண் டடையவா டாதி யாதில்
பூங்குழல் மடவாய் ! நீக்கில் துலாதியேல் புடத்தில் கூட்டத்
தீங்கிலாச் சனியின் சுத்தப் புடமெனச் செப்ப லாமே. 419

இ-ள் : முன்பு புடமத்திமத்திலே ஆதித்தன் மத்திமத்தை வாங்கி நின்ற சேடம் மேடாதி, துலாதி, மகராதி, கடகாதி அறிந்து புசாகோடி கொண்டு சாவறிந்து சாசமாஸ்காரம் பண்ணி சாபலம் முழுதும் புடமத்திமத்தில் கூட்டுதல் களைதல் செய்ய சனி சுத்தம் என்றவாறு.

*சனி மந்தசா*

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | 29 | 9. | 286 | 17. | 481 |
| 2. | 57 | 10. | 296 | 18. | 506 |
| 3. | 82 | 11. | 330 | 19. | 522 |
| 4. | 112 | 12. | 360 | 20. | 536 |
| 5. | 142 | 13. | 286 | 21. | 547 |
| 6. | 172 | 14. | 416 | 22. | 555 |
| 7. | 215 | 15. | 442 | 23. | 559 |
| 8. | 231 | 16. | 464 | 24. | 591 |

மகரசா

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | 22 | 9. | 187 | 17. | 298 |
| 2. | 47 | 10. | 202 | 18. | 308 |
| 3. | 67 | 11. | 218 | 19. | 307 |
| 4. | 88 | 12. | 234 | 20. | 324 |
| 5. | 109 | 13. | 249 | 21. | 331 |
| 6. | 129 | 14. | 262 | 22. | 335 |
| 7. | 148 | 15. | 275 | 23. | 340 |
| 8. | 167 | 16. | 287 | 24. | 343 |

கடகசா

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | 28 | 9. | 221 | 17. | 326 |
| 2. | 53 | 10. | 236 | 18. | 333 |
| 3. | 109 | 11. | 257 | 19. | 338 |
| 4. | 109 | 12. | 277 | 20. | 341 |
| 5. | 134 | 13. | 285 | 21. | 359 |
| 6. | 157 | 14. | 268 | 22. | 345 |
| 7. | 180 | 15. | 309 | 23. | 344 |
| 8. | 201 | 16. | 308 | 24. | 349 |

**குசாதி பஞ்சக்கிரக உதயம், அத்தமனம் அறியும்படி**

செப்பிய செவ்வாய் பன்னேழ் சீரிய புந்தி பன்மூன்
பிறப்பிலா வியாழம் பன்னொன் றொன்பது பாகை வெள்ளி
தப்பில்மூ வைந்து பாகை சனிகதிர் முன்பின் சாரில்
அப்பொழு திறப்பாம் அப்பால் பிறப்புமாம் ஆங்க வர்க்கே. 420

இ-ள் : ஆதித்தனுக்கு முன்பின் செவ்வாய் பாகை-17, புதன் பாகை-13, வியாழன் பாகை-11, வெள்ளி பாகை-9, சனி பாகை-15. இதன்மேல் ஊறுவருதையராம் முன்னின்று திக்கில் உதயம், பின்னின்று திக்கில் அத்தமனம் என்றவாறு.

## வெள்ளி பாடு பிறப்பு அறியும்படி

ஆங்கண்டம் அதனில் பட்டம் கூட்டியே நீர்மே டென்ற
பாங்கொக்க வரித்த வன்று படுவது கிழக்கே வெள்ளி
பூங்கண்டம் சொல்வெண் பாவென் றிருத்திமுன் போல ஈய்ந்தால்
வீங்கின முலையாய் ! ஒக்க வீய்ந்தநால் மேற்குப் பாடே. 421

*இ-ள் : கண்டம் வைத்துப் பட்டமென்ற 11-ஐக் கூட்டி நீர் மேடு என்ற 58-க்கு ஈய ஒக்க ஈயப்பட்ட நாள் கிழக்கே வெள்ளிபடும். கண்டத்தில் சொல் வெண்பா என்ற 270-ஐக் கூட்டி முன்பில் கருவிக் கீய்ந்தால் ஒக்க ஈயப்பட்ட நாள் மேற்கே வெள்ளி படும். கிழக்கே சுபாக அத்தமனம்; மேற்கு வக்கிரார்த்த அத்தமனம் இவை குசாதிக் கொக்கும்.*

பாடுமேற் றலையே பட்ட பத்தாம்நாள் கிழக்கே தோன்றும்
பாடுகீழ்த் தலையே பட்ட எழுபதில் மேற்கே தோன்றும்
பாடுமேற் றலைமேற் பார்த்த எண்ணுக்கு முன்னே ஆறில்
பாடதாம் கிழக்கே மூன்று நாளைக்கு முன்னே பாடாம். 422

*இ-ள் : வெள்ளி மேற்றலை அத்தமனமாகில் அதற்குப் பத்தாம் நாள் கிழக்கு உதயம். சீழ்த்தலை வெள்ளி அத்தமனமாகில் ஏழுபதாம் நாள் மேற்கில் உதிக்கும். மேற்றலை அத்தமனம் எண்ணிப் பாடு கண்ட நாளுக்கு ஆறு நாளில் படும். கீழ்த்தலை அத்தமனம் எண்ணிப் பாடு கண்ட தினத்துக்கு முன் மூன்று நாளில் படும்.*

முன்னிய கண்டம் தன்னை முல்லைவென் றூவுக் கீய்ந்து
பன்னிரு முப்பான் ஆறு பத்தினால் தாக்கி முன்னீய்ந்
தன்னதை இராசி பாகை கலையாக்கி மண்ட லார்த்தம்
தன்னையா திரைய மென்று பெருக்கியீ பொலிகால் தன்னால். 423

*இ-ள் : இராகுவுக்கு எண் கண்டத்தை வைத்து முல்லை வென்றூவென்ற 6795-க்கு ஈய்ந்து பெற்றபலம் மண்டலார்த்தம். அவை வேறு வைத்துச் சேடம் 12-30-60இல் பெருக்கி, முன்புற்ற கருவியால் அரித்துப் பெற்ற பலம் இராசி, பாகை, கலையாக வைத்த சேடம் அர்த்தாதிக்கமாக*

ஏற்றி, முன்வைத்த மண்டலார்த்தம் ஆதிரையன் என்ற 1932-க்கும் பெருக்கி, பொலிகால் என்ற 230-க்கு ஈய்வது என்றவாறு.

தன்பலம் அதனில் கூட்டி தையலார் எண்சீர் வெண்பா
முன்புறும் அதனில் கூட்ட மொய்யரா நடுவாம் இத்தை
இன்பமண் டலத்தில் நீக்க இராகுவின் சுத்த மத்தில்
வன்றிற விராசி ஆறு கூட்டுக் கேது மாதே. 424

இ-ள்: மண்டலார்த்த பலம் பெருக்கி ஈய்ந்த பலங்களை முன்பு எண்ணிவைத்த இராசி, பாகை, கலையில், கலையுடன் கூட்டி எண்சீர் வெண்பாவென்ற கலை 17, பாகம் 17 கூட்ட இராகு மத்திமமாம். இவை இராசி 12இல் களைய இராகு சுத்தம். இதனுடன் 12 இராசி கூட்ட கேது சுத்தமாம் என்றவாறு.

## சயந்த மாலை

மாமதி கதிரோன் தன்னை வாளரா வளைக்கும் வண்ணம்
தாமரை அயனே அன்னான் சாற்றிய *சயந்த மாலை*
யாமது தமிழி னாலே அறைதரு வரத னிஷ்டம்
போம்வழி எறும்பு போக்கி நினைக்கும்புன் மதியைப் போலாம்.

இ-ள்: முன்னோரால் செய்த வடமொழி *சயந்தமாலை* என்னும் கிரகண கணித நூலைத் தமிழினால் யான் சொல்லுவதிப் பரிசென்று அவையடக்கம் சொன்னது என்றவாறு.

## சூரிய, சந்திர கிரகணம் - பொது

மதிகதிர் துங்கன் பாம்பின் மத்திமம் முதல்நாட் கெண்ணி
உதயமன் உவாச்சொல் நாடி ஒன்றுக்கு விகலை பத்து
மதிகலை ஒருபான் மூன்று ஒன்றாரே முக்கால் முப்பான்
கதிர்கலை துங்கன் பாம்பு கடிகையுள் ளளவும் ஏற்றே. 426

## *சூரிய - சந்திரருடைய கிரகணத்துக்கும் பொதுவாக எண்ணும்படி*

*கிரக சங்கையான நாளுக்கு முதல் நாள் சந்திராதித்த துங்கன், இராகு மத்திமம். விகலாதியாக வாக்கியப்படி உவா நாழிகை இவ்வளவு என்று அறிந்து உவா நாழிகை ஒன்றுக்குச் சந்திரனுடைய கலை-13, விகலை-12, ஆதித்தன் கலை-1, துங்கன் விகலை-1¾, இராகு விகலை-30 ஆக 2 ¼ நாழிகை உள்ளளவு பெருக்குவது.*

**ஏற்றிய தொகைகள் தன்னை இவர்கள்மத் திமத்தில் கூட்ட**
**சாற்றிய தற்கா லத்து மத்திம மாகு மத்தால்**
**தோற்றி சுத்தம் எண்ணி சுடர்மதி தற்கா லத்து**
**மாற்றிய உவாவும் துங்க னும்களை யாய்மந் தோச்சம். 427**

*இ-ள் : முன்பு உவாவிற் சென்ற நாழிகை மட்டும் சந்திராதித்த துங்கன் இராவுக்குப் பெருக்கிக் கூட்டிய கலை, விகலை, அவரவர் முதல் நாளைக் கெண்ணி கண்ட மத்திமத்தில் விகலாதியாய் கூட்ட உவாவருதி நாழிகைக்குத் தற்கால மத்திமம் என்று அறிந்து வேறுவெத்து முன் எண்ணிய படிகள் இந்நாலாவதற்கும் சுத்தம் எண்ணிக் கண்டபடி அவரவர்க்கு விகலாதியாய் தற்கால சுத்தமென்று வைத்து எண்ணுமிடத்தில் ஆதித்தன் தற்கால மத்திமத்திலும் சந்திரன் தற்கா மத்திமத்திலும் சுங்கன் தற்கால மத்திமம் களைய நின்றது கேந்திரம். இவை சந்திராதித்தருக்கு வைப்பது என்றவாறு.*

**களைந்தபின் மகர கற்கி அறிகோடி யாய்ச்சாக் கொண்டு**
**விளைந்தசா பலமாய் நன்றாய் விகலையால் வரிசை செய்து**
**வளங்கலை யைம்பத் தேழிற் கூட்டதி மகர மாகில்**
**களைந்திடு கற்கி யாகில் கதிர்மதி தனக்குக் கன்னம் 428**

*இ-ள் : முற்பட்ட கேந்திர மகர கடகாதி அறிந்து புசாகோடி கொண்டு புசையிலன்றி கோடியில் கொண்டு குன்றாகாரென்னும் 225-க்கு ஈய்ந்து வருபலமும் மேற்சாவிலே*

*கூட்டி ஆதித்தன் சந்தரனுக்கு அந்த சாவில் கொண்டு சாசமஸ்காரம் பண்ணி பெறுபலம் விகலை என்று அறிந்து அவை வரிசையாய் கலை, விகலையாய் வைத்து இவை வெவ்வேறு 57 இரண்டுபடி வைத்து இதில் முற்பட்ட கேந்திர மகராதியாகில் கூட்ட, கடகாதி களைந்து நின்றவை சந்திராதித்தர் கன்னமென்று விகலாதியாகத் தீட்டி வைப்பது.*

**கன்னம தறிந்து நீயே செல்லென்னும் கலைம திக்கு**
**மன்னிய கதிர்க்கும் வைப்பு மத்திம புத்தி யொன்றாய்**
**தன்னவை ஐம்பத் தேழால் பெருக்கரிக் கன்னம் தம்மால்**
**பொன்னனாய் ! பலமி வர்க்குப் புடபுத்தி என்று போற்றே. 429**

*இ-ள் : நீயே செல்லென்ற 787வைத்துச் சந்திரன் மத்திம புத்தியாம். வைப்பு என்ற கலை 59, ஆதித்தன் மத்திம புத்தியாம். சந்திரன் மத்திம புத்தி 784 கலையும் 57-ல் பெருக்க இரவி கன்னத் தீயில் வரும்பலம் இரவி புடபுத்தி என்றும் சதி புடபுத்தி என்றும் வைப்பது என்றவாறு.*

**புத்திகள் தீட்டி வெய்யோன் புடபுத்தி புசையில் சாக்கொண்**
**டுத்தசா பலத்து நாமம் புசாபலக் கலையென் றுண்ணி**
**அத்தையொன் றேமுக் காலால் தாக்கியாங் கதலி ரண்டை**
**நெத்திகழ் குழலாய் ! வாங்கி நின்றது பிராண நேரே. 430**

*இ-ள் : முன்பு எண்ணித் தீட்டியிருக்க ஆதித்தன் தற்கால சுத்தத்தில் புசாகோடி கொண்டு புகையினால் சாக்கொண்டு சாசமஸ்காரம் பண்ணிப் பெற்றபலம் புடரவி புசாபலங்கலை என்று தீட்டி இக்கலையை விடுவச் சாயங் குலமென்ற ஒன்றேமுக்காலில் பெருக்குவது. அத்தொகையில் 2 களைந்து நின்றது பிராணன் இவை அணுகி வைப்பது.*

**பிராணனை இருபத் தேழால் ஈய்ந்திட கலைம திக்கும்**
**பிராணனை ஆறுக் கீய்வி கலைவெய் யவனுக் கித்தைப்**
**பராமதி கதிரி னுக்குப் பகர்பற்று மந்தி பற்றும்**
**இராவினில் பின்னில் பற்றும் இருபது பின்பு கூட்டே. 431**

இ-ள் : முன் தீட்டிய பிராணனை 27-ல் ஈயப்பெற்ற பலம் சந்திரனுக்குக் கலை, பிராணனை ஆறில் ஈய்ந்து வரும் பலம் ஆதித்தன் விகலையாம். இவை தற்கால சுத்த புடத்தில் ஆதித்தன் மேடாதி கன்னிவரை நிற்கில் உதித்த நாழிகை 10 அஸ்தமித்த நாழிகை உவாவில் இருவரிலும் களைவது. இருபது நாழிகைக்குப் பின்பு என்னும் அத்தமானத்தில் பின்பத்தெனினும் கூட்டுவது.

**கூட்டுமே டாதி ஆறே இவ்வகை கோல்முன் ஆறேல்**
**வாட்டிய பொருளைக் கூட்டும் கூட்டியே பொருளை வாட்டும்**
**கீட்டிய நடுவிற் பற்று மிறவிடைப் பத்தும் வேண்டாம்**
**கோட்டிய நுதலாய் சேடம் கூறுமுப் புடம தென்றே.** 432

இ-ள் : சந்திராதித்தர் இருவருக்கும் இப்படியே செய்வது. பகல் நடுவில் பத்தும், இரா நடுவில் பத்தும் உவா வரில் பிராண சமஸ்காரம் வேண்டாம். முற்பட்ட சுத்த தற்காலமே சுத்தமென்று அறிவது. இப்படி கூட்டுதல் களைதல் செய்து நின்றது இருவர்க்கும் திதிப்புடம் என்று பெயர். இவை இத்தைத் தீட்டுவது.

**புடரவி கேந்தி ரத்துப் புசாலப மிருபத் தேழீய்ந்**
**திடமதி கலையாம் ஆறுக் கீய்ந்திட விகலை வெய்யோர்க்**
**கடையமுப் புடத்தி லத்தை அகத்துமே டாதி ஆறேல்**
**நடைதரு துலைமுன் னேறேல் கூட்டுநாற் புடம தாமே.** 433

இ-ள் : முன்பு தீட்டி வைத்த இரவி கேந்திரத்தைப் பூசாகோடி கொண்டு புகையில் சாக்கொண்டு சாசமஸ்காரம் பண்ணி நின்ற சாபலத்தைப் புசாபலக் கலையென்று தீண்டி வைத்து அதனை 27இல் ஈய்ந்து பெற்ற பலம் சந்திரனுக் கலையாம். ஆறில் ஈய்ந்து பெற்ற பலம் ஆதித்தனுக்கு விகலையாம். இவற்றை ஆதித்தன் மேடாதி கன்னிவரை நீக்கில் அந்த திரி தீயப் புடங்கள் இல்லையாகில் முதற்புடங்களில் கூட்டுதல் களைதல் செய்வது. இவற்றை இருவருக்கும் சதுர்ப்புடமெனத் தீட்டுவது.

நாற்பட மதியின் ஓரை பாகைநற் கலைய தாக்கி
சீற்களண் ணூற்றிற் கீயச் சென்னிமுன் சென்ற நாளாம்
மாத்தவீ யாத சேடம் அறுபதால் பெருக்கித் திங்கட்
காற்புட புத்திக் கீயக் காணுவர்க் கடிகை யாமே. 434

*இ-ள் : சதுப்புட சந்திரன் இராசியும் பாகையும் கலையாக்கி 800-இல் ஈய, வருபலம் அசுபதி முதல் சென்ற நாளாம் ஈயாத சேடம் 60-இல் பெருக்கி சந்திரபுட புத்தியைக் கலையாக்கி அதனால் ஈய்ந்து பெற்ற பலம் செய்கின்ற நாளில் சென்ற உவா நாழிகையாம். ஆக அதனால் இன்ன நாள் இத்தனை நாழிகையில் பற்றும்.*

உவாவினால் கலையால் ஏழ்நூற் றிருபதால் இதனை வாங்கித்
தீவாவிய சேட மென்ன திதிக்குறை திங்கள் வெய்யோன்
அவாபுட புத்தி தன்னில் கற்றிடல் ஒன்றில் ஒன்றை
விவாகமாம் சேட மிக்க திதிக்குறை அறுபான் வீக்கே. 435

*இ-ள் : முன்பு பக்கம் 14, மற்று சேடம் நிற்கில் சேடமான கலையை 720-இல் களைந்து நின்ற சேடம் தற்காலத்துக்கும், பின்பு பக்கம் 15-க்குச் செல்லக் கடவர். நாழிகைக்குக் கலையா முன்பு கண்ட பக்கம் 15 மற்றுச் சேடம் நிற்கில் தற்காலத்திற்கு முன்பு பிரதமையால் சென்ற நாழிகைக்கு கலையாம். இவையால் உவா பிரதமைக் கலை என்று அறிந்து இவை திதி சேடம் என்று தீட்டுவது. சந்திராத்திதர் புடபுத்திகளை வைத்துப் பெரிதில் சிறிது களைந்து நின்ற சேடம் புடபுத்திவா என்று தீட்டிக் கலையாக்கி, திதி சேடம் 16-இல் பெருக்கு என்றவாறு.*

வீக்கிய தொகையை முன்னை விவாகத்துக் கீய நாடி
ஈக்கிடாச் சேடம் தன்னை இருமுப்பால் பெருக்கி முன்னீய்ந்
தோக்கிட விநாடி இத்தை உவாவினா டியினும் கூட்டி
நாற்புடை வெயிலோன் திங்கள் கலையினும் சாரி கூட்டே. 436

*இ-ள் : முன்பு பெருக்கினத் தொகையைப் புடபுத்தி விசாக கலையால் ஈய்ந்து பெற்ற பலம் நாழிகையாக வைத்துச்*

சேடம் 60ஆல் பெருக்கி, முன்பில் கருவியால் அரித்துப் பெற்றபலம் விநாவிகையாம். இந்த விநாழிகைக்குக் கீழே வைத்து இதனை முன் தற்காலத்து வாக்கியத்தின்படி கண்ட உவா நாழிகையில் கூட்ட சுத்த பருவமாம். இவை தீட்டி வைத்து முற்படி நாடி விநாடியைச் சதுப்புச் சந்திரன் கலை விகலையிலும் சதுப்புட ஆதித்தன் கலை விகலையிலும் கூட்டுவது என்றவாறு.

**கூட்டுநாற் புடம திக்கே திதிக்குறை தனையும் கூட்ட**
**தீட்டுவா கலையா தாகில் தெரிந்தது பிரமை யாகில்**
**வாட்டுமேல் எல்லாம் வாட்டித் திதிக்குறை மதிபு டத்தி**
**னோட்டுதி சமர்க ளாவ ரிருவரும் உவாவின் சுத்தம். 437**

இ-ள் : முன்பு நாழிகை விநாழிகையைக் கூட்டி நின்றது சதுப்புட சந்திரகலை விகலைகளில் முன்பு தெரிந்து வைத்த திதி சேடத்தையும் கூட்டுவது. முன்பு தீட்டினது உவாவில் கலையாகில் சொன்னாப்போலே எல்லாம் கூட்டுவது. பிரதமை கலையால் வந்ததாகில் அந்நாடி வினாடியை உவா நாழிகையிலும் சதுப்புட சந்திராதித்தர் விகலையிலும் களைந்து நின்றது சதுப்புடம். சந்திரனிலே திதி சேடம் களைந்து இப்படிக் கூட்டுவதால் களைதல் செய்தவை சம சந்திராதித்தரும் சுத்த பருவமாம்.

**சுத்தமாம் பிராணன் தன்னை சொல்லிய வாறுக் கீய்க**
**வத்தகு விநாடி இத்தை யைமூன்று கடிகை தன்னில்**
**சித்திரை முதலாம் ஆறில் செங்கதிர் நிற்கக் கூட்டு**
**வைத்துலை ஆதி ஆறேழ் களைபக லரைய தாமே. 438**

இ-ள் : இரண்டு கிரகணமும் ஒத்தவை இப்பால் சூரிய கிரகணம் முன்பு தீட்டிய பிராணனை ஒன்பதில் ஈய்ந்து துலாதி மீனால் தமாகரவி நிற்கில் நாழிகை பதினைந்தில் களைவது. மேடாதி கன்னி வரையாகில் நாழிகை 19-ல் வைத்து இந்த விநாடி கூட்டுவது. இவை பகலரையாக வைப்பது.

பகலரை இரட்டி செய்யப் பகலள வலுபா னாடி
அகலவைத் திதினை நீக்க வல்லள வாகும் இத்தைப்
பகர்தரு பாதி யாக்கிப் பகலள வோடே கூட்ட
விகறுறு விழியாய் ! நின்ற திராவரை யாகும் என்றே. 439

இ-ள் : முன்னே கண்ட பகலரை இரட்டிக்கப் பகலளவாம். 16 வேறு வைத்துப் பகலள வைத்துக் களைந்து நின்ற சேடம் இரா அளவாம். இவை பாதி செய்து பகலளவோடே கூட்ட இராவரையாம்.

ஆகுவா நாடி தானும் அருள்பக லரையும் வந்து
வேகமாம் சிறுமை நீக்கப் பெரியதில் விவாக சேடம்
ஓகைகொள் வைவி நாடி ஒன்றுக்கோர் சாவை உண்ணி
ஏகிய விநாடி கீழ்வைத் தெய்திய சாமேல் வையா 440

இ-ள் : முன்பு தீட்டிய சுத்த துருவத்தையும் மகவரையும் வெவ்வேறு வைத்துப் பெரிதில் சிறிது களைந்து நின்ற சேடம் விவாகம் என்று பெயர். இதைத் தீட்டி வைத்து இந்த விவாகத்தில் நாழிகையை வைத்து விநாழிகை உண்டாகிலும் கீழேவைத்து ஒரு நாழிகைக்கு ஒரு சாவாக் கொண்டு மேலே நின்ற நாழிகையைக் களைந்து பெற்ற சாவெத்தனை அத்தனையாம் இலம்பிதச் சாவை விநாழிகையின் மேலாக நிறுத்துவது என்றவாறு.

வைத்தசா வுதன்பின் சாவை விநாடிக்குக் கீழே வைத்து
மெத்துமேற் சாக்கீழ் நீக்கிச் சேடத்தால் விநாடி யேற்றி
அத்தையொ அறுபாற் கீய்ந்து மேற்பலன் தன்மேல் கூட்ட
வெத்தனி விநாடி இத்தை இலம்பித பலமென் றெண்ணி. 441

இ-ள் : மேல் நிறுத்தின சாவின் பின்னிற் சாவை விநாடிக்குக் கீழாக நிறுத்தி, மேலிற் சாவைக் கீழிற் சாவிலே களைந்து நின்ற சேடத்தால் நடுவில் நின்ற விநாடியைப் பெருக்கி, அதனை 16-இல் அரித்துப் பெற்ற பலம் மேற்படியில் கூட்டி வரிசை செய்ய இலம்பிதச் சாபலமாம். கீழிற்காச் சுருங்கிவரில் கீழிற்சாவை மேலிற் சாவாக

மாறிவைத்துக் களைந்து முன்போல் சாசமஸ்காரம் பண்ணி சாபலத்தை மேற்படியில் களைவது. இவை இலம்பிதச்சாபல விநாடி என்று அறிந்து நாடியாக வரிசை ஏற்றி இலம்பிதச் சாபலமென்று தீட்டுவது என்றவாறு.

எண்ணிய இதனை முன்னே விவாகத்தில் கூட்டி ஆறால்
எண்ணுதல் பெருக்கி உச்சி முன்னுவா வருவேல் இற்றை
பண்ணிய சமர விக்கே பாங்குறக் களையின் போதே
வெண்ணுதல் கூட்ட முன்போது இலம்பித வருக்க னாமே. 442

இ-ள் : முன்பு தெரிந்த விவாகத்தையும் இலம்பிதச் சாபலத்தையும் கூட்டில் ஒன்பதில் பெருக்க, நாழிகை கலையாம். அவை முன்ன புதிமனசரட்டிவியில் உச்சிக்கு முன்னாகில் களைந்து உச்சிக்குப் பின் உவாவிற் கூட்டுவது. இப்படி செய்து நின்றதும் இலம்பித சாவருக்கனாம்.

இலம்பித அருக்கன் திக்கு மேடமுத் தரங்கோல் தெற்கு
புலம்பட அறிந்து நின்ற புசையினில் சாக்கொண் டாச்சா
பலன்தனை ஏழிற் கீய்ந்து பலன்கலை சேடம் தாக்கி
இலங்கிலை விகலை பாக்க விரவிலிக் கேப மென்றும். 443

இ-ள் : இலம்பித அருக்கன் மேடாதியாகில் உத்தர கோளம் என்றும், துலாதி தெக்கணக் கோளம் என்றும் அறிந்து இப்படிக் கோளம் அறிந்து புசாகோடி கொண்டு கோடியுறில் புசையாக்கி சாக்கொண்டு சாசமஸ்காரம் செய்து சாபலத்தை ஏழால் அரித்துப் பெற்ற பலம் கலையாக வைத்துச் சேடம் உண்டாகில் 60-இல் பெருக்கி, முன்பில் கருவுக்கு ஈய, விகலையாய்க் கொண்டு இப்படி நின்ற ரூபத்தைத் தாவி இதனை மேடாதியாகிலும் உத்திர விக்கேபம் என்றும், துலாதி யாகில் தெக்கண விக்கேபம் என்றும் அறிவாம் என்றவாறு.

என்றுமுன் தீட்டி வைத்த இலம்பிதச் சாப லத்தை
நின்றபன் மூன்றால் தாக்கி நிறம்பிய சமசோ மன்ற
தோன்றிய கலைகள் நீக்கி உச்சிக்கு முன்னு வாவே
இன்றெனில் கூட்டி வைக்க இலம்பித இந்து வாமே. 444

இ-ள் : முற்படத் தீட்டிவைத்த இலம்பிதச் சாபத்தை 13-இல் பெருக்கு சம சந்திரன் விகலை, கலைகளில் உச்சிக்கு முன்னே உவாவில் களைந்து உச்சிக்குப் பின்பு உவாவரில் கூட்டுவது இலம்பிதச் சந்திரன் என்றவாறு.

**இந்துவில் அரவை நீக்கி இருந்தது கொறிகோ லாய்ந்து**
**புந்தியில் புசைய றிந்து புசையினைக் கலைய தாக்கி**
**வந்தபன் மூன்றிற் கீய்ந்து பெறுபல மதிவிக் கேப**
**மந்தமி லேழு வைக்க தெக்கணவிக் கேபம் என்றும். 445**

இ-ள் : அந்த இலம்பிதச் சந்திரனில் முன்னெண்ணி வைத்த தற்கால இராகுவைக் கலந்து சேட மேடாதியாகில் உத்திரகோளம் என்றும், துலாதியாகில் தெக்கண கோளம் என்றும் தீட்டிய புசை கோடி கொண்டு, புசா சேடத்தைக் கலையாக்கி பதிமூன்றில் ஈய்ந்து பெற்ற பலன் சந்திர விக்கேபம், துலாதி தெக்கண விக்கேபம். விடுவச்சாயங்குலி என்ற 1¾ வைத்து 4-ல் பெருக்க 7. இவை எப்பொழுதும் தெக்கண அட்சவிக்கேபம் என்று அறிவது.

**என்றும்தெற் கிதற்கே திக்காம் விக்கேபம் மூன்றும் ஒன்றாய்ச்**
**சென்றவே லதுவே திக்காம் இரண்டொன்றாம் ஒன்றொன் றாகில்**
**பின்றுமே லிரண்டு வைத்தும் பெரியதில் சிறுமை வாங்கி**
**வன்றதே திக்காம் சுத்த விக்கேபம் தானு மாமே. 446**

இ-ள் : முன்பு சொன்ன அட்சவிக்கேபத்துக்கு என்றும் தெக்கண கோளமே. தெக்கணமே திக்கு என்பது. இதுவும் முன்பு சொன்ன விக்கேபமும் மூன்றுமொரு திக்கிலதுவே திக்கென்று அறிவது. இரா மூன்றும் கூட்டி சுத்த விக்கேபம் என்று தீட்டியது வேதிக்கென்று கொள்வது. இரண்டொரு திக்காய் ஒன்றொரு திக்காய் மாரி வரில் தெட்சண விக்கேபம் இரண்டும் கூட்டி வேறே வைத்து உத்தர விக்கேபத்தையும் வேறே வைத்து இரண்டிலும் பெரியதில் சிறியதைக் களைந்த சேடம் சுத்த விக்கேபம் என்று தீட்டி வைத்து அதுவே திக்கென்று சொல்வது. கேதுவிற்குத் தெக்கணம் உத்தர மாகவும், உத்தரம் தெக்கணமாகவும், இராகு கரும்பாம்பு, கேது செம்பாம்பு என்றவாறு.

தான்மதி கதிரோன் திங்கள் புடபுத்தி பதினொன் றேற்றி
ஏனைமத் திமமாம் புத்திக் கீய்ந்திட இரண்டும் கூடில்
தானது சம்பர்க் காத்தம் இதில்சுத்த விக்கே பத்தைப்
பூண்முலைக் கலையப் போக்கில் கிராணமுண் டிலேறப் பொய்யே

இ-ள் : முன்பு தீட்டிவைத்த சசி, இரவி புடபுத்தியை வெவ்வேறே வைத்து பதினொன்றில் பெருக்கி, அவரவர் சுத்த மத்திம புத்திகளால் ஈய பெற்ற பலம் சசிர விதேகம். இவ்விரண்டு கூடில் சம்பற்காத்தமாம். இச்சம்பற்காத்தம் வைத்து இதில் முற்பட்ட சுத்த விக்கேபம் களைந்தால் களையப்பட்ட சேடம் உளதாகில் கிரகணம் உண்டு. சேடம் பெருகிலும் சம்பற்காத்தோ டொக்கிலும் கிரகணம் இல்லை என்றவாறு.

பொய்மெய்ய தறிந்து பின்பு களைந்ததில் சேடம் தன்னை
இம்மையொன் றிரண்டு மூன்றா றெட்டோடீ ராறு வாங்கி
பொம்மென ஒன்றுக் கொன்று வைத்துப்போ தாத சேட
மெய்ம்மையோ ரறுபாற் தாக்கி மேல்வருங் கருவிக் கீயே. 448

இ-ள் : சுத்த விக்கேபம் களைந்து நின்ற சம்பற் காத்ததில் கலைகளில் திதி நாடி கொள்ளும்படி ஓர் அலகு வாங்கி வேறே ஓர் அலகு வைப்பது. ஒன்றுக்கு ஒன்று இரண்டுக்கு மூன்று நான்குக்கு, ஆறுக்கு ஐந்துக்கு 8-6-12 ஆகத் தானம் ஆறுக்கு 6. இப்படி வாங்கிப் போதாத சேடம் 60இல் பெருக்கி மேல்வாங்க வருங்கரு வீக்கீக என்றவாறு.

ஈவது விநாடி முன்பு நின்றது விநாடி இத்தை
ஆய்திதி நாடி யென்றாங் கதுவாரேல் முழுக்கப் பத்தும்
பாய்திதி நாடி யாதி உவாவினிற் களையப் பற்றா
மேதகு இந்நா டிக்கே உவாநாடி கூட்ட வீடே. 449

இ-ள் : முன்பு ஈய்ந்து பெற்ற பலமுதல் வாங்கி வைத்த பலத்தின் கீழ்வைத்து மேற்படி நாடியும் கீழ்ப்படி விநாடியுமாக வருவது. இவை திதி நாடி விநாடி என்பது. இந்தத் திதி நாடி ஆறு கண்டால் சவக்கிரகணம் என்று அறிவது.

கண்ட திதி நாடி விநாடியைப் பாதி செய்ய திதி அர்த்தநாடி விநாடியாம். முன்பு தீட்டிவைத்த சுத்த பருவநாடி விநாடியை இரண்டு படியாக வைத்து ஒரு படியில் திதி அர்த்தநாடி விநாடியைக் களைந்து நின்றது கிரகண பிரவேச நாடி விநாடியாம். மற்றப்படியிலே திதி அர்த்தநாடி விநாடியைக் கூட்டி நின்றது மோட்ச விநாடியாம். சுத்த பருவ நாடி விநாடி மத்திய காலம் என்பது.

**கூட்டிய பரிச நாடி பகற்பாதிக் குவாவில் சாவை**
**ஓட்டிநின் றதனை முன்போல் ஒருநாடிக் கொருசா வாக**
**மூட்டுசா பலத்தைப் பத்து நாடியில் களைமுன் போதேற்**
**தோட்டவிழ் குழலாய் ! பின்பேல் கூட்டிடு சுத்தப் பற்றாம். 450**

இ-ள் : பரிச நாடியிலும் பகல் பாதியிலும் பெரியதில் சிறயது களைந்து நின்ற விவாகத்தில் முன்போல் ஒரு நாழிகைக்கொரு சாவாக இலம்பிதச் சாக்கொண்டு, இந்தச் சாபலத்தைப் பரிசகால நாடியின் உச்சி முன்னாகில் களைந்து பின்னாகில் குட்டுவது. இப்படிச் செய்து நின்றது சுத்த பருவ நாடியாம் என்றவாறு.

**பற்றிமுன் விடுதி நாடி பகலரை வேறு வைத்துச்**
**சிற்றிடை பெருமை தன்னில் சிறுமையைக் களைந்து சேடம்**
**துத்தசா பலத்தை விட்டிற் கனையுச்சி முன்னேற் புன்னேல்**
**விற்றிரல் நுதலாய் ! குப்பிடு விடுதிநா ழிகைக்குச் சுற்றம். 451**

இ-ள் : மோட்ச விநாடியையும் பலகரையும் வெவ்வேறு வைத்துப் பெரியதில் சிறியது களைந்து நின்ற விவாகத்தில் முன்போல் இலம்பிதச் சாபலங்கொண்டு, அந்தச்சாபலத்தை மோட்ச நாடி விநாடி உச்சிக்கு முன்னாகில் களைந்து பின்னாகில் கூட்ட சுக்த மோட்ச நாடி விநாடியாம். இவை தெக்கண கோளமாகில் தென்மேற்கே பற்றும், உத்தர கோளமாகில் வடமேற்கே பற்றும் என்பது. சர்ப்ப சாரத்தில் ஒரு கலைக்கு ஒரு அங்குலமாய்க் கொண்டு ஒரு கயிறளந்து ஒரு மண்டலமாகக் கீறி, அதை நடுவே இரவி தேகத்தை இத்தனை அங்குலம் என்று அறிந்து, அதனால் ஒரு மண்டலம்

முறித்து, அதன் நடுவே நின்று சுற்ற விக்கேபம் இத்தனை விரல் என்று அறிந்து அந்த முனையில் நின்றதனை ஒரு மண்டலமாக முறித்தால் அந்தச் சிரகேதம் விதேகத்தில் எவ்வளவு சென்றது அவ்வளவும் பற்றும் என்றவாறு.

*திவா பிரமாணத்துயர விபரம்*

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1-க்கு | 17 | 9. க்கு | 153 | 17-க்கு | 254 |
| 2. | 35 | 10. | 168 | 18. | 297 |
| 3. | 52 | 11. | 283 | 19. | 275 |
| 4. | 70 | 12. | 198 | 20. | 282 |
| 5. | 87 | 13. | 212 | 21. | 287 |
| 6. | 14 | 14. | 225 | 22. | 290 |
| 7. | 125 | 15. | 237 | 23. | 293 |
| 8. | 137 | 16. | 248 | 24. | 293 |

*கிராந்தியா விபரம் - இதுவே மகரயா*

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1-க்கு | 91 | 9. க்கு | 783 | 17-க்கு | 1284 |
| 2. | 182 | 10. | 858 | 18. | 1288 |
| 3. | 273 | 11. | 933 | 19. | 359 |
| 4. | 362 | 12. | 102 | 20. | 1388 |
| 5. | 480 | 13. | 1268 | 21. | 140 |
| 6. | 537 | 14. | 1121 | 22. | 1426 |
| 7. | 461 | 15. | 1158 | 23. | 1436 |
| 8. | 713 | 16. | 1238 | 24. | 1440 |

*பிராண காலந்திய விபரம் - இதுவே கற்கியா (கடகயா)*

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1-க்கு | 11 | 9. க்கு | 141 | 17-க்கு | 125 |
| 2. | 38 | 10. | 153 | 18. | 113 |
| 3. | 75 | 11. | 153 | 19. | 98 |
| 4. | 248 | 12. | 155 | 20. | 81 |
| 5. | 91 | 13. | 155 | 21. | 62 |
| 6. | 16 | 14. | 152 | 22. | 42 |
| 7. | 120 | 15. | 146 | 23. | 21 |
| 8. | 131 | 16. | 138 | 24. | -- |

## சந்திர கிரகணம்

சுத்தமாம் சம்ம திக்கே தொல்லரா அதனை நீக்கி
பொத்தகோல் மேட மாய்ந்து புசையினைக் கலைய தாக்கி
பத்தொடு மூன்றிற் கீய்ந்து பெறுபல மதிவிக் கேபம்
உத்தர கோளங் கோலேல் மேடாதி தெற்கென் றாரே. 452

*இ-ள் : சமசத்திரன் அளவு முன்போல் எண்ணி, அதில் இராகு சுத்தம் களைந்து மேடாதி துலாதி அறிந்து மேடாதி தெக்கண கோளம் என்று, துலாதி உத்தரகோளம் என்றும் அறிந்து புசாகோடி கொண்டு, கோடியுறில் புசையாக்கிப் புசா சேடத்தைக் கலையாக்கி, அதை 13-க்கு ஈய்ந்து பெற்றபலம் கலையாக, மேற்படியாக வைத்து, சேடம் 60இல் பெருக்கி, முன்பிற் கருவிற் கீய்ந்து பெற்றபலம் விகலையாகக் கீழ்வைத்து இவை சந்திர விக்கோபமாக வைத்து தெட்சண, உத்தர விக்கேபத்திற்கு அறிவது என்றவாறு.*

வடகொள்பன் னாறி னாலே மதியட அத்தி யேத்தித்
திடங்கொள்மத் திமமாம் புத்திக் கீய்பலம் திங்கட் தேகம்
படந்தவித் தஞ்சாற் தாக்கிப் பாதிசெய் பாம்பின் தேகம்
தடங்கொள இரண்டும் கூட்டி நின்றது சம்பற் காத்தம். 453

*இ-ள் : சசிபுட புத்தியைப் பதினாறில் பெருக்கி, மத்திம புத்திக் கீய வரும் பலம் சசிதேகம். இந்தச் சசிதேகம் ஐந்தில் பெருக்கிப் பாதி செய்ய இராகு தேகம். இவ்விரு தேகமும் கூட்ட சம்பற்காந்தம்.*

சம்பறக் காத்த திங்கள் விக்கேபம் களைந்த சேடம்
தின்பரோ றொன்றி ரண்டு மூன்றுநாள் கைந்தா றேழெட்
டும்பர்பன் னிரண்டு பன்னா றெடுத்தற் கொன்றுக் கொன்றாய்
முன்புபோல் வைத்துப் பற்றும் உண்டெனின் முழுக்கப் பற்றும். 454

*இ-ள் : சம்பற் காலத்தில் சந்திரன் விக்கேபம் களைந்தால் கிரகணம் உண்டு. விக்கேபம் சம்பற்காத்தமும் ஒக்கிலும் சம்பற்காத்தம் அதிகம் எனினும் கிரகணம் இல்லை. சந்திர விக்கேபம் களைந்த சேடத்திருந்து அலகு 1-0-2-1-3-2-4-3-5-4-6-5-7-9-8-8-9-1-2-10-11 ஆகப் பத்துத் தானமும் வருமிடத்து வாங்கப் பத்தாதெனில் முன்போல் 60இல் பெருக்கி,*

மேல்வரும் கருவிக்கு ஈய்ந்து பெற்றபலம் விநாடி இவை முன்வைத்த பலத்தின்கீழ் வைக்க, இவை திதி விநாடியாம். திதி, நாடி பத்தும் கண்டால் சர்வத்திராஹும் முழக்கப் பற்றும்.

**பற்றின தரித்து நின்ற பக்கநா டியினில் பாதி**
**உற்றுவா நாடி தன்னில் ஒழித்திடப் பத்து நாடி**
**பற்றுநா டியதன் முன்னை பக்கநா டியினைக் கூட்ட**
**வெற்றிவேல் விழியாய் ! பாம்பு வீடுநா யின் விளம்பே.** 455

*இ-ள் : திதி நாடியைப் பாதி செய்து சுத்தைருவ நாடியில் களையப் பரிச நாடியும், பரிச நாடியில் திதி நாடி முழுதும் கூட்ட மோட்ச நாடியும். பரிச நாடியும் மோட்ச நாடியையும் கூட்டப் பாதியாக்கி நின்றது விடத்துடங்கும் நாழியாம். இடைபருவ மத்தியகாலம் உத்தரகோளம் வடகிழக்கும், தெக்கணகோளம் தென்கிழக்கும் பற்றுவது. முன்புபோல் சம்பற் காலத்தில் கண்ட விரல் கொண்டு ஒரு மண்டலம் முறித்து அதன்நடுவே நின்றும் சுத்த விக்கேப விநாடியைப் பற்றுகிற திக்கில் கிடத்தி அதன் முடிவில் ஒரு முளையடித்து, அந்த முளை முதல் இராகு தேகத்தை ஒரு மண்டலமாக முறித்தால் இராகு தேகம் சசி தேகத்தெவ்வளவு சென்றது அவ்வளவும் பற்றும் என்பது.*

### சந்திர கிரகணம் முற்றும்

**விளம்பிய சகரன் ஆண்டா யிரத்தொரு நூற்றின் மிக்க**
**வளம்புகழ் பாண்ட மங்கை மாறிமு னியய வன்சேய்**
**இளங்கொடி மடவார் காமன் இசைத்திரு கோட்டி நம்பி**
**உளம்புகக் கணித நூலை உரைத்தனன் உலகுக் கெல்லாம்.** 456

*இ-ள் : சகாப்தம் 1100-க்குச் சென்ற விளம்பி ஆண்டு முன்னையோர் வடமொழியால் செய்த சோதிடத்தைத் தென்தமிழினால் விரித்து யாவர்க்கும் உளங்கொள உரைத்தான் என்பதை நாட்டுப் பிரமதேசம் என்னும் பாண்டமங்கலமாகிய பஞ்சவன்மாதேவி சதுர்வேத மங்கலத்து அரியவன் புத்திரர் திருக்கோட்டியூர் நம்பி என்றவாறு.*

## பாடல் முதற்குறிப்பு அகராதி


| | பாடல் எண் |
|---|---|
| அஞ்சிடான் கடுஞ்சொல் | 336 |
| அஞ்சொல் இருபத் | 288 |
| அஞ்சொல் பாரதி | 207 |
| அணங்குகேள் அஞ்சேழ் | 114 |
| அதிக நன்றிரு | 150 |
| அரக்கரும் தேவர் | 187 |
| அரசர் நண்டில் | 228 |
| அரசுறு புதனும் | 236 |
| அரிமகரம் தேள் | 65 |
| அருக்கனார்க் கிழமை | 44 |
| அருக்கன் முன்சனி | 31 |
| அழகிய குதிரை | 147 |
| அழிவிலா இராசி | 372 |
| அழிவுசனி பெண்ணாகும் | 367 |
| அளவில் பூசம் | 281 |
| அறியும் புதர்க்கு | 265 |
| அறிவன் சதயம்கடை | 259 |
| அன்னசித் திரைவை | 250 |
| அன்றடி பதினொன் | 133 |
| அன்றிய உரோணி | 20 |
| அன்றுபெண் பிறந்த | 205 |
| அன்னமே பருதி | 27 |
| அன்னமே மிதுனம் | 108 |
| அன்னை சித்திரை | 176 |
| ஆக்கிய சீமந்த | 79 |
| ஆகாத பாவர் | 152 |
| ஆகும் கிழமை | 289 |
| ஆகுவா நாடி | 440 |
| ஆங்கண்டம் அதனில் | 421 |
| ஆங்கதிர் சேட | 410 |
| ஆடு கயல்தேள் | 273 |

| | பாடல் எண் |
|---|---|
| ஆதவனுக் கனுடம் | 38 |
| ஆதிரை பரணி | 110, 146 |
| ஆதிரைபன் னோர்கடி | 49 |
| ஆமமு தத்தை | 383 |
| ஆயில்முப் பூரம் | 165 |
| ஆரலே அழலே | 2 |
| ஆரலே ஆதி | 122 |
| ஆளரி குடந்தேள் | 86 |
| ஆய்கதிரில் கதிர் | 362 |
| ஆய்ந்த கதிர்க்காட்சி | 62 |
| ஆய்ந்தசீர் மகமே | 24 |
| ஆய்ந்தது பகுத்தா | 410 |
| ஆன்றபன் னொன்று | 341 |
| ஆன்ற மதிதனில் | 363 |
| ஆனிமார் கழியின் | 248 |
| இடவாய் மூன்று | 346 |
| இடும்புதனில் புதன் | 368 |
| இந்துவில் அரவை | 445 |
| இருக்கும் பதிபோம் | 359 |
| இருத்தமண்ட லார்ந்த | 412 |
| இயம்புமுன் எழுத்தே | 301 |
| இலம்பித அருக்கன் | 443 |
| இறைவர் சேனை | 232 |
| இனிதே உத்தி | 161 |
| இனியபொன் புந்தி | 309 |
| ஈயல மண்ட | 389 |
| ஈயாது முப்பான் | 374 |
| ஈவது விநாடி | 449 |
| உடற்கட் கதிர் | 226 |
| உடற்கோள் மறிமுன் | 355 |
| உண்டாம் அரச | 356 |

| | பாடல் எண் |
|---|---|
| உண்டாய் உச்ச | 105 |
| உண்டாய் மறிக்கும் | 193 |
| உண்டவப் பேர்கள் | 332 |
| உத்தமன் களிறு | 5 |
| உயர்விடை சிலைமீன் | 243 |
| உரைக்கிலந்த இருபூசம் | 209 |
| உரைசேர் பிறைமீன் | 274 |
| உரைத்திடில் இரண்டு | 184 |
| உரைத்திடிலோர் இராசி | 70 |
| உவாவினில் கலையால் | 435 |
| உள்ளுறு நிலையில் | 83 |
| உளங்கொள் நந்தை | 298 |
| உறங்கயி ரடிய | 198 |
| எங்குள வளியும் | 253 |
| எண்செவ்வாய் தனக்கு | 391 |
| எண்டிசையும் கிழக்கு | 293 |
| எண்ணிய இதனை | 442 |
| எண்ணுமயன் மாலிய | 208 |
| எல்லிரவி தனக்குறவு | 61 |
| எல்லையில் உவா | 162 |
| எல்லையில் தினத்தில் | 382 |
| எல்லையில் யாத்தி | 125 |
| எழில்பெயர் இடுநாள் | 82 |
| என்றதில் பலமும் | 401 |
| என்றுநீ டிருளை | 28 |
| என்றும் தீயன் | 344 |
| என்றும்தெற் கிதற்கே | 446 |
| என்றுமுன் தீட்டி | 444 |
| ஏறரி மேடம் | 244 |
| ஏற்றமத் திமமாம் | 400 |
| ஏற்றிய தொகைகள் | 427 |
| ஏற்றிய தொகையை | 376 |
| ஒருகண்ணுண் டெனும் | 46 |
| ஒழிக்கிய குண்டை | 157 |
| ஒன்றிய சேயின் | 173 |
| ஒன்றிய மதிக்கி | 235 |
| ஒன்றுநான் கேழ | 188 |
| ஓங்கிய அருக்கன் | 313 |
| ஓதிய கதிர்கள் | 312 |
| ஓதும்உத் திரங்கள் | 144 |
| ஓரைபன் னொன்றோன் | 306 |
| கட்டிய உரோணி | 168 |
| கடையினில் தசமி | 256 |
| கடுங்கதிரோன் சென்ற | 50 |
| கண்ட சிந்தனை | 323 |
| கண்ணில்லா நாட்கள் | 151 |
| கதிரவர்க் கைந்தோ | 29 |
| கதியுடை புணர்சீ | 72 |
| கருத்துடைஆணும் | 192 |
| கருதும் உத்திரங்கள் | 112 |
| கருதுகிற பிறந்த | 135 |
| கருதுடைய ஒன்று நான் | 63 |
| கருது பூரம்மகம் | 258 |
| கருதுமுதல் பட்சமுடன் | 56 |
| கரும்பொடு சோதி | 22 |
| கல்லுமாக் குளங்கள் | 164 |
| களங்குருவில் ஆடை | 366 |
| களைந்தபின் மகர | 428 |
| கற்புநாள் மூன்றில் | 182 |
| கன்னம தறிந்து | 429 |
| கன்னிகோல் நிறைகோல் | 11 |
| காஞ்சிரை நெல்லி | 200 |
| காடுநன் நிலம்ஊர் | 319 |
| காண்டகு குதிரை | 127 |
| காண்பது யோகம் | 386 |
| காணும் மாசி | 275 |

| | பாடல் எண் |
|---|---|
| காணுமா றேழெண் | 85 |
| காணு முப்புரம் | 21 |
| காதலன் வீரன் | 339 |
| காதுசேர் மறி | 305 |
| காந்தனன் முகத்தில் | 335 |
| காராய் குழலாய் | 345 |
| கால்கொண்ட மனத்து | 180 |
| கால்தேள் கோல் | 351 |
| காலம் ஆறெட்டீ | 88 |
| காலமான் தலையே | 328 |
| காலமுதல் பக்கத்தில் | 212 |
| காலாமா யிரத்தெட் | 136 |
| காலிரண் டருக்கன் | 310 |
| காலை அறிந்தால் | 349 |
| கானெருக் கரிசி | 131 |
| காற்பனை ஒன்றே | 68 |
| கிடந்தான் மேடம் | 291 |
| கிடைத்த உயிரோ | 218 |
| கிழக்கு நெடும் | 297 |
| குரமிகு மனையில் | 190 |
| குளிர்மீன் மதிஏறு | 353 |
| குறித்த கதிரோன் | 284 |
| குறுகிய செஞ்சிதல் | 294 |
| கூட்டிய பரிச | 450 |
| கூட்டிட புடமாம் | 405 |
| கூட்டியே கன்னி | 392 |
| கூட்டுநாற்புடம் | 437 |
| கூட்டு மேடாதி | 432 |
| கூறிய சனிசேய் | 97 |
| கூறிய நாள்முதல் | 116 |
| கூறிய மறியில் | 303 |
| கைவரும் அத்தம் | 119 |
| கொடுங்கதிர்க் கீறா | 17 |

| | பாடல் எண் |
|---|---|
| கொடுங்குழாய் ! தங்கி | 55 |
| கொண்டதில் புகன்ற | 377 |
| கொண்டல்மந் தாரம் | 255 |
| கொம்பனாய் கதிர்நான் | 318 |
| கொள்விருந் தச்சி | 139 |
| கோதில் அருக்கன் | 358 |
| கோதில் மண்டலா | 390 |
| கோதில்மான் தலையும் | 103 |
| கோதிலா ரூடம் | 325 |
| கோள்வேதை வரில் | 343 |
| சத்தமா தினத்தில் | 388 |
| சந்திரன் அமர | 45 |
| சந்திரன் விதைசேய் | 178 |
| சம்பறக் காத்த | 454 |
| சனிமந்தன் தன்னில் | 417 |
| சாக்கொளப் போதை | 398 |
| சாத்தும்ஆ திரையில் | 175 |
| சார்கதிர் சுடர் | 329 |
| சார்ந்தமுச் சதிர | 199 |
| சாரும் உதயம் | 217 |
| சாய்ந்த அகாரம் | 300 |
| சாய்ந்தபங் குனியின் | 249 |
| சால அருக்கன் | 271 |
| சாற்றிடு கூறை | 149 |
| சாற்றிடில் ஓரையொன்று | 71 |
| சிதைவில் பிறந்த | 262 |
| சிறந்த உதயம் | 225 |
| சிறப்புடை ஆடி | 254 |
| சிறிய மேடம் | 276 |
| சிறுகாலே யாதொரு | 306 |
| சீக்கிரத்தில் இராசி | 409 |
| சுத்தம்உத் திரங்கள் | 163 |
| சுத்தமாம் சம்ம | 452 |

| | பாடல் எண் |
|---|---|
| சுத்தமாம் பிராணன் | 435 |
| சுத்தமா மணம் | 181 |
| சுத்தவன் புகர்க்கு | 411 |
| சுருக்கமில் சங்கி | 242 |
| சூடிய மணநாள் | 107 |
| சூழ்புவி வடக்கு | 134 |
| செப்பிய குதிரை | 189 |
| செப்பிய குரு | 25 |
| செப்பிய செவ்வாய் | 420 |
| செப்பிய தறிக்கால் | 311 |
| செப்பியதால் செல் | 69 |
| செப்பிய திங்கள் | 77 |
| செப்பிய மூலம் | 113 |
| செய்துமே டாதி | 394 |
| செய்பவன் மனைவி | 138 |
| செய்யமண்ட லார்த்த | 401 |
| செருக்கும் சிங்கம் | 267 |
| செவ்வாய் மூன்றில் | 220 |
| செவ்விது கணக்கன் | 15 |
| செவ்விய கொழுங்கோல் | 8 |
| செவ்விய சீக்கி | 418 |
| செவ்விய துலையில் | 304 |
| செவ்வியன் தியாகி | 337 |
| செவ்வைகீழ்க் காற்றும் | 251 |
| சேத மாக்கும் | 347 |
| சேர்த்திய சகர | 38- |
| சேரும்உத் திரங்கள் | 91 |
| சேரும் உதயம் | 214 |
| சொல்லரும் பிறையே | 14 |
| சொல்லரு மூலம் | 23 |
| சொல்லிடில் முட்டி | 322 |
| சொல்லிய சிங்க | 194 |
| சொல்லிய மகரம் | 92 |

| | பாடல் எண் |
|---|---|
| சொல்லுநான் காறெண் | 78 |
| சொல்லுமுதல் நாட்பின் | 67 |
| சொன்முறம் அவிட்டம் | 142 |
| சொன்ன அகாரம் | 299 |
| சொன்ன பூசம் | 219 |
| தகுமிரவி சனி | 59 |
| தந்த உடலை | 224 |
| தப்பில் கதிர்கள் | 261 |
| தன்பலம் அதனில் | 424 |
| தனமாம் அத்தம் | 120 |
| தாவிய விலங்கு | 172 |
| தாழ்புயல் வெய்யில் | 246 |
| தான்மதி கதிரோன் | 447 |
| தானமாம் பரணி | 137 |
| தானமான் தலையே | 19 |
| தானிரு பூசம் | 141 |
| திருவமர் தேவர் | 154 |
| தீங்கிலாது இல் | 160 |
| தீணநண் டலவன் | 10 |
| தீதில்உத் திரங்கள் | 240 |
| தீதில்கதிர் நின்ற | 52 |
| தீதுவாம் எட்டில் | 75 |
| தீயபூ ராடம் | 257 |
| தீயபொன் வெள்ளி | 93 |
| தீர நீலன் | 282 |
| துடிபிடி யானை | 191 |
| துருவமும் தனத்தின் | 384 |
| தூய்கண்டத் தறுநூ | 399 |
| தூய்கண்டத் தோர்கன் | 406 |
| தூய்ச் சுடர்மூல | 315 |
| தெரிதரும் ஆயில் | 167 |
| தெருளனுசம் நோய் | 211 |
| தேரடுப் புத்தி | 186 |

| | பாடல் எண் |
|---|---|
| தோன்றிய உயிர்கள் | 321 |
| தோன்றிய மேட | 333 |
| நல்லமனையில் | 292 |
| நவையில் குழவி | 215 |
| நற்கோடி கிழியில் | 295 |
| நறுங்கம்பம் பிரிசம் | 34 |
| நன்றாம் கிழக்கு | 290 |
| நன்றான திசையெட்டு | 57 |
| நன்றிடு பூசம் | 118 |
| நன்று கார்த்திகை | 143 |
| நன்று நற்குழவி | 81 |
| நன்றுநற் கோள்கள் | 104 |
| நன்றுணர் முக்கால் | 169 |
| நாட்டு ஊர்க்கு | 285 |
| நாடனை ஏழில் | 381 |
| நாடியும் வினாடி | 385 |
| நாடும் கதிர்பொன் | 270 |
| நாரியர்க் காகும் | 94 |
| நாற்பட மதியின் | 434 |
| நான்மறை அதனால் | 101 |
| நிக்கதிர் குடிசூழ் | 407 |
| நிகழ்கேது வினில் | 369 |
| நிச்சயம் மேவும் | 222 |
| நிதியுடை புகர்மீன் | 234 |
| நிதியும் தனமும் | 360 |
| நிலைகொள் ஆயம் | 287 |
| நிலைதரும் கீழ்த்திசை | 156 |
| நின்றசங்கி ராந்தி | 245 |
| நின்ற பருதி | 348 |
| நினைவுறு விட்டி | 124 |
| நீக்கியிக் கன்னல் | 36 |
| நீத்திடும் பாவ | 159 |
| நூலறி புகர்க்கு | 40 |

| | பாடல் எண் |
|---|---|
| நூலறியும் புதன்நின்ற | 53 |
| நேர்ந்தசா பலத்தில் | 402 |
| நோக்கும் பொன்னன் | 277 |
| பக்கணம் நெய்பால் | 132 |
| பக்கம்பின் ஐந்தில் | 99 |
| பக்கரை பரியே | 13 |
| பகர்ந்த பகல்நாழிகை | 66 |
| பகர்வரும் சோதி | 74 |
| பகல்சனி சண்டை | 412 |
| பகலரை இரட்டி | 439 |
| படியில் மேதை | 283 |
| பண்மொழி சரஞ்சேய் | 153 |
| பதியுடைய நற்கோள் | 126 |
| பரித்தவன் உறுப | 37 |
| பலமுடை மூல | 18 |
| பற்றிமுன் விடுதி | 451 |
| பற்றின தரித்து | 455 |
| பறைதரு சீவ | 317 |
| பாஞ்சதி லைம்மூ | 416 |
| பாடுமேல் தலை | 422 |
| பாம்புசனி அறவு | 308 |
| பார்கிழக் குத்தி | 111 |
| பார்த்திடில் தீக்கோள் | 206 |
| பாரறை நாலேழி | 330 |
| பாரினில் நட்டாமுட்டி | 302 |
| பால்மதி முகூர்த்தம் | 324 |
| பாவுமுற் சனியே | 4 |
| பாற்புசை கோடி | 396 |
| பிராணனை இருப | 431 |
| பிரிசம் வெண் திங்கள் | 32 |
| பிழையா மதியை | 272 |
| பின்சாவில் முன்சா | 397 |
| புகர்க்குச் சனிசேய் | 266 |

| | பாடல் எண் |
|---|---|
| புகல்சனி சண்டை | 415 |
| புகலும் திசையில் | 361 |
| புகலுறு பரிமா | 1 |
| புகழிலான் பொய்யன் | 340 |
| புடந்தனில் அருக்கன் | 395 |
| புடரவி கேந்திர | 433 |
| புத்திகள் தீட்டி | 430 |
| புலந்திரு வனையாய் | 80 |
| புவிபுகழ் மீன்தேள் | 307 |
| புவியில் மறிஅரி | 297 |
| பூகண்டம் நூற்றில் | 402 |
| பூட்டிட புடமாம் | 414 |
| பூட்டும்உத் திரங்கள் | 148 |
| பூண்ட விடையில் | 233 |
| பூவையே அனையார் | 73 |
| பெரிதாம் குதிரை | 280 |
| பெரியரவு உற்றார் | 365 |
| பெருகிடும் மறிகோல் | 238 |
| பெருநிருதி காலன் | 296 |
| பேதைகேள் மூன்றாம் | 84 |
| பேயுடன் பரிகம் | 35 |
| பேர்மறி தகர் | 9 |
| பேரா மதிக்கு | 264 |
| பேரிறை செங்கை | 3 |
| பேரெழில் சேயரசர் | 364 |
| பொய்மெய்ய தறிந்து | 448 |
| பொருந்திடு மறிக்கு | 195 |
| பொருந்திய மூலம் | 314 |
| பொல்லாத யோகம் | 100 |
| பொழில்வஞ்சி பலாசு | 201 |
| பொன்னவன் அனைய | 371 |
| பொன்னவன் வெள்ளி | 237 |
| பொன்னனாய் தருப்பை | 170 |

| | பாடல் எண் |
|---|---|
| பொன்னனாய் துலைக்கு | 196 |
| போக்கினில் பரணி | 123 |
| போகமார் கன்னி | 320 |
| போதும் இராசி | 223 |
| போதுமேல் காற்றே | 252 |
| போரெழுத் தொருபத்து | 327 |
| போற்றும்உத் திரங்கள் | 155 |
| மகவின் உயிர்க்கு | 221 |
| மகவினுக் கைந்தில் | 96 |
| மண்ணிடை மனையாள் | 177 |
| மதிஏறு யாழ் | 350 |
| மதிகதிர் துங்கன் | 426 |
| மந்தத்தை அருக்க | 393 |
| மயிற்பகை வல்லூ | 204 |
| மருவிய கதிர் | 30 |
| மற்றமுற் கதிர்சேய் | 326 |
| மற்றிரு பூசம் | 241 |
| மறிஏறு யாழ்நண் | 350 |
| மறிமான் தலையும் | 354 |
| மறுவெண் திங்கள் | 263 |
| மன்னிய முளைக்கும் | 206 |
| மன்னும் மகரம் | 230 |
| மன்னுமுதல் சதுர்த்தி | 48 |
| மனுவோர் அரிதேள் | 269 |
| மனையைச் சிறுகோல் | 286 |
| மாண்புகர் பிருகு | 16 |
| மாண்புடை வோணம் | 102 |
| மாதராய் களிறு | 128 |
| மாதராய் பரணி | 316 |
| மாதராய் மந்தன் | 408 |
| மாதவர் மணப்பொருத்தம் | 183 |
| மாதவன் சுத்தன் | 338 |
| மாதாந்தம் மூன்று | 42 |

| | பாடல் எண் |
|---|---|
| மாப்புகரில் புகழ்ஞான | 370 |
| மாமதி கதிரோன் | 425 |
| மாமன் சிறுவன் | 216 |
| மாலவன்தன் உதய | 60 |
| மாவிதலை யாம்பரணி | 210 |
| மாவில் சுறாசால் | 352 |
| மாமுதல் நான்கு | 179 |
| மான்கலை புல்வாய் | 12 |
| மான்தலை உத்தி | 145 |
| மான்தலை புனர்தம் | 185 |
| மானநீர்க் குளமே | 7 |
| மிகவும் மகரம் | 278 |
| முன்னிய கண்டம் | 423 |
| மூன்றதாம் உத்தி | 109 |
| மெல்லிமறி பரத்தை | 213 |
| மேதகு கதிரோன் | 43 |
| மேதை ஒன்பான் | 89 |
| மேலிரவி நின்ற | 54 |
| மேலெழும் வியாழம் | 33 |
| மேவுசங்கி ராந்தி | 247 |
| மேவும்ஆ திரையும் | 174 |
| வச்சலான மதியில் | 197 |
| வட்டமுன் மாலை | 331 |
| வடகொள்பன் னாறி | 453 |
| வடங்கொள்பார் தோணி | 158 |
| வடித்தநூற் றிருபான் | 379 |
| வடித்த பொன்னன் | 268 |
| வடித்திடில் நற்கோள் | 115 |
| வண்புகழ் நெல்லில் | 130 |
| வந்திக்கும் கதிர்க்கு | 41 |
| வயிரம் ஆணாகி | 202 |
| வரும்சக ஆண்டி | 373 |
| வல்லிரு பூசம் | 166 |

| | பாடல் எண் |
|---|---|
| வல்லிமூன் றிரண்டை | 87 |
| வலியதகர் ஆவணி | 64 |
| வழித்திறம் படர | 334 |
| வாக்கியத் தொகையை | 378 |
| வாங்கிமே டாதி | 419 |
| வாங்கிய தனுசு | 121 |
| வாடகதி ரோனை | 342 |
| வாய்ந்த கோள்கள் | 227 |
| வாய்ந்தசீர் மகவு | 90 |
| வாய்ந்த முப்புரி | 98 |
| வாழ்பரி முதலாய் | 203 |
| வாழும் வெள்ளி | 231 |
| விசைகொள் புற்றாளி | 6 |
| வித்தகத்தால் சென்ற | 51 |
| வித்தக மகமும் | 117 |
| விளங்கிளை கதிரோன் | 95 |
| விளங்கிய கதிரோன் | 239 |
| விளங்கிய புதர்க்கு | 39 |
| விளங்கிய மேடம் | 47 |
| விளங்கிய வாக்கி | 375 |
| விளங்கும் கதிர்கள் | 260 |
| விளங்கும் சகரன் | 456 |
| விரிந்தவான் பரணி | 171 |
| விரும்பிய பூசம் | 140 |
| விழிமிய மதிகண் | 76 |
| வினவின் முதல்திதி | 58 |
| வீக்கிய தொகையை | 436 |
| வைத்தசா வுதன்பின் | 441 |
| வையாசி அலவன் | 387 |
| வேந்தன் அலவன் | 229 |
| யாத்திரை புரவி | 129 |
| யோகம்நன் றிரவி | 26 |

*பின்னிணைப்பு : 1*

## சரசுவதி மகால் நூலகத்தில் உள்ள சூடாமணி உள்ளமுடையான் சுவடிகள்

1. உள்ளமுடையான் (சூடாமணி) - சுவடி எண். 665
2. உள்ளமுடையான் (சூடாமணி) - சுவடி எண். 850 a
3. உள்ளமுடையான் (சூடாமணி) - சுவடி எண். 850 g
4. உள்ளமுடையான் (சூடாமணி) - சுவடி எண். 2097
5. உள்ளமுடையான் சூளாமணி - சுவடி எண். 1887 b
6. உள்ளமுடையான் பலதிரட்டு - சுவடி எண். 773
7. சங்கிரம பலன்
   (சூடாமணி உள்ளமுடையான் -சுவடி எண். 658 b)
8. சூடாமணி உள்ளமுடையான் - சுவடி எண். 658 a
9. சூடாமணி உள்ளமுடையான் - சுவடி எண். 659
10. சூடாமணி உள்ளமுடையான் - சுவடி எண். 660
11. சூடாமணி உள்ளமுடையான் - சுவடி எண். 661
12. சூடாமணி உள்ளமுடையான் - சுவடி எண். 662
13. சூடாமணி உள்ளமுடையான் - சுவடி எண். 663
14. சூடாமணி உள்ளமுடையான் - சுவடி எண். 664
15. சூடாமணி உள்ளமுடையான் - சுவடி எண். 1572 a
16. சோதிட தசப்பொருத்தம்
   (சூடாமணி உள்ளமுடையான்) - சுவடி எண். 703 b
17. சோதிடம் (சூடாமணி உள்ளமுடையான்) - சுவடி எண். 690 b
18. சோதிடம் (சூடாமணி உள்ளமுடையான்) - சுவடி எண். 703 e
19. பூமி சல்லியம்
   (சூடாமணி உள்ளமுடையான்) - சுவடி எண்.1667

## துணைநூல் பட்டியல்


*1.* **சீவக சிந்தாமணி,**
*டாக்டர் உ. வே. சாமிநாதையர் (பதிப்.),*
*தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு,*
*தஞ்சாவூர்,*
*நவம்பர், 1986.*

*2.* **சூடாமணி உள்ளமுடையான்,**
*சின்னகாவணம் சுப்பராய முதலியார் (பதிப்.)*
*கலைமகள் விலாச அச்சுக்கூடம்,*
*ஸ்ரீபெரும்புதூர்,*
*நவம்பர், 1861.*

*3.* **சூடாமணி உள்ளமுடையான்,**
*குருலிங்க தேசிகர் (பதிப்.)*
*மாறன் அச்சுக்கூடம், சென்னை,*
*1927.*

*4.* **சூடாமணி உள்ளமுடையான்,**
*குருலிங்க சோதிடர் (பதிப்.)*
*B. இரத்தின நாயகர் சன்ஸ், சென்னை,*
*1953*